


வில்லி பாரதம் 4

வில்லி பாரதம்

(நான்காம் பாகம்)

பதிப்பாசிரியக் குழுவினரால்
பல பிரதிகளை ஒப்பு நோக்கிப் பரிசோதித்து
வெளியிடப்பெற்றது

வெளியிடுவோர்
எஸ். ராஜம்
5, தம்புச் செட்டித் தெரு
சென்னை-1

முதற் பதிப்பு—1959

கிடைக்கும் இடம்
மர்ரே அண்டு கம்பெனி
5, தம்புச் செட்டித் தெரு
சென்னை-1

எஸ். விசுவநாதன் அவர்களால், சென்னையில்,
சென்ட்ரல் ஆர்ட் அச்சுக்கூடத்தில், பதிப்பிக்கப்பெற்றது

35-3

உள்ளுறை

43. பதினைந்தாம் போர்ச் சருக்கம்

கடவுள் வாழ்த்து

சித்து அசித்தொடு ஈசன் என்று செப்புகின்ற மூவகைத்
தத்துவத்தின் முடிவு கண்ட சதுர் மறைப் புரோகிதன்,
கொத்து அவிழ்த்த சோலை மன்னு குருகை ஆதி, நெஞ்சிலே
வைத்த முத்தி நாதன் அன்றி, வான நாடர் முதல்வன் யார்? 1

இரு பக்கத்தாரும் சினந்து களம் குறுகுதல்

எடுத்த தீப ஒளியும் ஏனை இருளும் ஏக, ஏழு மாத்
தொடுத்த தேர் அருக்கர் சோதி தொழுது, தங்கள் தொழில் கழித்து,
எடுத்த கோபம் மூள நின்று, இரண்டு சேனை அரசரும்
கடுத்து உளம் கறுத்து, வெய்ய கண் சிவந்து, கடுகினர். 2

நாலு சாப நிலையும் வல்ல நரனும், வீமன், நகுலனும்,
நாலு பாகம் ஆன சேனை நாதனும், சிரங்களா,
நாலு கூறு செய்து, தானும் நரனும் முந்த நடவினன்—
நாலு வேத முடிவினுக்கும் ஆதியான நாரணன். 3

விசயன் கணைகளால் வாலவீமனும் சோமதத்தனும் மாளுதல்

வாலவீமன் என்று பார் மதித்த ஆண்மை மன்னனும்,
சூலபாசபாணிதன்னொடு ஒத்த சோமதத்தனும்,
ஆலகாலம் என உருத்து அடர்த்த போரில் முந்துறக்
காலன் ஊரில் ஏகினர், கிரீடி ஏவு கணைகளால். 4

'என் முன், என் முன்!' என்று மன்னர் யாரும் யாரும் இகலவே,
முன் முன் நின்று, யாவரோடும் மூரி வில் வணக்கினன்—
வில் முன் எண்ண வில்லும் இல்லை, வெஞ் சமத்து மற்று இவன்-
தன்முன் எண்ண வீரர் இல்லை, என வரும் தனஞ்சயன். 5

துரோணனும் குந்திபோசனும் பொருதல்

ஈர்-இரண்டு முகமும் வந்து எதிர்ந்த வீரர் சேனைகள்
ஈர்-இரண்டும் வேறு வேறு பட்டு வென்னிடப் புடைத்து,
ஈர்-இரண்டு ஓர் தொடையில் வாளி ஏவி ஏவி இகல் செய்தான்—
ஈர்-இரண்டும் ஐ-இரண்டும் ஆன விஞ்சை எய்தினன். 6

புந்தி கூர் துரோணனுக்கு யாவரும் புறந்தர,
குந்திபோசன் எண் இல் ஆயிரம் குறித்த தேர்களோடு
உந்தி, மீள முடுகி, அந்த முனிவனோடு உடன்ற போது,
அந்தி வானம் ஒத்தது அம்ம, அமர் புரிந்த ஆகவம். 7

மத்திரன் முதலியோரும் இருவர் இருவராய்ப் பொருதல்

குருவொடு உற்று அடர்ந்து குந்திபோசன் வில் குனிக்கவே,
வரு சமத்து மத்திரன் தன் மருகனோடு முடுகினான்,
முரண் மிகுத்த கோப அங்கி மூள வந்த மாளவன்
கரு நிறத்து அனந்தசாயி இளவலோடு கடுகினான். 8

முனிவன் மைந்தன் இந்திரன்தன் மைந்தனோடு முடுகினான்;
தினகரன்தன் மதலை காலின் மைந்தனோடு சீறினான்;
தனுவின் விஞ்சு தென்னனோடு சகுனி போர் தொடங்கினான்—
இனி அகண்டமும் சிதைக்கும் இறுதி காலம் என்னவே. 9

எந்த எந்த மன்னர் தம்மில் இருவர் ஆகி அமர் செய்தார்
அந்த அந்த வீரர் செய்த ஆண்மை சொல்லும் அளவதோ?
முந்த முந்த வென்று வென்று மோகரித்த தெவ்வர்தாம்
வந்த வந்த வழி மடங்க நின்றது, அவ் வருதினி. 10

தருமன் தானை முனிவனுக்கு உடைந்து போதல்

தேயு வாளி, வருணன் வாளி, தேவர் வாளி, திண்மை கூர்
வாயு வாளி, முதல் அனைத்து வாளியாலும் மலைதலால்,
ஆயு நூல் முனிக்கு உடைந்தது—அன்பு மிக்க தந்தையும்
தாயும் ஆகி மண் புரந்த தருமன் விட்ட தானையே. 11

மரீசி, அகத்தியன் முதலிய பல முனிவர் வந்து, துரோணனுக்கு உபதேசம் செய்து மீளுதல்

குருவும், அக் குருகுலேசன் கொற்ற வெஞ் சேனைதானும்,
பொரு களம் கொண்டு வாகை புனைந்து, அவண் நின்ற போதில்,
ஒருவரை ஒருவர் ஒவ்வா உம்பர் மா முனிவர் யாரும்
துருவனும் உவமை சாலாத் துரோணனை வந்து சூழ்ந்தார். 12

மகத்து இயல் மரீசி ஆதி எழுவரும், மலயச் சாரல்
அகத்தியன் முதலா உள்ள அனைவரும், வருதல் கண்டு,
செகத்தினில் நிறைந்த கேள்விச் சிலை முனி, எதிர் சென்று ஏத்தி,
முகத்தினால் இறைஞ்சி நிற்ப, மொழிந்தனர், மொழிகள் வல்லார்.

'மறை கெழு நூலும், தேசும், மாசு இலாத் தவமும், ஞானம்
முறை வரும் உணர்வும், அல்லால் முனிவரர்க்கு உறுதி உண்டோ?
துறை கெழு கலைகள் வல்லாய்! துன்னலர்ச் செகுக்கும் போரும்,
நிறைதரு வலியும், வாழ்வும், நிருபர்தம் இயற்கை அன்றோ? 14

'தொடு கணை வில்லும் வாளும் துரகமும் களிறும் தேரும்
விடுக; வெஞ் சினமும் வேண்டா; விண்ணுலகு எய்தல் வேண்டும்;
கடுக, நின் இதயம்தன்னில் கலக்கம் அற்று, உணர்வின் ஒன்று
படுக!' என்று, உரிமை தோன்றப் பகர்ந்தனர், பவம் இலாதார். 15

முனிவர்களின் உபதேசத்தால் துரோணன் சாந்தத்தை மேற்கொண்டு நிற்றல்

ஆன போது, ஆசான் நெஞ்சில் அரு மறை அந்தத்து உள்ள
ஞானமும் பிறந்து, போரில் ஆசையும் நடத்தல் இன்றி,
தூ நலம் திகழும் சோதிச் சோமியம் அடைந்து நின்றான்—
யானமும் விமானம் அல்லால், இரதமேல் விருப்பு இலாதான். 16

கண்ணன் துரோணன் மாளுதற்குக் காலம் வந்தது என்று கருதி,
தருமனிடம் அவனை மாய்த்தற்கு உபாயம் உரைத்தல்

கோடையால் வற்றி மீண்டும் கொண்டலால் நிறைந்த தெண் நீர்
ஓடையாம் என்ன நின்றோன் முன்னரே உரைத்த வார்த்தை,
'மாடையால் இந்த்ர நீல மணி வரை வளைத்தாலன்ன
ஆடையான் அறிந்து சொற்ற அவதி ஈது' என்று கொண்டான். 17

கடல் வடிம்பு அலம்ப நின்ற கைதவன்தன்னோடு ஓதி,
சுடு கனல் அளித்த திட்டத்துய்மனை அவன்மேல் ஏவி,
வடு உரை மறந்தும் சொல்லா மன் அறன் மைந்தனோடும்
அடியவர் இடுக்கண் தீர்ப்பான் ஆம் முறை அருளிச்செய்வான்: 18

'மந்தரம் அனைய பொன்-தோள் மாருதி மாளவக் கோன்
இந்திரவன்மாமேல் சென்று எரி கணை தொடுத்த போரில்,
அந்தரம் அடைந்தது ஐய! அச்சுவத்தாமா என்னும்
சிந்துரம்; அதனை வென்றித் திசைக் களிறு ஒப்பது அன்றே; 19

'மதலை பேர் எடுத்துப் போரில் மடிந்தவாறு உரைத்த போதே,
விதலையன் ஆகி, பின்னை வில் எடான், வீதல் திண்ணம்;
முதல் அமர் தன்னில் அந்த முனிவரன் மொழிந்த மாற்றம்
நுதலுதி; நீயே சென்று நுவலுதி, விரைவின்!' என்றான். 20

'பொய்யுரையேன்' என்று தருமன் மறுக்க, கண்ணன் ஏதுக்காட்டி வற்புறுத்தல்

வையினால் விளங்கும் நேமி வலம்புரி வயங்கு செம் பொன்
கையினான், அந்தணாளன் கையறல் புகன்ற காலை,
மெய்யினால் வகுத்தது அன்ன மெய்யுடை வேந்தன் கேட்டு,
'பொய்யினால் ஆள்வது இந்தப் புவிகொலோ?' என்று நக்கான் 21

'அண்ணிய கிளையும், இல்லும், அரும் பெறல் மகவும், அன்பும்,
திண்ணிய அறிவும், சீரும், செல்வமும், திறலும், தேசும்,
எண்ணிய பொருள்கள் யாவும் இயற்றிய தவமும், ஏனைப்
புண்ணியம் அனைத்தும் சேர, பொய்ம்மையால் பொன்றும் அன்றே.'

என்று கொண்டு, இனம் கொள் கோவின் இடர் கெட எழிலி ஏழும்
குன்று கொண்டு அடர்த்த மாயன் கூறவும், மறுத்துக் கூற,
கன்று கொண்டு எறிந்து, வெள்ளில் கனி நனி உதிர்த்து, வஞ்சம்
வென்று கொண்டவனும், மீள விளம்புவன் என்ப மாதோ: 23

'உம்மையில் மறுமைதன்னில் உறு பயன் இரண்டும் பார்க்கின்,
இம்மையில் விளங்கும் யார்க்கும் அவர் அவர் இயற்கையாலே
மெய்ம்மையே ஒருவர்க்கு உற்ற விபத்தினை மீட்கும் ஆகின்,
பொய்ம்மையும் மெய்ம்மை போலப் புண்ணியம் பயக்கும் மாதோ!

'வல்லவர் அனந்த கோடி மறைகளின்படியே ஆய்ந்து,
சொல்லிய அறங்கள் யாவும் நின்னிடைத் தொக்க ஆற்றால்,
புல்லிய பொய் ஒன்று என் ஆம்? பொரு பெரு நெருப்புக்கு ஈரம்
இல்லை; நீ ஒன்றும் எண்ணாது இயம்புதி, இதனை!' என்றான். 25

தருமன் துரோணனை அடுத்து, 'அச்சுவத்தாமா என்னும் வாரணத்துக்கு வீமன் சிங்கமானான்' என்று உரைக்க, முனிவன் படைக்கலத்தை விடுத்து நிற்றல்

போர் அற மலைந்து வென்று, போதத்தால் பவங்கள் ஏழும்
வேர் அற வெல்ல நிற்பான், வீடு உற நின்ற எல்லை,
வார் அற வய மா ஓட்டி, வயங்கு தேர் கடவிச் சென்று,
பேர் அறன் மைந்தன், நாவின் பிழை அறப் பேசுவானே: 26

'அத்தனே அடு வல் ஆண்மை அச்சுவத்தாமா என்னும்
மத்த வாரணத்துக்கு, ஐயோ! மாருதி சிங்கம் ஆனான்;
எத்தனை கோடி சேனை இக் களத்து இறந்தது! அந்த
வித்தகன் மலைந்து செற்ற விரகை என் சொல்வது!' என்றான். 27

தீது இலான் உரைத்த மாற்றம் செவிப் படும் அளவில், நெஞ்சில்
கோது இலான் எடுத்த வில்லும் கொடிய வெங் கணையும் வீழ்த்தி,
'போது இலான், இறந்தான் போலும், புதல்வன்!' என்று இனைதல் இன்றி,
ஏதிலான் போல நின்றான், யார்கணும் பந்தம் இல்லான். 28

திட்டத்துய்மன் எய்த வாளியால் துரோணன் படுதல்

முள் இயல் நாளக் கோயில் முனி நடுத் தலையை முன்னம்
கிள்ளிய பினாக பாணி, கிரீசனோடு ஒத்த வீரன்,
துள்ளிய பரித் தேர்த் திட்டத்துய்மனது அம்பு சென்று,
தள்ளியது அப்போது, அந்தத் தவ முனி தலையை அந்தோ! 29

துரியோதனன் சேனை பின்னிட, அசுவத்தாமன் சென்று, இறந்த தந்தையைக் கண்டு வருந்துதல்

பட்டனன் வாசபதி நிகர் சேனாபதி என்ன,
கெட்டது, நாககேதனன் வீரம் கிளர் சேனை;
தொட்ட வில் ஆண்மைத் துரகததாமா எதிர் ஓடி,
கட்டு அழல் வேள்வித் தாதை இறந்த களம் கண்டான். 30

கண்டான், வீழ்ந்தான்; அம் முனி பாதம் கமழ் சென்னி
கொண்டான் மோதி, கண் பொழி நீரில் குளித்திட்டான்;
வண் தார் சோர, மண் உடல் கூர, வல் நஞ்சம்
உண்டார் போல, எண்ணம் அழிந்தான், உளம் நொந்தான். 31

'வன்பின் மிக்க வீடுமன் உன்னை, ''மன் ஆகு!'' என்று,
அன்பின் இப் பார் ஆளவும், அன்றே அருள்செய்தான்;
முன் பின் எண்ண உவமை இலாதாய்! முடிவாயோ!
உன் பின் வந்தேன், உன்னை ஒழிந்தும், உய்வேனே! 32

'வில்லாய் நீ; வெம் போர் முனை வெல்லும் விறலாய் நீ;
சொல்லாய் நீ; தொல் வேதியர் உட்கும் தொழிலாய் நீ;
வல்லார் வல்ல கலைகள் அனைத்தும் வல்லானே!
எல்லாம் இன்றே பொன்றின, உன்னோடு; எந்தாயே! 33

'கற் கொண்டு கல்மழை முன் காத்த கள்வன்
கட்டுரைத்த மொழிப்படியே, கருதார் போரில்,
முன் கொண்ட விரதம் மறந்து, யாரும் கேட்ப,
முரசு உயர்த்தோன் பொய் சொன்னான்; முடிவில், அந்தச்
சொற் கொண்டு, வெறுங் கையன் ஆம் அளவில், திட்டத்-
துய்மன் என நின்ற குருத் துரோகி கொன்றான்;
விற் கொண்டு பொர நினைந்தால், இவனே அல்ல;
விண்ணவர்க்கும் எந்தைதனை வெல்லல் ஆமோ?' 34

துரியோதனன் தேற்ற, அசுவத்தாமன் தேறி, 'யாவரையும் வெல்வேன்!'
என வில் வளைத்தல்

இப் புதல்வன் திருத் தாதை பாடு நோக்கி
இவ் வகையே இரங்குதலும், இராசராசன்
அப் புதல்வன்தன்னை எடுத்து ஆற்றித் தேற்றி,
அம்புயக் கண் அருவி துடைத்து, அளி செய் காலை,
'எப் புதல்வருடனும் விறல் குந்தி மைந்தர்
யாவரையும் சென்னி துணித்து, யாகசேனன்
மெய்ப் புதல்வன்தனையும் அற மலைவன்' என்னா,
வில் வளைத்தான், சொல் வளையா வேத நாவான். 35

கண்ணன் படைக்கலமும் வாகனமும் இன்றியிருக்குமாறு பணிக்க,
வீமனை ஒழிந்தோர் அங்ஙனமே தரையில் நிற்றல்

பாகசாதனன் மதலை தெய்வப் பாகன்,
பாகு அடரும் நெடும் பனைக் கைப் பகட்டின் மேலான்,
மேக மேனியன், விரைவில், தங்கள் சேனை
வேந்தையெலாம் சென்று எய்தி, 'வில் வாள் வேலும்
வாகனாதியும் அகற்றி, நின்மின்!' என்ன,
மாருதி மைந்தனை ஒழிந்தோர் மண்ணின் மீது,
யோக ஞானியர் ஆகி அனைத்துளோரும்
ஒருவரைப்போல் நிராயுதராய் ஒடுங்கி, நின்றார். 36

அசுவத்தாமன் நாராயணன் வாளி தொடுத்தலும், அதை வீரர்கள் வணங்க, அது வீமனைச் சென்று சேர்தல்

மாற்று அரிய மறையொடு நாராயணன்தன்
வாளி தொடுத்தலும், அந்த வாளி ஊழிக்
காற்று எரியோடு எழுந்தது என, கார்கோள் மொண்டு
கார் ஏழும் அதிர்ந்தது என, கனன்று பொங்கி,
ஏற்று அரிபோல் குழாம் கொண்ட வயவர் தம்மை
எய்திய போது, அனைவரும் தம் இதயம் ஒன்றிச்
சாற்று அரிய உணர்வினராய், ஏத்தி ஏத்தி,
தாள் தோய் செங் கர முகுளம் தலை வைத்தாரே. 37

பார் உருவி, திசை உருவி, அண்டகூடம்
பாதலத்தினுடன் உருவி, பரந்து சீறி
ஓர் ஒருவர் உடலின்மிசை மயிர்க்கால்தோறும்
ஓர்ஒரு வெங் கணையாய் வந்து உற்ற காலை,
நேர் ஒருவர் மலையாமல், தருமன் சேனை
நிருபர் எலாம் நிராயுதராய் நிற்றல் கண்டு,
போர் உருவ முனிமைந்தன் தொடுத்த வாளி
பொரு படை கொள் மாருதிமேல் போனதாலோ. 38

வீமன் எதிர் வந்த படைகளை வெவ்வேறு படைகளால் மாற்றுதல்

காற்றின் மதலையும், தனது தடந் தேர் உந்தி,
கண் சிவந்து, மனம் கருகி, கால் வில் வாங்கி,
கூற்றம் என எதிர் சென்று, முனிவன் மைந்தன்
கொடுங் கணையை மதியாமல், கடுங்கணுளன்
வேற்று உருவம் கொடு கனலி முதலா உள்ள
விண்ணவர்தம் பகழிகளாய் மேன்மேல் வந்த
மாற்று அரிய பகழிகளை ஒன்றுக்கு ஒன்று
மாறுன பகழிகளால், மாற்றினனே. 39

மூச்சினுல் அடியுண்டும், கடுங் கண் கோப
முது கனலால் எரியுண்டும், முனை கொள் வாளி
ஓச்சினுல் ஒடியுண்டும், குனித்த விற் கால்
உதையினுல் உதையுண்டும், நெடு நாண் ஓசை
வீச்சினுல் அறையுண்டும், கடக வாகு
வெற்பினுல் இடியுண்டும், வெகுளி கூரும்
பேச்சினுல் வெருவுண்டும், படாதது உண்டோ,
பேர் அனிலன் மகனுல், அப் பெருமன் வாளி? 40

கண்ணன் வீமன் கை வில்லும், வாகனமும் மாற்ற, நாராயணன் வாளி நாணியது

தாள் வலியால் எனைப் பல பல் வினை செய்தாலும்,
தப்ப ஒணு விதி போலத் தடந் தோள் வீமன்
தோள் வலியால் விலக்கவும், அத் தொடை போய், வாசத்
தொடை மிடை மார்பகம் அணுக, சுராரி தோள்கள்
வாள் வலியால் அரிந்த பிரான், கையில் வில்லும்
வாளியும் வாகனமும் உடன் மாற்றுவித்தான்;
நாள் வலியார் தமைச் சிலரால் கொல்லல் ஆமோ?
நாரணன் சாயகம் மிகவும் நாணிற்று அன்றே! 41

அசுவத்தாமன் பாசுபதம் விட நினைக்க, வியாத முனி அவனிடத்திற்கு வருதல்

விட்ட வெம் பகழி நாணி மீளுதலும்
வில்லின் வேதம் உணர் முனிமகன்
வட்ட வெஞ் சிலையின்மீது பாசுபத
வாளி வைப்பது மனம் செயா,
முட்ட வன்பினொடு நின்ற காலையில்,
வியாதன் என்று உரை கொள் முனிவரன்,
தொட்ட தண்டும் மிதியடியும் ஆகி, உயர்
சுருதி வாய்மையொடு தோன்றினன். 42

முனிவன் அசுவத்தாமனுக்கு அறிவுரை பகர்ந்து செல்லுதலும், சூரியன் மறைதலும்

நின்ற சாப முனி மைந்தன், வந்த முனி
நிருபனைப் பரமன் நிகர் எனச்
சென்று கைதொழுது, பரசிட, பரிவு
தீர் கருத்தினொடு செப்பினன்—
'அன்று, போரில் அழி யாகசேனன் மகன்
அழலினூடு வரு சாபமும்,
வென்றி வாகை புனை விசயனோடு கரு
மேக வண்ணன் வரு விதியுமே. 43

'வரத்தினல் உனது தந்தை போரினில்
மடிந்தது அன்றி, ஒரு வயவர் தம்
சரத்தினல் அவனை வெல்ல வல்லவர்
தராதலத்தின்மிசை இல்லையால்;
உரத்தினல் விறல் மயூரவாகனனை
ஒத்த வீர! இனி உள் உறச்
சிரத்தினல் அரனை அடி வணங்கி, இடர்
தீருமாறு நனி சிந்தியாய்! 44

'ஒன்ற ஐம் புலனை வென்று நீடு தவம்
உரிமையின் புரிதி, உற்பவம்
பொன்ற' என்று உறுதி கூறி, அன்பொடு
புகுந்த தெய்வமுனி போதலும்,
'மன்ற என்றும் இவர் செற்றதின் சத
மடங்கு செற்றனர்கள் இன்று' எனா,
நின்ற என்றும், வெளி நிற்றல் அஞ்சி,
நெடு நீல வேலையில் மறைந்ததே. 45

தருமனும் துரியோதனனும் தத்தம் படைகளுடன் பாசறை அடைதல்

'இருள் பரந்தது, இனி; அமையும் இற்றை அமர்'
என்று, துன்று கழல் இட்ட தாள்
அருள் பரந்த விழி அறனின் மைந்தனொடு
சேனை பாசறை அடைந்தபின்,
உருள் பரந்த ரத துரக குஞ்சர
பதாதியோடு கடிது ஓடினன்,
மருள் பரந்த தனி நெஞ்சன் ஆகி அடல்
மன்னர் மன்னன் எனும் மன்னனே. 46

துரியோதனன் சஞ்சயனை அழைத்து, துரோணன் மறைவையும், கன்னன்
சேனாதிபதி ஆதலையும் தந்தைக்கு உரைத்து வருமாறு அனுப்புதல்

தனது பாசறையில் ஆன அக் குரிசில்,
சஞ்சயன்தனை அழைத்து, 'நீ
நினது காதல் உயிர் அனைய எந்தைதனை
நிசிதனில் கடிதின் எய்தியே,
புனை துழாய்மவுலி விரகினால் முரசு
உயர்த்த பூபன் உரை பொய்த்ததும்,
எனது வாழ்வு, வலி, வென்றி, தேசு, உறுதி,
யாவும் ஆம் முனி இறந்ததும், 47

'தனஞ்சயன் தலை துணிக்க நின்ற வரி
சாப கோப முதிர் சாயகத்
தினம் செய் நாதன் அருள் செல்வ மா மதலை
சேனை நாதன் இனி ஆவதும்,
இனம் செய் வண்டு முரல் தாம மார்பனொடு
இயம்பி, மேல் நிகழ்வ யாவையும்
மனம் செய்து, இவ் இரவு புலரும் முன், கடிதின்
வருக!' என்றனன், வணங்கியே. 48

சஞ்சயன் திருதராட்டிரனுக்கு உரைத்து, துரியோதனனிடம் மீளுதலும், சூரியன் உதித்தலும்

அந்த அந்தணனும் அந்தனோடு இவை
அனைத்தும் ஓதிய பின், அந்தனும்
சிந்தை நொந்து அழுது இரங்கி,'யாவும் வினை
செய்து இரங்குவது தீது' என
மந்தணம் பெருக, எண்ணி மீள விட,
வந்து நள் இருளில் மைந்தனுக்கு,
'உந்தை தந்த உரை இது' எனப் புரை இல்
உரை புரோகிதனும் ஓதினான். 49

புதல்வன் ஆன திறல் அங்கர் பூபன் இருள்
புலரும் முன் பொரு படைக்கு மா
முதல்வன் ஆம் என மகிழ்ந்து, வாள் இரவி
முந்து தேர் கடவி உந்தினான்—
'அதலம் ஆதி உலகு ஏழும் ஆளுடைய
அரவின் மா மணி அனைத்தும் வந்து,
உதய மால் வரையின் உச்சி உற்றதுகொல்!'
என்ன மேதினி உரைக்கவே. 50

44. பதினாறும் போர்ச் சருக்கம்

கடவுள் வாழ்த்து

மாதுலன் ஆகியும் ஏதிலன் ஆகிய வஞ்சன் கஞ்சன் வரவிட்ட
பூதனைதன் உயிர் முலை பொழி பாலொடு போதர உண்ட புயல் வண்ணா!
மாதவ, யாதவ, வாசவ, கேசவ, மாயா, ஆயா, மதுசூதா!
ஆதியும் அந்தமும் ஆகிய நின் புகழ் அல்லாது உரையேன், அடியேனே!

துரியோதனன் கன்னனைச் சேனாதிபதியாக்கி, களம் புக, ஐவரும் படைகளுடன் எதிரேற்றல்

'கங்கை மகன், சிலையின் குரு என்பவர், காதி மலைந்தே கையற்றார்;
இங்கு இனி என் உயிர் நண்பனை அல்லது, வெல்ல வல்லோர் இலர்' என்றே,
'அங்கர் பிரானை வரூதினியின் பதி ஆக!' என்று அருள்செய்து, அவனோடும்
வெங் களம் உற்றனன்—நஞ்சு உமிழும் கொடி வேக நாகவிறலோனே!

சொல் தவறாத துரோணனை மௌலி துணித்த திட்டத்துய்மன்னும்,
கொற்றவர் ஐவரும், மற்று உள பூபரும், வைனதேயக் கொடியோனும்,
உற்று எழு கச ரத துரக பதாதிகள் ஆன சேனையுடனே சென்று,
'இற்றை அருஞ் சமம் வெல்லுதல் எம் கடன்' என்று துன்றி எதிர்கொண்டார்.

கன்னன் மகர வியூகமும், திட்டத்துய்மன் சக்கர வியூகமும் வகுத்தல்

கற்கியும், வண்டுஇனம் மொய்க்க மதம் பொழி கரியும், தேரும், காலாளும்,
பொற் கொடியும், குடை வர்க்கமும், மாலையும், ஒன்னார் என்னும் பூபாலர்,
நிற்கும் நிலம்தொறும் நிற்கும் நிலம்தொறும், நின்று நின்று வினை செய்ய,
மல் கெழு திண் புய அர்க்கன் மகன் பெரு மகரவியூகம் வகுத்தானே.

'பானுவின் மைந்தன் முனைந்து மகிபதி மைந்தன் சேனாபதி ஆனான்;
போன அருஞ் சமர் போக; தனித்தனி பொருது வேறும், போர்' என்றே,
சேனையின் மன்னவர் யாவரும், வெம் பரிமாவின்மேலும் தேர்மேலும்
யானையின்மேலும் இருந்தவர், அவ்வவர் தம்மோடு அம்ம இகலுற்றார்.

நாமம் இரண்டொடு பத்துடை நாயகன் நவில, வெஞ் சேனையின் நாதன்,
மா மரு கொற்ற வரூதினி வேலையை மருவார் அஞ்சி வெருவெய்த,
நேமி வியூகமதாக வகுத்து, இடை நின்று போர் செய் நிலயத்தில்,
விமன் வயம் புனை தேரினை விட்டு ஒரு வெம் போர் வேழம் மேல் கொண்டான்.

காசி அரசனும் விமனும் யானைமீது ஏறிப் பொருதல்

அடிக் கை கனத்து, மதம் பொழி ஆழியின் அளவும் புகரால் அழகு எய்தி,
மடிக்கினும், மண் உறு கையது; செந் நிற வாயது; தேயா மதிதன்னை
ஒடித்து இரு பக்கமும் வைத்தென மகரிகை ஒன்றி, ஒன்றி ஒன்னார் மெய்
இடிக்கும் மருப்பது; புன்னையின் நாள்மலர் என்னும் சீரது, இரு கண்ணும். 7

திலகமும் ஓடையும் இலகுறு நெற்றியது; ஆலவட்டச் செவியாலே,
பல திசை மாருதம் உய்ப்பது; செம் புகர் பட்டின் தொழிலின் பயில்கிற்பது;
உலகினை மேல்கொளுமவனது எனக் களி ஊறியதால்; அங்குலம் ஒத்து,
குலவிய மத்தகம் ஒத்த கழுத்தில் உயர்ந்தது, அம் பொன் குவடு என்ன. 8

உரத்தினில் முச் சுழி உடையது; தாள் வலி கல்தூண் ஒப்பு என்று உரை செய்யும்
தரத்தது; வெண்ணெய் நிறத்த நகத்தது; தண் அம் துளவன் நிலை ஒத்த
திரத்தினது; ஆமை கிடந்த எனும் புற அடியது; அங்கம் திண்ணென்றே
உரத்தது; நல் உதரத்தது; இளங் கமுகு ஒத்தது அம்ம, வாலதி; 9

தூணும் விலங்கும் முறிப்பது; பாகு பரிக்கோல் யாவும் தூரத்தே
காணினும், நின்று கொதிப்பது; தன் நிழல் கண்டு சீறும் கருத்தது;
நீள் நடம் முதலிய தொழில் ஒரு நாலும் நிரந்தது; மேரு நிகர் என்னச்
சேண் உயர் போதர, எழு முழம் உடையது;—தெவ்வர் அஞ்சும் அவ் வேழம்.

ஆசு இல் அருந் திறல் ஆசுகன் மைந்தனும், ஆண்மைக்கு எண்ணும் அடல் வீரன்
காசி நரேசனும், ஏழ் உயர், ஏழ் மத மாரி சிந்தும், கரி மேலோர்,
தூசியின் வந்து, முனைந்து முனைந்து இரு தோளும் தோளும் போர் செய்ய,
வாசவர் ஓர் இருவோர், இரு கார்மிசை மலைவது என்ன, மலைவுற்றார்.

அங்குசம், வார்த்தை, வன் தாள், அடைவினில் பயிற்றி, ஏனை
வெங் கதி நடையோடு ஓட்டம் விதமுற விரைவின் காட்டி,
அங்க சாரியினால் நல் நூல் அறிஞர் கொண்டாட ஊர்ந்து,
செங் கையில் சிலையும் கோலி, தீ விழித்து உடன்று சேர்ந்தார். 12

கோடு கைம் முதலா ஒன்பது உறுப்பினும் கோறல் வல்ல
நீடு உயர் மாவும் மாவும், நெருப்பு எழ முனைந்து சீற,
ஆடவர்தாமும் எண் இல் அம்பு மா மழைகள் ஏவி,
சேடனும் அமரர் கோவும் வெருக்கொள, செருச் செய்தாரே. 13

காசிராசன் கேமதூர்த்தி வேல் எறிய, வீமன் அவனது யானையை வீழ்த்தலும்,
அவன் தன் தண்டினால் வீமன் யானையை வீழ்த்தலும்

ஆசுகன் குமரன் வல் வில் ஆசுகம் பொறாமல், அஞ்சி,
காசி மன் கேமதூர்த்தி காய் அயில் ஒன்று வாங்கி,
வீசி, அக் காளை மார்பின் எறிதலும், வீமன் ஏ ஒன்று
ஏசு இல் அவ் வேலும் தெவ்வன் யானையும் துணிய எய்தான். 14

கேமன் அக் கரியினின்றும், கிரியினின்று இழியும் ஆளி
ஆம் என, தரணி எய்தி, அடல் வயிர்த் தண்டு ஒன்று ஏந்தி,
வீமன் அன்று ஊர்ந்த வெங் கை வெற்பினைப் புடைத்து வீழ்த்தான்;
பூ மரு தாரினானும் பூவின்மேல், சுரும்பின் பாய்ந்தான். 15

இருவரும் கதைப் போர் புரிய, அதில் கேமனை வீமன் கொல்லுதல்

கரி அமர்க்கு ஒருவரான இருவரும், காலில் நின்று,
பரிய அக் கதைப்போர் வல்ல பார்த்திவர் பலரும் காண,
'கிரியொடு கிரி செய் பூசல் இது' எனக் கிளக்குமாறு,
புரிவு இலார் பொருத போர் மற்று யாவரே புகல வல்லார்? 16

தண்டொடு தண்டம் ஏந்தி, சாரிகை பலவும் காட்டி,
'கொண்டலின் முழக்கு ஈது' என்ன, 'குரை கடல் ஒலி ஈது' என்ன,
கண்டவர்க்கு அன்றிக் கேட்டார்க்கு உரைப்பு அருங் கணக்கின் தாக்கி,
கொண்டு வன் காயம் ஒன்றால் கேமனை வீமன் கொன்றான். 17

சிதறிய சேனையைக் கன்னன் ஒன்று சேர்த்தலும், பாண்டவர் சேனையும்
ஓர் அணியாக வந்து பொருதலும்

'எறிந்த தண்டு அமரில் கேமன் இறந்தனன்' என்ற போழ்தின்,
முறிந்தது, வேலை ஞாலம் முழுதுடை நிருபன் சேனை;
அறிந்து, எதிர் ஊன்றி, வென்றி ஆண் தகைக் கன்னன் மீளப்
பிறிந்த பல் அணியும் ஒன்ற, பேர் அணி ஆக்கி நின்றான். 18

பேர் அணிகலம் சேர் மார்பன் பேர் அணி ஆக்கி நின்ற
போர் அணி மிக்க சேனைப் பொலிவு கண்டு, ஒலி கொள் வண்டு ஆர்
தார் அணி அலங்கல் மௌலித் தருமன் மா மதலை சேனை,
ஓர் அணியாகக் கூடி, உடன்று எதிர் நடந்தது அன்றே. 19

மகரிகையும் இரு பணைகளும், விரி நுதல்
மருவு கலனொடு மினல் என ஒளி விட,
இகலி அளி முரல் இரு கவுளினும் உடன்
இழியும் மத மழை குமிழிகள் எழ எழ,
அகலம் உடையன முதுகு இரு புடையினும்,
அணியும் மணி கண கண என, அதிர்தரு
ககன முகில் என உயர் வடிவு உடையன,
கதியின் விததியின் முடுகின—கரிகளே. 20

நிறனில் மிகுவன நவமணிகளின் இயல்
நெடிய கொடுமுடி நிகர்வன மகுடமும்,
அறையும் அருவியை உவமை கொள் சவரமும்,
அடவி நிகர் என அசைவுறு துவசமும்,
முறையின் நறை கமழ் தொடைபடு மலர்களும்,
முடுகும் இடனுடை முழைகளும் உடையன—
இறகர் கொடு பல மலை திரிவன என
இகலி, இசை பெற, நடவின—இரதமே. 21

அடலில் வலிமையில் விரைவினில் உயர்வன,
அகில புவனமும் நொடியினில் வருவன,
பொடியின்மிசை வெளி புதைதர விடுவன,
புணரியிடை அலை அலையொடு பொருவன,
மிடல் இல் அடு படை மடிதர நிமிர்வன,
விரியும் நறு மலர் கமழ் முக உயிரன,
படியில் ஒரு படி நிலை அறு கதியன,
பவனம் என நனி பரவின—பரிகளே. 22

அரிய விலையன அணிகலன் அடையவும்
அறலின் முழுகின அரு நவமணி என,
வரி வில் முதலிய பல படைகளும் உடல்
வலிய செலவுறு பவனச குலம் என,
நெரிய வருவன வகைபடு மிடல் அணி
நிமிர எழுவன நிரைகெழு திரை என,
விரிவின் அளவு அறு சலநிதி நிகர் என,
வெகுளி மிகு கதி கடுகினர்—விருதரே. 23

முரசு, கரடிகை, கிணை, துடி, பெருமரம்,
முருடு, படு பறை, முதலிய கருவிகள்
அரச வரி வளை, கொடு வயிர், எழு குழல்,
அரவ விருதுகள் முதலிய கருவிகள்,
உரை செய் கருவிகள், முழுவதும் எழு வகை
உலகம் முடிவுற உக இறுதியில் எழு
கரை செய் கடல் என, எறி வளி என, மிசை
கனலி, உரும் எறி கனம் என, அதிரவே. 24

எறியும் முரசமும் எரி விழி உரகமும்
எழுது கொடி உடையவர் இரு படையினும்,
வெறி கொள் மதமலைகளும் மதமலைகளும்,
விசயம் மிகுவன இரதமும் இரதமும்,
நெறி கொள் நவ கதி இவுளியும் இவுளியும்,
நிருதர் குலம் நிகர் விருதரும் விருதரும்,
நறிய தொடை முடி நிருபரும் நிருபரும்,
நடலை அமரிடை, அடலுடன் உடலவே. 25

கன்னனும் நகுலனும் பரிமீது அமர்ந்து பொருதல்

இரவி மதலையும், இரவிதன் மதலையர்
இருவர் மதலையும், இருவரும், எதிர் எதிர்,
புரவிமிசை விசை பட வலம் இடம் நிகழ்
புரிவினுடன் அமர் பொரு பல கதிகளின்
அரவின் அதிபதி முடி கெழு சுடிகையின்
அருண மணி வெயில் அவனியில் எழ, நனி
பரவி இருள் வர, நிரை நிரை எழு துகள்
பகல் செய் ஒளி வெயில் பருகின செருகியே. 26

அசைவு இல் தொடை அடி, கசை, குசை உரம், நினைவு
அறியும் உணர்வின; வளமையும் உடையன;
வசை இல் சுழியன; பழுது அறு வடிவின;
வருணம் மொழி குரல் மன வலி மிகுவன;
விசை கொள் பல கதியினும் விரைவு உறுவன;
விபுதர் குலபதி விடு பரி நிகர்வன;—
இசைகள் ஒருபது திசைகளும் எழுதிய
இறைவர் இருவரும் மிசைகொளும் இவுளியே. 27

முடியும் ஒரு கவிகையும் இரு கவரியும்
முதிரும் எரி விட முரண் அரவு எழுதிய
கொடியும் உடையவன் எலுவலும், முரசு உயர்
கொடியில் எழுதிய குருபதி இளவலும்,
நெடிய வரி சிலை நிலை பெற வளையவும்,
நிமிர விடு கணை நிரைநிரை முடுகவும்,
இடியில் எழு மடி அதிர் குரல் விளையவும்
இவுளி அமர் கடிது இகலொடு புரியவே, 28

நகுலன் கணைகளால் கன்னன் குதிரை இழந்து, இரதத்தில் புக, நகுலனும்
குதிரையை விட்டுத் தேரில் ஏறிப் பொருதல்

நகுலன் விடு கணை விதரண குணபதி
நடவு குரகத நடை பயில் குரம் அற,
இகலும் வரி சிலை நடு அற, வடம் அற,
இடு கவசம் அற, எழுத அரும் இரு புய
சிகரி புதையவும், உரம் முழுகவும், நுதல்
திலகம் என ஒளி திகழவும், மலைதலின்,
மகிழ்வு சினம் எனும் இரு குணமுடன் மனம்
மறுக, நிலனிடை வலன் உற இழியவே, 29

இழியும் அளவையின் வினை உடை வலவன் ஓர்
இரதம் விரைவொடு கொடுவர, விரி கதிர்
பொழியும் இள வெயில் இரவி முன் உதவிய
புதல்வன் விறலொடு புகுதலும், உயர் பரி
ஒழிய, நகுலனும் ஒரு தன் இரதமிசை
உபரிசரர் என, உரனொடு புகுதர,
விழியின் மணி நிகர் வலவனும் வலவனும்,
விசைய குரகதம் விசையொடு கடவவே, 30

கடவும் இரதமும் இரதமும் உயர் கதி
கடுகி வருதலும், இருவரும் இரு சிலை
அடர வளைவுற, நொடியினில் எயிறுடை
அயில் கொள் பகழிகள் அளவு இல சிதறினர்;
புடவி உற அகல் வெளி முழுவதும் இவர்
பொழியும் மழை எழு புயல் மழை என விழ,
உடலம் உகு குருதியின் நனையினர், அருகு
உதவி செய வரு தரணிபர் உருளவே. 31

இருவர் பரிகளும் உரன் உற முழுகின;
இருவர் வலவரும் விழ, எரி கதுவின;
இருவர் இரதமும் அழிய, முன் முடுகின;
இருவர் துவசமும் அற, விசை கடுகின;
இருவர் சிலைகளும் நடு அற, மருவின;
இருவர் கவசமும் இடை இடை கெழுமின;
இருவர் கவிகையும் மறிதர, வருடின;—
இருவர் உடலமும் எழுதின கணைகளே. 32

கன்னனும் பரி நகுலனும் தம காலின் நின்றிடவே,
பின்னரும் பொரு பாகர் தந்த பிறங்கு தேர்மிசையார்,
முன்னர் அம்பு தொடுத்த போரினும் மும் மடங்கு பொர,
மன்னர் யாரும் மதிக்குமாறு மலைந்து போர் செயவே, 33

நகுலனை மீளுமாறு துரத்தி, அவனுடன் வந்தார் இருவரைக் கொன்று, விசயன் நின்ற இடத்தைக் கன்னன் அணுகுதல்

அல்லி நாள்முகை அம்புயங்கள் அலர்த்தும் நாதன் மகன்
சொல்லினால் உயர் ஆயுள் வேதியர் சுதனை, 'இன்று அமரில்
கொல்லின் நா தவறும்கொல்?' என்று, ஒரு கோலினால் அழியா,
வில்லின் நாண் அழியா, 'நடக்க' என மீள விட்டனனே. 34

நின்ற மா நகுலற்கு வன் துணையாகி நின்றிடலால்,
மன்றல் மாலை விசால மார்பினன் மகத பூபனையும்,
வென்றி வேல் முருகற்கு நேர் புகழ் விடதரன்தனையும்,
கொன்று, வாசவன் மைந்தன் மா முனை குறுக ஏகினனே. 35

விசயன் அம்பினால் கன்னன் வலி அழிந்து மீளுதல்

மடங்கல்மேல் எழு மதமும் மேலிட வரு பணைக் கரிபோல்,
விடம் கொள் சாயக வில்லி சென்று, தன் வில் குனித்து, அடு போர்
தொடங்கும் முன், பலர் வில் எடுத்தவர் சொல்லும் வில்லி அவன்
திடம் கொள் மார்பினில் அம்பு இரண்டு தெரிந்து விட்டனனே. 36

அருண வெங் கதிர் ஆயிரத்தவன் அன்பினால் உதவும்
கருணனும் சில பகழி ஓர் இரு கண்ணர் மார்பில் விடா,
'வருணமும் பெயரும் பிறிந்திலர்; மனனும் ஒன்று' எனவே
தருண வாள் நிலவு எழ நகைத்து, உரைதந்து போயினனே. 37

அன்று போர் புரி சேனையின் பதியான வீரனை, 'நீ
இன்று போய் இனி நாளை வா' என இனிது இயம்பினனால்—
வென்றி கூர் வரி வின்மையால் அடல் வெவ் அரக்கரை முன்
கொன்ற காளையை ஒத்த பேர் இசை கொண்ட ஆண்மையினான். 38

சாத்தகி, சல்லியன், முதலியோர் இருவர் இருவராய் அங்கங்கே பொருதல்

அல்லி அம்புயம் அனைய கண்ணினன் அனுசனும், குனி வில்
சல்லியன் பெயர் என விளங்கிய தானை மன்னவனும்,
பல்லியங்கள் துவைப்ப, நீடு பணைப் பகட்டுடனே
வல்லியம் பொருமாறு எனப் பொர, மாறுஇலார், ஒருபால்; 39

மாரனுக்கு இளையாமல் அம்பையை மா தவத்து விடும்
தீரனுக்கும் ஓர் ஆழி கொண்டு செலுத்து தேருடை வெஞ்
சூரனுக்கு எதிராகி மேனி துலங்கு சேரன் எனும்
வீரனுக்கும் மிகுத்த பேர் அமர் விளைய, வேறு ஒருபால்; 40

முழுது உணர்ந்தருள் முனிவரன் புகல் மும்மை வண் தமிழும்
பழுது அறும்படி தெளிஞர் ஏறிய பலகை ஒன்று உடையான்
வழுதியும், தனி மதி நெடுங் குடை மன்னன் மாதுலனும்,
பொழுது சென்றிடும் அளவும் வெஞ் சமர் புரிய, வேறு ஒரு பால்;

குரவர் சொற்கள் மறுத்து வன்பொடு கொண்ட பார் உடையான்
அரவு உயர்த்தவனுக்கு அனந்தரம் ஆன தம்பியுடன்,
கரவு சற்றும் இலாத சிந்தையன் வாயு வேக கதிப்
புரவி வித்தகன் இளவல் சென்று, அமர் புரிய, வேறு ஒருபால்; 42

அசுவத்தாமனும் வீமனும் செய்த வெம் போர்

வேரி அம்புயன் வேதம் யாவையும் வில்லின் வேதமும் வல்
ஆரியன் தரு கடவுள் மைந்தனும், அனிலன் மைந்தனுமே,
தூரியம் பல கோடி கோடி துவைப்ப, 'வெஞ் சமரே
காரியம்; பிறிது இல்லை' என்று, கலந்து மோதினரே. 43

சுரர் உலோகம் மகிழ்ந்து அணைந்த துரோணன் மா மகன்—மேல்-
வரு சதாகதி மகனை நால்-இரு வாளி ஏவி, வெகுண்டு,
இரத நேமி குலைந்து, சூதனொடு இவுளி நாலும் விழ,
பொருது சீறினன்,—முன் பயந்த புராரியே அனையான். 44

மீள மற்று ஒரு தேரில் ஏறிய வீமன் வெஞ் சினம் மேல்
மூள, மல் புய கிரி தடித்திட, மூரி வில் வளையா,
வாளம் ஒப்பு என மற்று அவன் கொடி வாசி பாகொடு தேர்
தூளம் உற்றிட முதுகிடும்படி தொட்டனன், கணையே. 45

கைகயனும் சுருதகீர்த்தி முதலியோரும் இருவர் இருவராய்ப் பொருதல்

'கருதி வாய்த்தது போர்' என, மெய் களித்த கைகயனும்,
சுருத கீர்த்தியும் உடன் மலைந்து தொடங்கினர் ஒருபால்;
கிருத பார்த்திவனுடன் மலைந்து சிகண்டி கெட்டனன், மா
இரதமேல் கொடி ஆடை வீழ்தர ஏகினன் ஒருபால். 46

தருமபூபதி சேனையின் பதி—சாப ஆசிரியன்
கிருபனோடு மலைந்து, வெஞ் சமர் கெட்டு, நீடு இரதம்,
புரவி, பாகு, தரித்த திண் சிலை, பொன்ற, அன்று உயிரோடு
அரிது போயினன்—வேள்வி ஆகுதி அங்கிவாய் வருவோன். 47

திங்களைத் தலையாக மன்னவர் செப்பு மா மரபோர்,
தங்களில் பகை ஆகி, வானவர் தானவர்க்கு எதிராய்,
'எங்களுக்கு, எழு பார் அடங்கலும்!' என்று போர் புரியும்
வெங் களத்தின் இயற்கை எங்ஙன் வியந்து கூறுவதே! 48

வெங்களத்தின் இயற்கை

இற்ற கை கால் செறி களம் முழுதும் கழுகு இட்டன, காவணமே;
உற்றது, கொள் அலகைக் குலம் வெங் களம் உரை பெருகா வணமே.
வெற்று உடல் மன்னர் சரிந்த குடைக்கண் விரிந்தன சாமரமே;
கொற்றம் மிகும் பறை ஓசை அழிந்து குலைந்தன, சா மரமே. 49

மின் புயல்வாய் விரிகின்றன ஒத்தன, விரி நுதல் ஓடைகளே;
என்பு உற ஊறி விழும் கட தாரையின் ஏயின, ஓடைகளே.
முன் புடை வாலதி செற்றது, வெம் புகர் முகம் முழுகும் சரமே.
வன்புடை மால் வரை மறிவன போல மறிந்தன, குஞ்சரமே. 50

பட்டம் அணிந்த நுதற்கு இடையே விழு தும்பிகள் பட்டனவே;
தொட்டியுடன் பொரு சமர் முனை சிறிய தும்பிகள் பட்டனவே.
வெட்டி அறன் புதல்வன்தன் வரூதினி வென்று களித்தனவே;
இட்ட குமண்டைய பேய், பிணம் மிக்கன என்று, உகளித்தனவே.

பழுது அற வீழ் படை மன்னவர் பேர் உடல் பற்பல அம்பினவே;
பொழி குருதிப் புனல் மூழ்கினர் மேனி புலாலின வம்பினவே.
தழல் விழி வாரண வீரர் முடித் தலை தடிவன, சக்கரமே;
அழல் உமிழ் வாள்கள் சுழற்றின மீளவும், மா வனசக் கரமே. 52

முழுகிய வாளிகள் குழுமிய வீரர் முகத்தின எண் இலவே;
விழிவழி தீ எழ முறுவல் பரப்ப விரித்தன, வெண் நிலவே.
உழை மழை விழ்வன பல படை எங்கும் உமிழ்ந்தன, வெவ் வெயிலே;
அழிவு இல் வரூதினி சூழ் எயிலுக்கு எதிர் ஆவன, எவ் எயிலே! 53

சர மழை, காவலர்தங்கள் மனை வனசம் புக, மேயினவே;
இரை கவர் புள்ளினொடு உள் உறவு ஆவன, சம்புகம் ஏயினவே.
வரை சிறகு அற்று விழுந்தன என்ன மறிந்தன, வாரணமே;
அருகு நடிப்பன அலகைகள் பாடுவ, யாமள ஆரணமே. 54

செயிருடை ஆடவர் சோரி பரந்து, சிவந்தது, பார் இடமே;
வயிறு பெருங் குருதிச் சுனை ஆக வளர்ந்தன, பாரிடமே.
பயில மறைத்தன, பாறு பருந்தொடு பல கழுகு அந்தரமே;
எயிறுடை வாளி துணிப்ப விழுந்தன, எத்தனை கந்தரமே! 55

உம்பல் அநேகம், இளம் பிடி என்ன, ஒடிந்தன, கோடுகளே;
செம் புனல் யாறு இரு பக்கமும் வீழ் குறை செய்தன, கோடுகளே.
தும்பிகளால் அறையுண்டன, கொற்றவர் சூழ் மன அம்புயமே;
வெம் புகர் வாளில் அழிந்தன, மால் வரை விதம் அன அம் புயமே.

தாள் வலி ஆடவர் சிரம் உருளும்படி தைத்தன, சாயகமே;
ஆழ் குருதித் தடம் ஒத்தன, அவர் அவர் அவ் உடல் சாய் அகமே.
ஏழ் புயல் வானம் இருண்டிட எங்கும் எழுந்த, இருந் துகளே;
வீழ் பசியால் உழல் பேயொடு பாரிடம் மிக்க, விருந்துகளே. 57

செய் கடல் ஆம் என வந்து சிவந்த கவந்தம் அலைந்தனவே;
கைகொடு கால்கொடு தம்மின் வெகுண்டு, கவந்தம் மலைந்தனவே.
ஐவகை ஆன கதிக் குரம் நாலும் அழிந்தன, வாசிகளே;
மெய் வகையால், இவை, கூர் எறிகோல் விடு வீரர் கை வாசிகளே.

தாரைகள், ஒற்றை, தயங்கிய நீள் வயிர் சங்கம் முழக்கினவே;
ஓர் இமையில் சில யானை துரங்கம சங்கம் உழக்கினவே.
சேர வளைத்த வில் ஒன்று ஒரு கோடி சிலீமுகம் ஏவினவே;
வீரர் உயிர்ப்பு உடல் விட்டு அரமங்கையர் மெய்ம்முகம் மேவினவே. 59

பொரு கடல் ஒத்த பெருங் குருதிக் கடல் போத இரைந்தனவே;
விரவுறு தேவர் விமானம் விசும்பிடை போத விரைந்தனவே.
கரு முகில் முட்டின பட்டவர் கட் கனல் காலும் அரும் புகையே;
சுரிகையொடு அற்று விழுந்தன, மங்கையர் துனியில் அரும்பு கையே. 60

கட கரி ஏனமொடு ஒத்தன, அம்பொடு போன கரத்தனவே;
புடவியின்மீது உறை நிறை மதியம் பலபோல் நகரத்தனவே.
படு திறல் வேலவர் கண்மணி சென்று பறித்தன, வாயசமே;
அடு பணை யானையின் வெங் குடர் சென்று பிடுங்கின, ஆயசமே. 61

அணி தொடை தேன், மதுகர நிரை சால அருந்த, விளைத்தனவே;
மணி முடி பாரம் உறப் பல நாகம் வருந்த இளைத்தனவே.
கணை பல வீரர் முகத்தன, தோளன, கண்ணன, மார்வனவே;
நிணமொடு மூளை நெடுங் குடர் பூத நிரைக்கணம் ஆர்வனவே. 62

ஆவமொடு ஒத்தன, ஆடவர் நெஞ்சுகள் ஆகிய போது-அகமே;
பூ வலயத்து உடல், ஆர் உயிர் வானிடை புக்கன, போதகமே.
மேவு நரிக்கு விளைந்தன, வெங் கரி வீழ் தலை ஓதனமே;
நாவலருக்கும் உரைப்பு அரிது, அந்த நனந் தலை யோதனமே. 63

திட்டத்துய்மன் பின்னிடும் முன்பே விசயன் எதிர்ந்து வர, சஞ்சத்தகரும்
நாராயண கோபாலரும் எதிர்த்தல்

பேர் ஆண்மை செய் சேனாபதி பின்னிட்டிடு முன்னே,
தேர் ஆண்மையும் வில் ஆண்மையும் உடையான் எதிர் செல்ல,
தார் ஆர் அகல் வரை மார்பினர் சஞ்சத்தகர்தாமும்,
நாராயண கோபாலரும், அணியாக நடந்தார். 64

சட் கோண நெடுந் தேர்மிசை வரு சத்தியசேனன்,
புட் கோ எழுதிய சீர் பெறு பொன் அம் கொடி வலவன்
துட்கோடு உளம் மறுகும்படி, சுடு தோமரம் ஒன்றால்,
முள் கோலுடன் வடமும் சிதைவு உற மோதினன், முரணால். 65

புடையுண்டு உளம் உருகிப் புயல்போல் வண்ணன் நகைத்து,
தொடை உண்ட மலர்த் தும்பை சுமக்கும் திரள் தோளார்
உடையுண்டது ஓர் கடலாம் என ஓடும்படி, அவர்மேல்
தடையுண்ட தடந் தேரினை விட்டான், முனை தரவே. 66

சென்று ஆடு அமர் புரி சேனையுடன், சித்திரசேனன்,
வன் தாள் வலி மிகு மந்திரபாலன்தனை வானோர்
தன் தாதை அளிக்கும் பல சரத்தால், விழ மோதிக்
கொன்றான்—மிடல் வழுவாத குரக்குக் கொடி உடையோன். 67

சஞ்சத்தகரும் நாராயண கோபாலரும் முற்றும் இறந்துபட, பகைவர் முதுகிடுதல்

முன் நாள் முதல் நால்-நாலினும் முனைதோறும் முருக்கி,
தன்னால் உயிர் கவராதவர் சஞ்சத்தகர் யாரும்
நல் நாரண கோபாலரும் நாகம் குடி ஏற,
பொன் நாண் வரி சிலை கோலினன், மாலோன் உயிர் போல்வான்.

'சஞ்சத்தகர், கண்ணன் தரு தனயோர் பலர், அடைவே
எஞ்சப் பொருதனன் வெஞ் சிலை இமையோர் பதி மகன்' என்று
அஞ்சிக் களம் முழுதும் கழுகு ஆட, குறை ஆட,
குஞ்சத்தொடு குடை வீழ்தர, முதுகிட்டனர் கூடார். 69

சேனை முதுகிட்டமை அறிந்து துரியோதனன் பெரும் படையுடன் வர,
தருமன் அவனை எதிர்த்தல்

முதுகிட்டவர் துரியோதனன் முன் வீழ்தலும், நூறைம்-
பது கற்கியும், நாலாயிரம் விகடப் பொரு பகடும்,
மதுகைப் படு தேர் ஆயிரமும், கொண்டு, எதிர் வந்தான்—
எதிர்கைப் பட ஒரு மன்னரும் இல்லா அமர் வல்லான். 70

'குருமித்து நடக்கின்றனன்; இவனோடு கொடுங் கார்
உருமின் பொருகுவம்!' என்று உளம் உகளித்து எழ முனைமேல்
நிருமித்து நடந்தான்— மனு நீதிக்கு ஒரு நிலையான்,
தருமத்தினது உயிர் என்று உரை தக்கோர் சொல மிக்கோன். 71

'துனை வெங் கபோல விகட கட கரி,
துரகம், பதாதி, இரதம், அளவு இல'
என நின்ற சேனை முடுகி, அயில் சிலை
எறி துங்க வாளொடு இகலி எழ, எதிர்
குனி சங்கு, தாரை, வயிர்கள், முதலிய,
குனில் கொண்டு சாடு பறைகள் முதலிய,
தனிதம் கொள் மேகம் எனவும், மலை பொரு
தமரம் கொள் வேலை எனவும், அதிரவே, 72

கதி கொண்ட சேனை நடவ, எழு துகள்
ககனம் சுலாவி அனில கதி உற,
முதிர் சண்ட சூர கிரணம் இருள் எழ,
முகில் பஞ்ச பூத வடிவு பெற, வியன்
நதி வண்டலாக, அமரர் உறைதரும்
நகரம் பொன் வீதி புழுதி எழ, முழு-
மதி அங்க மாசு கழிய, நிரை நிரை
வளர் அண்ட கூட முகடு பிதிரவே, 73

குதி கொண்ட வாசி வயவர் பலரொடு
குதி கொண்ட வாசி வயவர் குறுகினர்;
துதி வெங் கை வேழ மறவர் பலரொடு
துதி வெங் கை வேழ மறவர் துதையினர்;
அதிர் சண்ட வேக இரதர் பலரொடும்
அதிர் சண்ட வேக இரதர் அணுகினர்;—
பொதி வெம் பதாதி விருதர் பலரொடு,
பொதி வெம் பதாதி விருதர் பொதுளவே. 74

புரி செம் பொன் நேமி விசையொடு இரு கிரி
பொரு வன்பு போல நவமணியின் ஒளி
விரி தந்த சோதி படலம் மிகுவன
மிசைகொண்ட தேர்கள் கடவ, வலவர்கள்,
எரி செங் கண் நாக அரசும் முரசமும்
எழுதும் பதாகை நிருபர் இருவரும்,
முரிதந்த சாபம் முடுகு பகழியின்
முகில் தங்கு வானம் முழுதும் மறையவே, 75

அறன் மைந்தன் வாளி அடைய, நயனமி-
லவன் மைந்தன் வாளி விலக; விரகுடை
விறல் மைந்தன் வாளி அடைய, விரகு இலி
விடு புங்க வாளி விலக; முறை முறை,
மறமும் பொருத சினமும் இரு புய
வலியும் தவாமல் அரிது பொருத பின்,
நிறம் ஒன்றும் ஏழு பகழி முழுகின,
நிருபன்தன் மார்பு குருதி பொழியவே. 76

விரிகின்ற நீல கிரியில் இள வெயில்
விழுகின்ற தாரை அனைய அழகொடு
சொரிகின்ற சோரி உடைய மகிபதி,
சுளிவு இன்றி மீள ஒரு கை நொடியினில்
முரிகின்ற நீடு புருவம் நிகர் என
முனைகின்ற சாபம் முரிய, விரைவொடு
தெரிகின்ற கோல்கள் முழுகி அறன் அருள்
திருமைந்தன் மார்பு குருதி பொழியவே, 77

மருமங்கள் சோரி வடிய, இருவரும்
மலைகின்ற போதில், மதுகை நிலையொடு
தருமன் குமாரன் நகைகொடு அவனிபர்
தலைவன் குமாரன் உரக துவசமும்,
அருமந்த தேரும், விசய வலவனும்,
அடல் கொண்டு பாய் புரவியும் அழிவுற,
உரும் அஞ்ச நாணி எறியும் ஒலி எழ
ஒளி விஞ்சு நாலு பகழி உதையவே, 78

இழிதந்து மீள இமயம் அனையது ஓர்
இரதம் கடாவி எதிரி உரனிடை
அழிதந்து மீள அயில் கொள் முனையது ஓர்
அயில் கொண்டு வீசி எறியும் அளவினில்,
மொழிதந்த வேலின் முனையும் ஒடிவுற
முரிவுண்டு கீறி வழியில் விழ, எதிர்
பொழிதந்ததால் ஓர் பகழி—அறன் அருள்
புதல்வன் கை வாகை புனையும் வரி விலே. 79

பிளவுண்டு வேல் விழுதலின், மகிபதி
பிழை கொண்ட வேழம் அனைய மெலிவினன்,
உளம் நொந்து நாண உருளும் இரதமும்
உடைதந்து, போரும் ஒழியும்வகை சில
கிளர் அம்பு வீசி, ஒரு பவள முது
கிரி நின்றது ஆகும் என, முன் நிலைபெறு
வள மைந்தன் வாய்மை உரைசெய்தனன், மிசை
வரும் உம்பர் யாரும் இதயம் மகிழவே. 80

துரியோதனன் தளர்வுற, தருமன், 'இன்று போய் நாளை வா!' எனக் கூறுதல்

'அளி தங்கு மாலை அரசர் அவையில் உன்
அதி வஞ்ச மாமன் அவனி கவர்வுற,
எளிவந்த சூது பொருத விரகு அரிது;
''எளிது, இன்று பூசல்'' என முன் விரவினை;
ஒளி விஞ்சு தேரும் உடைய படைகளும்
உடையுண்டு, நீயும் உறுதி தவறினை;
தெளிவு என்பது ஆசும் இலது, உன் மனம்; உறு
செரு வென்ற வீரம் அமையும், அமையுமே! 81

'அனிலன் குமாரன், அரசர் அசனி, என்
அநுசன் சொல் வாய்மை பழுதுபடும் என
உனை இன்று கோறல் ஒழிவது அலது, நின்
உரம் என்கொல் ஆகும், எனது கணை எதிர்?
புனை தும்பை மாலை சருகு பட எழு
பொடி மண்ட ஓடி மறைக, விரைவுடன்!
இனி எங்கள் ஆண்மை உரைசெய்து எது பயன்?
எதிர் வந்து நாளை அணிக, இகலியே!' 82

துரியோதனன் முறுவலித்து, கதை கொண்டு எறிய, அதைத் தருமன்
வேலால் உருவ எறிதல்

முதிர் குந்திபோசன் மகள்தன் மகன் இவை
மொழிதந்த போழ்து, பெருக முறுவல்செய்து,
அதிரும் சுயோதனனும், ஓர் உயர் கதை
அவன் மன்றல் மார்பின் உரனொடு எறிதர,
எதிர் சென்று நீதி புனையும் நிருபனும்,
எறி தண்டு கூறுபடவும், எறிபவன்
விதிருண்டு பாரில் விழவும், ஒரு தனி
விறல் உந்து வேல்கொடு உருவ எறியவே, 83

துரியோதனன் பாரில் விழ, கன்னன், அசுவத்தாமன் முதலிய பலரும் அங்கு வருதல்

'சூழ்ந்தது விதிகொல்? பாகும் துரகமும் தேரும் வீழ,
வீழ்ந்தனன் வேந்தர் வேந்தன், மெய் தவா வேந்தன் வேலால்;
தாழ்ந்தது, நமது கொற்றம்' என நடுத் தரிப்பு ஒன்று இன்றி,
ஆழ்ந்த பைங் கடலோடு ஒப்பான் அடுத்தனன், அங்கர் கோமான்.

முன் படு தினத்தில் தந்தை முடிந்த மெய் வருத்தத்தோடு
கல் படு புண்ணின் மீளத் தடி படு கணக்கிற்று ஆக,
வெற்பு அடு தடந் தோள் வேந்தன் வீழ்ந்தனன் என்று, வெய்தின்
எல் படு பரிதி என்னத் தோன்றினன், இவுளித்தாமா. 85

வேட்ட வெங் களிறேடு ஒப்பான், மேதினிக்கு அரசன், வில் போர்ப்
பூட்டு அறு புரவித் தேரும் பொன்றிய புலனும் ஆகி,
ஓட்டம் இல் தானையான் கை வேலினல் உடைந்த மாற்றம்
கேட்டனன், அவர்க்கு முன்னே கிருபஆசிரியன் வந்தான். 86

காப்புடை ஒற்றை நேமிக் காவலன் தாம மார்பில்
நாப் புகல் வாய்மையான்தன் நாள்மலர்ச் செங் கை வை வேல்
கோப்புற விழும் முன்னர்க் கொதித்து எழு மனத்தன் ஆகி,
தாப் புலி பாய்ந்தது என்ன, சல்லியன்தானும் வந்தான். 87

தருமனைப் பலரும் வளைக்க, விசயன் முதலியோர் அவனுக்கு வந்து உதவுதல்

எப் பெருஞ் சேனையோடும், எக் குல வேந்தும், வந்து,
தப்பு அருங் கொற்ற வேல் கைத் தருமனை வளைந்த காலை,
அப் பெருந் தானைதன்னில் அருச்சுனன் ஆதியான
ஒப்பு அருந் தரணி பாலர் இவற்கும் வந்து உதவினரே. 88

துரியோதனுதியர் உடைந்து பாசறைக்கு மீள, தருமன் முதலியோர் உவகையோடு மீளுதல்

இரு படை அரசும் தம்மில் ஈர்-இரண்டு அங்கம் ஆகி,
வரு படை கொண்டு நின்று, வல்லவா பூசல் தாக்க,
பொரு பணியுடைப் பதாகைப் பூபதிதனையும் கொண்டு, ஆங்கு
ஒரு படை கைக் கொளாமல், ஒன்னலர் உடைந்து போனர். 89

நா கையாப் புகழான், பெண்ணைநதி வளம் சுரக்கும் நாடன்,
வாகையால் பொலி திண் தோளான், மாகதக் கொங்கர் கோமான்,
பாகை ஆட்கொண்டான், செங்கைப் பரிசு பெற்றவர்கள் போல
ஓகையால் செருக்கி மீண்டார், உதிட்டிரன் சேனை உள்ளார். 90

சூரியன் மேல்கடலில் மூழ்கி, குணகடலில் பிறத்தல்

அருக்கனும், தருமன் மைந்தன் ஆண்மையும் நிலையும் கண்டு,
வெருக் கொளும் நிருபர் என்ன, மேல் திசை வேலை மூழ்கி,
சுருக்கம் இல் கங்குற் காலம் சென்ற பின், சுதன்மேல் அன்பு
பெருக்க உண்டாக, மீண்டும் குண கடல் பிறந்திட்டானே. 91

45. பதினேழாம் போர்ச் சருக்கம்

கடவுள் வாழ்த்து

ஈர் ஒரு பிறப்பின் ஒரு சிறு குறளாய்,
யாவரும் தேவரும் வியப்ப,
கார் ஒரு வடிவு கொண்டெனச் சென்று,
காவல் கூர் மாவலி அளித்த
நீர் ஒரு கரத்தில் வீழும்முன், தரங்க
நீல் நிற மகர நீர் உடுத்த
பார் ஒரு கணத்தில் அளவிடும் கமல
பாதனுர் நாதனுர், நமக்கே. 1

முன் நாள் தோற்ற மன்னரும் சேனைகளும் புடை சூழ, கன்னன்
துரியோதனனேடு களம் புகுதல்

அற்றை வெஞ் சமரில் அமர் முனைந்து ஆற்ருது
அழிந்துபோம் அவனிபர் பலரும்,
மற்றை நாள், 'அகில புவனமும் இன்றே
மடியும்' என்று, அனைவரும் மயங்க,
ஒற்றை வெண் சங்கும் பல் வகைப் பறையும்
ஓத வான் கடல் என ஒலிப்ப,
கற்றை வெண் கவரி கால் பொர, தனிப் பொற்
கவிகை நீழலில் களம் கலந்தார். 2

எண்-இரு தினத்தில் பட்ட பல் படையும்
ஈண்டு மீண்டு எழுந்தன என்னும்
வண்ணம், ஓர் அளவு இல் வாசியும், தேரும்,
மத சயிலமும், பதாதிகளும்,
விண்ணும் மண்ணகமும் தெரிவுரு வழக்கின்
வெங் களம் முழுவதும் கஞல,
அண்ணல் அம் தடக் கைக்கு எதிர் இலா வண்மை
ஆண்தகை அரசுடன் அடைந்தான். 3

சென்னியில் மகுட மணி வெயில் எறிப்ப,
திருக் குழை மணி வெயில் எறிப்ப,
மன்னிய பொலம் பூண் மணி வெயில் எறிப்ப,
வனை கழல் மணி வெயில் எறிப்ப,
தன்னை முன் பயந்தோன்தன்னினும் வடிவம்
தயங்கு செஞ் சுடர் வெயில் எறிப்ப,
கன்னன் அன்று இருந்த அழகினை யாரே
கண்டு கண் களிப்புருது ஒழிந்தார்? 4

தம்பியர் முதலியோர் சூழத் தேரில் நின்ற தருமன், 'இன்று கன்னன் இறப்பானோ?' என்று கண்ணனிடம் உசாவுதல்

ஒருங்கு அளப்பு அரிய பதாகினிக் குழாமும்,
உயிர்க்கு உயிரான தம்பியரும்,
அருங் களக்கனி கொள் வண்ணனும் தானும்,
அறன் அருள் அறனுடை அரசன்,
பெருங் களப் பரப்பின் அணி பெற அணிந்து,
பேர் உலகு உய்யுமாறு இருண்ட
கருங் களத்தவனைக் காசினித் தேர்மேல்
கண்டெனா, காணுமா நின்றான். 5

நின்ற அக் குரிசில் அருச்சுனன் தேர்மேல்
நின்றருள் நீல மேனியனை,
மன்றல் அம் துளப மாலை மாதவனை,
வழிபடுமவர்க்கு வான் துணையை,
தன் தடங் கண்ணோடு இதயம் முத்து அரும்ப,
தாள் இணை முடி உற வணங்கி,
'இன்றை வெஞ் சமரில் இரவிதன் சேய் வான்
எய்துமோ? இயம்புதி!' என்றான். 6

'கன்னன் இன்றும், துரியோதனன் நாளையும், மடிய அவனி நின்னதாம்' என்று கண்ணன் உரைத்தல்

'இத் தினம் இரவி சிறுவனும் விசயன்
ஏவினால் இறந்திடும்; நாளைத்
தத்தின புரவித் தேர்ச் சுயோதனனும்
சமீரணன் தனயனால் மடியும்;
அத்தினபுரியும் ஈர்-இரு கடல் சூழ்
அவனியும் நின்ன ஆம்' என்றான்—
சித்தினது உருவாய் அகண்டமும் தான் ஆம்
செய்ய கண் கருணை அம் திருமால். 7

தருமன் கண்ணன் செய்த உதவியை நன்றியுடன் பாராட்டி, பாதங்களில் வீழ்ந்து பணிதல்

செங் கண் மால் உரைத்த இன் சொல் ஆர் அமுதம்
செவிப் பட, சிந்தனை தெளிவுற்று,
'எங்கள் மானமும் தொல் ஆண்மையும் புகழும்
நீ அலால், யார் நிலையிடுவார்?
வெங் கண் மாசுணத்தோன் வஞ்சனைக் கடலின்
வீழ்ந்து அழுந்தாவகை எடுத்து, இன்று
அம் கண் மா நிலமும் தந்தனை!' எனப் பேர்
அறத்தின் மா மகன் இவை உரைப்பான்: 8

'பொங்கு அழல் சிந்தைச் சுயோதனன் கங்கைப்
புனல் விளையாட்டிடைப் புதைத்த
வெங் கழு முனையில் விழாமல், ஓர் அளி ஆய்,
வீமனுக்கு ஆர் உயிர் அளித்தாய்;
பைங் கழல் அரசர் அவையினில் யாமும்
பார்த்திருந்து அலமர, பயந்த
நுங்கு அழல் அனையாள் நாணமும் துகிலும்
நோக்கினை—காக்கும் நாயகனே! 9

'கானக மருங்கில், மேவலன் பணியால்,
கடும் பசியுடன் வரும் கடவுள்
மானவ முனிவன் தாபமும் சாப
வருத்தமும் உருவகை ஒழித்தாய்;
யான் ஒரு பொருளாத் தூது சென்றருளி,
எதிர் இலா விதுரன் வெஞ் சிலையும்,
பானுவின் மதலை கவசமும், அகற்றி,
பரிந்து பல் வினைகளும் புரிந்தாய்; 10

'களப் பலி நாக கன்னிகை புதல்வன்
கருதலான்தனக்கு நேர்ந்திடவும்,
கிளப்ப அருந் திதியை மயக்கி, வான் மதியம்
கிளர் ஒளி அருக்கனைக் கேட்ப,
வளப்படும் திதியின் முந்துற எமக்கே
வழங்கிடும்படி மதி கொளுத்தி,
உளப் பொலிவுடனே விசயனுக்கு அருளால்,
உருளுடைக் கொடி கொள் தேர் ஊர்ந்தாய்; 11

'அஞ்சியோ, அன்றி அருள்கொலோ, அறியேன்;
ஆகவத்து அடுதொழில் மறந்த
வெஞ் சிலை விசயற்கு உள்ளவாறு உணர்த்தி,
மீளவும் பொரும்படி விதித்தாய்;
வஞ்சினம் மறந்து, நேமியும் தரித்து,
வலம்புரி குறித்து, மூதாதை
துஞ்சிட அமரில் சிகண்டி செய் தவத்தின்
தொடர் பயன் வழாவகை துரந்தாய்; 12

'ஒரு பகல் விசயன் மார்பம் ஊடுருவ
ஒழுகு வெங் கடத்து ஒருத்தலின்மேல்
வரு பகதத்தன் எறிந்த வேல் உன்தன்
வண் துழாய் மார்பகத்து ஏற்றாய்;
பொரு பகை அரசர் பலர் பட, அபிமன்
பொன்றிய பொழுது, செந் தழலின்
நிருபனை முனியால் விழாவகை விலக்கி,
நிசியில் வெங் கயிலையும் கண்டாய்; 13

'வருணன் மா மதலை வாசவன் மதலை
மார்பினில் எறிந்த வெங் கதையைக்
கருணையால் மருமம் புதைய ஏற்று, அந்தக்
காளை கையறும்படி கண்டாய்;
தருண வாள் நிருபர் மயங்கி வீழ்தர வெண்-
சங்கமும் முழக்கி, நேமியினால்
அருணன் ஆதபத்தை மறைத்து, இரவு அழைத்து, ஆங்கு
அபிமனுக்கு அரும் பழி கொண்டாய்; 14

'ஏ வருஞ் சாப பண்டிதன் புதல்வன்
ஏவிய ஏவினால் யாங்கள்
வீ வரும் தன்மை அறிந்து, வாகனமும்
விறல் படைகளும் ஒழித்திட்டாய்;
மூவரும் ஒருவர் ஆகி நின்றருளும்
மூர்த்தியே! பார்த்திவர் பலரும்
தேவரும் உணரார், நின் செயல்!' என மால்
சேவடிகளில் முடி சேர்த்தான். 15

தருமனைக் கண்ணன் தழுவி, உபசாரம் சொல்லி, திட்டத்துய்மனை அணிவகுக்கப் பணிக்க, அவனும் அணிவகுத்தல்

கண்ணனும் கருணைக் கண்ணனை இறைஞ்சி,
கைகளால் தழுவி, 'ஐவிரும் நீர்
எண்ணஅரும் அமரில் இறக்கிலீர்; அஞ்சல்!'
என்று உபசாரமும் இயம்பி,
பண் அமர் தடந் தேர்ச் சேனையின் பதியைப்
பார்த்து, 'அணி வகுக்க!' எனப் பணித்தான்.
அண்ணல் அம் திட்டத்துய்மனும், தெவ்வர்
அஞ்சிடும்படி, அணி வகுத்தான். 16

ஐவரது அணி கண்டு, கன்னன் துரியோதனனை நோக்கி, 'சல்லியன் எனது
தேரைச் செலுத்தின் இன்று யாவரையும் வெல்வேன்!' எனல்

ஐவர் பதாகினி வெள்ளம் அணிந்தவா கண்டு,
அடு விறல் கோல் நெடு விற் கை அங்கர் கோமான்,
பை வரு மாசுணக் கொடியோன்தன்னை நோக்கி,
பரித் தடந் தேர் நரபாலர் பலரும் கேட்க,
'கை வரு பல் படைக்கும் ஒரு வீரர் ஒவ்வாக்
கட்டாண்மை அரசே! இக் களத்தில், இன்றே,
கொய்வரு தார்ப் புயப் பகைவர் சிரங்கள் எல்லாம்,
குறை உடலம் கூத்தாட, கொய்வேன்!' என்றான். 17

'கார்ப் பாகசாதனன்தன் மகனுக்கு, எல்லாக்
கலகமும் செய் வஞ்சனையே கற்ற கள்வன்,
தேர்ப்பாகனாய் நின்றான்; அவனுக்கு ஒப்பார்
தேவர் உலகினும் இல்லை; திசைகள் எல்லாம்
ஆர்ப்பாக மோதிவரும் கவன மா நெஞ்சு
அறிவானும், போரில் விரகு அறிவிப்பானும்,
போர்ப் பாகு ஆய்த் தேர் கடவு செயல் வல்லானும்,
புனை தாமச் சல்லியனே, புவியில்' என்றான். 18

'அவன் இன்று என் மணி நெடுந் தேர் கடவுமாகில்,
அருச்சுனனுக்கு அடல் ஆழியவனே அன்றிச்
சிவன் வந்து தேர் விடினும், கொல்வேன், அந்தத்
தேர் நின்றார் இருவரையும்; செங்கோல் வேந்தே!
பவனன் சேய் முதலான துணைவர் ஓர் ஓர்
பகழி முனை தனக்கு ஆற்றார்; பரவை ஆடைப்
புவனங்கள் அனைத்தையும் நின் குடைக்கீழ் ஆக்கி,
புரி திறல் வாகையும் நினக்கே புனைவிப்பேனே. 19

'நஞ்(சு) சோற்றம் பெற நுகர்வுற்று இருண்ட கண்டர்
நல் தொண்டர் வடிவம் என, நண்ணும் வெண்ணீற்று
அம் சோற்று மடல் கைதை கமழும் கானல்
அகல் குருநாட்டு அரி ஏறே! ஆனின் தீம் பால்
வெஞ் சோற்றோடு இனிது அருந்தி, அமுது அருந்தும்
விண்ணவர்போல், இந் நெடு நாள் விழைந்து வாழ்ந்தேன்;
செஞ்சோற்றுக் கடன் இன்றே கழியேனாகில்,
திண் தோள்கள் வளர்த்ததனால், செயல் வேறு உண்டோ? 20

'ஓர் ஊரும் ஒரு குலமும் இல்லா என்னை
உங்கள் குலத்து உள்ளோரில் ஒருவன் ஆக்கி,
தேர் ஊருமவர் மனைக்கே வளர்ந்த என்னைச்
செம் பொன் மணி முடி சூட்டி, அம்பு ராசி
நீர் ஊரும் புவிபாலர் பலரும் போற்ற,
நின்னினும் சீர் பெற வைத்தாய்; நினக்கே அன்றி,
ஏர் ஊரும் கதிர் முடியாய்! உற்ற போரில்,
யார்க்கு இனி என் உயிர் அளிப்பது? இயம்புவாயே!' 21

துரியோதனன் சல்லியனை அடுத்து, 'ஒரு வரம் வேண்டும்' என்று முதலிற் கூறி,
பின் கன்னனுக்குத் தேர் ஊர்தல் குறித்து உரைத்தல்

கன்னன் இவை எடுத்து உரைப்ப, மகிழ்ந்து கேட்டு,
காந்தாரன் திருக்குலத்துக் கன்னி ஈன்ற
மன்னர் பிரான், இமைப் பொழுதில் பழுது இலாத
மத்திர ராசனை எய்தி, 'மதுப சாலம்
தென்ன தென என முரலும் செவ்வி மாலைத்
திருத் தோளாய்! யான் ஒன்று செப்பினுல், அவ்
இன் உரை கேட்டு, ஒரு வரம் நீ நல்கல் வேண்டும்;
என் ஆணை!' எனக் கரம் கொண்டு இறைஞ்சினனே. 22

'செறுத்தவர்தம் பெரு வாழ்வும் உயிரும் மாற்றி,
சேர்ந்தவர்கள் புரிந்த பெருந் தீமை எல்லாம்
பொறுத்து, உலகம் முழுது ஆளும் திகிரியோய்! யான்
பொருளாக ஒரு வரம் நீ புகலுவாயேல்,
மறுத்து உரையேன்; உரைத்தருள்!' என்று உரைத்தான், அந்த
மத்திர பூபனும்; இவனும், 'மருவலாரைக்
கறுத்த மழை முகில் வெளுக்கக் கருகு மேனிக்
கண்ணனைப்போல் எங்களை நீ காத்தி!' என்றான். 23

'வாவும் மா மணி நெடுந் தேர் அரசர்க்கு எல்லாம்
வாய்ப்பான நீ எனையும் புரப்பது அன்றி,
ஏவுமா தொழில் புரிந்து உன் குடைக்கீழ் வைகும்
என் போல்வார் உனைப் புரத்தல் இசைவது ஒன்றோ?
தேவுமாய், மானுடமாய், மற்றும் முற்றும்
செப்புகின்ற பல கோடி சராசரங்கள்
யாவுமாய், விளையாடும் ஆதிமூர்த்தி
யாதவனுக்கு யான் எதிரோ? எதிர் இலாதாய்! 24

'நேர் செலுத்தும் தனிச் செங்கோல் உடையாய்! யாது
நினைவு உனக்கு?' என்று அவன் வினவ, நிருபன்தானும்
தார் செலுத்தும் பெருஞ் சேனை சூழ நின்ற
சல்லியனை முகம் நோக்கி, 'தனஞ்சயற்குத்
தேர் செலுத்தும் முகுந்தனைப்போல், நீயும், இன்று,
தேர் இரவி மகன் திண் தேர் செலுத்தின் அல்லால்,
போர் செலுத்தி இவரையும் வென்று, வாகை
புனைதல் நமக்கு அரிது' என்று போற்றினனே. 25

சல்லியன் சினந்து, துரியோதனன் வேண்டுகோளை மறுத்தல்

'புல்லிய சொல் மதியாமல் என்னை நோக்கிப்
புகன்றனையால்; புல் மேயும் புல்வாய்க்கு என்றும்
வல்லிய மாப் பணித்த தொழில் புரியின் அன்றோ,
மத்திரத்தான் கன்னனுக்கு வலவன் ஆவான்?
சொல்லிய நா என்படும், மற்று ஒருவன் சொன்னால்?
சுயோதனன் ஆதலின், பொறுத்தேன், சொன்னது' என்று
சல்லியன் மா மனம் கொதித்து, புருவம் கோட்டி,
தடங் கண்ணும் மிகச் சிவந்தான் தறுகணனே. 26

'சதுர் விதத் தேர் வீரருக்கும் தடந் தேர் ஊரும்
சாரதிதன் தனயனுக்குத் தடந் தேர் ஊர்தல்,
மது மலர்த் தார் வலம்புரியாய்! இழிவு அன்றோ? நீ
மதித்த விறல் கன்னனுக்கும் எனக்கும் இப்போது
எதிர் மலைக்கும் சேனை தன்னை இரு கூறு ஆக்கி,
இகல் புரிந்தால், என் கூற்றை இரிய வென்று, அக்
கதிர் அளித்தோன் கூற்றினையும் அழித்திலேனேல்,
கடவுவன் தேர் அவற்கு' என்று கனன்று சொன்னான். 27

துரியோதனன் சமாதானம் கூற, சல்லியன் ஒருப்படுதல்

'செங் கோல மலரில் இருந்து அனைத்தும் ஈன்ற
திசைமுகன்தான் அறம் வளர்க்கும் தெய்வப் பாவை
பங்கோனுக்கு ஆதி மறைப் புரவி பூண்ட
படிக் கொடித் தேர் கடவு தனிப் பாகன் ஆனான்;
''பொங்கு ஓதப் பாற்கடலான் இவன்!'' என்று யாரும்
புகல்கின்ற வசுதேவன் புதல்வன் வந்து
வெங் கோப விசயனுக்குச் சூதன் ஆனான்;
விசயனும், அன்று, உத்தரன் தேர் விசையின் ஊர்ந்தான். 28

'பூந் தராதலம் முழுதும் மதித்த ஆண்மைப்
போர் வேந்தே! உனைப் போலப் புகழே பூண்டு,
வேந்தராய் அமர்க்களத்தில் அதிசயித்த
வீரரானவர்க்கு இதுதான் மேம்பாடு அன்றோ?
மாந்தராய் எக் கலையும் வல்லார்க்கு அன்றி,
வாசி நெடுந் தேர் ஊர வருமோ?' என்று என்று,
ஏந்து அரா எழுதிய பொற் கொடியோன் சொல்லி
இறைஞ்சுதலும், உடன்பட்டான்; என்செய்வானே! 29

'மகபதிதன் மகனுக்கு வசுதேவன்தன்
மகன் பாகன் ஆனதுபோல், வயங்கு சோதிப்
பகலவன்தன் மகனுக்கு நிகர் இல் ஆண்மைப்
பல் விதப் போர்ச் சல்லியன் தேர்ப் பாகன் ஆனான்;
புகல் அரிய தும்பையுடன் வெற்றி வாகை
புனைந்திடும், இக் கணத்தில், வலம்புரித் தார் வேந்தன்;
அகல் உததி உடை ஆடை அவனி முற்றும்
அவனது, இனி' என ஆர்த்தது, அரசன் சேனை. 30

சல்லியன் கன்னனுக்குப் பாகனாய் வந்து அமர, கன்னன் உவந்து
சேனைகளை அணிவகுத்தல்

பெற்று இழந்த கவசமும் குண்டலமும் மீளப்
பெற்றனன்போல், அடல் அருக்கன் பெற்ற பிள்ளை,
மற்றை அணி விரல் முடக்க இணை இலாத
மத்திர பூபனைத் தழுவி, மணித் தேர் ஏற்ற,
பற்றலர் நெஞ்சு அலமருமாறு அவனும் பாகர்
படிவம் கொண்டு, அமர்க்கு அமைந்த பரிகள் பூட்டி,
உற்ற வடிக்கயிறுடனே உளவு கோல் கொண்டு,
ஊர்ந்தனனால், அருணனுக்கே உவமை சால்வான். 31

பணி நிறுத்தி எழுதுறு பொற் பதாகையானைப்
படாது ஒழி தம்பியரோடும் பார்க்கவன்போல்
அணி நிறுத்தி, கிருப கிருதரையும் பல் போர்
அரசரையும் இரு மருங்கும் அணிகள் ஆக்கி,
நுணி நிறுத்திச் சகுனி முதலானோர்தம்மை,
நுவல் அரு நாள் உடுக் கோளின் நடுவண் வான
மணி நிறுத்தி வைத்தது என, பவள மேரு
வரை நின்றது என, நின்றான்,—வண்மை வல்லான். 32

கன்னன் தானம் செய்தபின், தன்னைப் பலபடப் புகழ்ந்து சல்லியனிடம் பேசுதல்

கோவல் சூழ் பெண்ணை நாடன், கொங்கர் கோன், பாகை வேந்தன்,
பாவலர் மானம் காத்தான், பங்கயச் செங் கை என்ன,
மேவலர் எமர் என்னாமல், வெங் களம்தன்னில் நின்ற
காவலன் கன்னன் கையும் பொழிந்தது, கனக மாரி. 33

அந்தணர், பரிசின்மாக்கள், அவனிபர் முதலோர் யார்க்கும்
சிந்தைகள் களிக்கத் தான தியாகமும் சிறப்பும் நல்கி,
கந்தன் ஓர் வதனம் ஆகி அவதரித்தன்ன கன்னன்,
சந்து அணி குவவுத் தோளான் சல்லியன்தனக்குச் சொல்வான்: 34

'மேகவாகனன்பால் பெற்ற வெயிலவன் இயமதங்கி
ஆகிய முனிவற்கு ஈந்த அரும் பெருஞ் சாபம் பெற்றேன்;
நாக வெம் பகழி பெற்றேன்; நாரணற்கு ஒத்த உன்னைப்
பாகனும் ஆகப் பெற்றேன்; பாக்கியம் பலித்தவாறே! 35

'எனக்கு எதிர் விசயன் அல்லது இல்லை; அவ் விசயன் என்பான்-
தனக்கு எதிர் என்னை அன்றித் தரணிபர் யாரும் இல்லை;
மனக்கு நேரான தோழன் மகிதலம் முழுதும் எய்த,
கனக் குரல் களிற்றோய்! இன்று காண்டி, என் ஆண்மை!' என்றான்.

சல்லியன் இளநகை செய்து, கன்னனது தருக்கு அடங்கப் பேசுதல்

என்றலும் மத்திரேசன் இள நகை செய்து, 'நீ நின்
வென்றியும், வலியும், கற்ற வின்மையும், விளம்ப வேண்டா;
ஒன்றோடு ஒன்று இரண்டு தேரும் உருளுடன் உருள்கள் ஒத்து,
சென்று எதிர் முனைந்தபோது, உன் சேவகம் தெரியும் மாதோ! 37

'ஒருவரை ஒருவர் ஒவ்வா உரனுடை வீரர் நீங்கள்
இருவரும் பொரும் போர்தோறும் யாங்களும் பாங்காய் நின்றோம்;
வெருவரல் மறந்தும் இல்லா விசயனை ஒருபோதத்தும்,
திரு வரும் வண்மையோய்! நீ செயித்திடக் கண்டிலேமால். 38

'வயிர்த்து இருவோரும் சொன்ன வஞ்சினம் முடிக்குமாறு
செயிர்த்திடும் இற்றைப் பூசல் தெரியுமோ? தெரிந்தது இல்லை;
அயிர்த்தனம்!' என்று தேர் ஊர் ஆண்தகை உரைப்ப, நீட
உயிர்த்தனன் ஆகி, மீள உத்தரம் உரைக்கலுற்றான்: 39

சல்லியனைக் கன்னன் கடிய, அவன் வாள் ஏந்தி மண்ணில் நின்று
கன்னனை அறைகூவுதல்

' ''இந்திரன் மகனுக்கு என்னை எதிர் இலை'' என்று, நின்ற
தந்திரபாலர் முன்னர், சல்லிய! இகழ்தல் வேண்டா;
மந்திர வாசித் திண் தேர் வல்லையேல், ஊர்வது அன்றி,
வெந் திறல் விளைக்கும் வெம் போர் வினைக்கு நீ யார்கொல்?' என்றான்-

வலியுடைத் தேரோன் சொன்ன வாசகம் வலவன் கேட்டு,
கலியுடைத் தடந் தேர் விட்டு, காலின் நின்று, உடைவாள் வாங்கி,
'ஒலியுடைப் புரவித் திண் தேர் உனக்கு நான் ஊருவேனே?
எலியுடைப் பூசல் பூனைக்கு எதிர்ப்படின், என் படாதோ?' 41

கன்னனும் கீழ் இறங்கி வாள் ஏந்திப் பொர, துரியோதனன் வந்து விலக்கி, இருவரையும் தேரில் ஏற்றிப் போர் செய வேண்டுதல்

உரு உரும் என்னச் சீறி உடன்றபின், உதயன் காதல்
மருவுறும் மைந்தன்தானும் வாளொடு மண்ணில் தாவி,
இருவரும் இரண்டு காயம் இகலும் முன், உரக கேது
வெருவரும் சிந்தையோடு, வெய்தின் போய் விலக்கினானே. 42

மூளும் வெஞ் சினத்தை மாற்றி, முரணுறுத்தவர்கள்தம்மை
மீளவும் தேரில் ஏற்றி, 'வெஞ் சமர் விளைமின்' என்றான்—
மாளவும் பாண்டு மைந்தர், வையகம் முழுதும் தானே
ஆளவும், கருதி, எல்லா அரசையும் அழிக்கும் நீரான். 43

கன்னனைக் கிருதவன்மன் முதலியோர் காத்து நிற்க, துரியோதனன் சல்லியனுக்கும் கன்னனுக்கும் நல்லுரை பகர்தல்

வனை கழல் கிருதவன்மன், வரி சிலைக் கிருபன், தானே
தனை நிகர் சகுனி, தாமா, சாலுவன், திகத்த ராசன்,
இனைய பொன் தடந் தேர் வீரர் யாவரும், எண் இல் சேனைக்
கனை கடலோடு சூழ்ந்து, கன்னனைக் காத்து நின்றார். 44

நின்ற அக் கன்னன்தன்னை நெஞ்சு உற மகிழ்ந்து நோக்கி,
'வென்றனம் பூசல் இன்றே; விசயனும் தாதைதன்பால்
சென்றிடும்' என்று தேறிச் செப்பினன், சிற்சில் மாற்றம்—
மன்றல் அம் சுரும்பு மாறா வலம்புரி மாலையானே: 45

'சதமகன் மகன் தேர்ப் பாகன்தன்வயின் கேண்மை விஞ்சி,
விதுரனும் அமர் செய்யாமல், வெஞ் சிலை இறுத்து, பின்னும்
யதுகுலத் தலைவனான இராமனும் தானும், பாரில்
நதி முதல் தீர்த்தம் யாவும் ஆடுவான் நயந்து போனான். 46

'கங்கைதன் வயிற்றில் தோன்றி, தாதைதன் காதல் தீர்ப்பான்,
எங்களுக்கு அரசும் வாழ்வும் இரு நிலம் முழுதும் தந்து,
வெங் களத்து உதயன் போல, வீடுமன், களத்தை எல்லாம்
செங் களப் படுத்தி, மீண்டும் தேவரில் ஒருவன் ஆனான். 47

'கரி முகக் கடவுள் அன்ன கடும் பரித்தாமா என்னும்
குரை கழல் துணைத் தாள் சிங்கக் குருளையைப் பயந்த தாதை,
அரு மறைக்கு அயனை ஒப்பான், அடல் சிலைக்கு அரனை ஒப்பான்,
திருவருட்கு அரியை ஒப்பான், திருத் தகு வீடு சேர்ந்தான். 48

'சாயலால் சிறந்த தோகைச் சாமளத் தடம் புள் ஊர்திச்
சேய் அலால், தேவர் வாழ்வு தேவருக்கு யாவர் ஈந்தார்?
நீ அலால், சமரில் என்னை நிலையிடற்கு உரியார் உண்டோ?
தோயலால் பயந்த காதல் சூரனை அனைய சூரா! 49

'மித்திரர் என்று நோக்காது, என்னுடன் விளைந்த நண்பால்,
மத்திர நிருபன் மைந்தன் வந்து எனக்கு உதவி ஆனான்;
சுத்திரன் அல்லன்; செம்மைக் கொள்கையன்; மறையின் மிக்க
அத்திர சாபம் வல்லான்; இவனொடு ஆர் அமர் செய்கிற்பார்? 50

'என் மொழி மருமல் இன்று உன் இரத சாரதியும் ஆனான்;
நன் மொழி அன்றி, வேறு நவை மொழி நவிறல் தேற்றான்;
தன் மொழி உறுதி யாவும் தரும் எனக் கைக்கொளாமல்,
புன் மொழி ஆடி, நும்மில் புலப்பது புன்மை அன்றோ? 51

'இதயமும், வலியும், தேயத்து இயற்கையும், வினையும், பற்பல்
கதிகளும், உணர்ந்து, பூணும் கவன மாத் தெரிந்து பூட்டல்,
எதிரிதன் விசயம் கூறல், இடிக்கும் நண்பு ஆதல், வெம் போர்
முதிர் இடம் காலம் எண்ணல், சூதர்க்கு முறைமை கண்டாய்!' 52

அப்பொழுது திட்டத்துய்மன் வீரரோடு கன்னனை நெருங்கிப் பொருது
தோற்றுத் தேருடன் திரும்புதல்

என்ன மன்னர்மன்னவன் முகம் புகுந்து
இருவருக்கும் நல் உரை எடுத்து உரைத்து,
அந் நிலத்திலே நிற்க, வல் விரைந்து,
அறன் மகன் படைக்கு அதிபன் என்று முன்
சொன்ன திண் திறல் துருபதேயனும்,
சோமகேசராய் உள்ள சூரரும்,
கன்னன் நின்ற அம் முனையில், நெஞ்சினும்
கடுகு தங்கள் தேர் கடவினார்களே. 53

சென்ற வீரரும், சிலைகள் கால் பொர,
திண் சிலீமுகம் சேர ஏவினார்;
நின்ற வீரரும் தனு வளைத்து, மேல்
நெடிய சாயகம் நிமிர வீசினார்;
ஒன்ற மா நிலம் பொன்ற மீது எழுந்து
ஓதம் ஊர்வது ஒத்து, உம்பர் அஞ்சினார்;
அன்றை ஆகவம்தனில் நிகழ்ந்த போர்,
ஆரை ஆரை என்று அதிசயிப்பதே? 54

ஏறு தேர் அழிந்து, இவுளிமா அழிந்து,
ஏவு பாகு அழிந்து, எண்ணில் எண் இலார்
நூறு நூறு கோல் நுழைய மெய் எலாம்
நொந்து துஞ்சினர், முந்து போர் செய்தார்;
வேறு வேறு பல் கோடி வீரர்கள்
மேரு ஒப்பது ஓர் வில் வளைத்திட,
சூறை மாருதம் போல் விபாகரன்-
சுதன் நடாவு தேர் சூழ வந்ததே. 55

முட்ட வந்து தம் பின் கொடாமல், மேல்
முன் கொடுத்து, மா முனைகொள் வாளியின்
பட்டு ஒழிந்த அவ் இருவர் சேனையின்
பதிகளும் சயம் பட உடற்றினர்;
விட்ட பாணம் வந்து, இருவர் ஆகமும்
வெளி அடைக்கவே, வில் வளைத்தபின்,
திட்டத்துய்மனும் கன்னனுக்கு இடைந்து,
ஏறு தேருடன் தேறி ஓடினன். 56

அப்பொழுது வீமன் வந்து கன்னனோடு பொருதல்

சோமகேசரில் பட்டு ஒழிந்த வெஞ்
சூரர் தம்முடன், துரோண சூதனன்,
காம பாணமே என விலக்க அருங்
கணைகள் மெய் உறக் கைகழன்றபின்,
தாமம் ஆர் முடித் தம்முன் ஏவலின்,
தன்னை ஒத்த தோள் வீரர் தம்மொடும்,
வீமசேனன், மற்று அவரை வென்ற போர்
விசய கன்னன்மேல் வெய்தின் எய்தினன். 57

காலினல் வரும் காளை மைந்தனும்,
கதிரினல் வரும் காளை மைந்தனும்,
மாலினல் வரும் களிறு, வாசி, மா
மன்னு தேர் எனும் வாகனத்தினர்,
வேலினல் எறிந்து அமர் உடற்றியும்,
வெய்ய வாளினல் வெட்டி முட்டியும்,
கோலினல் எறிந்து உருவ எற்றி வில்
கோலியும், களம் குறுகினர்களே. 58

மைந்தர் போர் விதம் கண்டு கண்டு, தார்
மருவும் அம் புயத்து இருவரும் களித்து,
உந்தும் மா நெடுந் தேர் இரண்டும் வந்து,
உள்ளம் ஆன தேர் ஒத்து உலாவவே,
அந்தரம் புதைந்து உம்பரார் எலாம்
அஞ்சி ஓடுமாறு அப்பு மாரியும்
சிந்த, எண் திசாமுகமும் அண்டமும்
செவிடு பட்டிடச் சிலை வணக்கினர். 59

செல் வணக்கி மேல் கீழ் எனும் பெருந்
திசை இரண்டினும் திகழும் விற்கள்போல்
வில் வணக்கி, அவ் இருவரும் பொரும்
வெஞ் சமத்தில் வீமனை, உரத்தினும்,
மல் வணக்கு தோளினும், இலக்கு இலா
வாளி ஏவினன், ஒளியாகவே—
கல் வணக்கி முப்புரம் எரித்த முக்-
கண்ணினன் வலக் கண் அளித்துளான். 60

வலக்கண் ஆன செஞ் சுடர் இடக்கணும்
வாகுவும் துடித்து ஆகுலத்துடன்
கலக் கணீர் பொழிந்து இனையும் வேலையில்,
கனல் படும் புணில் தடி படும் கணக்கு,
இலக்கணம் தவா வீமன் வாளி ஈர்-
இரண்டு நால்-இரண்டு எண்-இரண்டினால்
அலக்கண் எய்த எய்தனன், உதாரிதன்
அணிகள் நீடு தோள் ஆகம் எங்குமே. 61

'விசயன் வஞ்சினம் அழியும்' என்று கன்னனை வீமன் கொல்லாது விடுத்துச் செல்லுதல்

வேதம் ஆகி நின்றவனை எய்த போர்
வில்லி முன்னவன், சல்லியன்தனோடு
ஓதினன், '''இவற்கு எம்பி வஞ்சினம்
ஒழியும்'' என்று கொண்டு உயிர் வழங்கினேன்;
சூதனாகி நீ வந்து தேர் விடும்
தொலைவு இலாத போர் வலியை அன்றியே,
யாது கூறலாம் வன்மை? வின்மைதான்
யாது?' என, இமைப்போதில் ஏகினான். 62

சாத்தகியோடு விடசேனன் பொருது, தேர் முதலிய இழத்தல்

அங்கர் குல நரபாலனும் வாழ்வுடை
அங்கர்களும் முனை சாய்தர, ஊழியின்
மங்குல் நிகர் பல கோல் விடு வீமனும்,
மைந்தர் அனைவரும், மாறு அடு காலையில்,
வெங் கை வரி சிலை கால் பொர, யாரினும்
விஞ்சு திறல் விடசேனன் எனு வரு
செங்கணவன், வசுதேவன் முன் நாள் அருள்
சிங்க அரசு இளையானொடு சீறியே, 63

திண் சிலையின் நெடு நாண் ஒலியோடு அணி
சிஞ்சிதமும் எழ மால் இளையோன் இணை
வண் புயமும் வியன் மார்பமும் ஊடுற
வன்பு பெறு பல வாளிகள் ஏவலும்,
நண்பொடு அவன், இவன் ஏறிய தேர், கொடி,
நன் புரவி, குடை, பாகு, இவை வீழ்தர,
ஒண் பிறையின் முகம் ஆன சிலீமுகம்
ஒன்பது உதையினன், வாகுவும் மார்புமே. 64

சோழன் மாகதனுடன் பொருது, அவன் ஆவி கவர்தல்

குன்றின் அருவிகள்போல் மததாரைகள்
கொண்ட கட தட வாரண மாமிசை
சென்று சில கணை ஏவினர், ஓர் இரு
சிந்து கிரண திவாகரராம் என,—
'இன்று வயல் உழுவீர்; புது நீர் வரும்'
என்று, வரி மணலே குறி கூறிட,
அன்று வரு குட காவிரி நாடனும்,
அம் பொன் வரி கழல் மாகதர் கோவுமே. 65

கங்கை நதியிடை, வேயொடு பாகு அடர்
கம்ப நிகள மதாசலம் நீர் உண,
வங்க மறி கடல் சூழ் எழு பார் வலம்
வந்த மனு குல சோழனை, மாகதன்,
அங்கனையர் இள மா முலை தோய் புயம்
அந்தி வெயில் நிகர் சோரியின் மூழ்குற,
வெங் கண் அழல் உதிரா, அதிரா, எதிர்
மின்கொல் என இணை வாளிகள் ஏவவே, 66

வஞ்சி மதுரை புகார் உடையான், வட
மண்டலிகர் திறை வாரிய நேரியன்,
விஞ்சி முனைதொறும் வாள் அசுரேசரை
வென்ற பொழுது, அடல் வானவர் கோன் அருள்
நஞ்சு பொழி எரி கால் ஒரு கோல் கொடு,
நம்பர் சிலை மலைபோல் அவன் ஏறிய
குஞ்சரமும் விழ, மாகதர் கோன் உயிர்
கொண்டு திருகினன், வார் சிலை கோலியே. 67

அண்டர் குல பதியாம் விடை வாகனன்,
அம் பொன் முடி மலர் நாறிடு தாளினன்,
எண் திசையும் மனு நீதி செய் கோலினன்,
எங்கும் ஒரு குடையால் இடு நீழலன்,
மண்டு கிரண சிகாமணி மோலியன்,
வண்டு மது நுகர் தாதகி மாலையன்,
மிண்டு முது புலி ஏறு பதாகையன்,
வென்றி வளவனை யார் நிகர் வீரரே? 68

மாகதன் மாண்டதும் சேனை புறமிட்டதும் கண்டு, அசுவத்தாமன் வர,
விசயன் அவனை வென்று, வெறுங் காலுடன் மீள விடுதல்

'யாது ஏவல்?' என்று பல மன்னரும் ஈண்ட, இப் பார்
மீது ஏவல் கொள்ளும் விறல் சென்னி கை வில்லின் வன்பால்
மோது ஏவு பட்டு, முகம் மாறி, மகதர் கோமான்
சாதேவன் வீழ முதுகிட்டது, தானை வெள்ளம். 69

புறமிட்ட தானை நிலை கண்டு, பொருது, சோதி
நிறம் இட்ட வில் கைத் துரோணன் மகன் நெஞ்சு கன்றி,
மறம் இட்ட வாளி பல தூவி வருதல் நோக்கி,
அறம் இட்ட சிந்தை அரசன்தன் அனுசர்தம்மில், 70

'இன்றே முடிப்பன் வினை!' என்று இரண்டு இந்த்ரநீலக்
குன்றே நிகர்ப்பத் திருமாலொடும் கூடி நிற்பான்,
சென்றே அதிரப் பரித்தாமனைச் செங் கை அம்பால்
வென்றே, இமைப்பின் வெறுங் காலினின் மீள விட்டான். 71

துரியோதனன் தம்பி சுதக்கணன் வர, நகுலன் அவனை அஞ்சி ஓடச் செய்தல்

துரியோதனன்தன் இளையோரில் சுதக்கணப் பேர்ப்
பெரியோன், முறிந்த பெருஞ் சேனையின் பின்பு நின்றோன்,
பரியோடும், மான் தேர்ப் பரப்போடும், பதாதியோடும்,
கரியோடும், ஊழிக் கனல் என்னக் கனன்று வந்தான். 72

முகிலின் சிலேயின் சிலே கோலி, முனே கொள் அம்பு
பெகுலம் தொடுத்து வரு காளேயைப் பெட்பின் நோக்கி,
நகுலன் சிறிது நகைசெய்து, நகை செய் வாளி
அகிலம் தொடுத்து, ஆங்கு அவன்தன்னேயும் அஞ்சுவித்தான். 73

கன்னன் முனேந்து வர, தருமன் எதிர்ந்து பொருதல்

'மட்டுப் படாமல் வரு தெவ்வர் மலேயின், நின்றே
தட்டுப்படாது, இன்று எமர்ஆனவர் தானே' என்னு,
பட்டுப்படாத வடி வேல் நரபாலர் சூழ,
முட்டுப்படாத முரட் கன்னன் முனேந்து சென்ருன். 74

பாஞ்சாலரின், கேகயரின், பல பாடை மாக்கள்
ஆம் சார்பினில் வந்து அடைந்தோர்களில், அன்று போரில்
மாஞ்சார் ஒழிந்த பல மன்னரும் சூழ, வண்டு
பூஞ் சாறு அருந்தும் நறுந் தாமம் புனேந்த தோளான், 75

மன்னன் தருமன் திருமைந்தன், மலேய வந்த
கன்னன் கருத்தும், கடுஞ் சேனேயும் கண்டு, மேற் போய்,
பொன் அம் பொருப்பு ஓர் இரண்டு என்ன, வெம் பூசல் செய்தார்,
இன்னம் தமக்குத் தமை அன்றி எதிர் இலாதார். 76

உதையன் புதல்வன் பெருஞ் சேனே, உதிட்டிரன் கைக்
குதை அம்பில் வீழ்ந்தார், இனேயோர் எனக் கூறல் தேற்ருர்;
இதையம் பழுது இல் இவன் சேனே அவன் கை அம்பால்
உதையுண்டு வீழ்ந்தார் உரைத்தாலும் உரைக்கல் ஆற்ரு. 77

பொற்பு ஊசல் என்ன இரு சேனேயும் போயும் மீண்டும்
மற்பூசல் செய்ய, ஒளி செய்யும் அம் மன்னர்—தம்மில்,
முன் பூசல் அம்பின் பிளந்து அண்ட முகடு விள்ள,
வில் பூசல் எய்திப் புரிந்தார்—விலின் வேதம் வல்லார். 78

கொலே அம்பும் மாளா மணி ஆவமும் கொண்ட செங் கைச்
சிலேயும், கிரிகள் இரண்டு என்னத் திரண்ட தோளும்,
நிலேயும், குறிப்பும், சிறு நாண் ஒலி நின்றவாறும்,
மலேயும் திறலும், புகழ்ந்து, அண்டரும் வாழ்த்திஞரே. 79

தாழம் குறித்துக் கரை செய்யும் தரங்க வேலே
ஆழ் அம்புராசி எழு பார் தனி ஆள நிற்போன்
சூழ் அம் பொன் மாலேத் துணேத் தோள்களின் எட்டும், மார்பின்
ஏழ் அம்பும், எய்தான்—இருள் காயும் இரவி மைந்தன். 80

தன் தோளும் மார்பும் சரம் மூழ்க, வெஞ் சாபம் வாங்கி
நின்றேனே, வாய்மை நிலை நின்ற நிருபர் ஏறும்,
வன் தோள் உற நாண் வலித்து, ஓர் இரு வாளி ஏவி,
சென்று ஓர் இமைப்பின், சிலையும் திறல் அம்பும் வீழ்த்தான். 81

கன்னனால் திட்டத்துய்மன் முதலியோர் தளர்தல் கண்டு,
தருமன் சேனையுடன் நெருங்கிப் பொருதல்

வேறு ஓர் வரி வில், வெயிலோன் மகன், வெய்தின் வாங்கி,
நூறோடு நூறு தொடுத்து ஏவும் நுதி கொள் அம்பால்,
கூறு ஓர் இரண்டு பட யாரையும் கொன்ற போழ்தின்,
ஆறு ஓடிவிட்டது, அடையார் உடல் அற்ற சோரி. 82

சாதேவன், தண்டதரன், தண்டகன், சித்ரதேவன்,
தீது ஏதும் இல்லாத் திறல் சாத்தகி, சித்ரகீர்த்தி,
தாது ஏறு தார்த் தம்பியரோடு, இகல் தண்டநாதன்
மீது ஏறு தேரும் தகர்ந்து, ஒண் சுடர் வில்லும் அற்றான். 83

முன் சேனையோடும் வலி உற்று முனைந்து, கொற்ற
மன் சேனைநாதன் பொழி வாளி மழையில் மூழ்கி,
தன் சேனைநாதன் முதல் யாவரும் தளர்தல் கண்டு,
நன் சேனை நாலும் உடன் சூழ, நடக்கலுற்றான். 84

கிருபன் என்று எண் திசையும் வரி சிலைக்கு உரை செய் முனி,
கிருதவன்மன், சிந்தை விரகுடைச் சகுனி எனும்
நிருபர், அங்கங்கள்தொறும் நிரையினில் துளை உருவ,
நெடிய அம்பு ஐம்பது அறுபது படப்பட முடுகி,
முரண் மிகும் திண் கடவுள் முரசுடைக் கொடி கொள் அணி
முகிலின் வந்து அண்டர் குல முதல்வன் அத் தனுவினொடு
தரணியின்கண் சமரம் மலைவது ஒத்து, இரதமிசை
தருமன் மைந்தன் பரிதி புதல்வனைக் குறுகினனே. 85

தருமன் மைந்தன் பரிதி புதல்வனைக் குறுகி, இரு
சரம் அவன் செங் கை வரி சிலை துணித்திடவும், எதிர்
இரு சரம் துன்றி உயர் கொடி அறுத்திடவும், உடன்
இரு சரம் சென்று தனி இரத மொட்டு இடறிடவும்,
ஒரு சரம் பொங்கு திறல் வலவன் மெய்ப் புதைதரவும்,
ஒரு சரம் திண் கவன துரகதத்து உரன் உறவும்,
வரம் மிகும் துங்க தனுவினை வளைத்து, எரி கொள் சில
வடி சரம் கொண்டு, அவனது இரு புயத்து எழுதினனே. 86

கலிங்கர் முதலியோரைத் தருமன் ஓட்டி, பலரையும் விண் புகச் செய்தல்

வடி சரம் கொண்டு அவனது இரு புயத்து எழுதிய பின்,
வட கலிங்கம், குகுரம், மகதம், ஒட்டியம், முதல
படிதொறும் தங்கள் குடை நிழல் பரப்பிய அரசர்
பலருடன், பைம் பொன் முடி மகுடவர்த்தனர் பலரும்,
இடி முழங்கும் குரலின் அதி பயத்தொடு பிலனில்
இழி புயங்கங்கள் என, ஒருவருக்கு ஒருவர் நடை
அடி தளர்ந்து, அஞ்சலியும் முதுகும் இட்டவர் ஒழிய,
அடைய அன்று உம்பர்பதி குடி புக, பொருதனனே. 87

தருமன் சங்கு முழக்க, கன்னனும் சங்கு முழக்கி, தருமன் நின்ற சமர முகத்து வருதல்

அடைய, அன்று, உம்பர் பதி குடி புகப் பொருது, தனது
அணி கொள் சங்கம் பவள இதழின் வைத்தருளுதலும்,
'உடையும் அண்டம், திசைகள் செவிடு பட்டிடும், அமரர்
உலகு பொன்றும், பணிகள் பிலமும் முற்றுற இடியும்,
இடை வழங்கும் தரணி வளர் சனத்தொடு மடியும்'
என முழங்கும் பெரிய அரவம், எக் கடலும் எழு
கடையுகம் கண்ட வடவையின் முகத்து எரி கனலி
கதுவ, மண்டும் பவனன் ஒலியினின், கடுகியதே. 88

கதுவ, மண்டும் பவனன் ஒலியினின் கடுகி, அணி
கவசமும் குண்டலமும் மகபதிக்கு அருள் குரிசில்,
சதுர் முகம் கொண்டது ஒரு கனக மொட்டு இரதமொடு
சதுர் விதம் தங்கு கதி இவுளி ஒப்பு அற அடைசி,
மதுபம் ஒன்றும் புதிய தெரியல் மத்திர நிருப
வலவன் உந்தும் பொழுதில், அதனின் மிக்கு எழு மடியும்
அதிர எங்கும் தனது வளை முழக்கினின் அயர,
அறனின் மைந்தன் சமர முனை முகத்து அணுகினனே. 89

தருமனது புயம் முதலியவற்றில் கன்னன் அம்பு எய்ய, அவன்
சோர்ந்து புறங் கொடுத்தல்

அறனின் மைந்தன் சமர முனை முகத்து அணுகி, அவன்
அகலமும் திண் புயமும் வடி சுடர்ப் பகழி பல
உறவும், அஞ்சங்கள், முடி, உருளை, அற்று இரதம் நடு
உடையவும், துங்க வரி சிலை குணத்துடன் அறவும்,
மறம் விளங்கும் பரிகள் துணிகள் பட்டிடவும், விறல்
வலவன் அங்கம் சிதறி உரனில் உற்றன முதுகு
பறியவும், தண்டு முரசு எழுது பொன் துகிலினொடு
பரியவும், சண்ட தனு உற வளைத்தனன், இவனே. 90

இவனும் அவனைப் புயமும் உரமும் முழுக, துவசம்
இடிய, மணி மொட்டு இரதம் ஒடிய, வரி வில் துணிய,
நவ நடை வயப் புரவி விறல் வலவன் மெய்ப் புதைய,
நகு சரம் நிரைத்து ஒரு வில் நடு உற வணக்கின பின்,
'அவனும் இவனைப் பொருது, முனம் இவன் மலைத்தபடி
அடையவும் அழித்தனன், இவ் அடல் மிகு களத்தில்' என,
உபநிடத வித்து முதல், அவனிபர் எனைப் பலரும்,
உரமும் அவர் கற்ற கலை உறுதியும் உரைத்தனரே. 91

உறுதியுடன் மற்றொர் ரதமிசை கொளும் உதிட்டிரனும்,
ஒரு கையில் வயச் சிலையும், ஒரு கையில் வடிக் கணையும்,
விறலினொடு எடுத்து எதிர் செல்பொழுது, அருள் மிகுத்த மொழி
வெயிலவன் அளித்தருளும் விதரண குணக் குரிசில்
மறம் உற விடுத்த கணை பொடியுற இயற்றி, அவன்
மது மலர் உரத்தை வழிவழி துளை படுத்துதலின்,
எறி படை விடுத்து, இரதமிசை உற இளைத்து, முதுகு-
இட, அறன் மகற்கு இரவி மகன் இவை உரைத்தனனே: 92

தருமனைப் புறமிடுதல் தகாது என்று கன்னன் கூற, அவன் உரையை மதித்துத்
தருமன் நின்றபோது, வீமன் ஆங்கு வருதல்

'உரை உடையை; கற்ற கலை உணர்வு உடையை; தக்க மதி
உளம் உடையை; மிக்க கிளை உறவு உடையை; சத்ய குண
வரை உடையை; எத் திசையும் வழு அற வளர்த்த புகழ்
வரிசை கொள் அறத்து இளைஞர் வழிபடும் மதிப்பு உடையை;
தரை முழுதும் முத்த நிலவு உமிழ் குடை நிழற்ற ஒரு
தனி நனி புரக்கும் உயர் தலைமை பெறுகிற்றி; பகை
கரை அழிய உற்ற பொழுது உயிர் கொடு புறக்கிடுதல்
கடன் அல உனக்கு; நிலை கருதி, அணி நிற்றி' என, 93

'கருதி அணி நிற்றி' என, உறுதி சமரத்து உரைசெய்
கருணனை மதித்து, மிகு கருணையவன் நிற்பளவில்,
விருதர் தலை அற்று உருள, விருதர் மத அத்திகளின்
விரி தலைகள் அற்று உருள, விறல் இவுளி மெய்த் துணிய,
இரதம், வயிர் அச்சு, உருளை, முடிகொள் தலை, அற்று உருள,
இரு புறமும் முட்டி விறல் ஒரு கதைகொடு எற்றி, எதிர்
பொரு சமர் முருக்கி வரு புரை இல் பவனக் கடவுள்
புதல்வன் ஓர் இமைப் பொழுதில் முதல்வனை அடுத்தனனே.

'வீமனை வெல்லுதல் அரிது!' என்று சல்லியன் கூற, கன்னன் வீரம் பேசுதல்

முதல்வன் வென்னிடுதல் கண்டு, முடியுடை வேந்தரோடும்,
விதலை இல் வயிர நெஞ்சின் வீமன் வந்து உறலும், 'காலின்
புதல்வனைப் பொருது வேறல் அரிது!' எனப் பொலம் பொன் தேரோன்
மதலையை நோக்கி, பாகன், வன் பகை தோன்றச் சொன்னான். 95

காமனே என்ன நின்ற கன்னன் வில் கையில் வாங்கி,
'வீமனே ஆக, வென்றி விசயனே ஆக, வெற்றித்
தாமனே! காண்டி; இற்றைச் சமரில், என் தழல் வாய் ஒற்றைத்
தூமம் நேர் பகழிக்கு ஆற்றார்; தூண்டுதி இரதம்' என்றான். 96

வீமன் அம்பால் கன்னன் அயர்ந்து வீழ்தல்

என்னும் முன், மருத்தின் மைந்தன் இரதமேல் வரி வில் வாங்கி,
கன்னனது உரையும் வில்லும் கணத்திடைச் சிதைந்து வீழ,
முன் ஒரு வாளி தொட்டான்; எதிரியும் முரண் வில் ஒன்றால்,
பன்னிரு வாளி மீளி மார்பிடைப் பரப்பினானே. 97

பாய்ந்த அப் பாணம்தன்னைப் பாணியால் திமிர்ந்து, வீமன்
காய்ந்த வாள் அனைய தாரைக் கடுங் கொடும் பகழி ஒன்றால்
ஏய்ந்த தேர் அருக்கன் மைந்தன் இதயத்து மூழ்குவித்தான்;
வேய்ந்த தாரவனும் தேரின்மிசை அயர்வுற்று வீழ்ந்தான். 98

சல்லியன் தேற்றத் தேறி, கன்னன் அம்பு எய்தல்

வீழ்தலும், மன்னர் மன்னன் வெம் படை வென்னிட்டு ஓட,
வாழ்வு அற வீழ்ந்தோன்தன்னை மத்திரத் தலைவன் தேற்ற,
ஏழ் பரித் தேரோன் மைந்தன் எழுந்து, பின் சாபம் வாங்கி,
சூழ் படை வீரர் யாரும் துஞ்சிடத் துணித்திட்டானே. 99

சிங்கசேனனை உள்ளிட்ட எழுவர் மாய, வீமன் சேனையோடு முதுகிடுதலும்,
அருச்சுனன் அங்கு வந்து பொருதலும்

கைத்தல வண்மை வேந்தன் கார்முகம் பொழிந்த அம்பால்,
எத்தனை நிருபர் மாய்ந்தார்? எண்ணுதற்கு யாவர் வல்லார்?
பத்தி கொள் சாதுரங்கப் படைஞர் பாஞ்சாலர்தம்மில்
செத்தனர் எழுவர், சிங்கசேனனை உள்ளிட்டாரே. 100

சேனையும் முறிந்து, வீமசேனனும் முதுகிட்டு ஓட,
கான் அமர் துளவோன் கண்டு, கடும் பரி நெடுந் தேர் தூண்ட,
யானைமேல் சிங்கம் செல்வது என்ன வந்து, எய்தியிட்டான்—
வானவர்க்கு அரசன் மைந்தன், மைந்துடை வரி வில்லோனே. 101

சென்றவன் சேனைதன்னில் நிருபரும், செருச் செய்கிற்பான்
நின்றவன் சேனைதன்னில் நிருபரும், நேர்ந்தகாலை.
என்றவன் மதலை ஏவும், இமையவர் தெவ்வை ஓட
வென்றவன் ஏவும், தம்மில் விசும்பினை வேய்ந்தவாலோ. 102

கன்னனுக்கு உதவியாக அசுவத்தாமன் வந்து கடும்போர் விளைத்தல்

இரவிதன் மதலைக்காக, இமைத்த கண் விழிக்கும் முன்னர்,
புரவிஅம்தாமா என்னும் பூசுரன் தேரில் தோன்றி,
அரவு-அணைச் செல்வன் மெய்யும் அருச்சுனன் மெய்யும், செக்கர்
விரவிய வானம் என்ன, வெஞ் சரம் புதைவித்தானே. 103

விசையனும் வெகுளுற்று, அந்த வேதியன் வில்லும் தேரும்
அசைவுற முடுகி எய்தான்; அவனும் மற்று இவனை வேறு ஓர்
குசையுடைப் புரவித் தேரும் குனி வரும் சிலையும் கொண்டு,
நிசையினை அருக்கன் போல, நிலை தளர்ந்திடுவித்தானே. 104

தளர்ந்த அத் தளர்ச்சி கண்டு, தனஞ்சயன்தன்னைத் தேற்றி,
'கிளர்ந்து அடர் புரவித்தாமா கேவலன் அல்லன், ஐயா!
பிளந்திடு, இங்கு இவனை' என்ன, பிறை முகப் பகழி ஒன்றால்,
உளம் புகத் தொடுத்தான், பாகன் உரை முடிவதன்முன் அம்மா!

கண்ணன் உரைப்படி பிறைமுக அம்பை விசயன் ஏவுதலும், அசுவத்தாமன் மயங்கித் தேரில் விழ, துச்சாதனன் கண்டு தேரொடும் அவனைக் கொண்டு போதலும்

எய்த அப் பகழி ஒன்றால், ஈசன் மா மதலை மாழ்கி,
வெய்துயிர்த்து இரதமீது வீழ்ந்தனன்; வீழ்ந்தோன்தன்னைக்
கைதவச் செயலினான் துச்சாதனன் கண்டு, முன்னைச்
செய் தவப் பயன்போல் வந்து, தேரொடும் கொண்டு போனான்.

அசுவத்தாமன் மீண்டும் வர, சித்திரவாகன பாண்டியன் அவனோடு பொருதல்

போன அப் புரவித்தாமா புரிந்து போர் தொடங்கும் எல்லை,
சேனைகள் நான்கினோடும் சித்திரவாகன் என்னும்
மீனவன், வழுதி, மாறன், வெண் மதி மரபில் வந்தோன்,
வானவர் முதல்வன் சென்னி வரி வளை உடைத்து மீண்டோன்,

சென்று எதிர் ஊன்றி, வெவ் வேல் சேய் அனான் தேரின்மேலும்,
வன் திறல் வலவன்மேலும், வாம் பரிமாவின்மேலும்,
துன்றிய கணைகள் ஏவி, தொடு சிலை துணித்து வீழ்த்தான்;
அன்று அவன் செய்த வீரம் அரசரில் ஆர் செய்தாரே! 108

வேறு ஒரு தேர் மேற்கொண்டு, விதி தரு மரபினோனும்
சீறி, வெங் கணைகள் நூறு தெரிந்து, ஒரு சிலையும் வாங்கி,
கூறிய செஞ் சொல் ஏடு குறித்து எதிர் கொண்ட வைகை
ஆறு உடையவனை அஞ்ச, அருஞ் சமர் உடற்றினானே. 109

அந்தணன் ஏவை எல்லாம் அவனிபன் அவ் அவ் அம்பால்
முந்துற விலக்கி, தங்கள் மூவகைத் தமிழும் போல,
சிந்தையில் குளிக்குமாறு, சிலீமுகம் மூன்று விட்டான்;—
தந்தையை முதுகு கண்டோன் தனயனுக்கு இளைக்குமோதான்? 110

காலினுல் துகைத்து, வேலைக் கனை கடல் ஏழும் முன் நாள்
வேலினுல் சுவற்றும் கொற்ற வெங் கயல் விலோத வீரன்,
மாலினுல் பொரு கை வேழம், வாசி, தேர், பதாதி, மாய,
கோலினுல் சுவற்றினுன், அக் குருகலார் சேனை வெள்ளம். 111

பாண்டியன் அசுவத்தாமனேடு கடும் போர் விளைத்து இறந்துபடுதல்

சங்கரன் அருளால் வந்த சதுர் மறைக் குமரன் மீள,
பொங்கு அழல் கடவுள் என்ன, பொரு சிலை வெய்தின் வாங்கி,
மங்குல்போல் பொழியும் வாளி மழையினுல் அழிந்தது அந்தோ,
செங் கயல் நெடும் பதாகைத் தென்னவன் செம் பொன் தேரே!

சிங்க ஏறு அனையான் அந்தத் தேரின்நின்று இழிந்து, முன்னம்
தங்கள் மால் வரையில் வைகும் தமிழ்முனிதன்னைப் போல,
பொங்கு வெண் தரங்க முந்நீர்ப் புணரிகள் ஏழும் சேர
வெங் கையால் வாரும் கொற்ற வேழமா மேற்கொண்டானே.

மலையினில் பிறந்த ஆரம் மணம் கமழ் வடிவில் தங்கள்
அலையினில் பிறந்த ஆரம் அழகு உற அணிந்த கோமான்,
கொலையினில் சிறந்த கோட்டுக் குஞ்சரம் கொண்டு, மீண்டும்
சிலையினில் குருவின் மைந்தன் தேரொடும் செருச் செய்தானே. 114

மோதி மத் தாரை மாருக் கைம் முகம் உகுத்த செக்கர்ச்
சோதி மத்தக வெங் குன்றின் தழை செவித் துளங்கு காற்ருல்,
சாதிமைத் துரோணன் மைந்தன் தனித் தடந் தேரில் கொற்ற
ஓதிமப் பதாகை ஆடை அப்புறத்து ஒடுங்கிற்று அம்மா! 115

கூற்று என, கொண்டல் என்ன, குரை கடல் என்ன, சூறைக்
காற்று என, கொடிய கோபக் கடும் பெருங் கரட மாவின்
ஊற்று எழும் மதங்கள் ஏழும் ஒழுகி, மண் உடைந்து, தாழும்
சேற்றிடைப் புதைந்தது, அந்தச் சேய் அனுன் தேரின் காலே. 116

மறையவன் செம் பொன் தேரை வளைந்து, மண்டலங்கள் ஓட்டி,
பிறைமுகக் கணையால் அம் தண் பிறைக் குல வழுதி எய்ய,
நிறை வயப் புரவித்தாமா நேர் உற விலக்கி, தன் கை
அறை சிறைப் பகழி ஒன்ருல், ஆனையை வீழ்வித்தானே. 117

பாண்டியன் கை வில்லோடும் பதாதியாய், பகழி சிந்தி,
ஈண்டிய இவுளித்தாமன் இரு தடந் தோளும் மார்பும்
வேண்டியவாறு சோரி வீழ்தரப் பொருத பின்னர்,
தூண்டிய துரோணன் மைந்தன் தொடை ஒன்ருல், தானும் வீழ்ந்தான்.

தருமன் சேனை பின்னிட, துரியோதனன் சேனையோர் அம்பு எய்தல்

'பட்டனன் முனிவன் கையின் பஞ்சவன்' என்று, வேந்தர்
கெட்டனர், முரசம் தீட்டும் கேதனன் சேனையுள்ளார்;
தொட்டனர், வரி வில்; வாளி தொடுத்தனர்; அடுத்து மேன்மேல்
விட்டனர், வேந்தர் வேந்தன் சேனையில் வேந்தர் உள்ளார். 119

அசுவத்தாமன் முன் சோழன் தோன்றி, அவனை இகழ்தல்

விற் கை ஆரியன் மகன் விசும்பின் வீழ்தரும்
உற்கையாம் என விடும் ஒளி கொள் வாளியால்,
கொற்கையான் இறந்த பின், கோழியான் எனும்
சொல் கையா மனு குலத் தோன்றல் தோன்றினன். 120

'தேரின்மேல் நின்று, நீ சிறு கண் செம்புகர்க்
காரின்மேல் வீரனைக் கணையின் காய்வதே?
பாரின்மேல் ஆர் கொல் இப் பாதகம் செய்தார்?—
நீரின்மேல் எழுத்து என நிலை இல் ஆண்மையாய்! 121

'ஆர்ப்பன மறை மொழிந்து, அனைவர் பாவமும்
தீர்ப்பன வேள்விகள் செய்வது அன்றியே,
கூர்ப்பன பல படை கொண்டு போர் செய,
பார்ப்பன மாக்களும் பாரின் வல்லரோ? 122

'தாதையைக் கொன்ற வெஞ் சாப வீரனைக்
கோதை வில் கணைகளால் கொன்றிலாத நீ,
ஊதை முன் சருகுபோல் ஓடல் அல்லதை,
மோது அயில் படைகொடு முனைய வல்லையோ?' 123

சோழனும் அசுவத்தாமனும் பொருத வகை

என்று, சில் மொழி மொழிந்து, இவுளித்தாமன்மேல்
துன்று வில் வளைத்தனன், சோழ பூபதி;
குன்றுடன் குன்று அமர் குறிக்குமாறுபோல்
சென்று சென்று அடுத்தன, தேரும் தேருமே. 124

இருவர் செங் கரங்களும், இரண்டு கால்களும்,
உரன் உறப் பிணித்த நாண் ஓசை வீசவும்,
மருவு பொன்-தோள் உற வலியின் வாங்கவும்,
விரைவுடன் வளைந்தன, வில்லும் வில்லுமே. 125

புகல் அரு மறையவன் புராரி ஆதியாம்
திகழ் ஒளி இமையவர் சிறப்பின் ஈந்தன,
இகல் முனை முனை உற எதிர்ந்து தள்ளவே,
அகல் வெளி புதைத்தன, அம்பும் அம்புமே. 126

சுரர் உலகு எய்திய துரோணன் மைந்தனை
இரு கணை புயத்தினும், இரண்டு மார்பினும்,
ஒரு கணை நுதலினும், உருவ ஏவினன்—
மரு விரி தாதகி வாச மாலையான். 127

பிறை முடிச் சடையவன் பிள்ளை வள் உகிர்
விறலுடைப் புலிக்கொடி வீரன் மெய் எலாம்
புறவினுக்கு அரிந்த நாள் போல, மேல் விடும்
திறலுடை வாளியால் சிவப்பித்தான்அரோ. 128

சோழன் எறிந்த வேலால் அசுவத்தாமன் கலங்கி விழ, சகுனி முதலியோர்
அவனை எடுத்து, வருத்தம் மாற்றுதல்

துளவு அணி முடியவன் துள்ளு கன்றினால்
விளவினை எறிந்தென, வீர வேலினால்,
வளவனும் வெகுண்டு, பின், மயூரவாகனன்
இளவலை எறிந்தனன், எவரும் அஞ்சவே. 129

உருத்திரன் தாதுவின் உற்பவித்த அக்
கருத்துடை முனிவன் மெய் கலங்கி வீழ்தலும்,
திருத் தகு சகுனியும், சிற்சில் வேந்தரும்,
வருத்தமோடு எடுத்து, அவன் வருத்தம் மாற்றினார். 130

அசுவத்தாமனுடன் மன்னர் பலர் மீள வந்து, சோழனுடன்
போர் செய்து, அழிந்து மீளுதல்

அவனொடும் மீள வந்து, அபயன்தன்னொடு,
கவன மான் தேருடைக் காவல் மன்னவர்,
சிவனொடும் அமர் பொரும் தெவ்வர் என்னவே,
துவனி செய் முரசு எழ, துன்று போர் செய்தார். 131

துன்மருடணன் மகன் சுவாகு, துன்முகன்
வில்மகன் சுவாது, வாள் வெயில் விபாகரன்-
தன் மகன் திருமகன் சங்கன், என்பவர்
மன் மகார் பலரொடும் மடிந்து வீழவே, 132

பண் அக இசை அளி பாடு தண்டலைக்
கண் அகன் காவிரி நாடன் கைக் கணை,
மண்ணகம் நெருக்கு உற மலைந்த மன்னரை,
விண்ணகம் இடன் அற விரைவின் ஏற்றவே, 133

முன்னிய சிலை மறை முனிவன் மைந்தனும்,
தன் நிகர் இலா விறல் சகுனி ஆதியாத்
துன்னிய நிருபரும், 'தொல் அமர்க்கு நீ
சென்னி!' என்று, அவன் புகழ் செப்பி மீளவே, 134

தம்பியர் ஒன்பதின்மருடன் துச்சாதனன் வீமனை அடுத்து எதிர்த்தல்

சோனை மேகம் பொழிவதுபோல்,—துச்சாதனனும் தம்பியரும்
வான் நாடு ஏற வழி தேடி வருவார் போல, வெருவாமல்,
மேல் நாள் மொழிந்த வஞ்சினங்கள் முடிப்பான் நின்ற வீமன் எதிர்,—
ஆனை வாளி மழை தூவி அடல் வெஞ் சிலையோடு, அடுத்தாரே. 135

'உருத்து, இன்று அரசர் ஐவரையும் உடனே கொல்வன்!' என, எண்ணி,
கருத்தின்படியே விரைந்து ஓடும் கவனப் புரவிக் கால் தேரில்
செருத் திண் பணைகள் முழங்க வரு செங்கோல் மன்னற்கு இளையோனை
மருத்தின் புதல்வன் கண்டு, மழை முகில்போல், எதிர் வாய்மலர்ந்தானே:

துச்சாதனன் வீரத்தை வீமன் பழித்துரைத்து, வஞ்சினம் கூறுதல்

'துச்சாதனனே! உனைப்போலும் சூரர் உளரோ? சூரர் எலாம்
மெச்சா நின்றார் வேத்தவையில் மேல்நாள் நீ செய் விறல் ஆண்மை;
அச்சு ஆர் இரதப் போர்க்கும் உவக்கு ஆர் வேறு எதிர் உண்டு? அம்ம! விரைந்து,
இச்சா போகமாக விருந்து இன்றே மறலிக்கு இடும் நாளே? 137

'இன்றே, உன்தன் சென்னி துணித்து இழி செம் புனலில் குளித்திடும் நாள்?
இன்றே, அழலின் உற்பவித்தாள் இருள் ஆர் அளகம் முடித்திடும் நாள்?
இன்றே, தாகம் கெட நாவுக்கு இசைந்த தண்ணீர் பருகிடும் நாள்?
இன்றே, உரைத்த வஞ்சினங்கள் எல்லாம் பயன் பெற்றிடும் நாளே?

'வென்றே அவனி முழுது ஆளும் வீரோதயன் நின் தம்முனையும்
கொன்றே, நாளை அமரர் எதிர்கொள்ளக் கடிதின் வர விடுவன்;
இன்றே நீ போய் இடம் பிடிப்பாய்; எண்ணு எண்ணம் எணி, மன்றில்
அன்றே கலகம் விளைத்து, என்றும் அழியா அரசை அழித்தோனே.'

துச்சாதனன் வாய் பேசாது நிற்க, ஒன்பதின்மர் தம்பியரும்
வீமனை எதிர்த்து மாளுதல்

வீமன் கருத்தோடு இவை மொழிய, வேறு உத்தரம் மற்று ஒன்று இன்றி,
ஊமன்தனைப்போல் அவன் நிற்க, உடனே இளையோர் ஒன்பதின்மர்
நாமம் பெறு கோல் ஓர் ஒருவர் நால் நாலாக நடந்த வழி
தூமம் கிளர ஒரு கணத்தில் தொடுத்தார், எதிர் வந்து அடுத்தாரே.

தொடுத்தார் தொடுத்த கணை அனைத்தும், சூரன்தானும், தன் கணையால்
தடுத்தான்; மீள ஓர் ஒருவர்க்கு ஓர் ஓர் பகழி, தனு வாங்கி,
விடுத்தான்; அவரும் இரதமிசை வீழ்ந்தார்; வீழ்ந்த வீரரை வந்து
அடுத்தார், விரைவில், அகல் வானத்து அழகு ஆர் காதல் அரம்பையரே.

துச்சாதனன் வெகுண்டு வீமனுடன் விற்போர் பொருதல்

உயிர்க்கு ஆர் உயிராம் தம்பியர்கள், ஓர் ஒன்பதின்மர், வீமன் கைச்
செயிர்க் காய் கணையால் சிரம் துணிந்து, தேர்மேல் வீழ, சினம் கதுவி,
பயிர்க்கா மாரி பொழிந்து வரு பருவப் புயல்போல் பாவனனை
மயிர்க் கால்தொறும் அம்புஇனம் சொருக, மன்னற்கு இளையோன் மலைந்தானே.

தன்மேல் உரக கேதனனுக்கு இளையோன் தொடுத்த சரங்கள் எல்லாம்
கல்மேல் மேகத் துளி என்னக் காய்ந்தான், அவற்றைக் கடிது உதறி,
மல் மேற்கொண்ட புயம் உற வில் வாங்கி, கொடும் போர் வாளி பல
மென்மேல் எய்தான்; எதிர்ப்பட்டால் விடுமோ, பின்னை, விறல் வீமன்?

தூவாநின்ற ஏ அனைத்தும் துச்சாதனன் தன் தொடை பிழையா
ஏவால் விலக்கி, ஏழு கணை எய்தான்; எய்த கணை ஏழும்
மாவானவற்றின் தலை நான்கும், மடங்கல் கொடியும், மணித் தேரும்,
மேவா, நிருபன் மலர்த் தடக் கை வில்லும், துணித்து, வீழ்த்தனவே.

இத் தேர் அழிய, வேறு ஒரு தேர் ஏறி, பரவையிடைச் சுழன்ற
மத்தே அனையான் சிலை வாங்கி, மன்னற்கு இளைய வய மீளி
அத் தேர் அழிய, கொடி, வலவன், வய மா, அனைத்தும் அற்று விழ,
பத்தே எய்து, ஆங்கு இணை வாளி பகைவன் புயத்தில் பட, எய்தான்.

தேர் இழந்த நிலையில் இருவரும் கதைப் போர் புரிதல்

காரின் கரிய குழல் தீண்டி, கலை அன்று உரிந்த கழற் காளை
பாரில் குதித்து, ஓர் அதி பாரப் பைம் பொற் கதையால் பாவனன்தன்
தேரில் புடைக்க, தேர் சிதைந்து சிந்திற்று; அவனும் சிலை மாற்றி,
போரில் சிறந்த தண்டமுடன் புவிமேல் பாய்ந்தான், புலி போல்வான்.

இருவரும் புயங்களின் அப்பி, ஒத்தினர்;
இகல் புரிந்து, தண்டு இறுகப் பிடித்தனர்;
மருவி ஒன்றோடு ஒன்று அனல் கக்க, மொத்தினர்;
வலம் இடம் கொள் மண்டலம் முன் பயிற்றினர்;
அருகு சென்று சென்று, அடி வைத்து அடுத்தனர்;
அகல நின்று நின்று, ஓர் இமைப்பின் முட்டினர்;
திருகு வெஞ் சினத்து, இடி ஒத்து, உரப்பினர்;
திசையின் மண்டு இபக் கிரி சத்தமிட்டவே. 147

வெகுளி கொண்டு கொண்டு, எதிர் கொக்கரித்தனர்;
விசையுடன் கிளர்ந்து உயரக் குதித்தனர்;
உகவை விஞ்ச வெங் கதையைச் சுழற்றினர்;
உயர் விசும்பு எறிந்து, ஒரு கைப் பிடித்தனர்;
முகம் மலர்ந்து நின்று, அதிரச் சிரித்தனர்;
முதிர வஞ்சினம் பல கட்டுரைத்தனர்;—
மகிபர் கண்ட கண்டவர் சித்தம் உட்கிட,
வரை இரண்டு வெஞ் சமர் கற்பது ஒக்கவே. 148

இகலி வெங் கொடுங் கதை ஒத்து மொத்து ஒலி,
இடியின் வெங் கொடுங் குரல் ஒத்து, ஒலித்தன;
மகிதலம் பிளந்தது; சர்ப்ப வர்க்கமும்
வயிறு அழன்று, நஞ்சுகள் கக்கியிட்டன;
திகிரி அம் தடங் கிரி பக்கு நெக்கது;
செவிடுகொண்டு அயர்ந்தன, திக் கயக் குலம்;
முகடு விண்டது, அண்டமும் அப்புறத்து உற;
முகில்களும், பெருங் குகை புக்கு ஒளித்தவே. 149

விழிகளும் சிவந்தன; நெற்றியில் பொறி
வெயர்வு வந்து அரும்பின, இப்பி முத்து என;
மொழிகளும் கிளம்பின, நெட்டிடிப்பு என;
முரி முரிந்த, வண் புருவச் சிலைத் துணை;
எழிலுடன் பரந்து இறுகித் தடித்தன,
இமய மந்தரங்களொடு ஒத்த பொற் புயம்;
அழியும் அங்கம் என்று, ஒரு சற்று இளைத்திலர்;
அமரில் அன்று, அருங் கதை இட்டு, அடிக்கவே. 150

எதிர் மலைந்த வெஞ் சமர் இப்படிக்கு இவர்
இரிதல் இன்றி மொய்ம்புற உத்தரிக்கவும்,
உதரம், நெஞ்சு, உரம், புயம், மெய், கழுத்து, என
உரை செய் அங்கம் ஒன்றினும் உற்று உறைத்தில;
கதைகளும் பிளந்து, ஒடிபட்டு எடுத்தன;
கரதலங்களும் கருகிச் சிவந்தன;
முதிர் சினம் கொளுந்தலின், முற்றும் விட்டிலர்;
முரணுடன் தொடங்கினர், முட்டி யுத்தமே. 151

கதையை விடுத்து, இருவரும் முட்டி யுத்தம் செய்தல்

விரல்கள் ஐந்தையும் செறியக் குவித்து, ஒளி
மிகு நகம் புதைந்திட உட் புதைத்து, இரு
கரதலங்களும் சிகரப் பொருப்பிடை
கரிய கொண்டல் மண்டு உரும் ஒத்து இடித்திட,
அருளுடன் சிறந்து அறன் உற்ற கொற்றவன்
அநுசனும், தயங்கு உரகத் தனிக் கொடி
நிருபர்தம் பெருந்தகை முன் கனிட்டனும்,
நினைவுடன் கலந்து, எதிர் குத்தியிட்டபின், 152

அனிலன் மைந்தன் என்று உரை பெற்ற கொற்றவன்,
அரசன் முந்து தம்பியை மத்தகத்திடை
கனல் கொளுந்த வந்து அதிரத் தகர்த்து, இரு
கவுள் நெரிந்து, வண் செவி உட் கரக்கவும்,
முனை சிதைந்து உரம் பெறு பல் தெறிக்கவும்,
மொழிகளும் தளர்ந்தன முற்று ஒளிக்கவும்,
மினலினும் சிவந்து ஒளி மிக்க அற்புத
விழி பிதுங்கவும், பெருகக் கலக்கியே, 153

பத யுகங்கள் அங்குலி தொட்டு உறுப்பு உள
பலவும் என்புடன் தசை பற்று விட்டு அற,
விதவிதம் படும் புடைபட்டு இடிப்புற,
விசி நரம்பு சந்துகளில் தெறித்து இற,
மதுகை அம் தடம் புய வெற்பு அற, பல
வரையுடன் பொருந்திய நல் கழுத்து அற,
முதுகிலும் கவின் பெற உற்பவித்தென
முகனையும் புறம் திருகத் திருப்பியே, 154

வீமன் துச்சாதனன் உடலைத் துகைத்து, குருதியில் குளித்தல்

மயிரை வன் கரம்கொடு உறப் பிடித்து, எதிர்
வர விழுந்திடும்படி பற்றி இட்டு, உடல்
அயிர் படும் கடுந் தரையில் துகள்பட,
அடி இரண்டினும் சரியத் துகைத்து, எழு
செயிருடன் பெருந் தொடை தொட்டு இழுத்து, அணி
திகழ் உரம் புகுந்து அவுணக் குலத்து இறை
உயிர் கவர்ந்த சிங்கமொடு ஒப்புறத் தனது
ஒளி சிறந்தனன், கடிது உக்கிரத்தொடே. 155

உகிர் எனும் பெரும் பெயர் பெற்ற சொட்டைகள்
உருவி, எங்கணும் புதைபட்டு, உரத்தலம்
வகிரவும், கொடுங் குடர்வட்டம் அற்று உகு
வயிறு தொங்கவும், கிழிவித்த பின்,—செறி
துகிர் பரந்த செம் பவர் ஒத்த நெட்டுடல்
சொரிதரும் செழுங் குருதிப் பெருக்கிடை,
பகிரதன் தரும் கடவுள் துறைப் புனல்
படியும் உம்பர்தம் பரிசின், குளிக்கவே, 156

துச்சாதனன் இறக்கவே, துரியோதனன் சேனை நில்லாது வென்னிடுதலும், கன்னன் முதலியோர் வீமனை வந்து கூடுதலும்

மன்னற்கு இளையோனை வாள் தருமனுக்கு இளையோன்
துன்னிப் பிளந்து, சுரர் உலகம் ஏற்றுதலும்,
கன்னற்கும் மற்று உள்ள காவலர்க்கும் நில்லாமல்,
வென்னிட்டது, அம் மன்னன் வீரப் பெருஞ் சேனை. 157

வண்டு ஆரவாரம் அறாத நறும் பூந் துளபத்
தண் தார் முடியோனும், விற் கைத் தனஞ்சயனும்
கண்டார்; அவர் முதலாம் காவலரும் கைகலந்தார்;
வெண் தாரகை பரந்த விண் ஒத்தது, ஆகவமே. 158

வீமன் துச்சாதனன் விரல் பத்தையும் மீண்டும் துணித்து, அவனது உதிரத்தைக் குடிக்கப் புக, கன்னன் தடுத்தல்

'வேகம் மிகும் செந் தீயில் மேல்நாள் அவதரித்த
தோகை குழலும் துகிலும் உடன் தொட்டன' என்று,
ஆகம் உறப் பிளந்த ஆண்தகை, மீண்டு, அவ் வீரன்
பாகம் உறு கை விரல்கள் பத்தும் துணித்தானே. 159

தண்ணீர் நிகர் எனத் துச்சாதனன்தன் மெய்யில் இழி
புண்ணீர் பருகப் புகுவோனை, யாவருக்கும்
கண்ணீர் வரத் தடுத்தான்—காணுங்கால், எத்திறத்தும்
வெண் நீர்மை இல்லாத மேகம்தனைப் போல்வான். 160

வீமன் குருதியைக் குடியாமல் கொப்பளித்து நின்று கூத்தாடி, தருமனது அடி வீழ்ந்து செய்தி சொல்லி, அகங்கரித்தல்

குடியாமல் அக் குருதி கொப்பளித்து, வாகை
முடியாநின்று, 'என் எண்ணம் முற்றினன்' என்று ஆங்கண்
படி ஆளும் செங்கோன்மைப் பார்த்திவருக்கு எல்லாம்
கொடி ஆர் மடங்கல் எனக் கூத்தாடி நின்று ஆர்த்தான். 161

'துன்பம் உறும் துன்னீதித் துச்சாதனன் போர் செய்து,
ஒன்பதின்மர் தம்பியரோடு உம்பர் ஊர் புக்கான்' என்று,
அன்புடைய தம்முன் அடி வீழ்ந்து அகங்கரித்தான்—
வன்புடைய தாதையினும் மிக்க வலியோனே. 162

கன்னன் சற்றுப் போர் ஓய்ந்திருக்க, சல்லியன் இடித்துரைத்தல்

பாண்டவர்கள் சேனை மதி கண்ட பௌவம் என,
காண்டவம் அன்று உண்ட கனல்போல், நனி தருக்கி,
மூண்ட நிலை கண்டு, முதுகிடு தன் சேனையுடன்
மீண்டும் எதிர் ஊன்றாமல், வெய்யோன் மகன் நின்றான். 163

'மேல்கொண்டு பாண்டவர்தம் வெஞ் சேனை சூழ்ந்திடவும்
மால் கொண்டவர் போல மாண்டாய்!' எனக் கழறி,
கால் கொண்ட திண் தேர் கடாவினன், கை உளவு
கோல் கொண்டான்; கன்னனும் அக் கூற்றுக்கு எதிர் கூறும்: 164

'துச்சாதனன் இறந்த சோகமே தவிர வேறு அன்று' என்று, கன்னன் சேனையைப் பேரணி ஆக்கி எதிர்த்தல்

'வேந்தன் அனைய விறல் தம்பி வீமன் கை
மாய்ந்த நிலை கண்டு, மனம் தளர்ந்தது அல்லாது,
கூர்ந்த திறல் மத்திரத்தார் கோவே! வெருவுமோ,
பாந்தள் எதிர் செல்லப் பறவைக்கு அரசு?' என்றான். 165

முன்னம் அமரில் முதுகிட்ட மன்னரையும்,
மன்னவர்கள் மன்னனையும், வன் பேர் அணி ஆக்கி,
பொன் அசலம் போலும் புனை பொற் கொடி நெடுந் தேர்க்
கன்னன், எதிர் ஊன்றினான், காயும் கனல் போல்வான். 166

திட்டத்துய்மனும் தன் சேனையை வகுத்து எதிர் வந்து பொருதல்

சேனாபதியான தேர்த் துருபதேயனும், வான்
மீனும் எனப் பரந்த வேந்தருடனே, தனக்குத்
தான் ஆண்மைக்கு ஒப்பாம் தருமனையும் சேனையையும்,
மா நாகம் உட்க வகுத்து, ஆங்கு எதிர் நடந்தான். 167

பொன் ஆர் முரசம் முதல் போர் வெம் பணையாலும்,
வில் நாண் ஒலியாலும், விண்ணோர் செவிடுபட;
பல் நாம பேதப் படை ஒளியாலும், பல பூண்
மின்னாலும், கண்கள் வெறியோடிவிட்டனவே. 168

விடசேனன் நகுலனுடன் பொருது, அவனை மயங்கி விழுமாறு செய்தல்

யாமினியில் எவ் உயிர்க்கும் ஏற்ற துயில் மாற்றுவோன்
மா மதலை கோ மதலை மான் தேர் விடசேனன்,
நாம மணித் தேர்மேல், நகுலன்மேல் சென்று, சில
தாம முனை வாளி தழற் பொறிபோல் சிந்தினனே. 169

வெம் புரவித் திண் தேர் விசயற்கு இளையோனும்,
செம் பதுமக் கையில் சிலை நாண் ஒலி எழுப்பி,
கம்ப மத மால் யானைக் கன்னன் மகன் ஏவிய கூர்
அம்பு அடைய அம்பால் அறுத்து அறுத்து, வீழ்த்தினனே. 170

அண்டர் பெருமானுக்கு அம் பொற் கவசமுடன்
குண்டலமும் ஈந்தோன் குமரன் கொடுங் கணையால்,
மண்டு கனல் அருந்த வன் காண்டவம் எரித்த
திண் திறலோன் தம்பி தடந் தேர்க் கால்களை அழித்தான். 171

மற்று ஒரு தேர் ஏறி, மருத்துவர்தம் மைந்தனும், அக்
கொற்ற நெடுங் கச்சைக் கொடியோன் திருமைந்தன்
வெற்றி விலோதனமும் வெஞ் சாபமும் உடனே
அற்று விழ எய்தான்; அவன் ஆண்மைக்கு ஆர் எதிரே? 172

மீண்டு, அவனும் வேறு ஒரு வில் மேரு என வாங்கி,
பாண்டவனை வீழும்படி எய்தான்; வீழ்ந்தோனை
மூண்ட அனல் செங் கண் முரண் வீமன் கொண்டு ஏக,
காண்டவம் நீறு ஆக்கினான், கண்டான் அவன் போரே. 173

விழுந்த நகுலனை வீமன் கொண்டு செல்ல, அருச்சுனன் விடசேனனோடு பொருது, அவனை மாய்த்தல்

நன் தூண் திகழ் மதியா, நாகம் பரு மத்தா,
அன்று ஊண் திரை மதியா, அண்டர்க்கு அமுது அளித்தோன்
முன் தூண்டிய தேரில் சென்றான்—முனை வாளி
மின் தூண்டில் வீசி, விடசேன மீன் படுப்பான். 174

'தம்பி படும் துன்பம் தமையனையும் காண்பன்' என
வெம்பி எதிர் சென்று, விடசேனன் வில் வாங்கி,
பம்பி வரு கொடித் தேர்ப் பார்த்தனையும் பாகனையும்
அம்பின் மறைத்தான், அடல் ஏறு அரி அனையான். 175

வில் நாணும், வில் பிடித்த வெவ் விரலும், வில் நடுவும்,
முன் ஆன தும்பை முடித்தோன் முடித் தலையும்,
பின் ஆக வாங்கும் பிறை அம்பும், பேர் அமரில்
ஒன்னார் முனை தடிந்தோன், ஓர் அம்பினால் அறுத்தான். 176

வீழ்ந்தான் விடசேனன்; வேந்தர் எலாம் வெஞ் சமரில்
தாழ்ந்தார், புறங்கொடுத்தார், தந்தை தடந் தேர்க் காலைச்
சூழ்ந்தார்; சில வீரர் தோலாது எதிர் நடந்து,
வாழ்ந்தார், சுரர் ஆகி, வான் மாதர் மெய் கலந்தே. 177

அப்பொழுது கன்னன் கருத்து அழிந்து விழ, சல்லியன் தேற்றுதல்

'சாய்ந்தனன் களத்து அருச்சுனன் சரத்தினால் தனயன்' என்று அவன்-தந்த
வேந்தனும் கருத்து அழிந்து தன் தேர்மிசை வீழ்ந்தனன்; அவன் பொன்-தேர்
ஊர்ந்த சல்லியன் தேற்றினன், பற்பல உரைகளால்; அவ் எல்லைப்
பாந்தள் அம் கொடிப் பார்த்திவன் நின்றுழிச் சென்றனன், பரித்தாமன்.

அசுவத்தாமன் துரியோதனனை அடுத்து, 'இப்பொழுதாயினும் பாண்டவருடன் கூடி வாழ முற்படு!' எனல்

'தப்ப அருஞ் சமர் விளைத்தனிர், நீயும் அத் தருமன் மைந்தனும்; வென்றே
மெய்ப் பெரும் புகழ் புனை குருகுலத்திடை, வீடுமன் முதலான
எப் பெருந் திறல் குரவரும் கிளைஞரும், ஏனை மன்னரும், யாரும்,
ஒப்பு அரும் பெருஞ் சாதுரங்கத்துடன் உடன்று, உயிர் மாய்ந்தாரே!

'வளை இலாதன மங்கல விழவும், நல் வரம்பு இலா மரபும், தொல்
விளைவு இலா அரும் புலமும், முத் தீ இலா வேதியர் மனை வாழ்வும்,
துளை இலா மணி முத்தும், அம் தண் புனல் துறை இலா வளநாடும்,
கிளை இலா அரசு இயற்கையும், நன்று எனக் கேட்டு அறிகுவது உண்டோ?

'தும்பி மா, பரிமா உள, தேர் உள, சுருங்கின; சுருங்காமல்
நும்பிமார்களில் இருந்தவர் தம்மொடும், நுவல் அரும் பல கேள்வித்
தம்பிமாரொடும், நும்முன் ஆகிய விறல் தருமன் மா மகனேடும்
பம்பி, மா நிலம் புரப்பதே கடன்' எனப் பார்த்திவற்கு உரைசெய்தான்.

'போரில் மாய்தலே நான் பெறும் பயன்!' எனத் துரியோதனன் மறுத்து மொழிதல்

ஆரியன் திருமகன் இவை உரைசெய, அரசனும் அவை கேட்டு,
'காரியம் புகல்வது புவி ஆட்சியில் கருத்து உடையவர்க்கு அன்றே?
தூரியம் கறங்கு அமரிடை உடல் விழ, சுரர் உலகு உயிர் எய்த,
வீரியம் பெறல் எனக்கு இனிப் பயன்!' என விளம்பினன், விறல் வேலோன்.

அசுவத்தாமனுடன் துரியோதனன் கன்னனை அடுத்து, அவன் சோகம் மாற்றி,
விசயனது உயிரைக் கொள்ளுமாறு தூண்டுதல்

முனி மகன் புகல் கட்டுரை மறுத்த பின், முனிவு உருவகை போருக்கு
இனிமை கொண்ட சொல் பல மொழிந்து அவனெடும், இரப்பவர் உள்ளங்கைக்
கனி எனும் கொடைக் கன்னனைத் தழீஇ, அவன் கண் உகு புனல் மாற்றி,
பனி நெடுங் குடைப் பார்த்திவன் நுவன்றனன், பார்த்தனது உயிர் கொள்வான்.

'விசயன் தலை கொய்வேன்!' என்று கூறிக் கன்னன் எழ, இருபக்கத்துச்
சேனைகளும் நெருங்கிப் பொருதல்

'மலை கலங்கினும், மாதிரம் கலங்கினும், மாதிரங்களில் விண்ணோர்
நிலை கலங்கினும், நெடுங் கடல் கலங்கினும், நிலம் கலங்கினும், சேடன்
தலை கலங்கினும், பேர் அவை மூன்றினும் தளர்வு இலாதவர் கற்ற
கலை கலங்கினும், போர்முகத்து என் மனம் கலங்குமோ? கலங்காதே.

'என் மகன் தலை என் எதிர் துணிய அம்பு ஏவிய புருகூதன்-
தன் மகன் தலை துணிப்பன், இக் கணத்தில், ஓர் சாயகம்தனில்' என்று,
மன்மகன்தனக்கு, இரதம் ஊர் மத்திரன் மகன்தனக்கு, உயர் வேள்வி
வில் மகன்தனக்கு, உளம் மகிழ்ந்து உரைத்தனன், வெயிலவன் மகன் அம்மா.

'சுரிமுகங்களில், பேர் இயங்களில், எழு துவனியால் பகிரண்டம்
நெரியும்!' என்று அயன் அஞ்சினன்; 'சேனையின் நெருக்கினல், எனைத்து உள்ள
கிரிகளும் சரிந்திடும்!' என அஞ்சினன், கிரீசனும்; கிளர் ஆழி
அரியும் அஞ்சினன், 'தூளியால் அலை கடல் அடைய வற்றிடும்!' என்றே.

பரியுடன் பரி நெருங்கின; நெருங்கின, படையுடன் படை; மத்தக்
கரியுடன் கரி நெருங்கின; நெருங்கின, கடவு தேருடன் தேரும்;
விரி நெடுங் குடை குடையொடு நெருங்கின; விலோதமும் விலோதத்தோடு
அரி எறிந்திட நெருங்கின, ஆடையும் ஆடையும் அலமந்தே. 187

பரியில் வீரரும் பரியில் வீரரும் வயப் படை எறிந்தனர்; கொற்றக்
கரியில் வீரரும் கரியில் வீரரும் அமர் கடுகினர்; கால் தேராம்
கிரியில் வீரரும் கிரியில் வீரரும் எதிர் கிடைத்தனர்; பத சாரித்
தெரியல் வீரரும் தெரியல் வீரரும் உடன் செருப் புரிந்தனர் அன்றே.

எடுத்த வேல்களும் வேல்களும் முனைந்தன; இலக்கு உறக் கொடும் பாணம்
தொடுத்த சாபமும் சாபமும் வளைந்தன; தொடியுடைக் கர சாலத்து
அடுத்த வாளமும் வாளமும் பொருதன; அங்குலிகளின் சுற்றி,
விடுத்த நேமியும் நேமியும் துணித்தன, வீரர் சென்னிகள் விழ. 189

அறன் மகன் பெருஞ் சேனையின் நிருபரும், அரவ வெங் கொடி ஆடை
மறன் மகன் கொடுஞ் சேனையின் நிருபரும்,—வஞ்சினம் பல கூறி,
திறல் மிகுந்த தம் சேனையோடு எதிர் எதிர் சென்று சென்று, இடம்தோறும்
உற மலைந்தனர்,—ஒருவருக்கு ஒருவர் தோள் உரமும் வீரமும் ஒத்தோர்.

விசயன் நம்பியரோடு கணைமழை பொழிந்து வர, கன்னனும் அசுவத்தாமா
முதலியோர் சூழச் சென்று, கடும்போர் பொருதல்

இளைஞரும் பெருஞ் சேனையும் இரு புடை நடக்க,
கிளைஞர் யாவரும் நேமி அம் கிரி எனச் சூழ,
விளையும் வெஞ் சின வீமன் முன் போதர, விசயன்
வளை நெடுஞ் சிலை கணை மழை பொழிந்திட, வந்தான். 191

கிரிசன் மைந்தனும், கிருபனும், கிருதவன்மாவும்,
வரி பொலங் கழல் சகுனியும், முதலிய மறவோர்
எரியும் வெங் கனற் கண்ணினர் எயில் எனச் சூழ,
தெரியும் வாளி வன் சிலையுடைக் கன்னனும் சென்றான். 192

மல் வளைத்த தோள் வலன் உற வலன் உறத் தம்தம்
வில் வளைத்தனர், விசையுடன் சிலீமுகம், திகிரிக்
கல் வளைத்த பார்தனக்கு இடு காவணம் போல,
சொல் வளைத்திலர், தொடுத்தனர்—தும்பை அம் தொடையார்.

மருவ அருஞ் சுருதி கூறும் நிலை நாலும் வழுவாது
இருவரும் சிலை வணக்கியதும், எய்த விரகும்,
ஒருவரும் சிறிது உணர்ந்திலர்; உகாந்தம் எனவே
வெருவரும் செயலில் விஞ்சினர்கள், விஞ்சையருமே. 194

ஒன்றொடு ஒன்று முனையோடு முனை உற்று உற விழும்;
ஒன்றொடு ஒன்று பிளவு ஓட விசையோடு புதையும்;
ஒன்றொடு ஒன்று துணி பட்டிட ஒடிக்கும்; உடனே,
ஒன்றொடு ஒன்று இறகு கௌவும்;—எதிர் ஓடு கணையே. 195

இடம் புரிந்திடில் வலம் புரியும், எண்ணின் முறையால்;
வலம் புரிந்திடில் இடம் புரியும்; மண்டலமும் ஆய்,
நடம் புரிந்து, பவுரிக் கதி நடத்தும்;—எதிரே,
சலம் புரிந்து, அதிர முட்டும் இரு சந்தனமுமே. 196

ஆசு போம் இவுளி மா கடவி, ஆழி இரதம்
மூசு போரில் ஒருவர்க்கு ஒருவர் முந்த விடலால்,
வாசுதேவனையும் மத்திர மகீபதியையும்
தேசு வேறு தெரிகிற்றிலர்கள், தேவர்களுமே. 197

மறமும் ஒத்த; வழு அற்ற சுழி ஒத்த; வலி கூர்
புறமும் ஒத்த; கதி பற்பலவும் ஒத்த; புகல் வாள்
நிறமும் ஒத்த; உயரம் பருமை நீளம் எனும் மெய்த்
திறமும் ஒத்த;—இரு தேரில் வரு திண் பரியுமே. 198

நிலை இரண்டில் உற நின்ற நிமலர்க்கு நிகர்வோர்
மலை இரண்டினை வளைத்து எதிர் மலைந்தது எனவே,
அலை இரண்டு என அதிர்ந்து பொரும் அவ் இருவர் கைச்
சிலை இரண்டும் நிமிராது, கணை சிந்தினர்களே. 199

அருச்சுனன் தேவதத்தம் முழக்கி, அம்பு தெரிந்து விட, கன்னன்
பராபரம் முழக்கி, அவற்றைத் தறித்தல்

தேவதத்தமும் முழக்கி, உயர் தேவர் பலரால்
ஆவம் மெத்தும் வகை பெற்ற பல அம்பு தெரியா,
மூவர் தம்தம் வடிவாம் முதல்வன் மெய்ப் புதல்வன்மேல்
பூவின் மொய்த்த அறுகாலின் நிரை போல விடவே, 200

பரிதி அன்பொடு வழங்கிய பராபரம் எனும்
பெரு வலம்புரி குறித்து, விறல் அங்கர் பெருமான்,
வரி நெடுஞ் சிலை வலாரி திருமைந்தன் விடு திண்
சரம் அடங்க அமர் தந்த சரம் எய்து தறியா, 201

மாயன் தேர் செல்லாதபடி கன்னன் சரகூடம் அமைக்க, கண்ணன் விரகினுல்
எதிர்ப் பக்கத்தும் சரகூடம் உளதாதல்

வயக் கதிர்க் கணை விதங்கள் கொடு மாயன் விடு தேர்
இயக்கம் அற்றிட இயற்றினன், ஓர் கூடம், இவனும்;
தியக்கம் உற்றிட மயக்கி, நெடுமால் செய் விரகால்,
உயக்கம் மிக்க சரகூடம் உளதாயது, அவனும். 202

'செயலற்று நிற்றல் ஏன்?' என்ற கண்ணனுக்கு, விசயன், 'கன்னன் தருமன்போல்
தோன்றுதலின் எனக்கு அமர் செய்தல் அரிது; தேரினைமீளவிடு' என மறுமொழிபகர்தல்

மாயா சரகூடம் வளைத்திடலால்,
வலையுள் படு வீர மடங்கல் என,
சாயாபதி மைந்தனும் நின்றனன்; மெய்
தளர்வுற்றனன், நின்ற தனஞ்சயனும்;
'ஏயா இது என்கொல் முனைந்து பொராது
எழுது ஓவியம் ஆயினை' என்று விறல்
காயாமலர் வண்ணன் விளம்புதலும்,
கவி வெங் கொடியோன் இரு கை குவியா, 203

'வன் போர் புரி வெங் கணை அங்கர் பிரான்
மறனல் உயர் பேர் அறனுர் குமரன்-
தன் போல விளங்கினன்; ஆதலின் என்
தனுவும் குனியாது; சரங்கள் செலா;
அன்பு ஓடியது உள்ளம்; எனக்கு இனிமேல்
அவனேடு அமர் செய்தலும் இங்கு அரிதால்;
வென் போகுவன்' என்றலுமே, இறைவன்
விசையோடு இரதத்தினை மீள விடா, 204

விசயன் தருமனை அடுக்க, அவன் விசயனது வில்லைப் பழித்தலும், அது குறித்துக் 'கொல்வேன்!' என்று எழுந்த விசயனைக் கண்ணன் விலக்குதலும்

முகில்வண்ணனும் வாசவன் மா மகனும்
முரசக் கொடி மன்னவன் முன்பு செல,
'பகலின்பதி மைந்தனை இன்னமும், இப்
பகல் சாய்வதன் முன்பு, படுத்திலையால்;
இகல் எங்ஙன் முடித்திடும், நின் கையில் வில்?
இது என்ன வில்?' என்று திருத்தமையன்
புகலும் சொல் அவன் செவியில் புகவே,
புண்மேல் அயில் உற்றது போன்றதுவே. 205

கூர் ஆர் முனை வாளி கொள் இச் சிலையைக்
குறை என் எதிர் கூறினர், அம் புவிமேல்
யார்ஆயினும், ஆவி செகுத்திடுமால்;
இது வஞ்சினம் ஆதலின், இப்பொழுதே
தார் ஆர் புய வென்றி உதிட்டிரனைத்
தலை கொய்வன்' எனத் தனுவும் குனியா,
வாராமுன், விலக்கி, அருச்சுனனை
'வருக!' என்று தழீஇ மதுசூதனனே, 206

' ''குரவோர்களை நீ எனினும், கொலையின்
கொடிது'' என்று உயர் கேள்வியர் கூறுவரால்;
உரவோனையும் அம் முறை கொன்றதனேடு
ஒக்கும் சில புன்சொல் உரைத்திடுவாய்—
இரவோர்தமது இன் முகம் வண்மையினல்
இதயத்தொடு கண்டு, மகிழ்ந்து, பெரும்
பரவு ஓத நெடுங் கடல் சூழ் புவியில்
பரிதாபம் ஒழித்த பனிக் குடையோய்!' 207

விசயன் தமையனை நோக்கி இசையாத புன்மொழி பேச, தருமன் ஒன்றும் கூறாது 'துறப்பேன்!' என்று கான் புக நினைதல்

என்னு உரை செய்தலும், அஞ்சி இளைத்து,
இரு கைகொடு இறைஞ்சி, நராதிபனைத்
தன் நா இசையாதன சிற்சில சொல்,
தளர்வோடு எதிர் நின்று, தனஞ்சயனும்
சொன்னான்; அறன் மா மகன் ஓர் உரையும்
சொல்லாமல், 'இனித் துறவு எய்துவன்!' என்று
உன்னு, விரைவோடு இரதத்தின் இழிந்து,
உயர் கான் அடைவான் உணர்வுற்றனனே. 208

கண்ணனும் விசயனும் தருமனை வணங்கி, 'கன்னனை உயிர் கொள்வோம்!' என்று விடைகொண்டு செல்லுதல்

நர நாரணர் சென்று தராபதி தாள்
நளினத்தில் விழுந்து, ஒரு நாயகமா
வரன் ஆம் அவனைப் புனை தேர்மிசையே
வைத்துத் துனி மாறிடுமாறு உரைசெய்து,
'அரனும் என நீ அணி நின்றிட, யாம்
அனல் அம்பு என ஓடி இமைப்பிடை, முப்
புரமே அகம் ஆய தயித்தியரின்
பொருவோன் உயிர் கைக்கொடு போதுவமே. 209

'விடை கொண்டனம்' என்று வணங்கி, நிலா
மதியம் பகலே ஒளிவிட்டது எனக்
குடை கொண்டு நிழற்ற, இரண்டு அருகும்
குளிர் சாமரம் மாருதம் மாறு பொர,
புடைகொண்டு மகீபர் திரண்டு வர,
புனை தேர், மத மா, புரவித் திரள், கைப்
படை கொண்ட பதாகினி, முன் பின் வரும்-
படி ஏகினர் மாதவ பற்குனரே. 210

வெங் கோதை நெடுஞ் சிலையின் சிறு நாண்
விசை ஓதையும், வெவ் விருது ஓதையும், வெண்
சங்கு ஓதையும், வண் பணை ஓதையும், நால்
வகையாகிய தானை நெடுங் கடலின்
பொங்கு ஓதையும், அண்டம் உடைந்திட அப்
புறம் உற்று அகலாது செவிப்பட, மற்று
இங்கு ஓதை எழுந்தது அறிந்திலரால்,
இமையா விழியோர் முதல் யாவருமே. 211

கன்னன் சரகூடத்தை அறுத்து வீமனோடு பொருதலை விசயன் கண்டு, களத்தை அடுத்துக் கன்னனுடன் பொருதல்

தாமங்களின் வைப்பு அருள் காளையும், அச்
சரகூடம் அறுத்து, அணி தானையொடும்
வீமன்தனொடும் பொருகின்றமை தன்
விழி கண்டு களித்திட, வில் விசயன்,
காமன்தனை நீறு எழ வென்ற நுதல்
கண்போல் எரிகின்ற கருத்துடனே,
மா மந்தர வெற்பு அன தேர் கடவும்
வலவன்தனொடு ஆகவம் மன்னினனே. 212

அங்கிக் கதிர் தந்த கொடுஞ் சிலை நாண்
அரவக் கணை அஞ்ச எறிந்து, மிகச்
சங்கித்து, அடல் அங்கி அளித்த தனிச்
சரம் ஏவினன் வந்து தனஞ்சயனும்;
பொங்கிக் கனல் சாலம் எழுந்தது எனப்
புகையும்படி போய், அகல் வான் நதியின்
கங்கில் பொறி விட்டது, தாரகையின்
கணம் என்ன, எழுந்தது காய் கனலே. 213

இணை இன்றி எழுந்து சுடும் கனலால்,
இரதங்களும், வேல் முதல் எப் படையும்,
கணையும், சிலையும், கவனப் பரியும்,
கரியும், கரியானவை கண்டு, இயமன்
துணைவன் துணை வாகு வளர்ந்திடவும்,
துணை வார் புருவங்கள் துடித்திடவும்,
பணை வெங் குரல் கன்றி முழங்கிடவும்,
பவ்வத்து அரசன் தரு பாணம் எடா, 214

பவ்வம் புனல் வற்ற முகந்து வலம்
பட அம்பரமூடு உருவப் பரவா,
வெவ் அம்புதம் ஏழும் உடன் பொழியும்
வெள்ளம் புரை வெள்ளம் மிகச் சொரிய,
செவ் அம்பரம் ஒத்த களத்திடை, அச்
செய்யோன் மகன் வன்பொடு சீறி விடும்
அவ் அம்பு நொடிப்பொழுதத்து அறவோன்
அனுசன் தழல் அம்பை அவித்ததுவே. 215

வாயுக் கணை ஏவினன் வானவர்கோன்
மைந்தன்; திகழ் பேர் ஒளி வான்மணியின்
சேய் உற்று உரகேசன் வழங்கிய திண்
திறல் வெங் கணை ஒன்று தெரிந்தனனால்;
ஆயுப் புறமிட்டுவிடப் பொருவோன்
அரி வெங் கணை, அங்கு மலைந்திடுவோன்
வீ உற்பல மா முனை வெங் கணை மேல்
வீசிப் பொரும் முன்பு, விழுங்கியதே. 216

'என் அம்புதனக்கு எதிர் இல்லை' என,
இருள் அம்பினை ஏவினன் வில் விசயன்;
கன்னன் கலை எட்டுடன் எட்டுடை வெண்
கதிர் அம்பு தொடுத்து எதிர் கன்றினனால்;
முன் அம்பு சிதைந்து சிதைந்து அழியா,
முகம் மாறி இமைத்து விழிக்கும் முனே,
பின் அம்பு தொடர்ந்து செலச் செலவே,
பிலம் மூழ்கியது; என்ன பெரும் பிழையோ? 217

மகவான் அருள் வாளி தொடுத்தனன், அம்
மகவான் மகன்; வாசிகள் ஏழுடை வெம்
பகவான் அருள் வாளி தொடுத்தனன், அப்
பகவான் அருள் தியாகபராயணனும்;
தக வாளி இரண்டும் உடன் கதுவி,
தாழாது உயராது சமம் பெறவே,
முகவாய்கள் பிளந்தன; மற்று உள போர்
முனை வாளியும், இப்படி முட்டினவே. 218

உரம் மந்தர வெற்பினும் மிக்க புயத்து
உரவோன், உளம் வெஞ் சினம் ஊறி எழ,
பிரமன் கணை ஏவுதலும், சமனார்
பின்னோன் முடுகிப் பிறை மா மவுலிப்
பரமன் கணை ஏவினன்; அக் கணை அப்
பகவன் கணை நீறுபடுத்துதலின்,
சரம் அங்கு அவை வேறு தொடுத்திலர், கைத்
தனுவும் குனிவித்திலர், தார் முடியோர். 219

இவ்வாறு இமையோர்கள் வரங்களினுல்
இருவோர்களும் எய்திய மா மறை கூர்
வெவ் வாளிகள் ஓடி உடற்றுதலால்,
வெஞ் சேனை அடங்க மடங்கியபின்,
மை வான் அளகம், திசை வாள் முகமா,
மலையாம் முலை, வாரிதி வண் துகிலம்,
செவ் ஆறு படுத்தலின், மேதினியாள்
திருமேனி அணிந்தது, செவ்வணியே. 220

கன்னன் நாகாஸ்திரத்தை விசயன் கழுத்திற்கு இலக்காக எய்தலும், கண்ணன் தேரை அழுத்தவே, அது அவனது கிரீடத்தை இடறிச் செல்லுதலும்

'மகபதி மைந்தனை, மீளவும், தினகரன்
மகன், உயிர் கொண்டிடவேணும்' என்று, உறு சினம்
மிக மிக, வன் சிலை கோலி, ஒண் கிரி பல
மிடை வனம் வெந்திட ஓடி, அந்தரமிசை
புகை கதுவும்படி சீறி, வெம் பொறி விடு
புரி தழல் மண்டிய நாளில் அம்பு என வரும்
இகலுடை வெம் பகு வாய்கள் ஐந்து உடையது ஓர்
எழில் கொளும் புயங்கனை ஏவ என்று உசவியே, 221

பரிமள சந்தன தீபமும், கமழ் புகை
பனி மலரும் கொடு பூசையும் பரிவுடன்
அருளி, வணங்கி, எடா விடும் பொழுதினில்,
அடல் வலவன் சில கூறினன் பரிவொடு:
'விரி துளவம் புனை மாயன் வஞ்சனை உளன்;
விசயன் அகன் தட மார்பகம் புதைதர
உரக நெடுங் கணை ஏவுக!' என்றிட, அவன்
உறுதி நினைந்திலன், ஆதவன் குமரனே. 222

மழு உறு செங்கை இராமன் என்பவன் அருள்
வரி சிலை கொண்டு, அணி நாணி தன் செவியொடு
தழுவுற, மண்டலமாய் வளைந்திட, முது
தறுகண் நெடுஞ் சினம் மூளும் வெங் கணையினை,
எழிலி மதங்கய வாகனன் தனயனது
எழில் பெறு கந்தரமே துணிந்திடும் வகை,
அழல் எழு நெஞ்சொடு நாடி நின்று, உதையினன்—
அளி முரல் பங்கய நாயகன் குமரனே. 223

வலவன் எனும் திருமால், அதன் துணை கெழு
வரவை அறிந்து, அணி தேரின் வன் திகிரிகள்
இலகிய அங்குலி ஆறு-இரண்டு அவனியின்-
இடை புதையும்படி தாழ நின்றிடுதலின்,
அலர் கதிர் தந்தருள் காளை அம்பு என விடும்
அரவு தனஞ்சயன் மார்பையும் களையும்
விலகி, அவன்தன தாதை அன்று உதவிய
வெயில் மகுடம்தனை மோதி வந்து இடறவே, 224

நாகாஸ்திரத்தை விசயன் இருகூறுக்குதலும், அது மீண்டும் கன்னனிடம் வந்து, தன்னை விடுமாறு வேண்ட அவன் மறுத்தலும்

இடறிய திண் பணி வாளி பின் பறிதலும்,
எதிர் பொர, வெஞ் சிலை கோலி நின்றவன், அணி
பிடரினும் உண்டுகொல் பார்வை என்றிட, வலி
பெற நிலை நின்று இரு தோள்களும் பரிவுற,
அடவியின் வெந்து தன் வால் குறைந்திட விடும்
அயில் முக வெங் கணையால், அதன் பருமைகொள்
உடலம் இரண்டு உடலாய் விழுந்து அலமர
உதையினன் உம்பர்பிரான் அருள் குரிசிலே. 225

பிறகு புரிந்து எழில் கூர் தனஞ்சயன் விடு
பிறைமுக வெங் கணையால் அழிந்திடு பணி
திறலுடன் முன் துணி சேரும் ஐந் தலையொடு
திரியவும் வந்து, 'எனை ஏவுக!' என்று அலறவும்,
'உறவொடு குந்தி வழா வரம் பெறுதலின்,
உரை வழுவும்; பெரிது ஆகுலம் புரியினும்,
மறு கணை ஒன்று தொடேன், முனிந்து, இனி' என,
வரி கழல் அங்கர் குலாதிபன் புகலவே, 226

நாகம் கன்னனை நொந்து உரைத்து, உயிர் துறத்தல்

'எரியிடை வெந்து, உடல் வாலும் முன் தறிதலின்,
இடர் அற உய்ந்திட, நீ பெரும் புகல் என
விரைவொடும் வந்து, ''எனை வாளி கொண்டிடுக!'' என
விசயனை வென்றிடுமாறு உளம் கருதவும்,
ஒரு தனி வெஞ் சிலை கால் வளைந்திலதுகொல்?
ஒரு படியும் பிழைபோனது உன் தொடை' என
வரி கழல் அங்கர் பிரானை நொந்து, உரைசெய்து,
மறலியிடம்தனில் ஆனது அன்று, உரகமே. 227

இருதிறத்தாரும் விசயன் தப்பியமைக்கு மகிழ்தல்

நாகாயுதம் தப்பி நரன் உய்ந்த பொழுதத்து, நாகக் கொடிச்
சேகு ஆன நெஞ்சத்தவன் சேனையில், தன் செருச் சேனையில்,
பாகு ஆர் கடா யானை நரபாலர் மகிழ்வோடு பரிவு எய்தினர்—
ஏகாதசம்தன்னில் எக் கோளும் நிகர் என்ன இகல் இன்றியே. 228

சல்லியன் உளம் நொந்து கூறி, கன்னனுக்குத் தேர் ஓட்டேன் என்று
தேரிலிருந்து இறங்கி, தனது தேருக்குச் செல்லுதல்

'அரு மார்பு இலக்காக எய்' என்ன எய்யா அகங்காரமும்,
வரு மாசுணம்தன்னை மறுகாலும் ஏவாமல் மறை செய்ததும்,
பொருமாறு நினைவு அற்றதும், கண்டு, நரன் ஒத்த போர் மீளியை,
திருமாலொடு ஒப்பானும் உளம் நொந்து, நொந்து, அம்ம சில கூறுவான்: 229

'என்னாலும் அரிது, இத் தடந் தேர் விரைந்து ஊர்தல்; இனி என்றும் மற்று
உன்னாலும் அரிது, அந்த விசயன்தன் உயிர் கொள்ளல் உன்னித்த போர்;
பன்னாக துவசற்கும் அரிதால், உனைக் கொண்டு பார் ஆளுமாறு!'
என்று இழிந்தான், அவன் தேரின்மிசைநின்றும், இசை நின்றுளான். 230

என்றே, எழில் குந்திவயின் நல்கு தனி ஆளி இகல் ஏறு அனான்
வன் தேர் செலுத்திப் பெரும் போர் முடிப்பிக்க வரு சல்லியன்,
தென் தேர் இசைச் செவ்வி நறை நாறு மலர் விட்ட சிறை வண்டு என,
தன் தேரின் மேல்கொண்டு, தனி வில்லும் மீளத் தரித்தான்அரோ. 231

கன்னன் பரசுராமன் சாபத்தை நினைந்தவனாய்,வேறு தேர் ஏறி விசயனுடன் பொருதல்

கத வாசி நடை அற்று, வலி அற்று, வரி விற் கொள் கணை யாவையும்
வித ஆழி நிலன் உற்று விரை தேரும் மெய் வன்பும் மெலிவு உற்ற பின்பு,
உதவாமல் மழுவாளி உரைசெய்த சாபத்தை உற உன்னினான்—
அதவா, முரண் போர்தனக்கு அஞ்சுமோ, என்றும் அடல் அங்கர்கோன்? 232

இயற்கைப் பெருங் கொற்ற வலி அன்றி, யார் யாரிடத்தும் பெறும்
செயற்கைப் படைத் திண்மை கை வந்திலா வெய்ய செய்யோன் மகன்,
வெயர்க்கத் தன் நுதல் கண் சிவப்பு ஏற, மனம் வெம்ப, மண்மீது இழிந்து,
அயர்க்கச் சபித்தோனை வந்தித்து, வேறு ஓர் அடல் தேரின்மேல், 233

கண்ணன் கன்னன் வலி குறைதலை விசயனுக்குக் குறிப்பிக்க, அவன் கன்னனது
உயிர்க் காற்று அவியுமாறு பாணம் தொடுத்தல்

ஏறி, தன் வலவன் செலுத்த, தடக் கையில் இகல் வில்லுடன்,
சீறி, கொடுஞ் சாயகம் கோடி முகிலூர்தி சேய்மேல் விட,
காறிக் கனன்று அக் கடுந் தேர் செலுத்தும் கரும் பாகனார்
கூறிக்கொடுத்தார்,அருக்கன் குமரன் வன்மை குறைகின்றதே. 234

குறை அற்ற தன் வில்லை, மகவற் குமாரன், குனித்து, ஆசுகம்
சிறை அற்ற கிரி போல நிற்கின்ற தினகாரி சிறுவன்தன் மெய்,
மறையத் தொடுத்தான், உயிர்க் கால் அவிப்பான், மயிர்க் கால்தொறும்—
கறை அற்ற மதி போல நிலவு ஈனும் முத்தக் கழற் காலினான். 235

போரை நிறுத்துமாறு கண்ணன் விசயனுக்குக் கூறி, வேதியர் வடிவு கொண்டு கன்னனை அடைதல்

எத் தலங்களினும் ஈகையால், ஓகை
வாகையால், எதிர் இலா வீரன்,
மெய்த்தலம் முழுதும் திறந்து உகு குருதி
வெயிலவன் கரங்கள்போல் விரிய,
கொத்து அலர் அலங்கல் மகுடமும் கவச
குண்டலங்களும் உருக் குலைந்தும்,
கைத்தலம் மறந்தது இல்லை—விற் குனிப்பும்,
கடுங் கணை தொடுத்திடும் கணக்கும். 236

அத்த வெற்பு இரண்டு விற்கிடை எனப் போய்
ஆதவன் சாய்தல் கண்டருளி,
முத்தருக்கு எல்லாம் மூலமாய், வேத
முதல் கொழுந்து ஆகிய முகுந்தன்,
சித்திரச் சிலைக் கை விசயனை, 'செரு நீ
ஒழிக!' எனத் தேர்மிசை நிறுத்தி,
மெய்த் தவப் படிவ வேதியன் ஆகி,
வெயிலவன் புதல்வனை அடைந்தான். 237

வேதியன், 'இயைந்தது ஒன்று அளி' எனலும், கன்னன், 'தரத்தகு பொருளை நீ சொல்லுக!' என்ன, வேதியன் அவனது புண்ணியத்தை உதவ வேண்டுதலும்

'தாண்டிய தரங்கக் கருங் கடல் உடுத்த
தரணியில் தளர்ந்தவர்தமக்கு
வேண்டிய தருதி நீ எனக் கேட்டேன்;
மேருவினிடைத் தவம் பூண்டேன்;
ஈண்டிய வறுமைப் பெருந் துயர் உழந்தேன்;
இயைந்தது ஒன்று இக் கணத்து அளிப்பாய்!—
தூண்டிய கவனத் துரகதத் தடந் தேர்ச்
சுடர் தரத் தோன்றிய தோன்றல்!' 238

என்று கொண்டு, அந்த அந்தணன் உரைப்ப,
இரு செவிக்கு அமுது எனக் கேட்டு,
வென்றி கொள் விசயன் விசய வெங் கணையால்
மெய் தளர்ந்து இரதமேல் விழுவோன்,
'நன்று!' என நகைத்து, 'தரத் தகு பொருள் நீ
நவில்க!' என, நான் மறையவனும்,
'ஒன்றியபடி நின் புண்ணியம் அனைத்தும்
உதவுக!' என்றலும், உளம் மகிழ்ந்தான். 239

கன்னன் மகிழ்ந்து, தான் செய் புண்ணியம் அனைத்தையும் நீர் வார்த்துக் கொடுத்தல்

'ஆவியோ நிலையின் கலங்கியது; யாக்கை
அகத்ததோ? புறத்ததோ? அறியேன்;
பாவியேன் வேண்டும் பொருள் எலாம் நயக்கும்
பக்குவம்தன்னில் வந்திலையால்;
ஒவு இலாது யான் செய் புண்ணியம் அனைத்தும்
உதவினேன்; கொள்க நீ! உனக்குப்
பூவில் வாழ் அயனும் நிகர் அலன் என்றால்,
புண்ணியம் இதனினும் பெரிதோ?' 240

என்ன முன் மொழிந்து, கரம் குவித்து இறைஞ்ச,
இறைஞ்சலர்க்கு எழிலி ஏறு அனையான்,
கன்னனை உவகைக் கருத்தினால் நோக்கி,
'கைப் புனலுடன் தருக' என்ன,
அன்னவன் இதயத்து அம்பின்வாய் அம்பால்
அளித்தலும், அங்கையால் ஏற்றான்—
முன்னம் ஓர் அவுணன் செங் கை நீர் ஏற்று
மூஉலகமும் உடன் கவர்ந்தோன். 241

'வேண்டும் வரம் கேள்' என முனிவன் கன்னனுக்குக் கூறுதலும், அவன், 'எப்பிறப்பினும் இல்லை என்போர்க்கு மறுத்து உரையா இதயம் அளி' என்றலும்

மல்லல் அம் தொடையல் நிருபனை முனிவன்
மகிழ்ந்து, 'நீ வேண்டிய வரங்கள்
சொல்லுக; உனக்குத் தருதும்!' என்று உரைப்ப,
சூரன் மா மதலையும் சொல்வான்:
'அல்லல் வெவ் வினையால் இன்னம் உற்பவம் உண்-
டாயினும் ஏழ் எழு பிறப்பும்,
''இல்லை'' என்று இரப்போர்க்கு ''இல்லை'' என்று உரையா
இதயம் நீ அளித்தருள்!' என்றான். 242

கன்னன் வேண்டிய வரம் அளித்து, முத்தியும் பெறுவாய் என்று முனிவன் உரைத்தல்

மைத்துனன் உரைத்த வாய்மை கேட்டு, ஐயன்,
மன மலர் உகந்து உகந்து, அவனைக்
கைத்தல மலரால் மார்புறத் தழுவி,
கண் மலர்க் கருணை நீர் ஆட்டி,
'எத்தனை பிறவி எடுக்கினும், அவற்றுள்
ஈகையும் செல்வமும் எய்தி,
முத்தியும் பெறுதி முடிவில்' என்று உரைத்தான்—
மூவரும் ஒருவனும் மூர்த்தி. 243

வேதியன் தன் உண்மை உருவைக் காட்டக் கண்டு, கன்னன் அகம் மகிழ்ந்து துதித்தல்.

போற்றிய கன்னன் கண்டு கண் களிப்ப,
புணரி மொண்டு எழுந்த கார் முகிலே
மாற்றிய வடிவும், பஞ்ச ஆயுதமும்
வயங்கு கைத்தலங்களும், ஆகி,
கூற்று உறழ் கராவின் வாயின்நின்று அழைத்த
குஞ்சர ராசன் முன் அன்று
தோற்றியபடியே தோற்றினன்—முடிவும்
தோற்றமும் இலாத பைந் துளவோன். 244

அமரரானவரும், அமர யோனிகளும்,
அமரருக்கு அதிபனுனவனும்,
கமல நான்முகனும், முனிவரும், கண்டு,
கனக நாள்மலர் கொடு பணிந்தார்;
'சமர மா முனையில் தனஞ்சயன் கணையால்
சாய்ந்து உயிர் விடவும், செங் கண்
அமல நாரணனைக் காணவும், பெற்றேன்!'
என்று, தன் அகம் மிக மகிழ்ந்தான். 245

'அருந் தழல் மா மகம் புரிந்தும், கடவுள்-கங்கை
ஆதியாம் புனல் படிந்தும், அனில யோகத்து
இருந்தும், அணி மலர் தூவிப் பூசை நேர்ந்தும்,
எங்கும் ஆகிய உன்னை இதயத்துள்ளே
திருந்த நிலைபெறக் கண்டும், போகம் எல்லாம்
சிறுக்கி, அனைத்து உயிருக்கும் செய்ய ஒண்ணுப்
பெருந் தவங்கள் மிகப் பயின்றும், பெறுதற்கு எட்டாப்
பெரும் பயன், நின் திருவருளால் பெறப்பெற்றேனே. 246

'நீல நெடுங் கிரியும் மழை முகிலும் பவ்வ
நெடு நீரும் காயாவும் நிகர்க்கும் இந்தக்
கோலமும், வெங் கதை, வாளம், சங்கு, நேமி,
கோதண்டம், எனும் படையும், குழையும் காதும்,
மாலை நறுந் துழாய் மார்பும், திரண்ட தோளும்,
மணிக் கழுத்தும், செவ் இதழும், வாரிசாதக்
காலை மலர் என மலர்ந்த முகமும், சோதிக்
கதிர் முடியும், இம்மையிலே கண்ணுற்றேனே! 247

'தருமன் மகன் முதலான அரிய காதல்
தம்பியரோடு எதிர் மலைந்து, தறுகண் ஆண்மைச்
செருவில், எனது உயிர் அனைய தோழற்காகச்
செஞ்சோற்றுக் கடன் கழித்தேன்; தேவர் கோவுக்கு
உரைபெறு நல் கவசமும் குண்டலமும் ஈந்தேன்;
உற்ற பெரு நல் வினைப் பேறு உனக்கே தந்தேன்;
மருது இடை முன் தவழ்ந்தருளும் செங் கண் மாலே!
மா தவத்தால், ஒரு தமியன் வாழ்ந்தவாறே! 248

'வான் பெற்ற நதி கமழ் தாள் வணங்கப்பெற்றேன்;
மதி பெற்ற திருவுளத்தால் மதிக்கப்பெற்றேன்;
தேன் பெற்ற துழாய் அலங்கல் களப மார்பும்,
திருப் புயமும், தைவந்து தீண்டப்பெற்றேன்;
ஊன் பெற்ற பகழியினால் அழிந்து வீழ்ந்தும்,
உணர்வுடன் நின் திருநாமம் உரைக்கப்பெற்றேன்;
யான் பெற்ற பெருந் தவப் பேறு, என்னை அன்றி,
இரு நிலத்தில் பிறந்தோரில் யார் பெற்றாரே!' 249

கண்ணன் கன்னன் பொருட்டுத் தான் செய்த செயல்களைக் கூறி,
மீண்டு சென்று, விசயனுக்கு வலவன் ஆதல்

என்று மகிழ்வுற, வணங்கும் எல்லி மைந்தன்
இன்புற, வண் புறவினில் ஆனிரையின் பின் போய்,
கன்றுகொடு விள எறிந்த கண்ணன்தானும்,
கன்னனுக்குக் கட்டுரைப்பான்: 'கடவுள் நாதன்
அன்று உனது கவசமும் குண்டலமும் வாங்க
அழைத்தேனும், குந்தியைக் கொண்டு அரவ வாளி
ஒன்று ஒழியத் தொடாத வரம் கொள்வித்தேனும்,
உற்பவத்தின் உண்மை உனக்கு உணர்வித்தேனும், 250

'தக்ககன்தன் மகவான உரக வாளி
தனஞ்சயனைச் சதியாமல் சாய்வித்தேனும்,
மெய்க் கருணை நின்பொருட்டால், யானே' என்று
மீண்டும் போய்த் தேர் வலவன் விசயற்கு ஆனான்—
எக் கடலும், எக் கிரியும், எல்லா மண்ணும்,
இமையோரும், மானுடரும், எல்லாம் ஆகி,
மைக் கண் இளங் கோவியர் நுண் துகிலும் நாணும்
வரி வளையும் மட நெஞ்சும் வாங்கும் மாலே. 251

கன்னன் சொற்படி, விசயன் அஞ்சரிகம் எனும் அம்பை ஏவ, கன்னன் வீழ்தல்

'பகலவன்தன் மதலையை நீ பகலோன் மேல்பால்
பவ்வத்தில் படுவதன்முன் படுத்தி' என்ன,
இகல் விசயன் உறுதி உற அஞ்சரிகம்
எனும் அம்பால் அவன் இதயம் இலக்கமாக
அகல் உலகில் வீரர் எலாம் மதிக்க எய்தான்;
அந்த ஆசுகம் உருவி, அப்பால் ஓடி,
தகல் உடையார் மொழி போலத் தரணியூடு
தப்பாமல் குளித்தது; அவன்தானும் வீழ்ந்தான். 252

குற்றுயிருடன் கன்னன் கிடக்க, அசரீரி உரையால் செய்தி உணர்ந்த குந்தி
அங்கு வந்து, அழுது புலம்புதல்

கருடனது திருத் தோளில் கண்ட கோலம்
கண்ணினும் நெஞ்சினும் நிற்க, கருணை ஆதி-
புருடனது திருநாமம் தனது நாவில்
போகாமல் நனி விளங்க, புதைந்து வாளி
வருடம் உடல் குளிப்பிக்க, செம் பொன் தேர்மேல்
மன்னர் எலாம் புடை சூழ, வையம் காக்கும்
குருடன் மகன் அருகு இருந்து சோகம் கூர,
குற்றுயிரினுடன் கிடந்தான் கொடையால் மிக்கோன். 253

'முந்தி எதிர் பொரும் விசயன் தொடுத்த கோலால்,
முடி சாய்ந்து இன்று ஐவருக்கும் முன்னோன் வீழ்ந்தான்;
அந்தி படுவதன் முன்னே ஆவி போம்' என்று
அசரீரி எடுத்து உரைப்ப, அன்னையான
குந்தி தனது உளம் உருக, கண்ணீர் சோர,
குழல் சரிய, போர்க்களத்து, 'கோ, கோ!' என்று,
வந்து, இரு கை தலைப் புடைத்து, தலைநாள் ஈன்ற
மகவின்மேல் வீழ்ந்து அழுதாள், மன்னோ மன்னோ! 254

'என்றே என் தாதையுழைக் கன்னி மாடத்து
எழில் இரவி திருவருளால் ஈன்றேன், ஈன்ற
அன்றே பொற் பெட்டகத்தில் கங்கை ஆற்றில்
ஆம் முறையால், உனை விடுத்தேன், அருள் இலாதேன்;
வென்றே மண் கவர்தரு மன் மதலைக்கு ஆவி
மித்திரன் ஆனது கேட்டு, உன் வீரம் கேட்டு,
நன்றே என் தவப் பயன் என்று உன்னி வாழ்ந்தேன்;
நாகமும் நீ அரசாள நடக்கின்றாயோ? 255

'ஓர் அஞ்சு பேர் உளரால் அறம் தவாத
உதிட்டிரன் ஆதியர், உரகக் கொடியோன் ஆதி
ஈர்-அஞ்சு பதின்மர் உளர் தம்பிமார்கள்,
இங்கிதங்கள் அறிந்து, அடைவே ஏவல் செய்ய;
பார் அஞ்சும் ஒரு குடைக்கீழ் நீயே ஆளும்
பதம் அடைந்தும், விதி வலியால் பயன் பெருமல்,
கார் அஞ்சு கரதலத்தாய்! அந்தோ அந்தோ,
கடவுளர்தம் மாயையினுல் கழிவுற்ருயே!' 256

குந்தி தேவி கன்னனை நேயமோடு மடியில் வைத்து அமுதூட்ட, கன்னனது ஆவி பிரிதல்

என்று என்றே அமர்க் களத்தில் நின்ற வேந்தர்
யாவரும் கேட்டு அதிசயிப்ப, ஏங்கி ஏங்கி,
அன்று அன்போடு எடுத்து அணைத்து, முலைக்கண் ஊறல்
அமுது ஊட்டி, நேயமுடன், அணித்தா ஈன்ற
கன்று எஞ்ச இனைந்து இனைந்து மறுகாநின்ற
கபிலையைப்போல், என் பட்டாள்—கலாபம் வீசிக்
குன்று எங்கும் இளஞ் சாயல் மயில்கள் ஆடும்
குரு நாடன் திருத்தேவி, குந்திதேவி! 257

அன்னை மடியினும் கரத்தும் உடல் கிடப்ப, அங்கர்பிரான் ஆவி தாதை-
தன்னை மருவுறத் தழுவி, தானம் உறக் கிளர்ந்தது, அவன் தடுமாருமல்—
மின்னை வலி உற நீட்டி, அண்ட முகடு அசையாமல், விண்ணோர் தச்சன்,
பொன்னை அழகு எழப் பூசி, ஒளி பிறங்க நாட்டியது ஓர் பொன்-தூண் ஒத்தே. 258

துரியோதனன் சேனைகள் வீமனுலும் விசயனுலும் குறைந்த தன்மை

மருத்து உதவ வரு சண்ட மருத்தாலும், மருத்துவான் வழங்கும் சோதி
உருத் திகழும் கரிய சுடர் உருத்து எழு வெங் கனலாலும், உகாந்தம்தன்னில்
நிருத்தமிடும் பெரும் பவ்வ நெடு நீத்தம் வறப்பதுபோல், நிருபன் சேனைப்
பெருத்த கடல் சுவறிய அப் பெருமைதனை எப்படி நாம் பேசுமாறே!

துரியோதனன் புலம்புதல்

'அணையார்தம் படைக் கடலின் அரு நிலைக்குக் கரை ஏறல் ஆன கோலப்
புணையாய், எத் திறங்களினும் பகிராமல், உற்றது எலாம் புகலத் தக்க
துணையாய், என் உயிர்க்கு உயிராம் தோழனும் ஆகிய உன்னைத் தோற்றேன்ஆகில்,
இணை யாரும் இலா அரசே! யாரைக் கொண்டு, அரசு ஆள இருக்கின்றேனே!

'சூழ் வேலை உலகு ஆளும் சூழ்ச்சியும், இப் பெருஞ் செல்வத் துவக்கும், நெஞ்சால்
வீழ்வேனே? அமராட வீமனெடு தலைநாளில் விளைந்த செற்றம்
தாழ்வேனே? உனை ஒழிந்தும், தம்பியரை ஒழிந்தும் இனித் தனித்து நானே
வாழ்வேனே? வாழ்வே! என் மன வலியே! வருகின்றேன், வருகின்றேனே!'

சூரியன் மறைதல்

எனக்கொண்டு சுயோதனன் பேர் இரக்கமுடன் அழுது அரற்ற, இருந்த வேந்தர்
மனம் கொண்ட வருத்தமுடன், 'வலி இழந்தோம்!' எனக் கலுழ, வானின் எங்கும்
இனக் கொண்டல் முழங்குவபோல் அந்தர துந்துபி முழங்க, இமையோர் ஆர்ப்ப,
கனக் கொண்ட கதிர் புதல்வன் பாடு அறிந்து மூழ்கியதால் கடலினூடே.

நாயின் அழுகை கேட்டு ஐவரும் கண்ணனை வினவி உண்மை தெரிந்து,
கன்னனை அணுகுதல்

பேர் அறத்தின் மகன் முதலாம் பிள்ளைகள் ஐவரும், தம்மைப் பெற்ற பாவை
ஆர் கயற் கண் புனல் சொரிய அழுகின்ற குரலினைக் கேட்டு, ஆழியானை
ஓர் இமைப்பில் வினவியிட, உள்ளபடி உரைத்ததன்பின், உரும்ஏறு உண்ட
கூர் எயிற்று நாகம்போல் குலைகுலைந்து, தம்முனைப் போய்க் குறுகினரே.

தருமன் முதல் ஐவரும் முறையே வருந்திப் புலம்புதல்

'கன்னி இளம் பருவத்தில் அரியமா எனும் கடவுள் காதல் கூர,
மன்னிய மந்திரம் எமக்கும் இன்று அளவும் உரைத்திலையால்; மறந்தாய் கொல்லோ?
பின்னிய செஞ் சடைக் குழலாய்! ஈது என்ன பேர் அறிவு? பெற்ற தாயின்
அன்னியம் நன்றாய் இருந்தது; இப்படியே பிழைப்பிப்பது அறிந்திலேமே!'

'ஊற்று இருந்த விழியினளாய் உனைப் பயந்தாள் மனம் மருக, உயிராய் நின்ற
காற்று இருந்த இடம் தேடிக் கணை பலவும் உடல் குளிப்ப, கன்னா! இன்று
கூற்று இருந்த பதி தேடிக் குடி இருக்க நடந்தனையோ?—கொற்ற வேந்தாய்
வீற்றிருந்து, இங்கு ஐவேமும் அடி வருடப் புவி ஆள விதி இலாதாய்!'

'ஊன் தொடுத்த வய வாளி எத்தனை ஆயிரம் தொடுத்தேன்; உரகத்தால் நீ-
தான் தொடுத்த கடுங் கணைக்குத் தப்பினேன் என மகிழ்ந்தேன்; சஞ்சரிகத்
தேன் தொடுத்த மலர் அலங்கல் தின நாதன் சேயே! நின் திருமார்பத்தில்
யான் தொடுத்த நெடும் பகழி எனைக் கெடுப்பது அறிந்திலேன்; என் செய்தேனே!'

'யாய் உரைத்தது அல்லாது, வேறு உரைத்தது, அசரீரி என்னும் தேவின்
வாய் உரைத்தது, இன்று அளவும் கேட்டிலேம்; கேட்டனமேல் வாட்டம் உண்டோ?
பேய் உரைத்துத் தாலாட்ட, முலைப்பாலோடு உயிர் உண்ட பித்தா! ஈண்டை
நீ உரைத்த பிறகு அறிந்தோம்; எம்முனை இன்று எமைக் கொண்டே நேர் செய்தாயே.

'ஆடகனைப் புதல்வனைக் கொண்டு அழிப்பித்தாய்; இலங்கை நகர்க்கு அரசை அன்று
வீடணனைப் பகை ஆக்கிக் கிளையுடனே வீழ்வித்தாய்; வேலை சூழ்ந்த
நாடு அறியப் புகுந்து எமக்கு நாயகமாம் கன்னனையும், நரன் கை அம்பால்
ஈடு அழியப் பொருவித்தாய்; இமையோர்கள் வல்ல விரகு யார் வல்லாரே?'

ஐவரும் தாயும் பாடிவீடு செல்ல, துரியோதனனைக் கொண்டு
சகுனி முதலியோர் தங்கள் இருப்பிடம் செல்லுதல்

இவ் வகையே திருத் தமையன் இணை அடிக்கீழ் வீழ்ந்து அலறி, யாயும் தாங்கள்
ஐவரும் போய்த் தம் பாடி வீடு அடைந்தார், ஆகுலத்தால் அழிந்த நெஞ்சார்.
பைவரு மாசுணத் துவசப் பார்த்திவனைக் கொண்டே தம் பாடி புக்கார்,
தைவரு திண் சிலைத் தடக் கைச் சகுனிதனை முதலான தரணிபாலர்.

46. பதினெட்டாம் போர்ச் சருக்கம்

கடவுள் வாழ்த்து

மீன், ஆமை, கோலம், நெடு நரசிங்கம், ஆகி; நிலம்
விரகால் அளந்த குறளாய்;
ஆறுது சீறும் மழு, வல் வில்லும், வெல்லும் முனை
அலம், உற்ற செங் கையவராய்;
வான்நாடர் வந்து தொழ, மண்நாடர் யாவரையும்
மடிவிக்க வந்த வடிவாய்;
நானு விதம் கொள் பரி ஆள் ஆகி நின்று அருளும்
நாராயணாய நமவே! 1

சூரியன் தோன்றுதல்

சிதையத் தன் மைந்தனை அடும் தன்மை கண்டும், ஒரு
செயல் இன்றி, நீடு துயர் கூர்
இதையத்தன் ஆகி, அகல் பகலோன், மறித்து, அவுணர்
எதிர் அஞ்சுமாறு பொருதான்—
உதையத் தடங் கிரியும் ஒளிர் பற்பராக கிரி
ஒப்பாக, வீசு கதிரின்
புதையப் பரந்த அகல் இருளும் துரந்து, உரகர்
புவனத்தினூடு புகவே. 2

துரியோதனன் இரவில் சகுனியொடு எண்ணி, உதயத்தில் சூரியனைத் தொழுதல்

கண் துஞ்சல் இன்றி, இரவு இரு கண் இலான் மதலை
கண்ணீரில் மூழ்கி, 'எவரைக்
கொண்டு இங்கு எடுத்த வினை முடிவிப்பது' என்று உயர்
சகுனியோடும் எண்ணி, இருள் போய்,
உண்டும் சுகித்தும் மலர் மது ஒன்று சாதி முதல்
ஒண் போது விட்டு, ஞிமிறும்
வண்டும் சுரும்பும் அரவிந்தத் தடத்து வர,
வருவோனை வந்தனை செய்தான். 3

சல்லியனைத் துரியோதனன் அழைத்துச் சேனாபதியாக்குதல்

தொல் ஆண்மை எந்தை முது தந்தைக்கும், மைந்து உறு
துரோணற்கும், மண்ணில் நிகர் வேறு
இல்லாத வண்மை புனை வெயிலோன் மகற்கும், உடன்
எண்ணத் தகும் திறலினான்;
வில் ஆண்மையாலும், வடி வாள் ஆண்மையாலும், அயில்
வேல் ஆண்மையாலும், அவனே
அல்லாது, வேறு சிலர் இலர் என்று, சல்லியனை
அதி ஆதரத்தொடு அழையா, 4

'நீயே எனக்கு உயிரும்; நீயே எனக்கு உளமும்;
நீயே எனக்கு நிதியும்;
நீயே துணைப் புயமும்; நீயே விழித் துணையும்;
நீயே அனைத்து நிலையும்;
நீயே முனைச் செருவில் அதிரதரின் மாரதரின்
நிகர் அற்ற கோவும்; அதனால்,
நீயே முடித்தி எனது எண்ணத்தை' என்று உவகை
நிகழா, வியந்து புகழா, 5

மன் பட்டவர்த்தனரும் மணி மகுடவர்த்தனரும்
முறையால் வணங்க, ஒளி கால்
நல் பட்டமும் தனது கையால் அணிந்து, 'படை
நாலுக்கும் நாயகம்' என,
மின் பட்ட ஓடை நுதல் இபராசன் வன் பிடரின்-
மிசை வைத்து, உகந்தனன்அரோ;
என் பட்டது அப்பொழுது குரு சேனை, மெய்ப் புளகம்
எழ, ஒண் கண் முத்தம் எழவே! 6

துரியோதனன் காலைக் கடன்களை முடித்து, சல்லியனோடு களம் புகுதல்

சேனாபதிக்கு வரிசைகள் யாவும் நல்கி, உயர்
தெய்வீகமான புனலில்
தூ நானம் ஆடி, மறைவாணர்க்கு அநேக வித
தானம் சொரிந்து, துகிலும்
தேன் ஆர் அலங்கல் பல கலனோடு அணிந்து, பொரு
தேரில் புகுந்தனன்—வழா
வான் ஆளும் நாதன் அதிர் முகிலில் புகுந்தது என,
வன்போடு மன்னர் தொழவே. 7

கிருபாரியன், கடவுள் மருகன், திகத்த பதி,
சாலுவன், கிருதன், முதலோர்
இரு பாலும் மன்னர் வர, முனிவு ஆர் பெருஞ் சேனை
எங்கணும் சூழ வரவே,
நிருபாதிபன் தனது சேனாதிபன்தனொடு
நீள் களம் புக்கனன்—'அரும்
பொரு பாரதச் சமரம் இன்றே முடிப்பல்!' எனும்
எண்ணத்தினோடு பொரவே. 8

சல்லியன் சேனையை அணி வகுத்தல்

தாமன் தராதிபர்கள் பலரொடும் வலப்புடை
சலிப்பு இன்றி அணிய, விறல் கூர்
மாமன் தராதிபர்கள் பலரொடும் இடப்புடை
வகுப்பொடு அணிய, தினகரன்
கோ மைந்தன் மைந்தன் இருவோரொடும் சேனையைக்
கொண்டு உற அணிந்தனன்—இகல்
சாமந்தர் மண்டலிகர் முடி மன்னர் சூழ்வர,
தரணி பதி பின் அணியவே. 9

ஐவரும் பாசறையில் கன்னன் பிரிவுக்குப் புலம்பிச் சோகமுறுதல்

ஒருவரும் எனக்கு நிகர் இல்லை எனும் மத்திரன்
புத்திரனை உரக துவசன்
பொரு படை முனைக்கு உரிய சேனாபதிப் பெயர்
புனைந்தமை புகன்றனம். இனி,
குருகுலம் விளங்க வரு குந்தி மைந்தர்கள் இரவி
குமரனைக் கொன்ற இரவில்
பருவரல் மிகுந்து உளம் இனைந்ததும், பாசறை
முனைந்ததும் வியந்து பகர்வாம்: 10

'செவ் இரவி திருமகனை, செகம் புரக்கும்
காவலனை, இரவலோருக்கு
எவ் இரவும் விடிவிக்கும் இரு கரத்து வள்ளலை,
இன்று இழந்தோம்!' என்று
விவ் விரவு நறு மலர்த் தார்த் தருமன் முதல்
ஐவரும், தம் விழி நீர் சோர,
அவ் இரவில், இமைப்பொழுதும் தரியாமல்,
அழுது அரற்றி அலமந்தாரே. 11

சாயை வெறுத்தனள், அவளின் தலத் தேவி
மிக வெறுத்தாள், 'தபனன் ஈன்ற
சேயை வெறுத்து, உயிர் கவர்ந்தான் உறவு அறியான்,
தெயித்தியர் போர் செயித்தான்' என்று,
மாயை வெறுத்திட விளைத்த மாயோனை
வெறுத்தனன்; வன் மனத்தி ஆன
யாயை வெறுத்தனன்; பின்னை விதியை வெறுத்தனன்—
வீமற்கு இளைய கோவே. 12

பாண்டவர் போர்க்களம் புகுதல்

அற்றை இரா விடிவு அளவும் தனித்தனியே
ஆகுலமுற்று, அனிலன் மைந்தன்,
மற்றை நால்வரும், மாலும், மன்னவரும்,
வரூதினியும், மருங்கு சூழ,
'இற்றை நாள் வஞ்சினத்தின் குறை முடிக்க
வேண்டும்' எனும் இதயத்தோடும்,
பிற்றை நாள் முரசு அதிர, வளை முழங்க,
களம் புகுந்தான், பிதாவைப் போல்வான். 13

'விம்மு பெரும் பணை ஒலியால் விண்டதுகொல்
அண்டம்!' என விண்ணோர் அஞ்ச,
கைம் முக மா முதலான கடுஞ் சேனைப்
பாஞ்சாலன் காதல் மைந்தன்
எம் முகமும் தான் ஆகி, இரதம் ஊர்ந்து,
அணி வகுக்க, இளையோர் யாரும்
தம்முனை வந்து அடி வணங்கி, புடை சூழ்ந்தார்,
சிறிதும் மனம் சலிப்பு இலாதார். 14

சல்லியனது அத்திரவியூகம் கண்டு தருமன் மனம் தளர, கண்ணன்
அவனுக்குத் தேறுதல் உரைத்தல்

அத்திரயூகம்அது ஆக அரும் பெருஞ் சேனையை
வகுத்து, ஆங்கு அதிபன் ஆகி,
மத்திர பூபதி நின்ற வலியினைக் கண்டு,
அதிசயித்து, மாலை நோக்கி,
'இத் திறம் ஆகிய படையோடு எப்படி நாம்
சில படைகொண்டு எதிர்ப்பது?' என்றான்—
குத்திரம் ஆகிய வினைகள் ஒருகாலும்
திருவுளத்தில் குடிபுகாதான். 15

'வீடுமனை, சிலைக் குருவாம் வேதியனை,
நும்முனை, முன் வீடு சேர்த்த
நீடு மணிப் பொலங் கழலோர் நின் அருகே
நிற்கின்றார்; நிகர் இலாய்! கேள்!
ஆடு திரைக் கடல் நீந்தி ஏறினர்க்குக்
கழி கடத்தல் அரியது ஒன்றோ?
தோடு அவிழ் தார்ச் சல்லியனுக்கு இளைப்பரோ?'
என மொழிந்தான், துளப மாலை. 16

'வில்லியரில், வேலாளில், வாள் எடுத்தோர்-
தம்மில் ஒரு வேந்தர் ஒவ்வார்;
செல் இயல் வெங் கரி ஆளில், தேர் ஆளில்,
பரி ஆளில், சிலர் வேறு ஒவ்வார்;
மல் இயல் பொன்-தோள் வலிக்கும், தண்டுக்கும்
எதிர்ந்து பொர வல்லார் யாரே?
சல்லியனுக்கு ஒப்பார் நின் தம்பியரில்
இலர்' என்றும் சாற்றினனே. 17

'அரு வரை ஓர் இரண்டு இருபால் அமைந்தனைய
தடம் புயம் கண்டு அவனி வேந்தர்
வெருவரு போர் மத்திரத்தான், வேறு ஒருவர்மேல்
செல்லான், நின்மேல் அன்றி;
இருவருமே முனைந்து முனைந்து இரவி கடல்
விழும் அளவும் இகல் செய்தாலும்,
ஒருவர் ஒருவரை வேறல் ஒண்ணாது இன்று,
உமக்கு' என்றும் உரைசெய்தானே. 18

'பார்த்தன் ஒருவனும் சென்று பரித்தாமா-
வுடன் மலைய, படைஞரோடு
மாத்திரி மைந்தரில் இளையோன் சௌபலனை
வெல்ல, இகல் மா வலோனும்,
மூத்தவன் மைந்தரை வெல்ல, முனைப் பவனன்
மைந்தனொடு மூண்டு வெம் போர்,
கோத் தரும! மத்திரத்தார் கோவை உயிர்
கவர்தி!' எனக் கூறியிட்டான். 19

திட்டத்துய்மன் அணிவகுத்து நிற்க, சேனைகள் பொரத் தொடங்குதல்

கிருபையால் உயர் கேசவன் இங்கிதக்
கேள்விகள் உணர்வுறக் கேட்டு,
துருபதேயனும் தன் பெருஞ் சேனையைத்
துன்றிய வியூகமாத் தொடுத்து,
நிருபர் யாவரும் சூழ்வர, தாழ் சல-
நிதி என, விதி என, நின்றான்—
பொரு பதாகினி இரண்டினும் முனை உறப்
போர் வலோர் தூசிகள் பொரவே. 20

ஆய போதினில், குருபதி பதாகினிக்கு
அதிபதி ஆய பூபதி, அம்
மாயவன் புகல் மொழிப்படி தருமன் மா
மதலைமேல் விரைவுடன் வந்தான்;
காயும் வெங் கனல் கண்ணினன், செவி உறக்
கார்முகம் குனித்த செங் கரத்தான்,
தீய ஆகிய சிலீமுகம் உரன் உறச்
சொரிதரு சிங்கஏறு அனையான். 21

எதிரி தேர் வரும் வன்மை கண்டு, இமிழ் முரசு
எழுதிய கொடி நராதிபனும்,
கதிரின் ஏழ் பரித் தேரினும் கடிய தன்
கவன மான் தேர் எதிர் கடவி,
முதிர மேல்வரும் கணைகளைக் கணைகளால்,
முனை கொடு முனை கொள் கார் விசும்பில்
பிதிர் படும்படி தொடுத்தனன், தொடித் தடக்
கையினில் பிடித்த வில் குனித்தே. 22

கொடிஞ்சி மா நெடுந் தேர்களில் பூட்டிய
குரகதக் குரம் படப் பட, மண்
இடிஞ்சு, மேல் எழு தூளி முற்பகல் வரும்
இரவினை நிகர்த்தது; அவ் இரவு
விடிஞ்சதாம் எனப் பரந்தது, அத் தேர்களின்
மின்னிய மணிகளின் வெயில்; போய்ப்
படிஞ்ச தூளி ஓர் நடம் பயில் அரங்கினில்
பரப்பிய எழினி போன்றதுவே. 23

தன் பெருந் தனிச் சங்கினை முழக்கினன்,
தருமன் மா மதலை, வெம் போரில்;
வன் பெரும் பணைச் சங்கினை முழக்கினன்,
மத்திராதிபன் திருமகனும்;
நன் பெருந் துளைச் சங்குகள் எழுப்பிய
நாதம் வான் முகடு உற நண்ணி,
மின் பெரும் புயல் ஏழும் ஒத்து அதிர்தலின்,
மிகு குரல் தனிதம் ஒத்து உளதே. 24

தருமனும் சல்லியனும் விற்போர் புரிதல்

வில் எடுத்தனர், வலி உடை நிலையினர்,
வீக்கு நாண் விரல்களின் தெறித்து,
மல் எடுத்த தோள் வலன் உற வளைத்தனர்,
வடிக் கணை முனை உற அடைசி,
செல் எடுத்த பேர் இடி என முறை முறை
தொடுத்தனர், தேர்களும் செலுத்தி—
கல் எடுத்து எதிர் மலைந்த வாலியும் மணிக்
கழுத்து உடையவனுமே அனையார். 25

எய்த அம்புகள் இருவர் மெய்யினும் படாது,
இடை இடை எஃகு உடைத் தலைகள்
கொய்த அம்புகள் ஆகியே முழுவதும்
விழுந்தன; கூறுவது எவன்கொல்!
கைதவம் புகலுதற்கு இலா எண்ணுடைக்
கருத்தினர், திருத்தகு வரத்தால்
செய் தவம் புரை அறப் பலித்தனையவர்,
திருக் கணும் கைகளும் சிவந்தார். 26

கிரித் தடங் குவடு அணைந்த கேசரி நிகர்
சல்லியன்—முரச கேதனன்தன்
பரித் தடந் தனித் தேர் விடும் பாகனைப்
பாணம் ஒன்றால் தலை துணித்து,
வரித் தடஞ் சிலை நாண் அறுத்து, ஒரு முனை
வாளியால், வடிக் கணை ஒன்றால்,
விரித்த வெண் குடை மகுடமும் ஒடித்தனன்—
வில் வலோர் எவரினும் மிக்கோன். 27

தருமன் தளர்ச்சி கண்டு, வீமன் சல்லியனோடு வந்து பொருதல்

வலவன் வீழ்ந்ததும், தனுவின் நாண் அற்றதும்,
மனத்து அழுக்காறு இலா வாய்மைப்
புலவன் வெண் குடை ஒடிந்ததும், மேல் வரு
போற்றலன் ஏற்றமும் பொறாமல்,
குலவு திண் சிலைக் குரிசிலை, தம் முனைக்
கொண்ட வீரியம் எலாம் கொண்டான்—
கலவ மா மயில் ஒழித்து, பஞ்சானனம்
எழுதிய தனிக் கொடிக் கந்தன். 28

தனது திண் கையின் சரத்தினும் தம்பி கைச்
சரம் விரைந்து உடற்றலின், தடக் கைக்
கன தனுத்தனை ஊன்றி நின்று, இருவரும்
கணக்கு அற மலையுமா கண்டான்—
'எனது தோள்களில் இளையவன்தனக்கு வேறு
யாது' எனும் எண்ணுடை மனத்தான்,
வினதை காளையோடு உவமை கூர் வலியினன்,
வேந்தர் யாரினும் புகழ் மிக்கோன். 29

எந்த எந்த வெஞ் சாயகம் மறையுடன்
இமையவர் முனிவரர் கொடுத்தார்,
அந்த அந்த வெஞ் சாயகம் அடங்கலும்
அவர் அவர் முறைமையின் தொடுத்தார்;
முந்த முந்த மற்று உள்ள ஆயுதங்களும்,
முடி முதல் அடி அளவாக,
உந்த உந்த, வெங் குருதியும் மூளையும்
உக உக, உடற்றினர்—உரவோர். 30

வீமன் விற்போரில் அதிர்ந்து கதை கொண்டு பூமியில் நிற்க, சல்லியன்
தோமரப் படையால் வீமனை எற்றுதல்

மத்திரப் பெயர்ச் சிங்கஏறு அனையவன்
வன் கை வான் படைகளின் மயங்கி,
பத்திரப் பெயர்ப் பருத்த கைச் சிறுத்த கண்
பாய் மதப் பரூஉப் பகடு அனையான்,
சித்திரக் கதிர் மணி முடிப் பீடிகைத்
திண் திறல் திகிரி அம் தேர்நின்று
அத்திரத்தை விட்டு, ஒரு தனிக் கதையுடன்
அதிர்ந்து போய், அவனியில் ஆனான். 31

பகைவன் ஏறிய தேர் விடும் வலவனும்,
திகிரியும், பாய் பரிமாவும்,
புகை எழும்படி இமைத்த கண் விழிக்கும் முன்,
பொடி எழ இடி எனப் புடைப்ப,
வகை கொள் தார் முடி மத்திரத் தலைவனும்
மா மறத் தோமரப் படையால்,
மிகை கொள் வன் திறல் வீமனை நெற்றியில்
எற்றினன், வெற்றி கூர்ந்திடவே. 32

போரில் வீமன் நிலைகுலைய, இரு பெருஞ் சேனையும் பொருதலும், கன்னன் புத்திரர் மூவர் நகுலனால் மடிதலும்

தோமரம்தன்னால் வாயுசுதன் அமர் அழிந்த போதில்,
ஏ மரு வரி வில் தானை இரு பெருஞ் சேனையோரும்,
மா மரு தடந் தேர், வாசி, மத்த வாரணங்கள், ஊர்ந்து,
தீ மரு கானம் என்ன, தனித் தனிச் செருச் செய்தாரே. 33

தேரவன் மைந்தன் மைந்தர், சித்திரசேனன், ஏனைச்
சூரியவன்மன், சித்ரகீர்த்தி, முச் சுடரோடு ஒப்பார்,
வீரரில் வீரன் ஆன வெம் பரி நகுலனோடும்
போரில் வந்து எதிர்ந்து, தாதை போயுழிப் போயினாரே. 34

சகுனியும், அவன் புதல்வர் இருவரும் நகுலனொடு பொருது தோற்றல்

தசை உற வளர்ந்த பொன்-தோள் சகுனியும், தனயர் ஆகி
இசையுடன் வளர்ந்த வீரர் இருவரும், இரத மேலோர்,
நிசை உறு மத மா வந்து நெருப்பு எதிர்பட்டது என்ன,
விசையனது இளவலோடு செருச் செய்து, வெந்நிட்டாரே. 35

துரியோதனன் கேதுதரன் என்பானைக் கொல்லுதல்

புயங்க வெம் பதாகை நச்சுப் பொங்கு அழல் புயங்கம் போல்வான்,
தயங்கு வெங் கழல் கால் கேதுதரன் எனும் தனு வலோனை,
வயங்கு வெஞ் சிறகர்ப் புங்க வயம் கொள் கூர் வாளி ஒன்றால்,
'இயங்குக, வானினூடு!' என்று, இமையவன் ஆக்கினானே. 36

சல்லியன் மீண்டும் தருமனோடு பொருதலும், சுமித்திரன் முதலிய மன்னரை மடிவித்தலும்

இரு பெருஞ் சேனையோரும் இப்படிச் செருச் செய் காலை,
தருமன் மா மதலைதன்மேல், சல்லியன்தானும், மீள,
பொரு பரித் தடந் தேர் உந்தி, புகை கெழு முனை கொள் வாளி
ஒரு தொடைதன்னில் ஓர் ஏழ் உரத்துடன் துரத்தினானே. 37

பின்னரும் விரைவினோடும் பெய் கணை மாரி சிந்தி,
முன்ன அரு முனையில் நின்றோர் முதுகிட முரண்டு சீறி,
துன்ன அருந் தடந் தேர் ஆண்மைச் சுமித்திரன் முதலா உள்ள
மன்னரை, இமைத்த கண்கள் மலரும் முன், மடிவித்தானே. 38

வீமன் வடிவு புதையுமாறு சல்லியன் அம்பு எய்ய, நகுல சகாதேவரும் சாத்தகியும் வந்து, சல்லியனொடு பொருதல்

தனக்கு எதிர் தானே ஆன சல்லியன்தானும், மீளச்
சினக் கனல் மூள, வாளச் சிலம்பு எனச் சிலையும் வாங்கி,
கனக் குலம் ஏழும் சேரக் கல்மழை பொழிந்தது என்ன,
முனைக் கடுங் கணையால் வீமன் வடிவு எலாம் மூழ்க, எய்தான். 39

அறை கழல் வீமன்தானும், அங்கர்கோன் பாகன்தானும்,
முறை முறை புரிந்த வெம் போர் மொழிவதற்கு யாவர் வல்லார்?
நறை கெழு தும்பை மாலை நகுல சாதேவர் என்னும்
இறைவரும், செங் கண் மாயன் இளவலும், இவன்மேல் சென்றார்.

சென்று, வெஞ் சிலைகள் கோலி, சிலீமுகம் உறுப்புத்தோறும்
ஒன்று என அநேகம் ஏவி, ஒரு முகமாகப் போர் செய்து,
'இன்று இவன் ஆவி கோறும்!' என்று, சல்லியன்மேல் தங்கள்
வன் திறல் யாவும் காட்டி, மாறு இல் போர் மலைந்திட்டாரே. 41

மதம் படு வேழம் அன்ன மத்திர ராசன்தானும்,—
விதம்படத் திரண்டு போர் செய் வீரர்தம் மெய்கள் எல்லாம்
சதம்படு பகழி ஓர் ஓர் தனுக்களின் உருவி ஓட,
இதம்பட எய்து, நக்கான்—ஏவினுக்கு இராமன் போல்வான். 42

தம்பியர் தளர்வு கண்டு, சல்லியனது கொடி முதலியவற்றை வீமன் அழித்தல்

தம்பியர் தளர்ச்சி கண்டு, சமீரணன் புதல்வன் சீறி,
தும்பை மா மாலை வேய்ந்து, தொடு கணை வலிதின் வாங்கி,
வெம்பு போர் மத்திரேசன் வியன் கொடி, பாகு, வாசி,
செம் புணீர் சொரி களத்தில் சிதறிட அறுத்து, வீழ்த்தான். 43

உற்று, இரு புறத்தும், திண் தேர்க்கு உரன் உற உதவி ஆய
கொற்றவர் பலரும் வீழ, கொடி குடை கவரி வீழ,
சுற்றிய நேமி வாசி துளைக் கரக் கோட்டு நால்வாய்ப்
பொற்றைகள் துணிந்து வீழ, புங்க வாளிகளும் தொட்டான். 44

துருபதன் முதலிய அனைவரும் தருமன் தம்பியர்களோடு கூடி முனைந்து பொருதல்

துருபதன் முதலா உள்ளோர், சோமகர் முதலா உள்ளோர்,
நிருபர்தம் குலத்துள் ஏனை நிருபர்களாகி உள்ளோர்,
தருமன் மா மதலையோடும் தம்பியரோடும் கூடி,
ஒரு முகமாகி மேற்சென்று, உறு செருப் புரியும் வேலை, 45

அருச்சுனனும் அசுவத்தாமனும் விளைத்த போர்

'அறுதியாக இன்று அருஞ் சமர் முடித்தும்!' என்று
அறத்தின் மைந்தனுக்கு அன்பால்
உறுதி கூறிய பாகன் வெவ் விரைவுடன்
ஊர்ந்த வெம் பரித் தேரோன்,
'பெறு தியாகம் மா தவம் புரி சிலை முனி
பெற்ற வீரனுக்கு இன்றே
இறுதி நாள்' என, ஆங்கு அவன் அணிந்த பேர்
இகல் அணியிடைச் சென்றான். 46

சென்று போர் புரி அளவையின், அருச்சுனன்
செழு மணி முழு நீலக்
குன்றுபோல் நிறம் பவள வான் குன்று எனக்
குருதியின் சிவப்பு ஏற,
ஒன்று போல்வன பிறைமுகக் கடுங் கணை
ஒருபது தொடுத்திட்டான்—
வென்று போர் புரி அவுணர் ஊர் நீறு செய்
வீரன் மைந்தனை ஒப்பான். 47

தொடுத்த அம்பினை அம்பினால் வானிடைத்
துணித்து, இடை நணித்து ஆக
விடுத்த அம்பினால், மருவலன் பாகனும்,
வெம் பரிகளும், வில்லும்,
நடுத் தறிந்திட, மார்பினும் தோளினும்
நால்-இரு கணை எய்தான்;
எடுத்த வெஞ் சிலை தறிதலும், அவனும் மா
இரதம் விட்டு, இழிந்தானே. 48

இழிந்து, மீளவும் வேறு ஒரு வில் எடுத்து,
எரி முனை புகை காலப்
பொழிந்த வாளி ஓர் அளவு இல; அவற்றையும்
பொடி படுத்தினன், பார்த்தன்;
'கழிந்த நீர்க்கு அணை கோலி வந்து எதிர்ந்து, தன்
கார்முகக் கட்டு ஆண்மை
அழிந்து போயினன், முனி மகன்' என எழுந்து
ஆர்த்தது, பெருஞ் சேனை. 49

செருப் புலக் கையாம் உரலிடை, விருதராம்
தினைக் குரல்களைச் சேர,
மருப்பு உலக்கை கொண்டு இடிக்கும் வெஞ் சின மன
மத்த வாரணம் அன்னான்,
பொருப்பு உலக்கையுற்று அலமர அரிந்தவன்
புதல்வன்மேல், ஒரு பார
இருப்பு உலக்கை கொண்டு எறிந்தனன்; அவனும், அஃது
என் முறி பட எய்தான். 50

உலக்கை எட்டு உறுப்பு ஆன பின், ஒரு தனித்
தண்டு கொண்டு, உயர் கேள்வி
அலக் கை வித்தகன் இளவல் தேர் விட வரும்
அருச்சுனன் தடந் தோளாம்
இலக்கை உற்றிட எறிந்தனன்; எறிதலும்,
இவன் அவன் எறி தண்டை
வலக் கையின் தொடு கணைகளால், பல துணி
ஆக, வில் வளைத்தானே. 51

'கண்ணன் தேர் விடும் வரையில் விசயனுடன் பொருதல் அரிது!' என
அசுவத்தாமன் விலகிச் செல்லுதல்

'பூத்த பைங் கொடி அனைய மெய்ப் பூண் அணி
பொதுவியர் தனம் தோயும்
தூர்த்தன் வெம் பரித் தேர் விடும் அளவும், இச்
சுரபதி மகனோடும்
கோத்த அம்பினில், பல படைகளில், அமர்
கொளுத்துதல் அரிது!' என்று,
பார்த்தன் முன்பு நின்று அமர் புரிந்திலன்—கடல்-
பார் புகழ் பரித்தாமா. 52

கிருபன் முதலிய பலரையும் விசயன் வென்று, வீமனைச் சேர்தல்

மற்று அவன்தனை முதுகு கண்டு, அவன் திரு
மாதுலன் கிருபப் பேர்க்
கொற்றவன் புறம் தர மலைந்து, ஏனை வெங்
கொடுஞ் சிலைக் குல வேந்தர்
முற்றும் வெந்நிடப் பொருது, சல்லியனொடு
முனைபட எதிர் மோதி,
செற்ற வன்புடை அன்புடைத் தம்முனை,
தெம் முனை கெடச் சேர்ந்தான். 53

சல்லியன் வீமனால் பரி, சிலை, முதலியன இழக்க, துரியோதனன்
படையுடன் வந்து உதவுதல்

தயங்கு வெண்குடைச் சல்லியன் தண்டுடைச்
சமீரணன் மகன்தன்னால்,
உயங்கு வெம் பரி, பாகு, தேர், வரி சிலை,
உயர்த்த வண் கொடி, அற்று,
தியங்குகின்ற பேர் இறுதி கண்டு, உயங்குதல்
சிந்தையில் சிறிது அற்ற
புயங்க கேதனன், கண்ணினுக்கு இமை எனப்
பொரு படையுடன் சேர்ந்தான். 54

சாத்தகி முதலிய பலரும் எதிர்ந்து வர, சல்லியன் பொருது, சாத்தகியையும் நகுலனையும் வெல்லுதல்

சாத்தகிப் பெயரவன், சமீரணன் மகன்,
நகுலன், வெஞ் சாதேவன்,
பார்த்தன், என்று இவர் அனைவரும், இவர் பெரும்
படைத் தலைவனும், சேர
ஆர்த்து எழுந்து மேல் வருதல் கண்டு, அணி கழல்
ஆளி ஏறு அனையானும்,
பேர்த்தும் முந்துறத் திருகினன், அரசொடும்
பெரும் படையொடும் அம்மா. 55

தண் துழாய் முடி மாயவன் தம்பியை,
சாயகம் பல கோடி
கொண்டு, தேர் முதல் யாவையும் அழித்து, மெய்
குலைந்திடும்படி மோதி;
மண்டு பாய் பரி நகுலனை அன்புடை
மருகன் என்று எண்ணாமல்,
கொண்டல்வாய் இடி நெருப்பு எனச் சிற் சில
கூர வாளிகள் எய்தான். 56

நகுலனை ஒழிந்த நால்வரையும் அம்பினால் எய்ய, வீமன் சல்லியனது மகுடத்தை வீழ்த்துதல்

ஒரு கொடுங் கணை தொடுத்தலும், வெந் கொடுத்து
ஓடினன், சாதேவன்;
இரு கொடுங் கணைக்கு இலக்கம் ஆயினன், மருத்து
ஈன்றவன், இரு தோளும்;
பொரு கொடுங் கணை மூன்றினால், அருச்சுனன்
புயமும் மார்பமும் புண் செய்து,
அருகு ஒடுங்குற, நுதலின்மேல், அம்பு நான்கு
அறத்தின் மைந்தனை எய்தான். 57

அறத்தின் மைந்தனது ஆனனம் குருதியால்
அருக்கன் மண்டலம் போல
நிறத்த ஆறு கண்டு, அருகுறக் கதைகொடு
நின்ற வாயுவின் மைந்தன்,
மறத் தடம் புய வரி சிலைச் சல்லியன்
மணி முடி கழன்று ஓடிப்
புறத்து வீழ்தர எறிந்தனன்; எறிந்தமை
புயங்க கேதனன் கண்டான். 58

அது கண்டு பொருத துரியோதனன், வீமனோடு வந்து பொருது தோற்றல்

தன் படைத் தலைவனைத் தண்டினால் எறி
வன்புடைத் தடம் புய மருத்தின் மைந்தன்மேல்,
மின் படைத்து ஒரு கணை விசையின் ஏவினான்—
புன் படைப்பினில் அயன் படைத்த பூபனே. 59

காமனைச் சம்பரன் கனன்ற போர் என,
வீமனைப் போர் செய்து வெல்ல முன்னிய
தீ மனத்து அரசனைச் சிலீமுகங்களின்
மா முனைப் படுத்தினன், மறித்து வீமனே. 60

யாளிகள் இரண்டு எதிர்ந்து இகலுமாறுபோல்,
மீளிகள் இருவரும் குனித்த வில் உமிழ்
வாளிகள் இருவர்தம் வடிவில் பாயும் முன்,
தூளிகள் பட்டன, துணிந்து வானிலே. 61

தாள் முதல் முடி உறச் சரங்கள் ஏவியும்,
வாள் முதல் படைகளால் மலைந்தும், மற்று அவர்
தோள் முதல் உறுப்பு எலாம் சோரி காலவே,
நீள் முதல் தீபமே நிகரும் ஆயினர். 62

வன் பரி, பாகு, தேர், மதி நெடுங் குடை,
மின் பொழி கணை உமிழ் வில், விலோதனம்,
என்பன யாவையும் இற்று வீழுமாறு,
ஒன்பது படி அமர் உடற்றினான்அரோ. 63

துரியோதனன் முதுகிட, சல்லியன் வந்து பொருதல்

இரண வித்தகன் இவன் எறிந்த வேலினால்,
முரண் உடைச் சுயோதனன் முதுகு தந்த பின்,
அரணுடைப் படைக்கு அரசு ஆன மத்திரன்,
'மரணம் இப்பொழுது' என, வந்து மேவினான். 64

சல்லியனுக்கும் தருமனுக்கும் துணையாகப் பல வீரர்கள் வருதல்

நேர் இலாத கிருபப் பெயர் விறல் குருவும்,
நீடு சாலுவனும், மற் புய மணிச் சிகர
வீரன் ஆன சகுனிப் பெயர் படைத்தவனும்,
வீறு சால் கிருதபற்பனும், எனப் புகலும்
ஆர மார்பினர் முதல் படைஞரில் தலைவர்
ஆன வீர துரகத்தினர், களிற்றினர்கள்,
ஊரும் ஊரும் இரதத்தினர் எனைப் பலரும்,
ஓத வாரி என, மத்திரனொடு ஒத்தனரே. 65

வீமசேனனும், அவற்கு இளைய பச்சை மயில்
வேளின் வானவர் குலப் பகை தொலைத்தவனும்,
ஏம கூடம் நிகர் உத்தம வயப் புரவி
ஏறு வீரனும், அவற்கு இளைய வித்தகனும்,
நாமம் ஆயிரம் உடைக் கடவுளுக்கு இளைய
ஞாயிறோடு உவமை பெற்று ஒளிர் நிறத்தவனும்,
நேமி சூழ் தரணி பெற்றிட நினைத்து அமர் செய்
நீதிமான் அருகு சுற்றினர், துணைச் செயவே. 66

இரு நிறத்தாரும் மலைந்த போர்ச் சிறப்பு

ஆடல் மாவும், மலை ஒப்பன மதக் கரியும்,
ஆழி சேர் பவனம் ஒத்த இரதத் திரளும்,
நாடு போரில் அரி ஒத்த அனிகத் திரளும்,
நாலு பாலும் எழ, ஒத்து அமர் உடற்றினர்கள்;
ஓடி ஓடி எதிர் உற்றவர் முடித் தலைகள்
ஊறு சோரி உததிக்கிடை விழுத்தினர்கள்;—
கோடி கோடி தமரப் பறை முழக்கினொடு
கோடு கோடுகள் குறித்த இரு பக்கமுமே. 67

ஆன போது இரு தளத்தினும் மிகுத்த விறல்
ஆண்மை வீரர் ஒருவர்க்கு ஒருவர், மெய்க் கவசம்
மானமே என நினைத்து, வரி பொற் சிலையும்,
வாளும் வேலும் முதல் எத் திற விதப் படையும்,
மேனியூடு உருவ வெட்டிய நிலைக்கு உவமை
வேறு கூற இலது; எப்படி மலைத்தனர்கள்,
தான வானவர்கள் யுத்தமும், அரக்கரொடு
சாகை மா மிருக யுத்தமும், நிகர்த்தனவே. 68

நம்பியர் முதலியோரை விலக்கித் தருமன் சல்லியனோடு பொருதல்

வீமசேனனொடு அருச்சுனன், வயப் புரவி
வீர மா நகுலன், நட்பின் அவனுக்கு இளைய
தாம மீளி, அளி மொய்த்த துளவப் புதிய
தாரினான் அநுசன், விற் குருவை முன் பொருத
சோமகேச பதி மெய்ப் புதல்வன், மற்றும் உள
சூரர் ஆனவரை முற்றுற விலக்கி, எதிர்,
மாமன் ஆகியும் மிகைத்து வரு மத்திரனை,
'வா!' என, அமர் தொடக்கினன், உதிட்டிரனே. 69

வீர சாபம் ஓர் இமைப்பினில் வளைத்து, எதிர் கொள்
வேக சாயக விதத் திறம் எனைப் பலவும்,
மார சாயகம் என, சிகர மற் புயமும்,
மார்பும் மூழ்க, உடல் முற்றும் முனையின் புதைய,
ஈரம் ஆன குருதிப் பிரளயம் எப் புறமும்
யாறுபோல் பெருக, எற்றுதலும், வெற்றி புனை
சூரர் யாரினும் மிகுத்து இருள் முடிக்க வரு
சூரன் ஆம் என வியப்புடைய மத்திரனே, 70

ஆரவார முரசக் கொடி உயர்த்தவனது
ஆகமீது அணி மணிக் கவசம் அற்று விழ,
ஊரும் நேமி இரதத்து வயிர் அச்சு உடைய,
ஓடு வாசி தலை அற்று இரு நிலத்து உருள,
நேர் இலா வலவன் நெற்றி துளை பட்டு உருவ,
நீடு நாணொடு பிடித்த குனி வில் துணிய,
ஈர வாய் முனை நெருப்பு உமிழ் வடிக் கணைகள்
ஏவினான், ஒரு நொடிக்குள் எதிர் அற்றிடவே. 71

தருமன் வேல் எறிந்து, சல்லியனது முடித்தலை துணித்தல்

வீறு சால் அருள் அறத்தின் மகன், அப்பொழுது,
வேறு ஓர் தேர்மிசை குதித்து, இமய வெற்பினிடை
ஏறு கேசரியொடு ஒத்து, உளம் நெருப்பு உமிழ,
ஈறு இலார் புரம் எரித்தவன் நிகர்க்கும் என,
மாறு இலாதது ஒரு சத்தியை எடுத்து, நெடு
வாயு ஆகும் என விட்டனன்; இமைப்பொழுதில்
ஆறு பாய் அருவி முக் குவடு இறுத்த செயல்
ஆனதால், முனை கொள் மத்திரன் முடித் தலையே. 72

சல்லியன் மாண்டமை கண்டு துரியோதனன் சேனை நிலை குலைய,
எழுநூறு தேர் வீரர்கள் தருமனை எதிர்த்தல்

'தொட்ட வரி சிலைத் தடக் கை இராமன் என்ன,
தொடுத்த கணை தப்பாமல், தொழாத வேந்தர்
இட்ட கவசமும் மார்பும் பிளந்த பின்னர்,
எடுத்தது ஒரு வடி வேலால், இளையோன் என்ன,
மட்டு அவிழும் தும்பை அம் தார்த் தருமன் மைந்தன்
வாகு வலியுடன் எறிய, மத்திரேசன்
பட்டனன்' என்று, அணி குலைந்து முதுகிட்டு ஓடி,
படாது பட்டது, உயர்த்த பணிப் பதாகன் சேனை. 73

மதி கண்ட பெருங் கடல்போல், குந்தி மைந்தர்
வன் சேனை ஆர்ப்பதுவும், மன்னன் சேனை
நுதி கொண்ட கனல் கொளுத்தும் இராம பாணம்
நுழை கடல்போல் நொந்ததுவும், நோக்கி நோக்கி,
கதி கொண்ட பரித் தடந் தேர்ச் சல்லியன்தன்
கண் போல்வார் எழு நூறு கடுந் தேர் ஆட்கள்,
விதி கொண்ட படைபோல் வெம் படைகள் ஏவி,
வெம் முரசக் கொடி வேந்தன்மேல் சென்றுரே. 74

சகுனி முதலானோரோடு, துரியோதனனும் தருமனை எதிர்க்க வருதல்

அவர் அளவோ, அரவு உயர்த்த அரசன்தானும்,
ஆகுலத்தோடு அருஞ் சமரில், அரி ஏறு என்னக்
கவரி புடை பணிமாற, தவளக் கொற்றக்
கவிகை ஒரு தனி நிழற்ற, கரை காணுத
உவரி நிகர் பெருஞ் சேனை வெள்ளம் சூழ,
உயிர் அனைய துணைவருடன் மாமன் சூழ,
தவர் முதலாம் படைகளொடு தன்னை வென்று
தரணி கொள வரு நிருபன்தன்னைச் சார்ந்தான். 75

வீமன் முதலியோர் பகைவரை எதிர்த்துப் பொருத திறம்

வீமன் முதல் தம்பியரும், பொரு இலாத
வெஞ் சேனைத் தலைவரும், போர் வென்றி கூரும்
சோமகரும் முதலாய தறுகண் வீரர்,
தும்பிகளை அரி இனங்கள் துரக்குமாபோல்,
தாமம் மணித் தடஞ் சிகரத் தோளும் மார்பும்
சரம் முழுகத் தனு வணக்கி, சாய்ந்த சோரி
பூ முழுதும் பரந்து வர, பொருத வீரம்
புலவோர்க்கும் அதிசயித்துப் புகலல் ஆமோ? 76

வீமன் துரியோதனன் தம்பியர் எழுவரை மாய்த்தலும், துரியோதனன் சோகமும்

தன் தமையன்தனைப் பொருது வெல்ல வந்த
தானை எலாம் நீறு ஆக்கி, தரணி ஆளும்
புன் தமையன் எதிர் அவனுக்கு இளைய வீரர்
பொர வந்தோர் எழுவரையும் புவிமேல் வீழ்த்தி,
'இன்று அமையும் சமரம், இனிக் காண்டல் பாவம்'
என்று இமையோர் அதிசயிப்ப, இமயம் போல
நின்றமை கண்டு, ஆனிலனை மகிழ்ந்து நோக்கி,
நெஞ்சுற, அன்று என் செய்தான், நெடிய மாலே! 77

செயகந்தன், செயவன்மன், செயசேனன்,
சேனுவிந்து, செயத்திரதன், திறல் ஆர் விந்து,
வயம் ஒன்று விக்கிரமன், என்போர் ஆவி
வான்நாடு புகுந்ததன் பின், மதங்கள் ஏழும்
கயம் ஒன்று சொரிய எதிர் நின்றது என்னக்
களித்து, வலம்புரி வீமன் முழக்கக் கண்டு, அங்கு
அயல் நின்ற வலம்புரித் தார் அண்ணல் சோர்ந்தான்;—
அநுசர்மேல் அன்பு எவர்க்கும் ஆற்றல் ஆமோ? 78

துரியோதனன் தம்பியர் ஐவரோடும் பெருஞ் சேனையோடும் கிருதவன்மன்
வந்து பொர, வீமன் கணையால் தம்பியர் ஐவரும் மாளுதல்

தனக்கு நிகர்தான் ஆன கிருதவன்மன்,
தம்பியர்கள் எழுவர் படத் தம்முன் பட்ட
மனக் கவலை அறிந்து, பெருஞ் சேனையோடும்
மற்று அவன் தம்பியர் ஐவரோடும் வந்து,
சினக் கதிர் வேல் வீமன் உயிர் செகுப்பான் எண்ணி,
செருச் செய்தான்; இமைப்பு அளவில் திருகி ஓட,
எனக்கு இவரே அமையும் எனப் புறக்கிடாத
இளையவர்மேல், கடுங் கணை ஐந்து ஏவினனே. 79

சித்திரவாகுவினேடு, பெலசேனன், போர்ச்
செயசூரன், சித்திரன், உத்தமவிந்து, என்றே
அத்திர வில் ஆண்மையினில் திகழாநின்ற
ஐவர் இவர், யாவரையும் அடர்ப்பான் வந்தோர்,
சத்திரம் யாவையும் ஏவி, சங்கம் ஊதி,
சமர் விளைத்தார், நெடும் பொழுது; சமீரணன்தன்
புத்திரனல் முன் சென்ற எழுவரோடும்
பொன்னுலகம் குடி புகுந்தார், புலன்கள் போல்வார். 80

அப்பொழுது துரியோதனன் சீற்றத்தோடு வந்து பொர, அவனைச்
சகாதேவன் வெல்லுதல்

ஏற்றிடை வெங் கனல் நுழைந்தது என்ன, முன்னம்
எழுவருடன் தனக்கு இளையோர் ஐவர் சேரக்
கூற்றிடை ஏகுதலும், மிகக் கொதித்து, நாகக்
கொடி வேந்தன், முடி வேந்தர் பலரும் சூழ,
நால்-திசையும் எழுந்து பெருங் கடலை மோதி
நடு வடவைக் கனல் அவித்து நடவாநின்ற
காற்று எனவே, பாண்டவர்தம் உடலம்தோறும்
கணை முழுக, வில் விசயம் காட்டினனே. 81

தன் கரத்தில் வில் துணிய, வேறு ஓர் வில்லால்
சாதேவன் வலம்புரிப் பூந் தாம வேந்தன்
வன் கரத்தும், மார்பகத்தும், முகத்தும், சேர
வை வாளி குளிப்பித்தான்; மற்றும் மற்றும்
முன் களத்துள் எதிர்ந்துளோர் இரு சேனைக்கும்
முன் எண்ணும் திறலுடையோர் மூண்டு மூண்டு,
பின் களத்தைச் சோரியினால் பரவை ஆக்கி,
பிறங்கலும் ஆக்கினர் மடிந்த பிணங்களாலே. 82

சகுனி முதலிய பலரும் வீமனோடு பொருது பின்னிட, துரியோதனன் தம்பியர் ஒன்பதின்மர் வந்து பொருது மடிதல்

காந்து கனல் உமிழ் சின வேல் கைக் காந்தாரர்
காவலனும் சகுனியும், தன் கனிட்டன் ஆன
வேந்தனும், மன்னவனுடன் பல் வேந்தரோடும்,
வெம் பனைக் கைப் பல கோடி வேழத்தோடும்,
ஏந்து தடம் புயச் சிகரி வீமன்தன்னோடு
இகல் மலைந்து, தொலைந்து இரிந்தார்; இவரை அல்லால்,
ஊர்ந்த மணிப் பணிக் கொடியோன் இளைஞர் மீள
ஒன்பதின்மர் அவனுடன் வந்து, உடற்றினரே. 83

பிறங்கிய உத்தமன், உதயபானு, கீர்த்தி,
பெலவன்மன், பெலவீமன், ப்ரபலதானன்,
மறம் கிளர் விக்ரமவாகு, சுசிலன், சிலன்,
வரு பெயர் கொள் ஒன்பதின்மர் வானில் ஏற,
திறம் கொள் கச ரத துரக பதாதி கோடி
சேர ஒரு கணத்து அவிய, சிலை கால் வாங்கி,
கறங்கு எனவே சூழ்வந்து பொருதான்; வீமன்
கட்டாண்மைக்கு இது பொருளோ, கருதுங்காலே? 84

எஞ்சியிருந்த துரியோதனன் தம்பியரும் வீமனால் இறத்தல்

பாண்டவரில் வீமன் கைப் படையால் முன்னம்
பட்டு ஒழிந்தோர் ஒழிந்தோர்கள் பலரும் கூடி,
கான் தகைய கேசரி வெஞ் சாபம் அன்னார்,
கண்இலான் மதலையர், அக் களத்தில் அன்று
மூண்டு பெரும் பணித் துவச முன்னோன் காண,
முனைந்து அமர் செய்து, அவனியின்மேல் முடிகள் வீழ,
தீண்ட அரிய திருமேனி தேரில் வீழ,
சேண் அடைந்தார், அரம்பையர்கள் சிந்தை வீழ. 85

தன் தம்பியர் தொண்ணூற்றொன்பதின்மரும் வீமன் வாளியாலும் கதையாலும் இறந்தது குறித்துத் துரியோதனன் கவலையுற, சகுனி அவனுக்கு ஆறுதல் மொழிதல்

தனக்கு இளையோர் தொண்ணூற்று ஒன்பதின்மர் தாமும்
சய வீமன் சரத்தாலும், தண்டினாலும்,
கனக் குடிலில் குடியேறக் கண்டு கண்டு,
கை சோர, மெய் சோர, கண்ணீர் சோர,
எனக்கு உறுதி உரைத்தவர் தம் உரை கேளாமல்
என் செய்தேன்! எப் பொருளும் இழந்தேன்!' என்று,
மனக் கவலை உறும் மன்னன்தன்னை நோக்கி,
மாமனும், மற்று ஒரு கோடி மாற்றம் சொன்னான்: 86

'அருகு சாயைபோல் வாழும் அனுசர் யாரும் வான் ஏற
உருகி மாழ்கி நீ சோகம் உறினும் மீள வாரார்கள்;
மருக! வாழி! கேள்: போரில் மடிவுறாத பூபாலர்
முருகவேளையே போல்வர்; முரண் அறாத கூர் வேலோய்! 87

'கிருத நாமன், நால் வேத கிருபன், ஆதியோரான
நிருபர் சேனை சூழ் போத, நிமிர ஓடி, மாறாது
பொருது, சீறி மேல் மோது புலியின் ஏறு போல்வாரை
முரசகேதுவோடு ஓட, முரணு போரில் மூள்வோமே!' 88

வீமனொடு சகுனி பொர, அவனது சேனை நிலைகுலைதல்

என, மகிபன் வாடாமல் இனிய வாய்மையே கூறி,
அனிக ராசியோடு ஏகி, அமரில் வீமன்மேல் மோத,
முனைகொள் வீமன், ஆம் ஆறு, முறுவல் வாள் நிலா வீச,
மனனில் ஓடு தேர் மாறி, வலி கொள் பாரில் ஆனனே. 89

தரணி தாழுமா போது சகுனி சேனை வான் ஏற,
முரணு வாகுவால் மோதி, முடுகு நீள் கதாபாணி
அரணி ஆகவே, ஏனல் அடவி ஆனதால்—நீடும்
இரண பூமி மால் யானை, இரதம், வாசி, காலாளே. 90

மீளவும் சகுனி துரியோதனனுக்கு ஊக்கம் அளித்தல்

'அலகு இல் வேலைபோல் சேனை அதிபன் ஆவி போமாறு,
பலம்அது ஆக மேல் மோது படைஞர் சாயவே, நாமும்
இலகு வாளம், வேல், நேமி, எவரும் ஏவுவேமாக!
தலைவ! கேள்' என, வீர சகுனி கூறினான், மீள. 91

சகுனிமேல் சகாதேவன் வாளி ஏவுமுன், துரியோதனன் அவன் வேலை வீசுதல்

விரகு அறாத சூது ஆடு விடலைமீது சாதேவன்
இரதம் ஏவி, ஓர் வாளி எழில் கொள் மார்பில் ஏவா முன்,
மருகன் ஆன பூபாலன் மதி கொள் ஞானி பூண் மார்பில்
உருவ வீசினான், மாமன் உதவியா, ஓர் கூர் வேலை. 92

அது கண்ட வீமன், துரியோதனன்மேல் வாளி ஏவுதல்

எதிர் இலாத தோள் ஆண்மை இளவல் தேரின்மேல் வீழ,
உதவியாக வேல் ஏவும் உலகு காவலான் மார்பில்
முதுகில் ஓடவே நூறு முழுக ஏவினன் வாளி,
அதல பூமியூடு, ஆழி அமுதம் ஆரும் வாயானே. 93

வீமன்மேல் வேல் ஏவிய அசுவத்தாமன்மேல், சோழன் அம்பு தொடுத்தல்

சமரில் வீமன் ஏவோடு தலைவன் வீழவே, பூமி
அமரனான தாமா ஓர் அயிலை வீமன்மேல் ஏவ,
'எமர்கள் ஆவி போல்வானொடு இகல் செயாமல் ஈசான
குமரன் ஆவி போமாறு குடைதும் நாம்' என, வீரன், 94

தனுவின் வேத நூல் வாசிதனயனான தாமாவை
முனை கொள் மார்பின்வாய் மூழ்கி முதுகில் ஓடவே, ஏழு
வினை கொள் வாளி மேல் ஏவி, விதமது ஆகவே போர் செய்
மனு குலேசன் நீள் சாப வலிமை கூற வாராதே. 95

அசுவத்தாமன் நிலைகண்டு பொரவந்த அவன் மாமன் கிருபாசாரியனும் வென்னிடுதல்

மருகன் வீழவே, சாப மறை வலானும், ஆர் மாலை
விருதனோடு போராடி, வெரிநிடா விடாது ஓட,
அருகு சூழும் மா சூரர் அடைய ஓட, ஓடாது
திருகினான், அரா ஏறு திகழ் பதாகையான் மாமன். 96

சகுனி மீள வந்து பொர, சகாதேவன் வேல் எறிந்து, அவனை மாய்த்தல்

சகுனி ஆவி போமாறு, சபத வாய்மை கோடாமல்,
மகிபன் ஏவு வேல் போல வழுவுறாமல் மேல் ஓட,
உகவையோடு மா மாயன் உதவு கூர நீள் வேலை
இகலொடு ஏவினான், வீமன் இளவலான போர் மீளி. 97

சகுனி இறந்ததும் எங்கும் போர் ஒழிய, துரியோதனனும் வன்மை அழிந்து நிற்றல்

'தாவிய வெம் பரிமா இரதத்திடை, சாதேவன்
ஏவிய வேலொடு சௌபல ராசன் இறந்தான்' என்று
ஓவியது எங்கணும், வெஞ் சமர்; பார் முழுது உடையானும்,
ஆவி அழிந்த உடம்பு என, வன்மை அழிந்தானே. 98

தும்பியில், வாசியில், நீடு இரதத்தில், ஓர் துணை இன்றி,
பம்பிய சேனை அழிந்து வரும்படி பாராதான்,
தம்பியர் யாவரும், மாதுலனும், பல தமரும் போய்,
அம்பி இழந்த பெருங் கடல்வாணரின் அலமந்தான். 99

இறந்தவரை எழுப்பும் மறையால் சேனையோரை எழச் செய்து பொர எண்ணி,
துரியோதனன் ஒருவருக்கும் உரையாது தனிச் செல்லுதல்

ஒரு மதி வெண் குடை, இரு கவரிக் குலம், ஊரும் சீர்
இரதம், மதங் கயம், இவுளி, பணிக் கொடி, முதலான
அரசர் பெருந்தகை, அரசு அடையாளம் அனைத்தும் போய்,
திரு நயனங்களினும் பத மலர்கள் சிவப்பு ஏற, 100

'அயனிடை அசுரர் குருப் பெறலுற்றது, அவன்பால் முன்
கய முனி பெற, இமையோர் குரு விரகொடு கைக் கொண்டு,
பயம் உற மா முனிவர்க்கு உரைசெய்தது, பார்மீதே
உயர் மறை ஒன்று உளது; அம் மறை ஒரு முனி உரைசெய்தான்.

'அந் நெடு மா மறையால் அமரத்திடை அழி சேனை
இன் உயிர் பெற்றிடும் வகை கொடு மீளவும் இகல்வேன்' என்று,
உன்னி, உளம் தெளிவுற்று, ஒருவர்க்கும் இஃது உரையாதே,
தன் ஒரு வெங் கதையோடு தராபதி தனி சென்றான். 102

துரியோதனன் ஒரு குளத்தில் மூழ்கி, மறையை மொழிந்து, தவம் செய்தல்

தூய நலம் தரு கங்கை எனப் பல சுரரும் தோய்
பாய தடம்தனில் மூழ்கினன், 'அம் மறை பயில்வேன்' என்று
ஆயும் மனம்கொடு, சேவடி முன் பினதா ஏகி,
சேயவன் வெண் திரை வாரியில் மூழ்கிய செயல் ஒத்தான். 103

கம்பித்து வந்த புலன் ஐந்தும் கலக்கம் மாற,
வெம் பித்து அடங்கி, மனம் சித்தொடு மேவல் கூர,
தம்பித்த தோயத்திடை, வாயுத் தசமும் ஒக்கக்
கும்பித்து, ஞானப் பெருந் தீபம் கொளுத்தினானே. 104

பல் நாளும் யோகம் பயில்வோரின் பதின் மடங்கா,
தன் ஆகம் முற்றும் மெலிவு இன்றித் தயங்குமாறு,
நல் நாள மூல நளினத்தை மலர்த்தி, நாவால்
உன்னாமல் உன்னும் முறை மந்திரம் ஓதினானே. 105

சோழனுக்கு முதுகிட்ட வீரர்கள் நிலையும் அசுவத்தாமன் முதலியோர்
இறந்த சகுனியைக் காணுதலும்

இதயம் சிறிதும் கலங்காத இறைவன், இவ்வாறு
உதகம்தனில் புக்கு, உயர் மந்திரம் ஓதும் வேலை,
மத வெங் கயப் போர் வளவற்கு முதுகு தந்த
வித மண்டலீகர் புலி கண்ட மிருகம் ஒத்தார். 106

பர பாவகமாம் பரித் தாமனும், பாய் பரித் தேர்க்
கிருபாரியனும், கிருதப் பெயர்க் கேடு இலோனும்,
ஒரு பால் இறைகொண்டு ஒழி சேனையும் தாமும் மீண்டு,
பொரு பாரதப் போர் புரி சௌபலன் பொன்றல் கண்டார். 107

கண்டார், மிகவும் பரிவோடு கலக்கமுற்றார்;
'தண் தாரகை தோய் விசும்பு ஒத்த சமர பூமி
கொண்டான் முரசக் கொடியோன்' எனக் கோபம் மிஞ்சி,
விண்டார், மிகவும் வியந்தார் அவர் வீரம் அம்மா! 108

துரியோதனனைக் களத்தில் காணாது, அசுவத்தாமன் சஞ்சயனைக் கண்டு வினவுதல்

பூண் ஆர மார்பின் வலத்தே புரி பூந் தண் மாலைக்
கோண் ஆர் சிலைக் கைந் நெடு நாகக் கொடி கொள் வேந்தைக்
காணார் களத்தில் ஒரு பாலும், கருகி உள்ளம்,
வாள் நாடு அருக்கன் குடிபோம் அகல் வானொடு ஒத்தார். 109

தனி வந்து தோன்றுதலும், சஞ்சயன் என்னும் வேத
முனிவன்தனைக் கண்டு, இரு தாளில் முடிகள் சேர்த்தி,
'அனிகம் கெழும் போர் அரசன்தனை, அங்கை நெல்லிக்
கனி கண்டனையாய்! எவண் காண்குதும்? காட்டுக!' என்றார். 110

சஞ்சயன் துரியோதனன் இருக்கும் இடம் கூறல்

இவ்வோர் விரைவின் இவன்தன்னை வினவ, 'அஞ்சல்!
அவ்வோன் உயிருக்கு அழிவு இல்லை; அமரில் மோதி
வெவ் ஓடை யானை விறல் மன்னவர் வீய, யாரும்
ஒவ்வோன், மறித்தும் அமர் மோத உணர்தலுற்றான். 111

'ஈண்டுச் சமரின் இறந்தோர்கள் எவரும் இன்றே
மீண்டு உற்பவிக்க, விடுவித்து விரகினோடும்,
பாண்டுப் பயந்தோர் படை யாவும் மடிய மோதப்
பூண்டு, உத்தமம் ஆம் மறை கொண்டு, அகன் பொய்கை புக்கான்.

'என்னைத் துருபன் மகன் ஆதியர் கோறல் எண்ண,
பின்னைக்கு வாய்த்தோன் பிழைப்பித்தனன்; யானும் வந்தேன்;
தன் ஐக்கு மூழ்கத் தடம் வாய்த்தமை, தந்தையோடும்
அன்னைக்கு உரைப்பேன்' எனப் போயினன், அந்தணாளன். 113

அசுவத்தாமன் முதலியோர் நீர்நிலையை அடைந்து, துரியோதனனை அழைத்தல்

வேதியன் வாய்மை கேட்ட வேதியன் மகனும், மற்றை
ஓதிய கிருபன் ஆதி உள்ளவர் தாமும், எய்தி,
மா துயர் அகற்றும் மற்ற வாய்மை கேட்டு, அங்கு ஞான
ஊதியம் பெற்றால் என்ன ஒடுங்கிய ஓடை கண்டார். 114

புள் இயல் அரவம் காணார்; பொருது எறி தரங்கம் காணார்;
துள்ளிய மீனம் காணார்; சூழ்வரும் அனிலம் காணார்;
ஒள்ளிய மலர்கள் எல்லாம் உறங்குதல் அன்றி, மன்றல்
வள்ளிய தோடுதோறும் மது நுகர் வண்டும் காணார். 115

ஏறிய பாதம் போல இறங்கிய பாதம் நோக்கி,
சாறு இயல் இரதம் மிஞ்சும் தடம் புனல் அடங்க நோக்கி,
மாறு இயல் வேந்தர் தம்மில் வாள் முகம் நோக்கி நோக்கி,
கூறிய அரசன்தன்னைக் கூவினர், அழைக்கலுற்றார். 116

'நின் கிளை ஆகி வந்த நிருபரும், துணைவர் யாரும்,
வன் களிறு, இவுளி, பொன்-தேர், வாள் முதல் படைகள் யாவும்
புன் களம்அதனில் சேரப் பொன்றின, இம்பர், அன்றே;
என் கருதினைகொல்? ஐயா! என் பெறற்கு என் செய்தாயே! 117

அசுவத்தாமன் ஐவரை அழிப்பதாகச் சபதம் செய்து கூறுதல்

'வீரியம் விளம்பல் போதாது ஆயினும், விளம்புகின்றேன்;
போர் இயல் அமரில் என் நேர் பொரு சிலை எடுத்து நின்றால்,
தேர் இயல் விசயனோடு நால்வரும் சேர என் கை
மூரி வெங் கணைகளாலே முடித் தலை துணிவர் கண்டாய். 118

'எல்லவன் வீழும் முன்னம், யாரையும் தொலைத்து, வேலைத்
தொல்லை மண் அளித்திலேனேல், துரோணன் மா மதலை அல்லேன்;
வில் எனும் படையும் தீண்டேன்; விடையவன் முதலோர் தந்த
வல்லிய கணையும் பொய்த்து, என் மறைகளும் பொய்க்குமாதோ!

'மோது மோகரப் போர் வென்று முடித்துமோ, ஒன்றில்? ஒன்றில்
சாதுமோ? இரண்டும் அல்லால், தரணிபர்க்கு உறுதி உண்டோ?
யாதுமோ தெளிதி; நின்போல் ஏற்றம் உள்ளவர்க்கு இவ்வாறு
போதுமோ? பூண்ட பூண்ட புகழ் எலாம் போய்விடாதோ? 120

'பாண்டவர் முடிய வென்று, இப் பார் எலாம் உனக்கே தந்தால்,
மாண்டவர்தம்மை நின் வாய் மறைமொழிதன்னைக் கொண்டு
மீண்டவர் ஆக்கி, பின்னை வேறு ஒரு பகையும் இன்றி,
ஆண்டவர் இவரே என்னத் துணைவரோடு ஆளலாமே.' 121

துரியோதனன் மறுமொழி கொடாது தவநிலையில் நிற்க, அசுவத்தாமன்
முதலியோர் மீளுதல்

என்று இவை போல்வ பல் நூறு இயம்பவும், இராசராசன்
ஒன்றினும் கவலை செல்லா உணர்வுடை உளத்தன் ஆகி,
அன்று இகல் வருணன் கூறும் ஆகும் என்று அறிஞர் சொல்ல,
துன்றிய வடிவத்தோடும் அடங்கினன், தோயத்தூடே. 122

உரைத்தன உரைகட்கு எல்லாம் உத்தரம் உரைசெய்யாத
வரைத் தடந் தோளான் நெஞ்சின் வலிமையை வலிதின் எண்ணி,
நிரைத்த வெங் கதிர் கொள் வாளி நெடுஞ் சிலைத் துரோணன் மைந்தன்,
விரைத் தொடைக் கிருதனோடும், மாதுலனோடும், மீண்டான். 123

மிருக மாக்கள் கூற, துரியோதனன் சென்ற இடத்தை வீமன் அறிந்து,
தருமன் முதலியோர்க்கு அறிவித்தல்

மற்று அவர் மீண்ட பின்னர், மா தவக் குந்தி ஈன்ற
கொற்றவர்தாமும், சேனைக் குழாத்தொடும் தங்களோடும்
செற்றவர்தம்மை எல்லாம் சேண் உலகு ஏற ஏற்றி,
பொன்-தவர் இராசராசன் புக்குழி அறிவுறாமல், 124

பாடியும், களமும், சூழ்ந்த பாங்கரும், அங்கும் இங்கும்,
தேடியும் காண்கிலாத சிந்தை ஆகுலத்தர் ஆகி,
நீடு உயிர்த்து உயிர்த்து நின்ற பொழுதினில், நிகழும் வேட்டை
ஆடிய வலைஞர் கண்டோர் ஆனிலற்கு உரைசெய்வாரே: 125

'துவம் மிகு முனிவரோடு சுரர்களும் தோயும் நல் நீர்த்
தவம் முயல் பொய்கைதன்னில் தண்டுடைக் கையன் ஆகி,
புவி முழுது ஆண்ட வேந்தன் புக்கனன்; கண்டோம்' என்றார்,
கவலை இல் மனத்தனை காற்று அருள் கூற்று அனற்கே. 126

கரு முகில் அனைய மேனிக் கண்ணனும், பவள மேனித்
தருமனும், எவரும் கேட்ப, தாம வேல் வீமன் சொன்னான்,—
' ''பொரும் அரவு உயர்த்தோன் இன்று ஓர் பொய்கையில் புகுந்தான்'' என்று
தெருமரு மிருக மாக்கள் செப்பினர்' என்று கொண்டே. 127

துரியோதனன் இறந்தாரை எழுப்பும் மந்திரம் பெற்றதைக் கண்ணன் அறிவித்தல்

என்றலும், தன்னைச் சேர்ந்தோர் இடுக்கணும் இளைப்பும் மாற்ற
நின்ற எம் பெருமான் நேமி நெடியவன் அருளிச்செய்வான்:
'அன்று அயன் முகத்தினால் பெற்று, அநேக மா முனிவர் தம்பால்
நின்ற மந்திரம் ஒன்று உண்டு; நிகர் அதற்கு இல்லை, வேறே. 128

'வெஞ் சமர் இறந்தோர் எல்லாம் மீண்டு உயிர் பெறுவர்; அந்த
வஞ்சக மறை முன் பெற்றான் வலம்புரித் தாரினானும்;
நெஞ்சு அமர் வலிமையோடு நீரிடை மூழ்கி, நீங்கள்
துஞ்சிடப் பொருவான் இன்னம் சூழ்ந்தனன் போலும்!' என்றான். 129

வீமன் குளத்தை அடைந்து, துரியோதனனை இகழ்ந்து, போருக்கு அழைத்தல்

மாயவன் உரைத்த மாற்றம் மாருதி கேட்டு, தந்தை
ஆயவன்தன்னைப் போல அப் பெரும் பொய்கை எய்தி,
தூய தன் துளவினானும் துணைவரும் சூழ்ந்து நிற்ப,
தீ எனத் தீய நெஞ்சன் செவி சுட, சில சொல் சொல்வான்: 130

'கங்கை மகன் முதலாகக் காந்தாரன்
முடிவாகக் களத்தில் வீழ்ந்த
துங்க மணி முடி வேந்தர் சொல்லி முடிப்பதற்கு
அடங்கார்; துரக மாவும்,
செங் கனக மணிக் கொடிஞ்சித் திண் தேரும்,
பெரும் பனைக்கைச் சிறுத்த செங் கண்
வெங் கயமும் ஏறாமல், வீழ் கயத்தில்
ஏறினையோ?—வேந்தர் வேந்தே! 131

'நெஞ்சு அறிய நீ எமக்கு நிலை நின்ற
பழியாக நெடு நாள் செய்த
வஞ்சகமும், பொய்மொழியும், மனு நீதி
தவறியதும், மறந்தாய்கொல்லோ?
துஞ்சிய நின் சேனையெல்லாம் மீண்டு வர
நீ அறையும் சுருதி, இற்றை
வெஞ் சமரம் முடித்து அன்றோ, அறைவது?
இவை வீரருக்கு வீரம் ஆமோ? 132

'அடி மாறி நீரிடைப் புக்கு, அரு மறை நீ
புகன்றாலும், அரவப் பைம் பொன்
கொடி மாறி, குருகுலத்தார் கோவே! நின்
பேர் மாறி, குலவும் மாலை
முடி மாறி, ஒரு தனி மா முத்த நெடுங்
குடை நிழற் கீழ் ஆளும் முந்நீர்ப்
படி மாறி ஒழிய விடேன்; புறப்படாய்,
மறைபட இப் பகல் போம் முன்னே. 133

'ஓதப் பைங் கடல் புடை சூழ் உலகு ஆளும்
முடி வேந்தர் உறு போர் அஞ்சிப்
பாதத்தில் வீழ்வரோ? பார் அரசர்
கேட்டாலும், பழியே அன்றோ?
மேதக்க அரமகளிர் கைப் பிடிக்க,
இந்திரனும் விண்ணோர்தாமும்
காதத்தில் எதிர்கொள்ள, கற்பக
நீழலில் வைப்பன்; கலங்கல், அம்மா! 134

'களந்தனில் எத்தனை கவந்தம் கண் களிக்கக்
கண்டனை நீ; கைத் தண்டோடு இக்
குளந்தனில் இக் கவந்தமும் கண்டு ஏகுதற்குப்
புகுந்தனையோ? கொற்ற வேந்தே!
வளந்தனில் இக் கோபமும் என் வஞ்சினமும்
போகாது; வந்து உன் பாவி
உளந்தனில் இக் கவலையை விட்டு, உடற்றுதல் அல்லது,
மற்று ஓர் உறுதி உண்டோ? 135

'இனத்திடை நின்று ஒருபதின் மேல் எழு நாளும்
ஒருவருடன் இகல் செய்யாமல்,
தனத்திடை நின்று உளம் மகிழும் புல்லரைப்போல்,
மதத்துடனே தருக்கி வாழ்ந்தாய்;
சினத்திடை வெம் பொறி பறக்கச் செயிர்த்து, இரு கண்
சிவப்பு ஏறச் செருச் செய்யாமல்,
வனத்திடை சென்று ஒளிப்பரோ, மண் முழுதும்
தனி ஆளும் மன்னர் ஆனோர்? 136

'திரிபுவனங்களும் சேரச் செங்கோன்மை
செலுத்திய நின் சீர்த்தி, இந்த
விரி புவனம்தனில் ஒளித்தால் மிகு வசையாய்ப்
போகாதோ? வெருவலாமோ?
புரி புவனம் உண்டு உமிழ்ந்தோன் பொன் இலங்கை
வழி காணப் பொருத வாளி
எரி புவனம் நுகர்ந்ததுபோல், இத் தடமும்
புகையாமுன் எழுந்திராயே!' 137

துரியோதனன் வெளி வருதல்

பாவனன் இப்படி உரைத்த பழி மொழியும்
தனது செவிப் பட்ட காலே,
சீவனம் முற்றையும் விடுவோன் இருக்குமோ?
மறை மொழியும் சேர விட்டான்,—
ஆவன மற்று அறியாமல், அழிவன மற்று
அறியாமல், அடுத்தோர் ஆவி
வீவன மற்று அறியாமல், நினையும்
நினைவினுக்கு உவமை வேறு இலாதான். 138

நீளம் உற, பரவை உற, வாளம் உற,
கரை பரந்து நிமிர்ந்த நீத்த
நாள மலர்ப் பொய்கையின்நின்று எழுவான், மெய்ச்
சுருதி மறை நவிலும் நாவான்,
காள நிறக் கொண்டல்; பெருங் கடல் முழுகி
வெள்ளம் எலாம் கவர்வுற்று அண்ட
கோளம் உறக் கிளர்ந்ததுபோல், தோன்றினன்,
மணி உரகக் கொடியினனே. 139

'யாரொடு பொருவது?' என்று, துரியோதனன் வினவுதலும், கண்ணன் 'வீமனொடு பொருதலே ஏற்றது' எனலும்

தோன்றி, நெடுங் கரை ஏறி, கரை முழுதும்
நெருக்கம் உறச் சூழ்ந்து நின்ற
தேன் திகழ் தார் ஐவரையும், செந் திருமாலையும்
நோக்கி, சேனையோடும்,
மான் திகழ் தேர் முதலான வாகனங்க-
ளொடும் நின்றீர்; வலி கூர் என் கை
ஊன்றிய தண்டுடன் நின்றேன்; ஒரு தமியேன்
எப்படியே உடற்றும் ஆறே? 140

'ஐவரினும் இப்பொழுது இங்கு ஆர் என்னோடு
அமர் மலைவார்? அறுகால் மொய்க்கும்
கொய்வரு தார்ப் புய வீரர்! கூறும்' என,
திருநெடுமால் கூறல் உற்றான்:
'செய் வரு சேல் இளம் பூக மடல் ஒடிக்கும்
திருநாடா! செருச் செய்வான், இம்
மெய் வரு சொல் தவறாத வீமசேனனை
ஒழிந்தால், வேறும் உண்டோ? 141

'இளம் பருவம் முதல் உனக்கும் இவனுக்கும்
வயிர்ப்பு எண்ணில், எண் ஒணாதால்;
உளம் புகல, அரசவையில் வஞ்சினமும்
பற்பல, அன்று, உரைத்தே நின்றான்;
களம் புகுந்து நின் ஒழிந்த துணைவரையும்
தனது தடக் கையால் கொன்றான்;
விளம்புவதோ? வேறு ஒருவர் நின்னுடன் போர்
மலைவரோ? வேந்தர் வேந்தே! 142

'வில்லாலும், வாளாலும், வேலாலும்,
பரி நெடுந் தேர் வேழத்தாலும்,
தொல் ஆண்மை தவறாமல் செரு மலைந்தோர்
சான்றாகச் சூழ்ந்து நிற்ப,
புல்லாரைப் புறங்காணும் போர் வேலோய்!
இருவரும் நீர் பொருது, நும்மில்
வல்லார்கள் வென்றி புனைந்து, அவனிதலம்
பெறும் இதுவே வழக்கும்' என்றான். 143

'எந்த ஆயுதத்தால் போர் செய வேண்டும்?' என வீமனைத் துரியோதனன் வினவுதல்

கொண்டல் நிகர் திருமேனிக் கோபாலன் இவை உரைப்ப,
வண்டு படி வலம்புரித் தார் வய வேந்தன் மனம் களித்து,
திண் திறல் வீமனை நோக்கி, 'சிலை முதல் ஆம் படை கொண்டோ?
தண்டு எனும் நின் படை கொண்டோ? சமர் விளைப்பாய்; சாற்று' என்றான்.

'கதை கொண்டே போர் செய்யலாம்' என வீமன் மொழிதல்

'நின கரத்தின் மிசை ஏந்தி நின்றது நீள் கதையாகில்,
என கரத்தில் தண்டுகொண்டே யானும் உடற்றுவன்' என்றான்—
தனகரற்கும், குமரற்கும், தண் துழாய் முடியவற்கும்,
தினகரற்கும், மேலான சிந்தையுடன் செருச் செய்வோன். 145

'எந்த இடத்தில் போர் புரிவது?' என்று வினவிய துரியோதனனுக்குக் கண்ணன் விடை கூறும் அளவில், பலராமனும் விதுரனும் அங்கு வருதல்

'எவ் இடை வீமனும் யானும் இகல் புரிதற்கு இடம்?' என்று,
பொய் விடை ஏழ் அடர்த்தோனைப் புயங்ககேதனன் கேட்ப,
மெய் விடை ஆன் நிரைப் பின்போய் வேய் ஊதும் திரு நெடுமால்,
அவ் இடை, ஆங்கு, இருவருக்கும் ஆம் பரிசால் அருள் புரிந்தான்.

அரும் பெறல் ஆயோதனம் மற்று அவன் உரைக்கும் வேலையினில்,
இரும் புனல் ஆடுதற்கு அகன்றோர் இருவரும் வந்து அவண் எய்த,
கரும் புயலே அனையானும், காவலரும், கண் களித்து,
விரும்பி மனம் களி கூர, மேதகவே எதிர்கொண்டார். 147

பலராமனையும் விதுரனையும் கண்ணன் முதலியோர் வரவேற்றுப் பாராட்டுதல்

மதுரை நகர்க்கு அரசான மாயனும் தம்முனை வணங்கி,
விதுரனையும் மெய் தழுவ, வேல் வேந்தர் அனைவோரும்
கதிரவர் ஓர் இருவரையும் கண்டு களிப்பவர் போல,
எதிர் எதிர் போய்க் கை தொழுதார், இகல் ஆண்மைக்கு எதிர் இல்லார்.

புண்ணிய நீர் ஆடி வந்த இருவரும் தாம் சென்று மீண்ட வரலாறு உரைக்க, கண்ணன் பாண்டவ கௌரவர்களின் போர்ச் செயலைக் கூறுதல்

அன்று முதல், ஏகிய நாள் அளவாக, இருவோரும்
குன்று இடமும், கடல் இடமும், குறித்த நதிகளின் இடமும்,
சென்று, சுரரும் படியும் தீர்த்தங்கள், திசைதோறும்
ஒன்றுபட மகிழ்ந்து ஆடி, மீண்டவாறு உரைசெய்தார். 149

அறன் தரு காளையும் முகுரானனன் தரு காளையும் புரிந்த
மறம் தரு போர் வெங் களத்து, மன்னவர்கள் அனைவோரும்
இறந்த நிலையும், தினங்கள் ஈர்-ஒன்பானிலும், தோன்ற
மறம் திகழ் தோள் இருவருக்கும், மா மாயன் கட்டுரைத்தான். 150

பலராமன் துரியோதனன் தோல்விக்கு வருந்தி, மேல் நடப்பது பற்றி அறிந்து,
கண்ணனையே பொரு களம் வரையறுக்குமாறு கூறுதல்

கேட்டருளி நெடுந் தால கேதனன் மா மனம் தளர்வுற்று,
‘ஆட்டு அரவம் உடையவற்கோ, அழிவு வருவது போரில்?
நாட்டம் இனி ஏது?’ என்று நராந்தகனை வினவுதலும்,
மீட்டும் அவற்கு உரைசெய்தான், விரி திரை நீர் மறந்தோனே: 151

‘ “வீமனுக்கும், வீமனுடன் வெகுண்டு அமர் செய் வலம்புரிப் பூந்
தாமனுக்கும், அமர் புரியும் தலம் ஏது?” என்று உயாவுகின்றோம்;
நீ மனத்தின் நிகழ்ந்தபடி நிகழ்த்துக!’ என, நிலவு ஒளியால்
சோமனுக்கு நிகர் ஆனேன், இளவலை, ‘நீ சொல்!’ என்றான். 152

கண்ணன் போர்க்களம் குறிக்க, யாவரும் அவ்விடம் நோக்கிச் செல்லுதல்

‘தாவு எழு மா மணி நெடுந் தேர்த் தபனன் நிகர் மழுப் படையோன்
மூ-எழு கால் முடி வேந்தர் அனைவரையும் முடிப்பித்து,
நா எழு பான்மையின் உடையோன் களிக்க, நரமேதம் செய்
பூ எழு தீவினும் சிறந்து, பொன்னுலகோடு ஒத்துளதால். 153

‘அந் நிலமே இருவருக்கும் அமர் புரியல் ஆன இடம்;
மன்னவர் தம் உடல் சோரி வழிந்து சமந்த பஞ்சகம் ஆம்
என்ன நிலைபெற்ற தடங்களும் அங்கங்கே உண்டு;
உன்னில் எதிர் இல் அதனுக்கு, ஒலி கடல் சூழ் நிலத்து’ என்றான்.

வேகமுடன் நடந்து செல்லும் துரியோதனன், தன் நிலைக்கு மனம் இரங்குதல்

அத் தலத்தின் திசை நோக்கி அனீகினியும், அனைவோரும்,
முத்த நெடுங் குடை நிழற்ற, மூவகை வாகனம் ஏறி,
கொத்துடனே நெறி படர, கொற்றவர் கொற்றவன்தானும்
கைத்தலமும் தண்டமுமாக் கால் வேகம் உறச் சென்றான். 155

தம்பியர்கள் புடை சூழ, தருமன் மகன், பல் இயமும்
பம்பி எழ, நடக்கின்ற பரிசுதனை முகம் நோக்கி,
‘எம்பியரும், எம் கிளையும் இறக்க இருந்தனம்!’ என்றே,
வெம்பி மனம் மிகத் தளர்ந்தான், விதிதனக்கும் விதி போல்வான்.

தருமன் அரசாட்சியை ஏற்குமாறு துரியோதனனை வேண்ட, அவன் இசையாமை

‘முடிக் குல மன்னவர் தம்தம் முடிகளினால் சிவக்கின்ற
அடிக் கமலம் நடந்து சிவப்பு ஆவதே!’ என இரங்கி,
கொடிக்கண் முரசு எழுதிய அக் கோவேந்தன் கொடித் தேர்விட்டு,
இடிக்கும் முரசு எனப் புகல்வான், இராசராசனுக்கு அம்மா! 157

‘என் துணைவருடன் யானும் ஏவிய நின் தொழில் புரிந்து,
வன் துணையாய்ச் சேவிப்ப, மடங்கல் ஆசனம் ஏறி,
“இன் துணைவர் குருகுலத்தார்” எனும் இசை போய்த் திசை ஏற,
நல் துணைவா! ஆளுதியால், ஞாலம் எலாம் நின் குடைக்கீழ். 158

‘தப்பாது, என் மொழி’ என்று தருமன் மா மதலை, முகில்
ஒப்பான திருமேனி உம்பர் பிரான் சான்று ஆக,
செப்பாத வாய்மை எலாம் செப்பினான்; செப்பவும், அக்
கைப்பான வல் நெஞ்சக் கடுங் கண்ணான் கண் மறுத்தான். 159

‘எம் கிளைஞர், எம் துணைவர், எம்பொருட்டால் இறந்து ஏக,
உங்கள் அருள் பெற்று இருக்கும் உயிர்வாழ்வின் இனிது அன்றோ—
அங்கம் எலாம் வேறுபட, ஆறுபடு குருதியின்வாய்,
கங்கமும் காகமும் கொத்த, களத்து அவிந்தான் எனும் பெயரே?’

எல்லாரும் யமுனை கடந்து, சமந்தபஞ்சகத்தை அடைதல்

எனத் தருமன் வார்த்தைதனக்கு இசையாமல் அவன் ஏக,
அனைத்து வரூதினிகளொடும், ஐவரும் ஆங்கு உடன் ஏக,
கனத்தில் வடிவு உடையோனும், கைலை வடிவு உடையோனும்,
வினைத் தடந் தேர் விதுரனொடும் விரைவுடன் ஏகினர்அம்மா. 161

யாவரும் சூழ்ந்து நிற்க, வீமனும் துரியோதனனும் போருக்குச் சித்தமாதல்

கலங்கள் பல இனம் ஏறி, காளிந்திக் கரை ஏறி,
தலங்களில் நல் தலமான சமந்தபஞ்சகம் எய்தி,
வலம் கொள் படைத் தலைவர் எலாம் வளைத்த கடல் என, வாள
விலங்கல் என, சூழ் நிற்ப, வெஞ் சமரம் தொடங்கினரே. 162

‘பூங் கவசத்துள் புகுந்து, பூண் அனைத்தும் திருத்தி, மணி
ஓங்கல்இவை இரண்டு உயிர் பெற்று உடற்றுகின்றது’ என உரைப்ப,
வாங்கிய தண்டமும், தோளும், மலர்க் கரமும் வலி கூர,
ஆங்கு உலகு செவிடுபட, அடல் அரிநாதமும் செய்தார். 163

வீமன் துரியோதனனை இகழ்ந்து, தன் வீரம் பேசுதல்

கந்த நறு மலர்க் கூந்தல் காந்தாரி புதல்வனை அக்
குந்தி மகன் முகம் நோக்கி, கொடுஞ் சொற்கள் சில சொல்வான்:
‘கந்தருவர் அன்று உன்னைக் கட்டிய தோள் வலி கொண்டோ,
சிந்தைதனின் வலி கொண்டோ, செருச் செய்ய நீ புகுந்தாயே? 164

‘இடிப்பதும் இன்று இரு கதையும்; என் கதையால் இடியுண்டு,
துடிப்பதும், இன்று உன் உடலம், உயிர் துறக்கம் குடியேற;
முடிப்பதும் இன்று, அழல்-பிறந்தாள் முகில்ஓதி; முகில் பொழி நீர்
குடிப்பதும் இன்று, ஒருவேன் நின் குருதி நீர் குடித்தாலே.’ 165

வீமனைப் போர் தொடங்குமாறு துரியோதனன் மொழிந்து
அவனோடு கதைப் போர் புரிதல்

'இனி விடு மேன்மேல் உரைக்கும் வாசகம்;
எனது உயிர் நீ கோறல், இற்றை நாளிடை,
உனது உயிர் வான் ஏற விட்டு, நான் உலகு
ஒரு குடை மா நீழல் வைத்தலே துணிவு;
அனிகமும், மாயோன் நடத்து தேருடை
அநுசனும், வாள் ஆண்மை மற்றை மூவரும்
நினைவுடனே காண, வச்ர ஆயுதம்
நிகர் கதை, வீமா! எடுத்தி நீ' என, 166

நடை ஒழியாதோன் விறல் குமாரனும்,
நயனம் இலாதோன் முதல் குமாரனும்,
அடலொடு கார் வான் இடிக்குமாறு என
அதிர்வு உறவே கூறி, மத்த வாரணம்,
விடை, அரிமா ஏறு, என ப்ரதாபமும்,
விசயமும் மேன்மேல் மிகுத்து, மேலிடு
கடையுகநாள் வாயு ஒத்து நீடிய
கதை கெழு போர் ஆதரித்து, மூளவே, 167

இருவரும் பொருத வகை

ஒரு தமனீயாசலத்தினோடு எதிர்
ஒரு முழு மா நீல வெற்பு நீடு அமர்
புரிவதுபோல், மேல் விசைத்து, மீமிசை
பொறி எழ மாறுமல் எற்றி, வீரர்கள்
இருவரும், ஆகாயம் முட்ட, நாகர்கள்
இறைகொள, நால் நாலு திக்கு நாகரும்
வெருவர, நீள் நாகர் உட்க, வீசினர்—
விசையுடனே போர் விறற் கதாயுதம். 168

உகவையினாலே சிரிப்பர்; நீள் சினம்
உறுதலினாலே மடிப்பர், வாய் மலர்;
புகை எழவே தீ விழிப்பர்; மார்பொடு
புனை கிரி போலே தடிப்பர், தோள் இணை;
இகல் புரி நூலோடு கற்ற சாரிகை
இடம் வலமே போவர்; வட்டம் ஆகுவர்;
முகடு உற மீதே குதிப்பர்; பார்மகள்
முதுகு இற நேரே குதிப்பர், மீளவே. 169

ஒரு கையினாலே சுழற்றி, வான் முகடு
உடைபட மேலே கிளப்பி, நீள் கதை,
இரு நில மீதே மறித்து வீழு முன்,
எறி கையினாலே தரிப்பர்; மேல் அவர்
விரைவுடனே தாளம் ஒத்தி ஓடுவர்;
விசையுடனே கால் ஒதுக்கி மீளுவர்;
பரிதிகள் போலே விருத்தம் ஆம் முறை
பவுரி கொளா வீசி நிற்பர், வீரரே. 170

மலர் அடி, தாள், ஊரு, வட்டம் ஆர் தனம்,
வயிறு, மனோராக பற்பம், மார்பொடு,
குல கிரி நேர் தோள், கழுத்து, நீடு அணல்,
குறுநகை, கூர் வாய், கதுப்பு, வார் குழை,
இலகு புரூர்பாகம், நெற்றி, ஆனனம்,
என அடைவே கூறு உறுப்பு யாவையும்
உலைவுற, மேன்மேல் மிகுத்து, மூளையும்
உதிரமும் மாறாது உகுக்க, மோதியே, 171

கதை கதையோடே அடிக்கும் ஓதைகொல்?
கதை உடையோர் தாம் நகைக்கும் ஓதைகொல்?
எதிர் மொழி ஓவாது இசைக்கும் ஓதைகொல்?
இணை உடலூடே இடிக்கும் ஓதைகொல்?
பத யுகம் மாறாடி வைக்கும் ஓதைகொல்?
பணை பல சூழ்போத எற்றும் ஓதைகொல்?—
திதியொடு வானாடு செற்றும் வானவர்
செவி செவிடு ஆமாறு அதிர்க்கும் ஓதையே! 172

இளைத்த துரியோதனன், வீமனது உயிர்நிலையை உசாவி அறிந்து தாக்க, வீமன் மயங்கி விழுதல்

அரி வய மா ஏறு உயர்த்த சூரனும்,
அழல் விட நாகேறு உயர்த்த வீரனும்,
இருவருமே வாலி சுக்கிரீவர்கள்
என அமர் மோதா இளைத்த காலையில்,
வரை முடி மேனாள் ஒடித்த காளைதன்
மதலையை, ஏழ் பார் படைத்த கோமகன்
உரை தடுமாறா, உயிர்த்து, ‘நீ உனது
உயிர்நிலை கூறாய், எனக்கு’ எனா முனம், 173

இரு வினை கூறு அறத்தின் மா மகன்
இளவல், விதாதாவொடு ஒத்த கேள்வியன்,
உரை தவறுதான் மறைக்குமோ? 'எனது
உயிர், துணைவா! கேள், சிரத்திலே' என
அரி மகவு ஆனேன் உரைத்தபோது, இவன்
அவன் முடிமேலே புடைக்க, வீமனும்
உரும் உறும் மா மேரு வெற்புஅதுஆம் என
உரை தடுமாறு, உழற்றினன்அரோ. 174

வீமன் துரியோதனனது உயிர் நிலையை வினவ, அவன் மாறுபட மொழிதல்

மகிதலம்மேல் வீழ்தல் உற்றும், மீளவும்,
வலியுடனே போர் குறித்து மேல்வரு
பகைவனை, 'நீ ஆவி நிற்பது ஓர் நிலை
பகர்' என, மாறுடு சர்ப்பகேதுவும்,
'இகல் நுதலூடே எனக்கும் ஆர் உயிர்'
என, மதியாதே உருத்து, வீமனும்,
உகுதரு சேய் நீர் பரக்க மோதினன்,
உயர் கதையாலே, சிரத்தின்மேலுமே. 175

வீமன் தாக்குதலால் துரியோதனன் நிலைகுலைய, வீமன் அவனை, 'இளைப்பாறுக!' எனல்

உரிய கதாபாணியர்க்குள் ஓத ஓர்
உவமை இலாதான் அடித்தபோது, உயர்
சிரம் முடியூடே பிளக்க, நால்-இரு
திசையினும் வார் சோரி கக்கி வீழ்தர,
இரு நிலமீதே பதைத்து வீழ்தலும்,
இரிதர மோதாமல் விட்டு, 'நீ இனி
விரைவுடன் ஆறு ஆறு!' எனத் தன் ஆண்மையை
விருதர் முன், மேன்மேல் விளக்க வீமனே, 176

துரியோதனன் தெளிவு பெற்று வீமனைத் தாக்க, இருவரும் கடும் போர் புரிதல்

வரு களை ஆறு, உயிர்ப்பு உறு, விழி
மலர் திறவா, நா வறட்சி போய், உகு
குருதி உகாமே துடைத்து, வீழ்தரு
குருகுல பூபாலன் உக்ர வேகமொடு
உரும் எறி மா மேகம் ஒத்த காயமும்
உதறி, மனோவீரம் உற்று, மீளவும்
அருகு ஒருபால் மேவி நிற்கும் வீமனை
அடு கதையால், ஒடி முட்டி மோதவே, 177

ஓம உண்டி கொள் பேர் அழலோடு அடல்
ஊதை வெஞ் சமர் ஆடியவாறு என,
ஆ மரங்களினுல் மதியாது அமர்
ஆடுகின்ற நிசாசரர் ஆம் என,
வீமனும், துரியோதன நாமனும்,
வேகம் ஒன்றிய வீரியராய், அடு
சேம வன் கதையால் அமர் ஆடினர்,
தேறி நின்றவர் வாள் விழி மூடவே. 178

மேவு சிங்க, வியாள, விலோதனர்
வீசுகின்ற கதாரவம் மேலிட,
வாவு வெம் பரி ஆதபனும் தடு-
மாறி நின்றனன்; வானவர், தானவர்
நா அடங்கினர்; மா முனிவோரொடு
நாகர் அஞ்சினர்; நான்முகன் ஆதிய
மூவரும் செயல் ஏது என நாடினர்;
மோழை கொண்டது, மூடிய கோளமே. 179

வீமனது தாழ்வு கண்டு, 'துரியோதனனை வெல்லும்வகை யாது?' என, கண்ணனை விசயன் வினவுதல்

தார் வலம்புரியானெடு போர் அழி
தாழ்வு கண்டனன் வீமனை, வாசி கொள்
தேர் விடும் திருமால் அடி நீள் முடி
சேர நின்று உரையாடினன், 'மாருதி
நேர் தளர்ந்தனன்; யாதுகொலோ செயல்?
நீ மொழிந்தருள்வாய்!' என, வானவர்
ஊர் புரந்தவன் ஓத, முராரியும்
ஓதினன், பரிவோடு அவனேடு இவை: 180

துரியோதனனைக் கொல்லும் உபாயத்தைக் கண்ணன் கூறுதல்

'நீ நயந்தனை கேள்: உறு போரிடை
நேர் மலைந்திடுவோர் இருவோரினும்,
ஆனிலன் பெலவான்; அதிலே முகு-
ரானனன் தரு சேய் வினை ஆதிகன்;
நான் இயம்பல் தகாது; இவர் ஆயிரம்
நாள் மலைந்தனர் ஆயினும், வீவொடு
வான்அகம் புகுதார் இருவோர்களும்;—
வாசவன் தரு பூண் அணி மார்பனே! 181

'மாறு கொண்டவர் ஆவி கொள் நீள் கதை
மாருதன் சுதனோடு இவண் ஓர் உரை
கூறல் இங்கிதமே அல; ஓர் உரை
கூறில், வஞ்சகம் ஆம்; இவன் ஆண்மையின்
நூறு மைந்தரின் ஆதிபன் ஆகிய
நூல் நலம் திகழ் மார்பனை ஆர் உயிர்
ஈறு கண்டிடலாம், அவன் ஊருவை
ஏறு புண்படவே எதிர் மோதிலே.' 182

விசயன் குறிப்பினால் வீமனுக்கு உபாயம் உரைக்க, அவன் அதனை உணர்ந்து, துரியோதனனது தொடையில் அடித்துப் பூமியில் வீழ்த்துதல்

ஏழ் பெருங் கடல் சூழ் புவி பாரமும்
ஏதமும் கெட, ஏதம் இல் ஐவரும்
வாழ, அன்று உயர் நாரணனார் திரு-
வாய் மலர்ந்த சொலால் மகிழா மிக,
'ஊழினும் புரி தாள் வலிதே' என,
ஊருவின் புடை சேர் கர நாள்மலர்,
காழ் நெடுங் கிரியே அனையான் விழி
காண, நின்றனன், வான் அரி காளையே. 183

ஞான பண்டிதன் வாயு குமாரனும்,
நாரணன் பணியால் இளையோன் மொழி
மோன வண் குறி தான் உணரா, எதிர்
மோதினன் கதை, பூபதி ஊருவின்;
மான கஞ்சுகன் ஆறு அடி ஏழ் அடி
மாறி நின்றிடவே பிழைபோதலின்,
மேல் முழங்கின வானவர் தூரியம்;
மேல் விழுந்தது பூ மழை சாலவே. 184

மாறி நின்ற சுயோதனன் மீளவும்
வாயு மைந்தனை வாகுவும், மார்பமும்,
நீறு எழும்படி சாடியபோது, அவன்
நீள் நிலம்தனில் ஓடி விழாது, தன்
ஊறு மிஞ்சிய பேர் உடலோடு எதிர்
ஓடி, வன் தொடை கீறிட, மாறு அடும்
வீறு கொண்ட கதாயுதம் வீசினன்,
வீரன் அம் புவிமீது உற வீழவே. 185

அரிப் பதாகன் உரகப் பதாகனை
அதிர்த்து, மேல் உற அடர்த்து, நீடு
உருப்பினோடு அதிசயிக்க ஊருவை
ஒடிக்கவே, அவன் உடற்றலும்;
நெருப்பு உரு விழி சிவத்து, வார் கடை
நிமிர்ப்பு உருத புருவத்தனாய்,
மருப்பு நால் உறு மதத்த மா என
மதத்து, மார்பமிசை குத்தினான். 186

கதுப்பும் வாயும் நெரிய, கதாயுத
கரத்தினால் நனி கலக்கினான்,
எதிர்த்த யானையை அடர்த்த கேசரி
எனப் பொன் மௌலியை இருத்தினான்,
உதைத்து மேல் இரு பதத்தினால், அவன்
உரத்தை வாகுவை ஒடித்து, நீள்
விதத்தினால் இரு நிலத்துமீது உடல்
விதிர்த்து வீழ்தர விழுத்தினான். 187

துரியோதனன் கண்ணனைப் பழித்துக் கூறுதல்

நிறத்த நீல கிரி ஒக்கவே இரு
நிலத்தின் வீழ் குரு குலத்தினோன்,
உறைத்து மீளவும் உயிர்த்து, மாயனொடு
உருத்து வாசகம் உறச் சொல்வான்:
'குறிப்பினால் விசயனைக் கொடு ஆர் உயிர்
குறிக்கும் மா மதி கொளுத்தினாய்;
அறத்தினால் அடல் மறத்தின் நீர்மையை
அவித்தை ஆயரும் அளப்பரோ? 188

'மலைத்த போர்தொறும் எனக்கு நீ செய் பிழை
மற்றுளோர் செய நினைப்பரோ?
குலத்திலே இழிகுலத்தர் ஆனவர்
குறிப்பு இலாது, இவை பிறக்குமோ?
சலத்தினால் வினை இயற்றுவார் முடி
தரித்த காவலரொடு ஒப்பரோ?
நிலத்தில் வாழ்வு அவர் பெறக் கொடாய், இனி;
நினைத்த காரியம் முடித்தியே!' 189

துரியோதனன் மீண்டும் எதிர்க்க எழுந்தபோது, வீமன் அவனை முடியில் உதைக்க, அது கண்டு பலராமன் சினந்து கூறி, வீமனோடு பொருதற்கு எழுதல்

எனச் சில் வாசகம் மிழற்றி, மீளவும்
எதிர்ப்பதாக எழல் உற்றபோது,
அனல் சகாயன் முன் அளித்த காளை தன்
அடல் சரோருக பதத்தினால்,
'உனக்கு வாழ்வு இனி எனக் கொல் ஆம்?' என
உதைத்து, மௌலியை உடைக்கவே,
சினத்து அலாயுதன் நிறத்த வாள் விழி
சிவக்க, வாய்மை சில செப்புவான்: 190

எம் பிரானை, முராரியை, மாயனை,
இம்பர் ஏழ் கடல் சூழ் புவிமேல் ஒரு
தம்பியா உடையான், அவனோடு எதிர்
சந்தியா, வெகுளா, விழி தீ எழ,
'நம்பி! கேள்: அரியோடு உடன் மேவிய
நஞ்சு போலும் நரேசர் முன்னே, உடல்
கம்பியா விழ, ஊருவின் மோதுதல்
கண்ட போது, எனது ஆர் உயிர் போனதே. 191

'கதை எடுத்து உடற்றும் ஆடவர்கள்
கடிதடத்தினுக்கு மேல் ஒழிய,
அதிர்வு உறப் புடைப்பரோ, தொடையில்?
அடிபடத் துகைப்பரோ, முடியில்?
எதிரியைச் சலத்தினால் என் விழி
எதிர் வழக்கு அழித்த பாவனை
முதுகிடப் புடைப்பல் யானும்' என,
முசல கைத்தலத்தொடு ஓடினனே. 192

கண்ணன் பலராமனைத் தடுத்து, சமாதானம் கூறுதல்

மதி இரவியோடு போர் செயுமாறு என,
வலிய திறல் வீமன்மேல் இவன் ஓடலும்,
இதய மலர்தோறும் மேவரு நாயகன்
இவனை விரைவோடு போய் விலகா, இரு
பதுமம் நிகரான தாள் பணியா,'மிகு
பரிவினொடு சீறும் ஆண்மை தகாது' என,
அதி மதுர வாய்மையால், வெகுளாவகை,
'அடிகள்! இவை கேண்மினோ!' என, ஓதினான்: 193

'முகுரானனன் மைந்தனும் வீமனுமே
முடியாத பெரும் பகையாளர்கள் காண்;
மகிபாலர் திருந்து அவையூடு உரையா
வழுவாதன வஞ்சினம் ஓதி, நனி
இகல்வார்; சிலையின் குரு ஆனவர்தாம்
இடு சாபமும் உண்டு; திரௌபதியார்
பகர் சாபமும் உண்டு; அதனால், எதிரே
படுமே, இவன் வெங் கதையால் அவனே. 194

'வெஞ் சிலை விதுரன்அவனும் நீவிரும்
மிஞ்சிய புனல்கள் படிய ஏகினிர்;
பஞ்சவர்களொடு வயிரியாய் ஒரு
பண்பு அற வினை செய் சமர பூமியில்
வஞ்சனை வழியில் ஒழிய, நேர்பட
வன்பொடு மறமும் அறமது ஆம் வகை,
எஞ்சிய பதினெண் வகைகொள் நாளினும்,
இன்று, அமர் பொருதது, உரக கேதுவே.' 195

பலராமன் செல்ல, துரியோதனன் குற்றுயிராய்க் களத்தில் கிடத்தல்

வெற்றி புனை பலபத்ரராமனும்
மெய்த் துணைவன் இவை சொற்ற காலையில்,
மற்றை அநுசனொடு உற்ற நீள் களம்
வட்டம் இட ஓர் இமைப்பின் ஏகினன்;
அற்றை அடல் அமரில் சுயோதனன்
அற்ப உயிர் நிலை நிற்ப, நீடு உடல்
முற்றும் உகு குருதிக்கண் மூழ்குற,
மொய்த்த கழுகின் நிழற்கண் மேவினன். 196

சூரியன் மறைய, ஐவரும் பாசறைக்கு மீளுதல்

மைந்தினால் பெரியோன் எனும் வாயுவின்
மைந்தனால் துரியோதனன் மா முடி
சிந்த, ஆர்த்தனர், நீள் திசை காவலர்;
சிந்தி வாழ்த்தினர், பூமழை தேவர்கள்;
முந்த ஓட்டிய தேரொடு காய் கதிர்
மொய்ம்பன் மேல் கடல் மூழ்கினன்; மாலை கொள்
அந்திவாய்த் தம பாசறை மேவினர்,
ஐந்து பார்த்திவர்ஆனவர்தாமுமே. 197

'பாசறை புகுதல் கடன் அன்று' என்று, ஐவரையும் கண்ணன் பக்கத்திலுள்ள ஒரு காட்டிற்கு அழைத்துச் செல்லுதல்

'மிடல் மிஞ்சு மேவலர் வானிடை போதர,
வினை வென்ற காவலர் பாசறை சேருதல்
கடன் அன்று' எனு, முனி மா மகன் வாள் வலி
கருதும் தன் நீர்மையை வேறு அறியாவகை,
அடல் கொண்ட சேனை எலாம் அவண் வாழ்வுற,
அவர் ஐந்து வீரருமே வரவே, ஒரு
புடை தங்கு கானிடை போயினனுல், நனி
பொழி கொண்டல்போல் திரு மேனி முராரியே. 198

அசுவத்தாமன் செய்தி தெரிந்து, துரியோதனனை அணுகிச் சோகமுறுதல்

'ஆன கமல மலர் வாவியிடையே முழுகி,
ஆவி உதவு மறை யோக பரன் ஆகி மொழி
மான கவச வர ராச துரியோதனனை,
வாயு குமரன் முதிர் போரில் எதிர் வீழும்வகை
தான கரட கரிமாவை அரிமா பொருத
தாயம் என உழறினுன்' எனும் முன், வேகம் உற,
ஞான சரித குருவாகிய துரோணன் மகன்
நாடு களம் அணுகினுன், ஒரு விநாழிகையில். 199

உரக துவசன் அயர்கின்ற ஆவியின்
உணர்வொடு துயில்வது கண்டு, பேர் உடல்
கரதல மலர்மிசை கொண்டு, வார் புனல்
கலுழ்தரு விழியினன், நண்பினுல், அமர்
பொரு களனிடை தன தந்தை வீடிய
பொழுதினும் மனம் மிக நொந்துளான், உயர்
சுரர்களும் உருக இரங்கினுன், வரி
தொடு சிலை விசய துரங்கதாமனே. 200

'பாண்டவரை விடிவதற்குள் அழித்து வருவேன்!' என்று அசுவத்தாமன் வஞ்சினம் கூற, துரியோதனன் தன் முடி மணியை அளித்தல்

முனைத்தலை அழிந்து உடல் சோரவும், 'யான் வினை
முடிப்பன்!' எனும் நெஞ்சுடை வாள் வய வீரனை,
அனைத்து உலகினும் குரு ஆன சராசனன்
அளித்த முனி அன்புற மார்பு தழீஇயினன்,
'நினைத்த நினைவின்படியே மிகு போர் செய்து,
நினக்கு அவனி தந்திட, நீ தலைநாளினில்
எனைத் தனி தெளிந்திலை, யாதவன் மாயையின்!'
என, பரிவு கொண்டு, சில் வாய்மைகள் கூறியே, 201

'''அருள் உற வழக்கு அழிவு உறுதடுதோர் மாற்றமும்,
அறனுடன் அழுக்கறல் அணுகுறு ஏற்றமும்,
இரு நிலம் மதித்திட, இனிது கோல் ஓச்சுதல்
இயல்பு நிருபர்க்கு'' எனும் முறைமையோ பார்த்திலை;
நரை கெழு முடித் தலை என் பிதா, மீப் படு
நதி மகன், முறித்த வில் விதுரனேபோல் பல
குரவரும் உரைத்த சொல் உறுதி நீ கேட்டிலை;
குரு மரபினுக்கு ஒரு திலகமாம் மூர்த்தியே! 202

'இடி இடித்திடு சிகரிகள் ஆம் என
எறி மருச்சுதன் முதல் இகலோர் தலை
துடிதுடித்திட, அவர் அவர் சேனைகள்
துணிபடப் பொருது, எழு புவி நீ பெற,
விடிவதற்கு முன் வருகுவன் யான்' என,
விடை கொடுத்தனன், அரவ விலோதனன்,
முடிமிசைத் தனது உடைய சிகாமணி
முனிமகற்கு இனிது அருள் செய்து, மீளவே. 203

அசுவத்தாமன், கிருபன், கிருதவன்மன், மூவரும் பாண்டவரது பாசறை புகுதல்

பூசுரர் பெருந் தகை பரித்தாமா, இரியல்
போன கிருபன், கிருதபத்மா, மூவரும், முன்
வாசவன், விரிஞ்சன், உமை பத்தா, மாயன், முதல்
வானவர் வழங்கிய வயப் போர் வாளிகளின்,
ஆசுகன் மகன்தனையும், அப்போதே, துணைவர்
ஆனவரையும் தலை துணிப்பான் நாடி, அவர்
பாசறை புகுந்தனர், பரித் தேர் யானையொடு,
பாரதம் முடிந்த பதினெட்டாம் நாள் இரவே. 204

வேல் அமர் தடக் கை வீரர் இப் பாடி-
வீடு சென்று அணைதலும், புறத்து ஓர்
ஆல் அமர் சினையில் பல் பெருங் காகம்
அரும் பகல் அழிந்த கூகையினால்
சாலவும் இடருற்று அலமரக் கண்டு,
தம்மிலே முகம் முகம் நோக்கி,
'காலமும் இடனும் அறிந்து அமர் செகுத்தல்
கடன்' எனக் கருதினர்அன்றே. 205

ஒரு பூதம் அவர்களைத் தடுத்துவிட, அவர்கள் மூவரும்
அருகிலுள்ள ஆலமரத்தின் அடியைச் சார்தல்

உரத்து வாரணங்கள் மதம் மிகுத்தென்ன
ஊக்கமோடு ஒன்றையும் மதியார்,
புரத் துவாரத்துப் புகுதலும், வெகுண்டு,
பொங்கு அழல் போல்வது ஓர் பூதம்,
பரத்துவாசனையும், மாதுலன் கிருத-
பன்மன் என்று இவரையும், முனைந்து,
கரத்து வார் சிலையும், கணைகளும் முறித்து,
கடவு திண் தேர்களும் கலக்கி, 206

முன் புகு விசய முனி மகன்தன்னை
முரண் நெடுந் தோள்களும், உரனும்,
என்புடன் நிணமும், தசைகளும், சிந்த,
இணைக் கருஞ் சிறு குறுங் கரத்தால்
வன் புகை எழுமாறு உள் உற மலைந்து,
மற்றுளோர் கொற்றமும் அழித்து,
பின் புகல் அறுமா துரந்தது; அப் பூதப்
பெருமை யாம் பேசுறும் தகைத்தோ? 207

மாதவன் விதியால், அகன் பெரும் பாடி.
மா நகர் காவல் கொண்டு உற்ற
பூதமே பொருது துரத்தலின், மீண்டு
போய், வட தரு நிழல் புகுந்து,
பேதுற வெருவோடு இருந்தனர்; கரிய
பெரிய அக் கங்குலில், துரோண
சாதனன் மதலை, 'என் செய்தும்!' என்னத்
தன் மனத்து எத்தனை நினைந்தான். 208

அசுவத்தாமன் பற்பல சிந்தை செய்து, பின் சிவனைப் பூசித்து,
அவனால் ஆயுதம் பெறுதல்

'எஞ்சின நிருபன் உயிரினை நிறுத்தி,
''இவ் இரவு அகல்வதன் முன்னர்
வெஞ் சினம் உறச் சென்று, உன் பகை முடித்து
மீளுதும்!'' எனப் பல படியும்
வஞ்சினம் உரைத்து வந்தனம்; இன்னம்
வன் குறள் பாரிடம்தன்னால்,
துஞ்சினம் எனினும் அமையும்!' என்று எண்ணி,
துணிந்தனன், துயில் அறு கண்ணான். 209

எண்ணிய கருமம் முடியினும், முடியாது
ஒழியினும், ஈசனைத் தொழுதல்
புண்ணியம் எனுமாறு உன்னி, ஆங்கு ஒரு தண்
பொய்கையில் புனல் படிந்து ஏறி,
பண் இயல் இசையின் படிவமாம் தெரிவை
பங்கனைப் பங்கய மலர் கொண்டு,
அண்ணிய கருத்தில் இருத்தி, அஞ்சு-எழுத்தால்
ஆகமப்படி அடி பணிந்தான். 210

அன்று அவன் மறையின் முறையினல் புரிந்த
அருச்சனைதனை உவந்தருளி,
நின்றனன், விழியும் இதயமும் களிப்ப
நீறுடை ஏறுடைக் கடவுள்.
வல் திறல் முனிவன் மதலையும் விதலை
மாறி, 'மாறு அடர்ப்பது ஓர் படை நல்கு!'
என்றனன்; என்ற உரை முடிவதன்முன்,
ஏதி ஒன்று ஈசனும் ஈந்தான். 211

அசுவத்தாமன் சிவன் அளித்த ஆயுதம் ஏந்தி, உடன் வந்த வீரரோடு
பாசறை புக, பூதம் அஞ்சி ஓடுதல்

பாதி மெய் நீலம் ஆகிய பவளப்
பருப்பதம் விருப்புடன் அளித்த
ஏதி பெற்று, உவகையுடன் இமைப்பு அளவின்,
இருந்த அவ் வீரரும் தானும்
வீதி கொள் பாடி வீடு உற, பூதம்
மீள வந்து அடர்த்து, இவன் கரத்தில்
ஆதி நல்கிய வெம் படையினல் அஞ்சி,
ஆவி கொண்டு ஓடியதுஅன்றே. 212

உடன் வந்த இருவரையும் வாயிலில் நிறுத்தி, அசுவத்தாமன் உட் புகுந்து,
திட்டத்துய்மனது தலையைத் துணிக்க, பாஞ்சாலர் அவனை எதிர்த்தல்

பருவரல் அகற்றி, இருவர் வீரரையும்
பாசறை வாயிலில் நிறுத்தி,
மரு வரும் கமல மாலையான் கடப்ப
மாலையான் என மனம் களித்து,
பொரு வரு முனைக்குக் குரிசிலாய், எல்லாப்
போரினும் புறமிடாது அடர்த்த
துருபதன் மதலை வரி சிலைத் திட்டத்
துய்மனை மணித் தலை துணித்தான். 213

'குயில் புரி குழற் கால் தந்தையைச் செற்ற
காளையைப் பாளையத்திடையே,
துயில் புரி அமையத்து, இமைக்கு முன், சென்னி
துணித்தனன் சுதன்' எனக் கலங்கி,
வெயில் புரிவதன்முன் வல் இருளிடையே
உணர்ந்தவர் வெருவுடன் அரற்ற,
பயில் புரி சிலைக் கைச் சிகண்டியை முதலோர்
பலரும் வந்தனர்கள், பாஞ்சாலர். 214

எதிர்ந்த பலரைக் கொன்று, ஐவரைத் தேடும் அசுவத்தாமன், உறங்கும்
அவர்களது புதல்வர் ஐவரையும் அடுத்தல்

உத்தமோசாவும், உதாமனும், முதலிட்டு
உள்ளவர் யாவரும், பிறரும்,
நம்தம் ஓகையினால் வந்து எதிர் மலைந்தோர்
நலைகளால் பல மலை ஆக்கி,
மைத்த மோகரித்து, பாரதம் முடித்த
வீரரைத் தேடி, மேல் வெகுளும்
சித்தமோடு எங்கும் திரிந்துளான், அவர்தம்
சிறுவர் ஐவரையும் முன் சேர்ந்தான். 215

கனவுபோல் அசுவத்தாமனைக் கண்ட இளம் பாண்டவர், தமது படையை
எடுப்பதற்குள், அவர்களைப் பாண்டவர் என மயங்கி, அவர்களது
தலைகளை அசுவத்தாமன் கொய்தல்

பூதலம் முழுதும் கவர்ந்த தந்தையர்கள்
புறத்துடைப் போயதும், துயின்ற
மாதுலன் முனிவன் மதலை கைப் படையால்
மடிந்திடத் தடிந்ததும் உணரார்,
தாது அலர் அலங்கல் சமர வாள் முனியைத்
தழலிடை வரு பெருந் தையல்
காதல் அம் புதல்வர், கண் துயில் புரிவோர்,
கனவு கண்டனர் எனக் கண்டார். 216

கண்டவர் தம்தம் படை எடுப்பதன் முன்,
'காசினி முழுவதும் வென்று
கொண்டவர் இவர்' என்று எண்ணியே, சுடரில்
கொளுத்திய சுடர் அனையாரை,
திண் தவர் தமக்குச் சிகாமணி அனையான்
சினத்து உறக் கலங்கி, வண் தேறல்
உண்டவர்தமைப்போல், மதத்தினால், வாளால்,
ஒரு நொடியினில் தலை துணித்தான். 217

சோமன் அசுவத்தாமனை எதிர்த்து, சேனைகளுடன் மடிதல்

'துருபதன் மைந்தர் அனைவரும், பஞ்சத்
திரௌபதேயரும் துயில் பொழுதில்,
புரவிஅம்தாமா நினைவு அறப் புகுந்து,
பொன்றுவித்தனன்' எனப் புலம்ப,
'இரவிடை அமர் மற்று என்னைகொல்?' என்று,
இரவிதன் திருக்குலத்து இறைவன்,—
பெருமையோடு எழுந்தான், பகைவன்மேல்—அவன் முன்
பின்னிடப் பொருதிடும் பெரியோன். 218

பொன்னி நல் நதியும் நேரி அம் பொருப்பும்
புகார் எனும் நகரியும் படைத்த
சென்னியும், அவன்தன் சேனையின் விதமும்,
சேனை மண்டலீகரும், சேர,
முன்னிய சிலைக் கை முனிமகனுடன் போய்,
மோதிய ஏதியால் மடிந்தார்;—
பின்னிய சடையோன் வழங்கிய படைமுன்,
பிழைத்தவர் யாவரே, பிழைத்தார்? 219

அசுவத்தாமன் தனியாகப் பொருது, மேலும் பலரை அழித்தல்

புகல் அரும் பதினெண் பூமி முற்று உடைய
பூபதிகளும், அவர் படைத்த
இகல் அருந் தந்தி, தேர், பரி, காலாள்,
என்பன யாவையும், சேர,
பகல் அருஞ் சமரில் பதின்மடங்கு ஆகப்
பாதி நாள் இரவினில் படுத்தான்,
தகல் அருங் கேள்வித் தாமனே—தாமச்
சடையவன் தனயன்ஆதலினால். 220

அசுவத்தாமன் இளம் பாண்டவர் தலைகளுடன் விடிவதன்முன்
துரியோதனனை அடைதல்

உள்ளியபடியே கடுஞ் சினம் கன்றி,
உள்ளவர் யாரையும் முருக்கி,
துள்ளிய விடைபோல் செருக்கி, அப் புரத்தின்
துவாரம் நின்றவரையும் கூட்டி,
தெள்ளிய குமரர் சென்னி ஐந்தினையும்
தேவரும் திகைத்திடத் தூக்கி,
வெள்ளிய குரு வந்து எழு முனே, குருவின்
மிகு குல வேந்தை வந்து அடைந்தான். 221

அசுவத்தாமன் தான் சென்று செய்தன கூறி, கொணர்ந்த தலைகளைத் துரியோதனன் முன் வைத்தல்

'வந்தனென்—ஐய! மாதவன் ஏவலால்
முந்து பூதம் முதுகிட, மா முடி
சிந்த, யாரையும் செற்று, அகன் பாசறை
ஐந்து வீரர்தம் ஆவியும் கொண்டுஅரோ. 222

'சொன்ன சிங்கத் துவசனை ஆதியா
மன்னர் ஐவரும் மாண்டனர்; மற்று அவர்
சென்னி' என்று, சிறுவர்தம் சென்னியை
முன்னர் வைத்தனனால், முனி மைந்தனே. 223

துரியோதனன் அவற்றை நோக்கி, 'சிறுவர் முகம்' என்று கூறி, இரங்கி மொழிதல்

வைத்த சென்னியை நோக்கி, வயா உறு
சித்தம் மன்னவன் தேறி, 'சிறார் முகம்;
தம்தம் அன்புடைத் தந்தையர் வாள் முகம்
ஒத்த ஆகும்; இஃது உண்மை' என்று ஓதினன். 224

ஓதும் வேந்துக்கு ஒரு மொழியும் சொலான்,
வேத பண்டிதன் நிற்க, அவ் வீரனை,
'பாதகம் செய்கை பார்ப்பன மாக்களுக்கு
ஏதம், ஏதம்; இது என் செய்தவாறுஅரோ! 225

'துன்னு பாரதம் தோன்றிய நாள்முதல்,
மன்னர் ஓட மலைந்தனை, வாளியால்;
சொன்ன பாலர் மகுடம் துணித்தது இன்று
என்ன வீரியம்! என் நினைந்து, என் செய்தாய்! 226

'இரு குலத்தில், எமக்கும் அவர்க்கும் இங்கு
ஒரு குலத்தினும் உண்டு என இல்லையால்;
குருகுலத்தின் கொழுந்தினைக் கிள்ளினை—
வரு குலத்து ஒரு மாசு அறு மைந்தனே! 227

'ஆற்றின் நீர் விளையாடிய நாள்முதல்,
காற்றின் மைந்தனொடு எத்தனை கன்றினேன்!
சாற்றின், என் வினைதான் என்னையே சுட,
கூற்றின்வாய்ப் புகுந்தேற்கு என்ன கூற்று? ஐயா! 228

'பணை நெடுங் கைப் பகட்டு வெஞ் சேனை சூழ்
இணைதரும் சொல் கிளைஞர்கள் யாரையும்,
துணைவர் யாரையும், தோற்று நின்றேன்; எனக்கு
இணையர் பார்மிசை யார் உளர். எண்ணிலே!' 229

'தீவினை நீங்கத் தவம் செய்' என்று அசுவத்தாமனுக்கு விடை அளிக்க, அவனோடு கிருதனும் கிருபனும் போதல்

என்று பல் மொழி கூறி, இம் மைந்தரைக்
கொன்று வந்த குமரனை, 'போர்தொறும்
நின்ற தீவினை நீங்கிட, நீ தவம்
ஒன்றி வாழ்க!' என்று, உயர் விடை நல்கினன். 230

வெஞ் சராசன வீரனும், மாமனும்,
நெஞ்சம் மாழ்குற நின்றவர் போனபின்,
கஞ்ச நாள்மலர்க் கண் புனல் சோர்தரும்
சஞ்சயாரியன் தன்னொடு கூறுவான்: 231

சஞ்சயனிடம் தந்தைக்குச் செய்தி சொல்லி, அவனை அனுப்பிவிட்டு, துரியோதனன் உயிர் நீத்தல்

'யாயொடு எந்தை இரக்கம் உருவகை
ஆய இன் சொலினால் துயர் ஆற்றிட,
நீ எழுந்தருள்; நின் மொழி வல்லபம்
தூய சிந்தைச் சுரர்களும் வல்லரோ? 232

'யானும் எம்பியரும் இறந்தோம் எனும்
மான பங்கம் மறந்து, தன் நெஞ்சினுக்கு
ஆன தம்பி அளித்தவர் தம்மொடும்,
கோன் நிலம் புரக்கும்படி கூறுவாய்!' 233

என்ன, அம் முனிதன் இணைத் தாள்மலர்
சென்னிமீதும், விழியினும் சேர்த்திடா,
உன்னில், ஆண்மைக்கு உவமை இல்லாதவன்
பொன்னிலத்தின் உணர்வொடும் போயினான். 234

துரியோதனன் பொன்னுலகம் புகுதல்

வயிரம் செறிதரு மனனும், வாய்மையும்,
வலியும், பொரு படை வினையின் மேல் வரு
செயிரும் திகழ் குருகுல மகிபதி,
திறல் வெஞ் செரு முனை அதனில், மேதகும்
அயிர் நுண் குழல் அரமடநலார் பலர்
அளி கொண்டு எதிர்கொள, அமரன் ஆனபின்,
உயிர் கொண்டது, சுரர் உறையும் வானுலகு;
உடல் கொண்டது, தனதுடைய பூமியே! 235

கிடந்த உடல் வானவர்தம் கிளை சொரிந்த
பூ மழையால் கெழுமுற்று ஓங்க,
நடந்த உயிர் புத்தேளிர் அரமகளிர்
விழி மலரால் நலன் உற்று ஓங்க,
அடர்ந்து அளிகள் மொகு மொகு எனும் ஆமோத
வலம்புரித் தார் அண்ணல், யாரும்
மிடைந்து மிடைந்து எதிர்கொள்ள, வீரர் உறை
பேர் உலகம் மேவினனே. 236

அசுவத்தாமன் முதலிய மூவரும் வியாதரை அடைந்து செய்தி சொல்ல,
அவர், கிருபனையும் அசுவத்தாமனையும் தவம் இயற்றக்கூறி,
கிருதவன்மாவுக்கு விடைகொடுத்தல்

கேள்வியுடை வரி சிலைக் கை முனி மகனும்,
மாதுலனும், கிருதன் என்னும்
வாள் விறல் கூர் நரபதியும், குருபதிதன்
வாய்மையினால் மாழ்கி ஏகி,
வேள்வி அருங் கனல் மூன்றும் ஒரு வடிவாய்ப்
பிறந்தனைய வியாதற்கு, ஐவர்
தோள் வலியும், தம் செயலும், தொழா முடியோன்
துஞ்சியதும், தொழுது சொன்னார். 237

புரி தவத்திற்கு ஆன வனம் கிருபனுக்கும்,
துரோணமுனி புதல்வன் ஆன
துரகததாமனுக்கும் அமைத்து, 'இவ்வுழி நீர்
இருத்திர்' எனச் சொன்ன பின்னர்,
கிருதனுக்கு விடை கொடுத்தான்; இவரும் அவன்
மொழிப்படியே, கிரி சூழ் கானில்,
தரு நிலத்தோர் அதிசயிப்ப, சிவபெருமான்-
தனை நினைந்து, தவம் செய்தாரே. 238

திருதராட்டிரனுக்கும் காந்தாரிக்கும் சஞ்சயன் செய்தி கூற,
அவர்கள் இருவரும் சோகத்துள் ஆழ்தல்

நாடிய சொல் சுருதி நிகழ் நாவினன்
சஞ்சயனும், நள்ளென் கங்குல்
ஓடி ஒளித்திடு கதிரோன் உதிப்பதன்முன்,
விலோசனம் நீர் உகுப்ப எய்தி,
ஆடிமுகத்து அரசினுக்கும், ஐ-இருபது
அரசரையும் அளித்து, வாழ்ந்து,
வாடிய மெய்ச் சவுபலைக்கும், உற்றது எல்லாம்
வாய்மலர்ந்தான், வாய்மை வல்லான். 239

சேனுவிந்துவை முதலாம் திரு மைந்தர்
    ஐவரும் வான் சென்ற நாள்தொட்டு,
ஆனுமல், சொரி கண்ணீர் ஆறு பெருங்
    கடலாக அழுது சோர்வாள்,
பால் நாள் வந்து, அருள் முனிவன் பகரும் மொழி
    விடம் செவியில் பட்ட காலே,
தூ நாகம் உரும் ஒலி கேட்டு அயர்வதுபோல்,
    வீழ்ந்து அழுதாள், சுபலன் பாவை. 240

'மருத்தின் மகன் எனும் சண்டமருத்து அனைய
    புய வலியோன் வன் கைத் தண்டால்,
உருத்து, அமரின் உடன்று, உம்பர் ஊர் புகுந்தான்,
    வாள் அரவம் உயர்த்தோன்' என்று,
வருத்தமுடன் உயங்கி, மிக மயங்கி, நில-
    மிசை வீழ்ந்து, வயிரம் ஆன
கருத்தினுடன் அலமந்தான், அழுது பெரும்
    புனல் சொரிய, கண் இலாதான். 241

சூரியன் தோற்றம் செய்ய, பாண்டவர் பாசறை சேர்ந்து, இரவில் நிகழ்ந்தன அறிதல்

இப்பால், மற்று இவர் இரங்க, எப் பாலும்
    இருள் ஒளிப்ப, இரவி பானுத்
துப்பு ஆர் செங் கொடிகள் என உதயகிரி-
    மிசைப் படர்ந்து தோற்றம் செய்ய,
தப்பாமல் நிலமடந்தைதன் பாரம்
    அகற்றுவித்த சார்ங்கபாணி
அப் பால் அப் பாண்டவர்கள் ஐவரொடும்
    புரிந்த செயல் அறைதும் அம்மா: 242

ஐந்து பெரும் பார்த்திவரோடு ஆரணியம்
    புகுந்த பிரான் அரிய கங்குல்
சிந்து தினகரன் உதயம் சேரும் முனம்,
    பாசறையில் சென்று நோக்க,
இந்திரனே நிகர் நிருபர் முடித் தலைகள்
    வெவ்வேருய் இடையே சிந்த,
மைந்தர் உடற் குறை தழுவி, ஆகுலித்து,
    மெலிந்து, அரற்றும் மானைக் கண்டார். 243

கண்டவுடன், மனம் மெலிவுற்று, 'இவ்வண்ணம்
எவன்கொல்?' என, கரிய மேனிக்
கொண்டல் உரைத்தனன், துரகதாமாவின்
வினைகள் எலாம். கூற்றும் உட்க,
அண்ட முகடு அதிர உருத்து, அருச்சுனனும்,
மாருதியும், 'அவன்தன் ஆவி
உண்டு அலது தவிரோம்' என்று உரைத்து ஓட,
மால் தடுத்தே, உரைக்கும்அன்றே. 244

'பாரிடம் ஒன்றினை, ''புரத்தி பாசறையை''
எனப் புகன்று, பரிவின் சென்றேம்;
வீரருக்கு முனைத் தாமன் சுயோதனற்குச்
சூள் உரைத்து மீண்டான், ''ஐவர்
ஆர மணி முடி கொய்து, தரணி எலாம்
உன் குடைக்கீழ் அமைப்பன் இன்றே;
கார் இருக்கும் மலர் அளகக் காந்தாரி சுத!
உள்ளம் களித்தி'' என்றே. 245

'திருகு சினத்தொடும் கடுகி, பாசறையில்
புகுதலுமே, செங் கண் பூதம்
பெருகு விழி நீர் சொரிய அடர்த்தலும்,
பின்னிட்டு, அரனைப் பெட்பின் போற்றி,
முருகு இதழிச் சுடர் அருளும் படைக்கலம் பெற்று,
இவ்வண்ணம் முடித்தான் அம்மா!
குருகு கிரி எறிந்தோனை நிகர்த்தவன்தன்
விறல் எவர்க்கும் கூறல் ஆமோ?' 246

என்று, பினும், 'அபாண்டவியம் எனும் படையும்
துரந்தால், மற்று எவரே காப்பார்?
அன்று, ''நுமது உயிர் ஐந்தும் அளிப்பன்'' எனும்
வாய்மையினல், அகன்றேன்; இன்னும்
வென்றி உமதுழி அடைவின் சேர்ப்பவன், யான்;
விடுமின்' என, மின் அனைத்
துன்றி, 'விதியினை எவரே வெல்பவர்?' என்று
எடுத்தருளி, சூழ்ச்சி வல்லான், 247

பின், கண்ணன் திரௌபதியைத் தேற்றுதலும், அவன் உரைப்படி தருமன் இறந்தார்க்கு உரிய கடன்கள் செய்தலும்

'மைந்தர் உயிர்க்கு இரங்குவது என்? மலர்க் குழலாய்!
உன் கொழுநர் வாழ்தற்கு யான் செய்
தந்திரம் மற்று ஒரு கோடி; உரைக்கு அடங்கா'
எனத் துயரம் தவிர்த்து, தன்மன்
கொந்து அலரும் முகம் நோக்கி, 'கன்னன் முதல்
யாவருக்கும் குலவும் ஈமத்து
அந்தம் உறு கடன் கழித்தி' என, உலகன்
சொற்படி நின்று அளித்த பின்னர், 248

பின், எல்லோரும் அத்தினபுரி சேர்ந்து, திருதராட்டிரனை வணங்குதல்

அத்தினபுரிஅதனில் ஐவருடன்
சென்று, அரியும், அந்தன் முன்னர்ப்
பத்தியினால் இறைஞ்சிட, மற்று 'எவர்கொல்?' என,
'தருமன் முதல் பாலர்' என்ன,
வித்தகனும், ஆசி சொற்று, 'சதாகதி
சேயினைத் தழுவ வேண்டும்' என்ன,
அத்தன் அத் தூண் அளித்தருள, தழுவி நெரித்தனன்;
துகள்கள் ஆயது அம்மா! 249

அத்தினபுரியில் ஐவரையும், 'ஊழி வாழ்திர்' எனக் கண்ணன் இருத்தி, துவாரகைக்கு மீளுதல்

'இனி ஊழி வாழ்திர்!' என, இளைஞர் ஒரு
நால்வருடன் அறத்தின் மைந்தன்-
தனை இருத்தி, 'மீள்வல்' எனச் சாத்தகியும்
அலாயுதனும் தன்னைச் சூழ,
வினை அகற்றும் பசுந் துளவோன் துவரை நகர்த்
திசை நோக்கி மீண்டான்; சீர்த்திக்
கனை கடல் பார் அளித்து, அவரும் அந் நகரின்
அறநெறியே கருதி வாழ்ந்தார். 250

மிகைப் பாடல்கள்

காப்பு

நீடு ஆழி உலகத்து, மறை நாலொடு ஐந்து என்று நிலைநிற்கவே,
வாடாத தவ வாய்மை முனிராசன் மாபாரதம் சொன்ன நாள்,
ஏடு ஆக வடமேரு வெற்பு, ஆகவம் கூர் எழுத்தாணி தன்
கோடு ஆக, எழுதும் பிரானைப் பணிந்து அன்பு கூர்வாம்அரோ. 1

முருகு ஆர் மலர்த் தாம முடியோனை, அடியார் முயற்சித்திறம்
திருகாமல் விளைவிக்கும் மத யானை வதனச் செழுங் குன்றினை,
புருகூதன் முதலாய முப் பத்து முக் கோடி புத்தேளிரும்
ஒரு கோடி பூதேவரும் கைதொழும் கோவை, உற உன்னுவாம். 2

சூழ் ஆழி அகிலத்து மறைநாலு தமிழாகவே செய்தான், அவன்
கேழான மண நாறு கிளையான வரி வண்டு முகைகண்ட.........ர
சூழான நற வேறு மகிழ் வீசு குருகூரன், உள்ளன்பர் கீழ்
ஆழாதபடி நாலு பதம் ஏற அருள் கூரும் அடி பேணுவாம். 3

வாழி, வலம்புரி, தண்டு, எரி சக்கரம், வாள், அரி கைப் படையும்;
வாழி, நெடுஞ் சிலை; வாழி, அடுங் கணை; வாழி, மலர்ப் பதுமம்;
வாழி, தலம், புகழ்; வாழி, சவுந்தரி; வாழி, மலர்த்திருவும்;
வாழி, நலம் திகழ் பாடல்கள் ஏற்றுவர்; வாழி, தரித்தவரே. 4

வான் நாறு பெருஞ் சீர்த்தி வளர் குருகை, நம்பொருட்டு வந்து, தெய்வக்
கான் நாறு நறுந் துணர் வான் திருப்புளிக்கீழ் அமர்ந்து, நனி கருணை பூத்து,
தேன் நாறு தமிழ் மறைமுன் கிளந்தருளும் சிறுமுனிவன் செழு மெய்ஞ் ஞானப்
பால் நாறு பதகமலம் நமது பதக மலம் அறப் பழிச்சுவாமால். 5

(இராசகோபாலப் பிள்ளை)

எவன் சொல் வாய்மையது என்று அருமறை எடுத்து இயம்பும்,
எவன் கொல் சாநவிப்புடைக் கரம் உயர்த்தி மெய் இசைத்தான்,
எவன் பொன்ருப் பரஞ் சுடர் ஒரு கூறு என இயைவான்,
அவன் செம் மான் அடி அடைதும் நல் அருள்பெறற்பொருட்டே. 6

(இராசகோபாலப் பிள்ளை)

சிறப்புப் பாயிரம்

தொழுவார்தம் வினை தீர முற்கோலமாய் வேலை சூழ் பார் எயிற்று
உழுவானை நல் நாமம் ஒன்ருயினும் கற்று ஓர் உரு ஓதினர்,
வழுவாது சுரர் ஆவர்; நரராக, புள்ளாக, மாவாக, புன்
புழுவாக, ஒன்றில் பிறந்தாலும் நரகில் புகார்காணுமே. 2-1

கலியுக வியாதன் சொல்ல, கணபதி எழுது பாடல்
பொலிவுறு தமிழின் ஆருயிரம் என விருத்தம் போற்றி,
சலிவு அறு வில்லிபுத்தூர் இறைவனும் சார்வபூமன்
ஒலி கெழு மறையோர் கோமான் உயர்ந்தவர் உவப்பச் சொன்னன். 23-1

ஆதியாம் பருவம், மிரு சபா பருவம், ஆரணிய பருவம், விராடம்,
ஓதும் உத்தியோக பருவம், வீட்டுமர் உந்திடு பருவம், துரோணன்,
வீது சேர் பகுதி புதல்வனும் கர்னன், விகர்னன் பருவமும்,
. . . . 23-2

சந்திரன், புதன், குரு புருருவா, தம்பி ஆயு, வாழ் நகுடன், அலகு செய்
பைந் தொடைப் புய யயாதி, பூரு, நற் பரதன், அத்தி, வாழ் குருகுலத்திலே,
சந்தனுப் பெறும் சித்திர வீரியன் தரு திராட்டனும், தம்பி பாண்டுவும்,
மைந்தர் நூற்றுவரு . . . . வாதன்னிலே பீமன், பரீட்சித், சனமேயசய
[மன்னனே. 23-3

2. சம்பவச் சருக்கம்

அரிய கங்குலின், அன்னைதன் வடிவுகொண்டு, அலகை ஆகிய நங்கை,
பரிவு பொங்க வந்து, எடுத்து, அணைத்து, உவந்து, உளம் பரிந்து, உடன் பாராட்ட,
உருகு மாமுலைப் பாலுடன் அவள் உயிர் உண்டு, அமுும் முருகு ஆர் மெய்க்
கரிய கோவலன் செய்ய தாள் மலர்கள் என் கருத்தை விட்டு அகலாவே.
[கடவுள் வாழ்த்தாக முதலில் உள்ளது]

3. வாரணாவதச் சருக்கம்

அரு மறை முதல்வனை, ஆழி மாயனை,
கரு முகில் வண்ணனை, கமலக் கண்ணனை,
திருமகள் தலைவனை, தேவ தேவனை,—
இரு பத முளரிகள் இறைஞ்சி, ஏத்துவாம்.
[கடவுள் வாழ்த்தாக முதலில் உள்ளது]

4. வேத்திரகீயச் சருக்கம்

சீத நாள்மலர்க் கோயில் மேவு செந் திருவின் நாயகன், தேவ நாயகன்,
வேத நாயகன், பூத நாயகன், விரத நாயகன், விபுத நாயகன்,
போதகாதிபன் முதலை வாயிடைப் பொறை தளர்ந்து, முன் பொதுவிலே நினைந்து,
'ஆதிமூலமே!' என்ன, முன் வரும் ஆதி நாயகன்—அடி வணங்குவாம்.
[கடவுள் வாழ்த்தாக உள்ளது]

அன்னையும் தம்முனும் அறைந்த வாசகம்,
முன்னையின் மறை என, முடியில் சூடினன்;
மின்னையும் உடன் கொடுபோந்து, மேவு நீர்-
தன்னையும் கண்டு, அதில் துளைந்து, தங்கினர். 22-1
[அச்சுப் புத்தகங்களில் மட்டும் உள்ளது]

5. திரௌபதி மாலை இட்ட சருக்கம்

தண்டு சக்கரமும், சங்கும், சார்ங்கமும் தரித்தோன், வானில்
அண்டர்கள் முனிவர் போற்றும் அச்சுதன், அரவின்மீதே
கண் துயில் கருணை மாயன், கருட வாகனத்தில் ஏறும்
புண்டரீகக் கண்ணனைப் போற்றுவார் வினைகள் போமே.
[இரண்டு ஏடுகளில் கடவுள் வாழ்த்தாகக் காணப்பெற்றது]

குண்டலம் இலங்க, சங்கும் ஆழியும் குலவு காந்தி
மண்டலம் துதிக்கும் திங்கள் இரவிமேல் வடிவம் தூண்ட,
விண்தலத்து இலங்கு பீத அவுணனை வெறுத்து வீழ்த்த
புண்டரிகங்கள் பூத்த புயலினைப் போற்றி செய்வாம்.

[ஓர் ஏட்டில் மட்டும் உள்ளது]

மறை வழா முனிவர் நின்ற மரபினை நோக்கி, மன்னன்,
'இறை எனும் ஐவர் மாண்டார்; ஏந்திழைக்கு இனிமை கூர் நன்
முறைமை யாது?' என்ன, 'பொய்யார்; முந்துவர் ஐவர் என்னக்
குறைவிலது' என்ன விண்ணின் வாணியும் கூறக் கேட்டான். 1-1

வணங்கி நின் வாழ்த்தி முந்து வந்திலர் வந்து சேர்வர்
இணங்கி நும் கேண்மை கொள்வான் இச்சையால் யாகத்து ஈசன்
அணங்கினை அன்று வேள்வி அனலினில் அன்று அளித்தான்,
சுணங்கு அணி முலையினுளைச் சூட்டும் மென் தொடையல் என்றுன். 1-2

ஆக்கிய குமரர்தம்மை யாப்பு அவிழ்த்து ஆங்குப் போக்கி,
தாக்கிய சமரந்தன்னில், தருமனுர் பணியினுலே,
வீக்கிய கழற்கால் வீரன் வில்வலான் விசயன் மீள,
பூக் கமழ் அலங்கல் மாலை விஞ்சையன் போரில் தோற்றுன். 8-1

6. இந்திரப்பிரத்தச் சருக்கம்

வேதமும், வேதம் விளம்பு மெய்ப் பொருளும், அப் பொருள் விதங்களும், பஞ்ச
பூதமும், புலனும், புலன்களின் பயனும், அப் பயன் பொலிவுற நுகரும்
ஞாதமும், உலகம் படைத்து அளித்து அழித்து, ஞானமாய் அகிலமும் நிறைவுற்று,
ஆதியும் நடுவும் முடிவுமாய் நின்ற ஆதியான் அடி இணை பணிவாம்.

[கடவுள் வாழ்த்தாக முதலில் உள்ளது]

7. அருச்சுனன் தீர்த்த யாத்திரைச் சருக்கம்

அரு மா மறை உணராது அலமரு சேவடி அருளால்,
இரு மாநிலமிசை தோய்வுற இயல் ஆனிரை வழிபோய்,
திருமாநிகர் இடைமாதர்கள் திகழ்வேல் விழி மகிழ,
வரு மாதவன் விளையாடலை மறவாது எனது உளமே.

[இராசகோபாலப் பிள்ளை பதிப்பில் கடவுள் வாழ்த்து]

மா விந்தையும் நிலமங்கையும் மலர்மான் அடி வருட,
தாவும் அரவணைமேல் விழி துயிலும் தனி முதலை,
பூ உந்திய பொழில்சூழ் தரு பொற் சித்திரகூடக்
கோவிந்தனை அடி பன்முறை தொழுது, உட்களிகொண்டான். 18-1

[இராசகோபாலப் பிள்ளை பதிப்பில் மட்டும் உள்ளது]

ஆங்கப் பணவத்து உட்பொருள் அரி தாளிணை தொழுது
பாங்கர்ப் புது வெயில் வீசு பல் பரு மா மணி குயிலா,
ஓங்கிக் கிளர் பொலன் மண்டபம் ஒரு தன் பெயரால் அத்
தூங்கற் கரி நடை இந்திரசுதன் ஒன்று படைத்தான். 19-1

[இராசகோபாலப் பிள்ளை பதிப்பில் மட்டும் உள்ளது]

8. வசந்தகாலச் சருக்கம்

அரிய மா மறை அறைந்த தொல் அற நெறி அந்தணர் தமைக் காப்பான்,
விரிய நீடு தீ நெறி மறைக் கடை செலும் வெய்யரைச் செருப்பான், சீர்
தெரிய மா இரு ஞால மீ மிசை வரு திரு மலி புகழ் சாலும்
கரிய கோவலன், சேவடி அல்லன கருத்தினுக்கு இணங்காவே.
[இராசகோபாலப் பிள்ளை பதிப்பில் கடவுள் வாழ்த்து]

10. இராயசூயச் சருக்கம்

கொச்சை இடையர் மகளிருக்குக் கூத்துக் குனித்து, நவநீதப்
பிச்சை நுகரும் இவன், எமக்கு முன்னே பூசை பெறுவானும்!
சச்சை மறையின் முறை என்னும்? தருமன் புரிந்த மகம் என்னும்?
செச்சை வடி வேல் முடி அரசன் செங்கோல் என்னும்? திரு என்னும்? 113-1

இரங்கி எங்கணும் மோத, விஞ்சி எடுத்து வீசுவ எழு கடல்
தரங்கம் வந்து எதிர் மலைவ போன்றன, சண்ட வாயுவொடு ஒப்பன,
துரங்கமங்களில் வீரர் மேவிடு தும்பிமாமிசை வீரர்மேல்
உரம் கொள் வெஞ் சிலை வாளி தோள்களும் உருவ வன்பொடு உடற்றினர். 131-1

11. சூதுபோர்ச் சருக்கம்

ஞானம் ஆகிய பரம்பர அமிழ்தம் ஆய், நவிர் அறு மயக்கு ஆகி,
வானம் ஆய், உடன் வாயு ஆய், தேயு ஆய், வனமும் ஆய், மண் ஆகி,
தான மா மறை முறைமையின் பற்பல சராசரங்களும் ஆகி,
ஏனம் ஆய், இவை அனைத்தையும் மருப்பினால் ஏந்தினான் எனை ஆண்டோன்.
[கடவுள் வாழ்த்தாக முதலில் உள்ளது]

கண்ணிலான் இனிய புன்சொல் கழறலும், கங்கை தந்த
புண்ணியன் மனத்தின் ஓர்ந்து, போதமே அன்றி, வீணே
மண்ணிவிலிருந்து வாளா வஞ்சமே புரிந்து, மாறுய்ப்
பெண்ணையே பிறக்கணித்தல் பேதைமை என்றே பேசும். 199-1

12. அருச்சுனன் தவ நிலைச் சருக்கம்

அண்டருக்கு அமுதம் அன்னான், அவுணர்பால் அரி ஏறு ஒப்பான்,
தெண்திரைக்கு ஒருவன் நெஞ்சத் திருவினன், மருவினோர்பால்
புண்டரிகத்த பாதம் பொருத்துவன், புவனம் மூன்றும்
உண்டெனப் பூத்தோன் நாமம் இயற்றி, யான் உரைக்கலுற்றேன்.
[இராசகோபாலப் பிள்ளை பதிப்பில் கடவுள் வாழ்த்து]

மழை மத அருவிக்கிரி தரும் செங்கைக் கொங்கர்கோன் வக்கை வேந்தனைப்போல்
எழில் பொழிலிடமும் சூதமும் தழைப்ப, இனிய பேரிசையுடன் தோன்றி,
அழகுடன் மடவார் கண் எனப் புகல, ஆடவர் தலைக்கொளும் நறும் பூ
வழிகோடு வள்ளங்கள் பய்ன் எலாம் விருந்தோடு உண்டன வண்டினம் ஒருபால். 55-1

தகை உள அகத்தியன், புலத்தியன், தவ
வகை பெறு வசிட்டன், ஏழ் வசுக்கள், ஆதியர்,—
அகம் மகிழ்ந்து, உவகை கொள் அன்பினால், திரு
முகம் மலர்ந்து,—அரு மறை முனிவர், வாழ்த்தவே. 146-1

[அச்சுப் புத்தகத்தில் மட்டும் உள்ளது]

மைப்படு அவிழ் குழலின், இத மணிவாசிறைமையின்,
மெய்ப்படு அனையவள் நெஞ்சினில் வெகுளாமுனம் விதிக்க,
செய்ப் பேடொடு சங்கம் தரு கங்கைத் திருநாடன்,
அப் பேடிதன் உருவம்கொடு இருந்தான், அகம் நொந்தே. 163-1

13. நிவாத கவசர் காலகேயர் வதைச் சருக்கம்

செய்ய வாய், கரிய வாட்கண், சிற்றிடை, பெருந் தேர் அல்குல்,
துய்ய ஆய் மகள்தன் முன்றில் தொகு மருது இறுத்து, தாரு
வைய மீமிசை நட்டு, ஓர் புள் வகிர்ந்து, பொற்சிறைப் புள் ஊரும்
ஐயனே அன்றோ, தொல்லை அரு மறைக்கு இறுதியாவான்.

[இராசகோபாலப் பிள்ளை பதிப்பில் கடவுள் வாழ்த்து]

14. முண்டகச் சருக்கம்

மறைக்கு நாயகன், வரம்பு இலா ஞான மெய்ச் செல்வத்
துறைக்கு நாயகன், சுருதி சொல் மூவர் முத்தொழிலின்
நிறைக்கு நாயகன், ஆகிய நெடியவற் பிடரில்
பொறுக்கு நாதனை இகழ்ந்தனை; அறிவிலாய் போலும்! 30-1

[இராசகோபாலப் பிள்ளை பதிப்பில் மட்டும் உள்ளது]

15. சடாசுரன் வதைச் சருக்கம்

சகபதி தபோதனர்கள் தம்பியரொடும் போய்,
ககபதி தன் நாடு ஒரு கணத்திடை கலந்தே,
மகபதி முதற் கடவுள் வானவர் துதிக்கும்
அகமகிழ் அகத்தியனது ஆச்சிரமம் உற்றார். 24-1

அகத்தியனை அன்பொடு வணங்கி, அவன் அருளால்,
மகத்து இயலும் மா முனிவர், தங்கள் ஒரு மா நீர்ச்
செகத்து இயலும் நீதிகள் செலுத்திய செங்கோலார்,
நகத்து இயலும் நீள் வனம் எனைப் பல நடந்தார். 24-2

[இவை இரண்டும் இராசகோபாலப் பிள்ளை பதிப்பில் காணப்பெறுகின்றன]

மணிமான் வதைச் சருக்கம்

[சடாசுரன் வதைச் சருக்கத்தின் பின், 16-ஆம் சருக்கமாக அச்சுப் பிரதிகளில்உள்ளது]

'ஆழ் மறை துணிந்த பொருள் ஆகும் அவன்' என்னல்
ஊழ் உற உணர்ந்த முதியோர்கள் துணிபு அன்றோ?
கேழ் இல் பல அண்டம் முன் நுகர்ந்து, கிளர் செவ் வாய்
ஆழி மணி வண்ணன் அடி அடைகுதும் விரைந்தே!

[இராசகோபாலப் பிள்ளை பதிப்பில் கடவுள் வாழ்த்தாக உள்ளது]

அங்கு இவர் அமர்ந்து உறையும் நாளில், அணியோடும்
பொங்கி, ஒரு மா நதி புதுப் புனல் வர, போய்,
மங்கை, முனி மங்கையர்கள்தங்களொடு, வாசப்
பங்கய நெடுந் துறை விரும்பினள் படிந்தாள். 1

அப் புனலில் ஆர்தரு மணம் கமழ, அம் தண்
மெய்ப் பதும நாள் மலர் மிதந்து வர, மீதே
மைப் பதும வாள் விழி மடந்தை அது காணு,
கைப் பதும நாள்மலர் உற, கடிது எடுத்தாள். 2

எடுத்த மலர் கைக்கொடு, ஓர் இமைப்பில், மயில் அன்னாள்,
அடுத்த வய மாருதியை, அம் மலர் அவன் கைக்
கொடுத்து, 'இம்மலர் எங்குளது கூறுக!' என, அமரில்
தொடுத்த வய வாகை புனை தோன்றல் இவை சொல்வான்: 3

'முன்பும், உன் மலர்க் குழல்தனக்கு இ(ம்) மலர் முன்பால்
அன்புடன் இயக்கர்பதி நின்றும் அருள் செய்தேன்;
இன்புற, இமைப்பொழுதில், இன்றும் இது அளிப்பேன்;
துன்புறல், தழற் கடவுள் தந்த ஒரு தோகாய்! 4

'இந்த மலர் இந்திரபுரத்து எனினும், இன்று உன்
அந்தம்இல் கருங் குழல்தனக்கு அருள்கிலேனேல்,
முந்து அரவு உயர்த்தவன் முதல் பகை முடிக்கும்
மைந்துடையது அன்று, எனது வாகு கிரி' என்றான். 5

என்று இனிய வாசகம் உரைத்து, இகலின் என்றும்
வென்றி தரு தண்டு சிலை கொண்டு, விறலோடும்,
தன் துணைவர் ஒன்றும் உணராதபடி தானே
சென்றனன்—இடிம்பனை அடும் திறலின் மிக்கான். 6

குன்றம் ஓர் இரண்டு அவை எனக் குலவு தோளான்,
மன்றல் மலர் கொண்டுவரும் மா நதியின் வழியே
சென்று, பல யோசனைகள் திங்களொடு நாளும்
என்றும் வலம் வந்து அருள், இரத்னகிரி எய்தி, 7

மரகத மணிப் பணி செய் மாளிகைகள் ஒரு சார்;
அரி மணி அழுத்தியன ஆலயம்அது ஒரு சார்;
எரி மணி அழுத்தியன இல்லின் விதம் ஒரு சார்;
தருண மணி முத்தின் இயலும் சதனம் ஒரு சார்; 8

கின்னரர் பயிற்றும் எழு கீதம் எழும், ஒரு சார்;
மின்அனைய பாவையரும் விஞ்சையரும் ஒரு சார்;
அன்ன நடை மங்கையரும் ஆரணரும் ஒரு சார்;
மன்னும் மல் இயக்கரும் மடந்தையரும் ஒரு சார்; 9

குலுடைய மந்தி அயர்வுற்ற துயர் தீர,
காலுடை நெடுங் கடுவன், வார் கழை நறைத் தேன்,
மாலை வரி வண்டு இரிய மோதி, வழை இலையில்
கோலி, அதன் வாயிடை கொடுத்திடுவது ஒரு சார்; 10

கடக் கலுழி பாய் மத கதக் களிறும், அம் தண்
மடப் பிடிகளும், தமில் மணந்திடுவது ஒரு சார்;
அடர்த்து, அறுகும் ஆளியும், அதிர்ந்து, முழைதோறும்
புடைத்து, எதிர் மலைந்து, மிகு போர் புரிவது ஒரு சார்; 11

தன் தரளம் ஆதி நவரத்ந ஒளி தானே
என் திசை விளக்கும் வரையின் புதுமை எல்லாம்
கண்டு, உவகை கொண்டு, நனி கண் இணை களித்தான்—
புண்டரிக வாள் நிருதனைப் பொருது அழித்தான். 12

அக் கிரியினின்றும் இழிவுற்று, அளவு இல் செல்வம்
மிக்க அளகேசன் நகர் வெய்தின் விரைவு எய்தி,
தொக்க மணி வாயில் ஒரு நாலும் ஒருதானே
புக்கு, வட மேல் திசையில் நின்று, இது புரிந்தான்: 13

சீர்த் தாரைகள் உதிர, திசை மருவும் கரி சிதற,
கார்த் தாரைகள் கல் தாரைகள் உரும்ஏறுடு கக்க,
வார்த் தாழ் கடல் உலைய, கதிர் மணி வெள் வளை வாய் வைத்து,
ஆர்த்தான்—உக அந்தத்து எழும் அடல் மாருதம் அனையான். 14

அந்தத் தமரம் சென்று, உயர் அளகாபுரி உறைவோர்
சிந்தைத் துயர் உற, மற்றவர் செவியில் செறிவுறலும்,
'இந்தத் தொனி புரிவான் இவன் எவனோ?' என எவரும்
முந்திக் கரி, பரி, தேர், இவை கொண்டே, உடன் மொய்த்தார். 15

அவ் வேலையின், ஒரு விஞ்சையன், அஞ்சா வலி நெஞ்சன்,
வெவ் வேலையின் மிக ஓதை செய் மீளிக்கு எதிர் செல்லா,
கை வேலினன் இவன் ஆம் எனக் கண்டான், வெருக் கொண்டான்—
வை வேல் நிருதரின் வஞ்சமும் மா மாயையும் வல்லான். 16

'இம் மானவன் எழில் கூர் ரதிபதியைப் பொரும், எரி கண்,
கைம் மானவன் அருளும் களி மயிலோன் என, முதல் நாள்,
மைம் மான்விழி மொழிய, பொழில் வந்தோன்' எனக் கருதா,
விம்மா, 'நமர்க்கு உரையாடுதும்' என, வெய்தினின் மீண்டான். 17

'மேல்நாள், ஒரு மலர் காரணம், விறல் வாள் நிருதரை, மேல்
வான்நாடர்தம் உலகத்து அடல் மறலிக்கு இடும் மறவோன்;
ஆனு முனிவினன்; மீளவும் அணுகுற்றனன்' என்ன,
சேனுபதி மணிமானுழை வந்தே உரைசெய்தான். 18

அவன் வந்து, இது பகராத முன், அதி வேகமொடு அழலா,
சிவன் நண்பனது உயிர் நண்பனும், விழி செந் தழல் பொழிய,
'பவனன் தரு சிறு மானுடன் அவனோ, படி முதலாம்
புவனம் தொழு பெருமான் நகரிடை வந்து, இவை புரிவான்? 19

'தும்பிக் குலம், இரதத் தொகை, துரகத் திரள், காலாள்,
பம்பிப் பணை விதம் ஒலிட, பணி ஒலிட, நடவா,
நம்பிக்கு இனி உரையாடலம்; நாமே அவன் உடலம்
கம்பித்திடப் பொருது, ஆவியும் கவர்வோம்' எனக் கழறு, 20

'பன் ஆர் படை நம் சேனையின் பரவைக்கு அதிபதியர்
எண்ணாயிரம் இயக்கேசரும் இவன்மேல் எழுக!' என்ன,
தன் ஆர் மதிக் கவிகைத் திறல் சாலேந்திரன் முதலோர்,
விண்ணுடரும் வெருவ, செருப் புரிவான் விரைவுற்றார். 21

தாமப் புரிசையின் வாயில் எழும் தானையின் வெள்ளம்,
நேமிக்கிரி நெரியப் புரி நெடு வெள்ளம் நிகர்ப்ப,
தூமக் கனல் சொரி கண்ணினர் எண்ணாயிரர், தொலையாச்
சேமக் கவசியர், விமலனைத் திரை ஆழியின் சூழ்ந்தார். 22

உதிக்கும் சுடர் ஓர் ஆயிரம் உருக் கொண்டென ஒளி கூர்,
விதிக்கும் சமர் தொலையா விறல், விச்சாதர வெள்ளக்
கொதிக்கும் கடலிடை நின்றிடு குமரன், குரை கடல் முன்
மதிக்கும்படி நெடுமால் இடு மா மந்தரம் ஒத்தான். 23

ஊழ் வந்து, தன் எதிர் உந்தலும், உயர் வானுலகு உறுவான்
சூழ் வந்த பெருஞ் சேனையைத் தொலையா, அமர் பொருவான்
காழ் வந்த சுதாபாணியும், கானார் முனைக்கு என்றும்
வீழ் வந்த கொடுஞ் சாயகம் வில் நாணில் விசித்தான். 24

அக் காலையில், விறலோன் நிலை அறிவான், உயர் அறிவால்
தக்கார் புகழ் சாலேந்திரன், தன் சேனையைத் தகையா,
கைக் கார்முக வய மாருதி திருமுன் கடிது ஓடிப்
புக்கான், ஒரு தேர்மேல், நனி, இவை, நின்று, புகன்றான்: 25

'சிவனோ? திசை முகனோ? அதிர் திரை ஆழியில் துயில் கூர்-
பவனோ? பரு வரை மார்புறப் பகிரும் சுடர் வடி வேல்-
அவனோ? திறல் நரவாகனன் அளகாபுரி வருவோன்
எவனோ? உனது உயிர் சிந்துமுன், யார் நீ? உரை!' என்றான். 26

என்று அவன் உரையாடலும், இவன் இன்புற நகையா,
'முன் நாள் ஒரு மலர் காரணம் முனைவோர் உயிர் எல்லாம்
பொன்னுடர்தம் உலகு உய்த்திடு புகழோன், இகல் அடு போர்
மன் ஆகவம் மதியா விறல் வய மாருதி' என்றான். 27

'மரு விசு பொலந் தாமரை மலர் இன்னமும் ஒருகால்
தருவீர்எனில், உமது ஆர் உயிர் யானும் தருகுவனால்;
பொருவீர்எனில், யமனார்பதி புகுவீர், இனி' என்றான்—
ஒரு வீரரும் உவமைக்கு எதிர் இல்லா விறல் உரவோன். 28

என்று, வய மாருதி இசைத்த மொழி கேளா,
வென்றி திகழ் வாகை புனை விஞ்சையர் பிரானும்,—
குன்று அனைய தோள் இணை குலுங்க நகைசெய்யா,
கன்றினன், வெகுண்டு—கனல் காலும் இரு கண்ணான். 29

'தேன் இடறு வாச மிகு தெய்வ மலர் என்னே
மானுடர்கள் சூட வருவார்கள்! மதி அற்றோய்!
கானுடைய வாழ்க்கைபுரி நின் உயிர், கணத்து, என்
ஊன் இடறு வாளிகள்தமக்கு உணவு அளிப்பேன்,' 30

மற்று இவன் வெருண்டு, இவை உரைத்து, வரு சேனைக்
கொற்றவரை, நின்று, நனி கூவி, எதிர் ஏவி,
'சுற்றும் இகல் வெம் படைகள் தூவி, இகலோனைப்
பற்றுமின், விரைந்து இனி' எனப் பகரலுற்றான். 31

'பற்றும்' என வந்த படை வீரர் உயிர் எல்லாம்
கொற்றம் மிகு வெங் கணை குளிக்கும் வகை தொட்டே,
செற்றம் மிக நின்று எதிர் சிரித்தனன், உருத்தான்—
பற்றலர் புரம் பொடி படுத்தவனை அன்னான். 32

இவ்வகை பொழிந்த வடி வாளியின், இயக்கர்
மெய் வழி செழுங் குருதி வேலையிடை வீழ்ந்தார்;
அவ்வளவில், விஞ்சையர் அநேகர், அது காணா,
கை வரி வில் கொண்டு, அவன்மிசைக் கணை தொடுத்தார். 33

தொடுத்த சர வார் சிலை துணிந்து, நனி மேன்மேல்
விடுத்த படையும் பொர, வெருண்டு, முனைவாய் வந்து,
அடுத்தவர்கள் தோளும், அணி மார்பும், இரு தாளும்,
நடுத் தறிய, வெங் கணை உகைத்தனன், நகைத்தான். 34

மண்டு திறல் விஞ்சையர் மடிந்த செயல் யாவும்
கண்டு, சில சாரணர் கறங்கு அனைய தேர்மேல்
கொண்டு, கடல் என்ன, உரும் என்ன, நனி கொதியா,
தண்டு கொடு எதிர்ந்தனர்கள், தண்டதரனோடும். 35

வார் சிலை ஒழிந்து, விறல் மன்னு வய வாகைப்
போர் செய் கதை கொண்டு, எதிர் புகுந்து, பொரலுற்றான்—
பார் செய் பயன் அன்ன நிருபற்கு இளவல், பார்மேல்
கார் செய் உருமேறு உருமுடன் கனல்வதேபோல். 36

தண்டினொடு தண்டு எதிர் தகர்ப்ப, எழு பொறியும்,
மண்டு முடியோடு முடி மன்ன, எழு பொறியும்,
தின் திறல் வயப் பொருநர் செங் கண் உமிழ் பொறியும்,
அண்ட முழுதும் பொதுளி, மீது புகும், அப்பால். 37

மட்டு அவிழ் அலங்கல் மறவோனுடன் வயப் போர்
தட்டமர் புரிந்து, தனுவும் சிரமும் வேறா,
பட்டவர் எனைப் பலர்! படாதவர் விடாது, அன்று,
இட்டனர் புறம், திறல் இயக்கர் குலம் எல்லாம். 38

தொடிக் கரம் இழந்து, இரு துணைப் புயம் இழந்து, ஆங்கு
அடிப் பதம் இழந்து, அவயவங்கள் அடைவே போய்,
இடிக் குரலின் விஞ்சையர் எதிர்ந்து அயர, ஆங்கே
கொடிக் குடர் இழந்தனர், மருத்து உதவு கூற்றால். 39

அன்ன நிலை கண்டு, அடல் அரக்கரொடு இயக்கர்,
பின்னரும் எனைப் பலர், பிறங்கலை நிகர்க்கும்
கன்ன மதமா, இரத கற்கி, இகல் காலாள்,
மன்னு திறல் மானுட மடங்கலை வளைத்தார். 40

வளைத்து வய வெம் படைகள் வீசி, மறி கடல்போல்
உளைத்து, ஒருவர்போல் எவரும் உரும் என உருத்து,
புளைத்த ரத, மா புரவி, போதகம்மிசைப் போய்,
விளைத்தனர், பெருஞ் சமரம், விஞ்சையர்கள் எல்லாம். 41

தேர் அணியும் ,வெம் பொறி எனச் செறி புகர்க் கைக்
கார் அணியும், வாயு நிகர் கற்கி அணியும்,—போர்ப்
பேர் அணிகலன் தனி பிறங்கும் மணி மார்பன்—
தார் அணி எனத் தனது தண்டுகொடு, உடைத்தான். 42

நெரிந்தன ரதம், துளையும் நேமியுடன்; வேழம்
சரிந்தன, நெடுங் குடர் அரிந்து; தலை, தாள், போய்
முரிந்தன, பெரும் புரவி வெள்ளம்; முனைதோறும்
விரிந்தனர் உரம், கடவுள் விஞ்சையர்கள் மன்னே. 43

மீளி ஒரு தண்டுகொடு விண்டு, எதிர் வெகுண்டோர்
மூளை நிணம் வாய் உக முருக்குதலும் மொய்ம்பின்,
தாளுடை மருத்து எதிர் சரிக்கும்வகை எய்தும்
பூளை வனம் ஒத்தனர், பொரும் பொருநர் எல்லாம். 44

சிந்துரம், மணிக் கொடி கொள் தேர், புரவி, காலாள்,
அந்தகபுரத்து அணுகலுற்ற ஒழியப் போய்,
தம்தம புரத்து அணுகலுற்றன; சயப் போர்
மந்தர வரைப் புயனும் நின்றனன், மறத்தால். 45

இருவர் ஒரு நீள் நெறி இயங்கலர், தியங்கா,
வரி உழுவை கண்டு உடையும் மான்இனமதே போல்
வெருவி, உளம் நொந்து,—திறல் விஞ்சையர்கள் எல்லாம்—
பொரு இல் அளகாபுரி புகுந்தனர், விரைந்தே. 46

இஞ்சி, மதில் வாய், அரணம் யாவும், இகல் புரிவான்
அஞ்சினர்கள் விஞ்சையர் அடைந்தனர்கள்; அழகு ஆர்
மஞ்சு அனைய மேனி மணிமான் முனம் அடைந்தே,
துஞ்சினர் ஒழிந்தவர், அவன்-தொழுது சொன்னார். 47

அந் நிலை உணர்ந்து, மணிமானும் அவிர் சோதிப்
பொன் அசலம் ஒத்து உயர் புயத் துணை துடிப்ப,
மன்னு புருவச் சிலை வளைத்து, மழை முகில்போல்
மின் இலக நக்கு, உரும் எனத் தனி வெகுண்டான். 48

வானில் அவுணரை மோதி முனைதொறும் வாகை புனை மணிமானும், அச்
சேனை முதல் வரை வேகம் உற நனி சிறி உரை பல கூறினான்:
'ஆனிலனது உடல் விழ, அமரிடை ஆவி கவர்தர அஞ்சி, நம்
தானை, அரி எதிர் ஏகு கரி இனம் ஆகி, வெருவொடு சாய்வதே!' 49

என்று தனது எதிர் நின்றவரை இகழ்வுற்று, மொழி பல சொற்று, மல்-
குன்றம் என அமர் வென்றி தருவது ஓர் கும்ப மதகரி மேல்கொளா,
ஒன்றுபட உலகு இன்று பொடிபட, உந்து கரி, ரதம் முந்து, எனச்
சென்று, புடை வருகின்ற படையொடு, தெண்ட தரன் எதிர் மண்டினான். 50

மண்டி எதிர் வருகின்ற பொருநரை, வன்பு பெறு புய முன்பனும்,
கண்டு, முகிழ் நகை கொண்டு, தனது இரு கண்கள் கனல் உக நின்றபின்,
எண் திசையும் வளைகின்ற இமையவர், என்றின் ஒளி திகழ் குன்றில் நீர்
மொண்ட முகில் என, ஒன்று பட மிசை மூசி, எறி படை வீசவே, 51

வீசு படை ஒரு கோடி, விசைபட ஓடி மிசைவர, வீமனும்,
பாசதரன் எதிர் நீல மயில் ஒரு பாகன் நிகர் என வேகியா,
ஆசைதொறும் முகில் போல வளைபவர் ஆகம் இரு பிளவா, உளம்
கூசி அலமருமாறு, தரு வளர் கோடு கொடு நனி சாடினன். 52

ஆய பொழுது அளகாதிபதி உயிர் ஆய அணி மணிமான், விறல்
சீயம் என அவன்மீது பல படை சிந்தி, அமர் செய்து, முந்தினன்;
வாயு குமரனும், வேகமுடன் அவன் மார்பு கிழிதர, மோதினன்—
காய பலமொடு, தாயம் உற, ஒரு காயம், இரு கடகக் கையால். 53

முன்பு பெறு புய மொய்ம்பன், அவன் மருமத்தின் விசைபட மொத்தலும்,
என்பு, தசை, நிணம், இந்திரியம், வலி, என்ப இவை நிலை சிந்தியே,
துன்பம் உற, மனம் நொந்து, தளர்வொடு, துத்தி மணி உரகத்தின்மேல்
வன்பினுடன் உரும் உற்றது என, ஒளி மட்கி, வெருவுடன் உட்கினன். 54

'வஞ்சனை புரியும் மா மாயப் போர்க்கு அலால்
துஞ்சலன் இவன்' எனத் துணிந்து, சூழ்ச்சியால்,
நஞ்சு என வெகுண்டு, தன் நயனம் தீ உக,
விஞ்சையன், கதுமென விசும்பில் ஏறினன். 55

புகையொடு பரந்து, கால் பொங்க, மங்குல்கள்
வகைபட எழுந்து மா மாரி சிந்திட,
சிகை அனல் விண் எலாம் செகுக்க, மண் எலாம்
துகள்பட, திசை எலாம் சூழ்ந்து தோன்றினன். 56

அப்பொழுதினில் இகல் அரிப் பதாகனும்,
முப்புரம் சுடும் முகில் நிறத்து வாளி, முன்
ஒப்பு அற அருளுடன் உதவும் சோரிவாய்
வைப் பெரும் பகழி ஒன்று ஏவி, மாற்றினன். 57

அசை மணிக் கொடி கொள் தேர் அருக்கன்தன் எதிர்
நிசி எனப் பறந்தது, நீல மேனியான்
வசை அறக் குரிசிலுக்கு அருளும் வாளியால்—
திசை உறப் பரந்து, அமர் செய்த மாயையே. 58

விறல் புனை வீமனும், விஞ்சை வேந்தனும்,
நிறை புவி விசும்பின்மேல் நின்று, போர் செய்தார்—
எறும் வலி இராகவற்கு இளைய வார் சிலைச்
சிறுவனும், இந்திரசித்தும் என்னவே. 59

அந்த வஞ்சனை எலாம் அகன்று போனபின்,
விந்தம் ஒத்து உயர்ந்த தோள் வீமசேனன்மேல்,
சந்திரன்மிசை வரு தழல் அரா என,
சுந்தரன் வெகுண்டு, ஒரு சூலம் வீசினன். 60

சூலமும், தனதுமேல் சூலம் ஏவினேன்
கோலமும், பொடிபடக் கொதித்து, மீளியும்,
மூல பங்கய மறை முனிவன் வாளியை
ஆலமும் குளிர்வுற, அழல வீசினன். 61

பிரமன் வெஞ் சரம், வலி பெற்ற விஞ்சையன்
மருமம் எங்கணும் செறிந்து உருவ, மாழ்கியே,
உருமின் வெங் குரலுடன் ஒடுங்கி, மண்மிசைக்
கரு முகில் வீழ்ந்தென, கலங்கி வீழவே. 62

அந்தரன் அந்தரம் புக, அனந்தரம்
தந்திரத் தலைவரும் தளர்ந்து சாய்ந்தனர்;
உந்தினர், கரி, பரி, இரதம்; ஊர் புக,
முந்தின தமது உயிர் கொண்டு, முந்தினர். 63

விரி திரை உவரி நீர் என்ன, வெஞ் சினக்
கரி, பரி, ஆள், எலாம் கலந்து, உகுத்த மெய்ச்
சுரி பெருங் குருதியின் சுழல் யாற்றில் நின்று,
அரி மகன் அடல் அரி நாதம் செய்யவே, 64

இத் தலை வய வீமன் இகல் பொருது இவண் நின்றான்;
அத் தலை உயிர்போலும் அனுசனை எதிர் காணான்,
மொய்த்து அலைதொறும் ஏறு முழு மணி முரல் சங்கம்
செய்த்தலை துயில் நாடன் தேவியை வினவுற்றான். 65

மன்னவன் மொழி கேளா, மான் மதர் விழி மானும்,
'நல் நதிதனில் இன்று ஓர் நறை மலரது காணா,
''இன்னமும் ஒரு கால் நீ இம் மலர் கொணர்க!'' என்றேன்;
அன்னவன் விசை சென்றான், அளகை நல் நகர்' என்றாள். 66

மன்றல் செய் குழலாள்தன் வாசகம் எனும் நஞ்சால்,
பொன்றினன் என, மன்னன் புலம்பிய பொழுது, அன்பால்,
ஒன்றிய முனி ரோமன் உரை எனும் அமுதாலே,
துன்றிய துனி தீராச் சோகமொடு உரை செய்வான்: 67

' ''கூற்றுவன் நிகர் நாகக் கொடியவன் முதலாயோர்
நூற்றுவரையும் யானே நூறி, விண் உலகின்மேல்
ஏற்றும் அவ் அளவும், யான், இன் பயம் நுகரேன்'' என்று,
ஆற்றுதி உயிர், ஐயா! அம் மொழி பழுதாமோ? 68

'துனை வரு கடல் ஆடை சூழ்வரும் எழு பூவோ,
நனை கெழும் ஒரு பூவோ, நன்று?' என, நகை செய்யா,
'உனை ஒருவனையும் யான் உளன்எனின், ஒருவேனுக்கு
அனைவரும் உளர்; யானும், ஆர் உயிர் உளன் அம்மா! 69

'முன் செய் வெவ் வினையாலோ, முடிவு இல் நல் வினையாலோ,
மின் செய்த கழலான் அவ் விசயனும் அகல்வுற்றான்?
பொன் செய்த முடியானும் போயினன்; இனி, நான் இங்கு
என் செய்வது?' என, மன்னன் முனி அடி இணை வீழ்ந்தான். 70

'அஞ்சலை! உரவோனும் ஆர் உயிர் அழிவு இல்லான்;
விஞ்சையரொடும் வெம் போர் விளைந்தது, அங்கு ஒரு கோடி;
வஞ்சனை மணிமான் நம் மாருதி விடும் அம்பால்,
துஞ்சினன்; அவன் மேலும் துனி வரும் இனி மாதோ. 71

'இவன்மிசை இடையூறு ஒன்று எய்துறுவதன் முன் யாம்
நவ நிதிகளின் நாதன் நல் நகர் உற வேண்டும்;
கவர் எயிறு உள பேழ் வாய்க் கடோற்கசன் வருமாறு, இங்கு,
அவனிப! நினை' என்றான்; அரசனும் நினைவுற்றான். 72

புந்தி செய்வதன் முன்னம், புதல்வனும், ஒரு தேர்மேல்
வந்தனன், விரைவோடும்; வணங்கினன், இரு தாள்மேல்;
'எந்தை! சொல்; அடி நாயேன் பணிவிடை எது?' என்றான்;
தந்தையும் நிருதன்தன் தாதைதன் நிலை சொன்னான். 73

அக் கணம் அது கேளா, அவர் அனைவரையும் கொண்டு,
'இக்கணம், இடையூறு ஆம்; எழும், எழும், எழும்' என்னா,
முக்கணன் உயிர் நண்பன் வாழ்தரும் மூதூர்வாய்
திக்கு உற, நெடு வானில் சென்றனன், ஒரு தேர்மேல். 74

சென்று ஒரு நொடி வேலை, சிறுவனும், மற வீமன்
நின்று அமர் புரி வெம் போர் நிலம் அணுகுறும் முன்னம்,
வென்றி கொள் உரவோனும், வேந்தனை எதிர் கொள்ளா,
மன்றல் கொள் மலர் தூவி, வணங்கினன், இரு தாள்மேல். 75

'சதித்தனை; சதி செய்தாய்; தம்பியும் அலை; வாளா
வதைத்தனை, மணிமான்தன் மன்உயிர்தனை மன்னா;
நிதித் தலைவனும், நீடும் சேனையும், இனி நின்மேல்
கொதித்து எழும்; முதல் நாளின் கோபமும் உளது அந்தோ! 76

பொற்றொடி மொழியால் இப் போது ஒரு பொருள் ஆக்கி,
செற்றனை, சிவன் நண்பன் சேனையை, நீ!' என்னா,
கொற்றவன் இளையான்மேல் கொதித்தனன் மொழிபோது, அங்கு
உற்றதை உரைசெய்வான் ஓடினன், ஒரு தூதன். 77

அழுது அறல் குதிபாயும் கண்ணினன், அயில் அம்பால்
உழுது உடல் முழுது எல்லாம் ஊனுடன் உகு புண்ணீர்
வழிதர, மனம் எல்லாம் மறுகுற, இறை பொன்-தாள்
தொழுதனன்; இயல்பு எல்லாம் துணிவுறும்வகை சொன்னான். 78

அழுங்கினன் மன்னன், நல் அறிவும் ஆவியும்;
மழுங்கினன், வடிவமும் முடியும்; வல் விடம்
விழுங்கினன் என, நனி வெகுண்டு, நெஞ்சு உறப்
புழுங்கினன்; இவை இவை புகறல் மேயினன்; 79

'ஒருவனும் மானுடன்! ஓதை மா நகர்
வருவனும்! விறல் மணிமானொடும் சமர்
பொருவனும்! அவன் உயிர் பொன்ற வென்று, இடர்
தருவனும்! என் பெயர் தனதன் ஆகுமாம்! 80

'அடுப்பனும் அளகையை, அறிவு இல் மானுடன்!
தொடுப்பனும் பொரு சரம்! சூழ்ந்த சேனையைப்
படுப்பனும்! அதுகொடு பதுமத்தன்னை வந்து,
எடுப்பனும்! என் பெயர் இராச ராசனும்! 81

'இந்திரன் அல்லனும்; ஈசன் அல்லனும்;
சந்திரன் அல்லனும்; தபனன் அல்லனும்;
வந்து, ஒரு வலி இலா மானுடன் கொலாம்,
கந்தருவரை எலாம் களத்தில் நூறுவான்! 82

'வென்ற கோச் சித்தரும், விஞ்சை வேந்தரும்,
நின்ற கின்னரரும், வாள் நிருதரும், புடை
துன்று சாரணர்களும், சூழ்மின், மொய்ம்பனே!'
என்றுகொண்டு, எழுந்தனன், இயக்கர் தம்பிரான். 83

உருத்திரசேனன் அப்பொழுது உணர்ந்து, தன்
கருத்தொடு தாதை பொற் கழல் வணங்கியே,
மருத்து அருள்பவன் வரலாறும், மற்று அவன்
திருத்தகு துணைவர்தம் செயலும், கூறுவான்: 84

'எந்தை! கேள்: இவனை மானுடன் என்று எண்ணலை;
முந்தை முப்புரம் பொடி படுத்த மூர்த்திதன்
சிந்தையால், ''ஐவர் இந்திரரைச் செனம்'' என,
வந்தனர்; நிலமகள் வருத்தம் மாற்றுவான். 85

'தருமன் என்பவன் இவன் தமையன்; தம்பியும்
வரி சிலை விசயன் என்று ஒருவன்; மற்று அவன்
புரி திறல் அசுரரைப் பொருது, அங்கு இந்திரன்
திரு அமர் உலகு எலாம் திருத்தி வைகினான். 86

'வேடமோ மானுடம்; வெகுண்டபோது அலால்
ஆடவர் பெருமையை அறியல் ஆகுமோ?
நாடிய சிறு குறள் ஒன்று,—நம்ப! கேள்—
நீடிய முகடு உற நிமிர்ந்தது இல்லையோ? 87

'மற்று உள வரை எலாம் நடுங்க, வார் பிறைக்
கற்றை அம் சடையவன் கயிலை மாக் கிரி
உற்று, உடன் எடுத்தவன் உயிரும், வாழ்க்கையும்,
செற்றவன் மனிதனோ? தேவனோ?—ஐயா! 88

'மட்டு அவிழ் தொடை மணிமாலை ஓர் முனி,
''ஒட்டிய வரி சிலை மனிதனால் உயிர்
பட்டு அழிகுவை'' எனப் பகர்ந்து, சாபம் அன்று
இட்டதும் உணர்ந்து, அவற்கு இரங்கல், எந்தை, நீ! 89

'''அருத்தி ஏது'' என்று அவற்கு அருளி, ஐய! இங்கு
இருத்தியேல், வாழ்வும் இன் உயிரும் எய்தலாம்;
திருத்திய சேனையும் நீயும் சென்று, மேல்
உறுத்தியேல், உறு பயன் ஒன்றும் இல்லையால்.' 90

என்று இவை திருமகன் இயம்பி, ஏத்தவும்,
நின்றிலன்; 'எனது உயிர் நேய நண்பனைக்
கொன்றவன்தன் உயிர் கொள்வன் யான்' எனச்
சென்றனன், புட்பகத் தேரின்மீதுஅரோ. 91

மண் எலாம், இரதமும், களிறும், வாசியும்;
விண் எலாம், விமானமும் விபுதர் ஈட்டமும்;
பண் எலாம் முரல்வன, பணையின் குப்பையும்;
எண்ணலாம் ஆவதோ, இயக்கர் சேனையே? 92

விண்தலம் உற வரு சேனை வேலையும்,
மண்தலம் உற எழு மகர வாரிபோல்
என் திசை உறப் பரந்து எழுந்த சேனையும்,
கண்டனன்,—கண்ணுறக் கருணைக் கண்ணனே. 93

உணங்கினன், உடலமும், உணர்வும், ஆவியும்;
பிணங்கினன், இளைஞனை; பேதை பங்கனோடு
இணங்கினன் புகழ் எலாம் ஏத்தி, நெஞ்சுற
வணங்கினன்;—மணி முடி மன்னர் மன்னனே. 94

'அனகனே, அமலனே, அளகை வேந்தனே,
தனதனே, சங்கரன்தன் சகாயனே,
புனிதனே, குபேரனே, புலத்தியன் குல
செனிதனே, செல்வனே, தேவ தேவனே! 95

'வெறுப்பதோ விளைந்தது; மிகையது ஆயினும்,
மறுப்பதோ, என் மொழி? மாறுகொண்டு எதிர்
செறுப்பதோ? இளையவர் செய்த தீமைகள்
பொறுப்பதே பெரும் புகழ்;—புனித மூர்த்தியே!' 96

என இவன் இவை பகர்ந்து, இசைய ஏத்தலும்,
முனிவொடு வயிரமும் முரணும் மாறியே,
மனன் உற மகிழ்ந்து, எதிர் வந்து, மார்புற,
தனதனும், தருமனைத் தழீஇக் கொண்டான்அரோ. 97

'நிலத்து இயல் தண்ணளி நிருப! நீ மதிக்
குலத்து இயலுடன் வரு குமரன் ஆதலால்,
சலத்து இயல் தரு முரண் தணிந்தென், யான்' எனப்
புலத்தியன் மகன் மகன் புகன்று, போற்றினன். 98

'என் நகர், நின் நகர், என்று வேறு இலை;
நின் நகர், இது; முதல் நீங்கள் வாழ்வுறும்
தொல் நகர் எனது' எனத் துணைவர்தம்மொடு
மன்னனைத் தன் நகர் கொண்டு மன்னினன். 99

திருத்தகு நகரியும், சிறப்பும், செல்வமும்,
மருத் தகு கற்பக வனமும், வாவியும்,
குருத் தகு மணிகளின் குழாமும், கோயிலும்,
கருத்துற மகிழ்ந்து, கண் களிப்பக் காணவே, 100

காட்டினான்; தன் மனக் கருணை வெள்ள நீர்
ஆட்டினான்; நன்கலத்து அமுதம் அன்புடன்
ஊட்டினான்; உகந்து, உபசரித்துச் செங் கையால்
நீட்டினான், ஆடையும் நிதிகள் யாவுமே. 101

'அத்தினபுரிதனக்கு அதிப! நீ வர
இத் தினம் என் தவப் பயன் இருந்தவா!
நித்தனை, எனது உயிர் நேய நண்பினால்,
ஒத்தனை' என, இவை உரை செய்தான்அரோ: 102

'நெருநல் இந்திரபுரத்தில் இந்திரனும், யாமும், நீடு அவை இருந்த பின்பு,
உருநலம் திகழும் விசயன் என்ன அவன் ஒருவன் எய்துதலும், அவனை, ''இத்
திரு நலம் புதிய செம்மல் யாவன்?'' என, மற்று அவன் செயலும், வெற்றியும்,
குருகுலம் பெறு குலேசன் என்பதுவும், நின்ற வானவர்கள் கூறினர். 103

'அந்த விண்ணுலகின் நின்று நின் துணைவன் அமரர் சூழ வர, நாளையே
இந்த மண் உலகும் நீயும் வாழ்வு பெற இந்திரன்தனுடன் எய்துமால்;
எந்த மண் உலகும் நின்னது ஆகும்; இடருற்று இரங்கல்' என, மகிழ்வினில்
கந்த வண்ண மலகும் கொடுத்து, விடை நல்கினான், அளகை காவலன். 104

'ஐய! நின்னை அறியாமல், நின் நகரில் அணுகினன், சிறுவன்; ஆதலின்,
செய்த தீமைகள் பொறுத்தி; ஒன்றும் நனி திருவுளத்திடை கொளேல்' எனா,
மொய் கொள் தாம முடி உற வணங்கி, முடி மன்னர் மன்னன், இளையோரொடும்
மை தவழ்ந்து உலவு மாட நீள் புரிசை ஞாயில் வாயில்தனில் எய்தினான். 105

மாசு இலாத முடி மன்னர் மன்னனுடன் வந்த மா முனிவரர்க்கு எலாம்
ஏசு இலா நெறியின் எண்-இரண்டு வகை ஆய பூசைகள் இயற்றியே,
காசு இலா மணியும், ஆடையும், கலனும், நல்க, மல்கி வளர் செல்வனுக்கு
ஆசி கூறி, உடனே தபோவனம் அடங்கினார், அவர் அடங்கவே. 106

குந்தி மைந்தர் ஒரு நால்வரும், புதிய கொடி மருங்குல் மட வல்லியும்,
சிந்தை அன்புடைய முனியும், வாள் நிருத சேகரன்தனது தேரின்மேல்,
பந்தி பந்தி பதினாயிரம் பதின் மடங்கு கூளிகள் பரிக்க, வான்
உந்தி, முன் பயிலும் நந்திசேனன் வனம் ஒரு நொடிப் பொழுதில் எய்தினர். 107

எய்தி, அந்த முனி செய்ய தாள் மலர் மனம் செய்து, அன்புடன் இறைஞ்சியே,
செய்தி யாவும் அவனுக்கு நண்பொடு உரைசெய்து, சூழ்வர இருந்தபின்,
வெய்தின் வந்து, அடல் அரக்கர் நாயகன், விபத்தினுக்கு உதவி ஆனதும்,
கொய்து இலங்கு வடி வாளினான் விறலும், யாவும் மேன்மையொடு கூறினாள். 108

'வெங் கராவின் முழை வாய் புகுந்து, அலறி, வேழம், ''மூலம்'' என, விரைவினில்,
பொங்கு அரா-அணை துறந்து வந்து, எதிர் புரந்த புண்ணியனை ஒக்கவே,
தங்கு அராபதம் நெருங்கு தொங்கல் அணி தாம வேல் அடல் அரக்க! நீ
அங்கராகம் அணி ஆர மார்ப! நினது ஐயன் ஆர் உயிர் அளித்தியே!' 109

தொடை கொடுத்து,அளகை நாதன் அன்று உதவு துகில் கொடுத்து, மதி முத்தவெண்
குடை கொடுத்து, நவ மணி கொடுத்து, அமரில் என்றும் வென்றி தரு கொற்ற வெம்
படை கொடுத்து, அடல் அரக்கனுக்கு உயர் பதம் கொடுத்து, மிகு பரிவுடன்
விடை கொடுத்தனன், அனந்தரம்—சமர வீர வாகை புனை வேலினான். 110

வணங்கி, அன்புடன் மகிழ்ந்து, மன்னரை வலம் புரிந்து, மனனம் செயா,
நிணம் கமழ்ந்து ஒழுகி வழிய வாள் எயிறு நிலவு எழும் புழை கொள் வாயினன்,
துணங்கை கொண்டு அலகை கோடி வானின்மிசை துள்ளி ஊரும் இரதத்தின்மேல்,
இணங்கி, மீளவும், விநாழிகைப் பொழுதினில், இடிம்ப வனம் எய்தினன். 111

16. நச்சுப் பொய்கைச் சருக்கம்

பொன் பூமியினில் அரமாதர் போற்றப் பள்ளியினில் பொலியும்
மின் பூண் அணியும் தேர் விசயன் விபுதர் வேந்தன் விடைகொண்டு,
அன்பே உருவாம் ஆங்கு அறனை அடியில் தாழ, அவனும் இவன்-
தன் பேர் ஆகமுறத் தழுவி, தளர்ச்சி நீங்கித் தழைக்கின்றான். 17-1

[ஒரு பிரதியில் காணப்பெற்றது.]

'உற்றவர் உடன்பிறந்தவர் இருக்கவே,
சிற்றவை மைந்தனை எழுப்பும் செம்மை சேர்
கொற்றவ! மகிழ்ந்தனம்; குமரர் மூவரும்
பெற்று உயிர் வாழ்தரப் பிழைப்பிப்பாய்' என, 66-1

ஒழிந்தவர் மூவர்தம் செவியின் உள்ளுற
மொழிந்தனன் மந்திரம்; மொழியும் முன்னமே,
எழுந்தனர், தம்பியர்; ஏம்பலோடுமே
தொழும்தொறும் தொழும்தொறும் களி துளங்கினார். 66-2

17. துருவாச முனிச் சருக்கம்

தன்னை உணரா ஒத்து அரற்ற, தடந் தாமரைகள் சிவப்பு ஏற,
மின்னை அனையாளொடு கான் செல் விற் சேவகனை, கௌசலையாம்
அன்னை புரிந்த தவப்பயனை, யாரேயாக அடி பணிந்தார்
பின்னை உலகின் ஒரு நாளும் பிறவார்; வினையின் இறவாரே.

[இராசகோபாலப் பிள்ளை பதிப்பில் கடவுள் வாழ்த்து]

18. பழம் பொருந்து சருக்கம்

திரு மறு மார்பனை, செய்ய வாயனை,
கரு முகில் வண்ணனை கமலக் கண்ணனை,
திருமகள் தலைவனை, தேவதேவனை,
இரு பத முளரிகள் இறைஞ்சி ஏத்துவாம்.

[ஏட்டுப் பிரதிகள் ஒரு சிலவற்றில் கடவுள் வாழ்த்தாக உள்ளது. 'அரு மறை முதல்வனை' என்று வாரணாவதச் சருக்கத் தொடக்கத்தில் சில ஏடுகளில் காணும் பாடலின் வேற்று வடிவம் இது.]

சோகம் தீர, தீமை எலாம் துறப்ப, மறந்து நினைந்தோர்க்குப்
போகம் வேண்டின், பொருள் வேண்டின், புகழே வேண்டின், பொன் மலர் சேர்
நாகம் வேண்டின், கதி வேண்டின், நல்க அறிந்து, ஈண்டு இனி மீளத்
தேகம் வேண்டின், தர அறியாத் திருமால் அடிகள் சிந்திப்பாம்.

[இராசகோபாலப் பிள்ளை பதிப்பில் கடவுள் வாழ்த்து]

['அங்கையின் நேமி' எனத் தொடங்கும் நாடு கரந்துறை சருக்கக் கடவுள் வாழ்த்து, சில பிரதிகளில் இங்கே தரப்பட்டிருக்கிறது]

19. நாடு கரந்துறை சருக்கம்

அம் கையில் நேமி, சங்கு, வாள், தண்டோடு அடல் சராசனம் தரித்தருள்வோன்,
சங்கை இல் மறைகள் ஆயிரங்களுக்கும் சாற்றுதற்கு அரிய தத்துவத்தோன்,
கங்கையின் அறலும், காளியன் முடியும், காளிந்திக் கரையுமே, கமழும்
பங்கய மலர்கள், இரவும் நன் பகலும், பணிந்து, பாடுதும், அவன் புகழே.

[கடவுள் வாழ்த்தாக உள்ளது]

20. மற் போர்ச் சருக்கம்

பங்கயனை உள்ளிட்ட பற்பல உயிர்த் தொகை பிற முன் படைத்துக் காத்துச்
சங்கை அற நீத்துவரு பெரு நீத்தம்தனில் ஆலின் தமாலம் மேவி,
நங்கை செழு மலர் மங்கை நனி மகிழ, மீட்டும் அவை நல்கும் அண்ணல்
கங்கையொடு பழமறையும் துணர்த் துளவும் கமழ் கழற் கால் கருத்துள் வைப்பாம்.

[இராச கோபாலப் பிள்ளை பதிப்பில் கடவுள் வாழ்த்து]

ஒருவருக்கு ஒருவர் கிட்டி முட்டியும், உயர்ந்த வானில்
வெருவர, வெரினில் கட்டி வீழ்த்தியும், கால்கள் பற்றித்
திரிதரச் சுழற்றிப் பாரில் அறைந்தும், மெய் சேர்ந்து கட்டி,
உரும் இடித்தென்னக் கையால் குத்துவர், உதைப்பர் மாதோ. 12-1

உரத்தினை நெரிப்பர், செய்ய வாயினில் உதிரம் சோர,
கரத்தினில் அடிப்பர்; வெய்ய காலினால் உதைப்பர்; கல்லின்
சிரத்தினில் எறிவர்; மூளை சிதறிட, அரிக்கும் நீண்ட
மரத்தினில் புடைப்பர்; சூழ வலம் இடம் வருவர் மாதோ. 12-2

21. கீசகன் வதைச் சருக்கம்

திரு வளர் புதுவைக் கோதை தேன் குழல் பூத்த மாலை,
உரு வளர் பவளம் பூத்த ஒண் தமிழ் மாலை, வேய்ந்த
பெருவளர் வரைத்தோள் மாலைப் பேணி, செம் பதுமத் தாள்கள்,
கருவளர் மாலை வீப்பான், கருத்தினில் இருத்தல் செய்வாம்.

[இராச கோபாலப் பிள்ளை பதிப்பில் கடவுள் வாழ்த்து]

கருமுகில் அனைய வடிவமும், செய்ய கண் மலர்க் கருணையின் எழிலும்,
திரு வளர் மார்பும், பங்கயக் கரமும், திரு நடம் புரியும் இங்கிதமும்,
மரு வளர் வெண்ணெய் அருந்திய வாயும், மகிழ்ந்திடு முறுவலின் இயல்பும்,
இருபொழுதினும் என் இதயம் உற்று ஆளும் தாளும், எந் நாளும் நான் மறவேன்.

[ஏட்டுப் பிரதி ஒன்றில் கடவுள் வாழ்த்தாக உள்ளது]

'இந்திரன் நகர்ப் பாவை கொலோ? மடல் ஏந்து பங்கயத் தேவிகொலோ? இயல்
சந்தம் ஆரும் தட வரைத் தையலோ? தாரணிக்குள் வரும் தனித் தெய்வமோ?
முந்து அரா உறை பாதலம்தன்னில் வாழ் மோகினிக் குயிலோ? முரல்கின்றிடும்
உந்து நீர் அரமங்கை கொலோ? எழில் ஓவியத்து ஒளியோ?' என உன்னினன். 3-1

சீரிய கங்கன் அன்று உரைத்த செம் மொழி,
'பாரியது ஆம்' எனப் பலாயனன் கொளா,
வீரியம் அகத்துளே நிறுத்தும் வேலையில்
கூரிய விழியினள் அழுது கூறுவாள்: 34-1

'வாச மென் குழல் மாது நல்லாய்! உனை
ஆசை கொண்டவர் இப்படி ஆவர் காண்;
ஏசு இல் மங்கை நல்லாய்! இனி ஏகு' என,
மாசு இலானும் மடைப்பள்ளி எய்தினன். 84-1

பழுதுடைப் பெரும் பாதகன் மாண்டமை
தொழுது உரைத்து, சுதேட்டிணைதன்னொடும்
அழுது அரற்றி, அயல் அறியாவகை
எழு தழற்கண் இடுவதற்கு எண்ணினர். 91-1

22. நிரை மீட்சிச் சருக்கம்

என்ற போது அவன் பயந்தவட்கு இயம்பியது உரைப்ப,
நின்ற பேடியை நிரைவனை தழுவி, 'நீ நேரில்,
வென்று போர்முனை அரசரை, விடலை வெய்து ஈண்டும்;
துன்று தாரினாய்!' என வியந்து, இன்னவை சொன்னாள். 31-1

'அங்கர் பூபனை, வீடுமன், விதுரன், ஆசிரியன்,
பொங்கு அரா உயர் துவசனை, புறமிடப் பொருது,
திங்கள் தொல் குலத் தனஞ்செயன் அதிசயித்திட, யான்
இங்கு மீள்குவன் நிரையுடன்' என்று இயம்பிடவும். 31-2

சொன்ன வார்த்தை அப் பற்குனற்கு அதிசயம் தோன்ற
'இன்ன நாம் பொருது இன் நிரை மீட்பதும் எளிமை;
மன்னு மா மனை அகத்திருந்து உரைக்கலாம்; வயப்போர்
துன்னினால் அரிது' என்றனள், உத்தரை தோழி. 31-3

தேரும் யானையும் புரவியும் படைஞரும் தேற்றி,
பாரில் ஓர் இடம் இன்றியே நெருங்கு தன் படையைப்
பேர்வு இலாமலே அணி வகுத்தனன், பேடி
மேரு என்னலாம் தேரினை விரைவினில் செலுத்த. 33-1

25. வாசுதேவனைப் படைத் துணை அழைத்த சருக்கம்

அரா அணை துறந்து போந்து, அன்று அசோதை கண் களிப்ப, நீடு
தராதலம் விளங்க, வெண்ணெய்த் தாழி சூழ்தர, நின்று ஆடி,
குரா மணம் கமழும் கூந்தல் கோவியர் குரவை கொண்ட
புராதனன்தனையே ஏத்தும் புனிதர் தாள் போற்றி செய்வாம்.
[அச்சுப் பிரதிகளில் கடவுள் வாழ்த்தாக உள்ளது]

பராவ அரு மறைகள் ஓதும் பரம மா ஞான மூர்த்தி,
கராசலம் மூலம் என்ன, கராவினைத் தடிந்த சோதி,
தராதலம் முதலாயுள்ள சகத்து உயிர் அனைத்தும் காக்க
அரா-அணைத் துயிலும் நீத்தான் அடித்தலம் முடிக்கொள்வாமே.

[ஏட்டுப் பிரதிகள் ஒரு சிலவற்றில் கடவுள் வாழ்த்தாக உள்ளது. வேறு சில ஏடுகளில் இதனை அடுத்து வரும் சஞ்சயன் தூதுச் சருக்கத்தின் வாழ்த்தாகவும் காணப்படுகிறது]

26. சஞ்சயன் தூதுச் சருக்கம்

ஒரு குலத்திடை அவதரித்து, அணி பொதுவர் சிற்குடில் உறைவது ஓர்
மரகதப் புயல்தனை எடுத்து ஒரு மகவு எனத் தனது இறுதியால்
அரிது பற்றிய அலகை செற்றிட, அணி முலைப் பயம் நுகர்வுறு,
மருது இடைத் தவழ் பொரு இல் வித்தகன் மலர் அடித்துணை வாழ்த்துவாம்.
[கடவுள் வாழ்த்தாக உள்ளது]

இரதம், யானை, துரகம், பதாதி, இவை என்ன, யாவரும் அறிவுறுக்
கரதலக் கதை குழவியாக, அமர்க் களம் அரைத்திடும் அம்மியாய்,
பரத நாடக விதம் புரிந்த சய மான பைங் கொடி கொங்கையில்,
சரதமாக அணி செய்ய சாந்தமும் எனத் தரிப்பன்; இது சரதமே. 16-1

அன்று சொற்றிடு சபதம் ஆம்படி அரவுயர்த்தவன் ஆதியாய்ச்
சென்று சென்று வரத் தனித் தனி சிரங்கள் என்ன ஒடுக்கியே,
கொன்று சோரி குடித்தும் அவ்வவர் குடர்கள் தோள் அணி கொள்ளுவேன்,
நன்று முப்புரம் எரித்த சேவகன் என்ன நன் சமரத்திலே. 16-2
[மேற் குறித்தன இரண்டும் ஒரு பிரதியில் காணப்பெற்றன]

27. கிருட்டிணன் தூதுச் சருக்கம்

['அம் கையில் நேமி' எனத் தொடங்கும் கடவுள் வாழ்த்து சில பிரதிகளில் உள்ளது. இப் பாடலே 'நாடு கரந்துறை சருக்கம்', 'பழம் பொருந்து சருக்கம்' ஆகிய வற்றிற்கு உரிய வாழ்த்தாக வேறு சில பிரதிகளில் உள்ளன. இதனை 'நாடு கரந் துறை சருக்கத்தில் காண்க]

'அரவு உயர்த்தோனுடன் மறு சூது ஆடி, நீர் வென்ற அந் நாள், அவன்தான் [சொன்ன
விரதமொழி தவிராமல், வெங் கானம் போய் மீண்டீர்; வெய்யோன் உங்கள்
குரு நிலத்தில் பாதிஇனிக் கொடாது இருந்தால், அங்கு அவனைக் கொன்று போரில்,
இரு நிலத்தை ஆள, இனித் துணிவதே கடன்' என்றான், எம்பிரானே. 6-1

கோது இலான் இந்த மொழி கூறுதலும் மா மாயன் கூறலுற்றான்:
'மோது அமருக்கு இளைத்து, நீர் மொய்த்த பெருங் கானகத்தே முடுகிச் சென்றால்,
பூதலத்தோர் ஏசாரோ? புகன்ற பெரு வஞ்சினமும் பொய்த்திடாதோ?
நீதியோ?' என உரைத்தான்; ஆங்கு அதற்கு நிகழ் தருமன் நிகழ்த்தலுற்றான். 7-1

'இரதம் யானை' 15-1. [இப்பாடல் சஞ்சயன் தூதுச் சருக்கத்தில் 16-1ஆகச் சில பிரதிகளில் உள்ளது பற்றி முன் சருக்கத்தில் தரப்பெற்றுள்ளது.]

விரும்பும் அந்தணர் மனை எலாம் வேத மென் கீதம்,
பரிந்த கோன் நிரை எலாம் பசுங் குழற் கீதம்,
அரிந்த அரங்கு எலாம் அரிவையர் ஆடலின் கீதம்,
சுரும்பு வார் குழல் மலர் எலாம் தும்பியின் கீதம். 64-1

என்றலும், குந்தி சால இரங்கினள், 'எதிர்ந்த போரில்
வென்றிடுவார்கள் யாரோ? விதியினால், அமர்க்களத்தில்
பொன்றிடுவார்கள் யாரோ?' என்று உளம் புலர்ந்து, நொந்தாள்;
அன்று அவள்தன்னைத் தேற்றி, ஆழியான் உரைக்கல் உற்றான். 148-1

தரு மிகு தருமன் ஏவ, தாள் இணை சிவப்ப, மாயோன்
அர உயர் கொடியவன்பால் அழகுற நாடுவேண்டி,
துரகத இரதம் ஏறித் தூது போய் மீண்ட பாடல்
இரவு இயல் கதிரோன் வீசும் இருசதத்து அறுபத்தொன்றே. 261-1

[ஓர் ஏட்டில் இப் பாடல் காணப்பெற்றது. இதிலிருந்து கிருட்டினன் தூதுச் சருக்கம் 261 பாடல்களை உடையது என்பது விளங்கும்]

28. படை எழுச்சிச் சருக்கம்

சாள மன்னனும், (கேகய) நிருபனும், சனகனை ஒழிந்தோரும்
வேளையே நிகர் மாகத...விறல் மகீபரும் வந்தார்;
சோளபூபனுஞ் சோமனும் வந்தனர்; தொடுத்து எதிர் அணிந்தோர்தம்
மூளை வாய் உக, பொரு படைப் பதாகினி முடிவிலது உடன் அம்மா. 4-1

வல்லியம் அனைய வென்றி மாகத பதி சாதேவன்,
சல்லியன், கிருத வர்மன், தற் பொரு சகுனி என்பான்,
வில்லியல் கடந்த திண்தோள் விந்தரன், விந்தன், என்றும்
சொல்லிய நிருபர், தானை நாலொடும், கடலின் சூழ்ந்தார். 14-1

கயம் படு மனத்தன் ஆய கண் இலா அரசன் மைந்தன்
வயம்பட நினைந்து, கங்குல் வகுத்தது ஓர் சூழ்ச்சிதன்னால்,
பயம் படு மல்லரோடு பாதலம் மடிய நீண்ட
கயம் படு கமலத் தாள் என் தலை மிசை அகல்கிலாவே. 24-1

குன்று எடுத்து, ஆயர் மாதர் குரவை கொண்டு, ஒரு விளாவில்
கன்று எடுத்து எறிந்து, வெய்ய காளியற்கு இரு தாள் நல்கி,
அன்று எடுத்து இறுத்த வில்லே அனைய வில் விழவு காண்பான்,
சென்று எடுத்து, இறுத்து நின்ற செங்கண் மால் எங்கள் கோவே. 28-1

29. முதற் போர்ச் சருக்கம்

['படர்ந்து கானகம்' எனத் தொடங்கும் பாடல் ஒரு சில ஏடுகளில் கடவுள் வாழ்த்தாக உள்ளது. இதனைப் படை எழுச்சிச் சருக்கத்தின் முதலில் காணலாம்.]

41. பதின்மூன்றும் போர்ச் சருக்கம்

அடற் படையில் என் மகனது ஆர் உயிர் கொள்வோனைத்
தடப் படையினல் அவன் தனது உயிர் கொள்ளேனேல்,
மடக்கொடி இடும் கறியை, 'மீண்டு கொடு வா' என்று
இடச் சொலி அருந்தினவன் யானும் அவனுவேன். 184-1

செந்திரு மடமயில் கேள்வன் சென்று, செவ்
அந்தி வான் நிறத்தினன் அருள்செய் வாய்மையால்,
நந்தி உள் விடுத்திட நரன்தனேடு தன்
புந்தியின் மகிழ்ந்து, மந்திரத்துள் போயினன். 208-1

புரம் நகையால் எரி புராரிதன் முனம்,
நரனெடு நாரணன் நணுகி, அன்பினல்
சரண பங்கயம் உறத் தாழ்ந்து, பல் முறை
கரன் உற முகிழ்த்து, இது கழறல் மேயினர்: 210-1

'தருவதும், உயிர் எலாம் காக்கும் தன்மையும்,
உரு அற ஒழித்தலும், உன்தன் ஆடலே;
கரு வராது ஒழிந்தவர் கருத்தில் கண்டு தேறு
ஒருவனே! எம்மனோர்க்கு உரைக்கற்பாலையோ! 213-1

'நித்தனே! நிமலனே! நிகழ் நின்னாமனே!
அத்தனே! அடியவர்க்கு எளிய அண்ணலே!
பித்தனே! ஆதி அந்தங்கள் பேச ஒணா
முத்தனே! உயிர்தொறும் உலாய முன்பனே!' 213-2

என்று பற்பல உரை எடுத்துக் கூறியே,
நின்று உளம் நெக்கு நெக்கு உருகி நேயமோடு
ஒன்று கண் அருவிகள் உகுத்தல் நோக்கியே,
அன்று உமாபதி அவர்க்கு அருள்செய்தான்அரோ. 213-3

கண்ணன்மேல் அணி மலர் அனைத்தும், காய் எரி
வண்ணன்மேல் காண்டலும், மகிழ்ந்து, மேதினி
உண்ணும் மாதவன் சிவன் உருவம் என்று உணர்ந்து,
அண்ணலும் உடல் புளகு அரும்பினன்அரோ. 213-4

இமைய நல் வரை இனிது ஈன்ற கன்னிகை
உமையவள் கணவன், எவ் உயிர்க்கும் நாயகன்,
சமைவுறத் துதித்திடும் அடியார்தம் முகம்
அமைவுறு திருவுளத்து அருளின் நோக்கியே, 213-5

'வேண்டுவது என்?' என, விண்டு தாழ்ந்து எழீஇ,
'பூண்டு அருள் கருணை அம் புனித! இங்கு இவன்
ஆண்டு அருள் படைகளால் அவுணர்க் காய்ந்தனன்;
ஈண்டும் நல்குதி, விறல் எய்தும் வண்ணமே. 213-6

'தானவர்ப் பொரு படை கொண்டு, தாரணி
மானவர்ப் பொருவது வழக்கு அன்று ஆதலால்,
கூனல் வில் கணையொடு குறைவு உறுதது ஓர்
தூநிறத் தடம் அருள்க!' என்று சொற்றனன். 213-7

42. பதினான்காம் போர்ச் சருக்கம்

மாறுபட்டு அடர் புயங்க துவசன் பதறி, மாநிலத்தில் நடந்து சிலர்......
ஏறியிட்ட கதிகொண்டு துரகங்களுடன் ஏறுபட்டு இரதமும் துணிசெய்து அங்கு அருகு
சீறுதற்கு வரு தின் குருவின் மைந்தனொடு தேர் அருக்கன் மகனும் சகுனியும் பலரும்
வீறு கெட்டு இரு பதம் கொடு விரைந்து செல, மீள விட்டனன், முன் என்
[திசையும் வென்றவனே. 90-1

என்னும் மொழிதனைக் கேட்டு, 'காண்டீபம் எடேன்; கணையும் இனித் தொடேன்;
[யான்
சொன்ன மொழி பிழையேன்' என்று எதிர் நடந்தான், சுடர் எரியில் தோய்வேன்
[என்ன;
அன்னது கேட்டு ஆழி மால் அதி கோபமுடன் சீற, அதனால் பார்த்தன்
தன்ன சிலைதனை எடுத்துக் கணை தொடுக்க மதித்தான், சொல் தவறிலாதான். 166-1

44. பதினாறாம் போர்ச் சருக்கம்

எற்றவும் வார் கணை தைக்கவும் மைக் கண் இழந்தன, மா முழவே;
வெற்றி கிடைப்பினும் நீடு அதி பாதகம் வெம் மறமாம் உழவே;
மல் திரள் தோளுடை. . . . வயவர்தாம் கதிர் வாளின தோல் இனமே;
துற்ற. . . . . . வரூதினி பரியின, தேரின, வாளின, தோல்-இனமே. 51-1

காப்புடை ஒற்றை நேமிக் காவலன் தருமன் மார்பில்
நாப் புகல் வாய்மையான் நல் நாள்மலர்ச் செங் கை வை வேல்
கோப்புற வீழ, முன்னர்க் கொதித்து எழு மனத்தன் ஆகி,
தாப் புலி பாய்ந்ததென்னச் சல்லியன்தானும் வந்தான். 91-1

46. பதினெட்டாம் போர்ச் சருக்கம்

பொரு படை முனைக்கு அருஞ் சேனபதிப் பெயர் புனைந்தன புகன்றனம்; இனி,
குரு குலம் விளங்க வரு குந்தி மைந்தர்கள் இரவி குமரனைக் கொன்ற இரவில்,
திரு மருவும் அறன் மதலைதன் கிளைஞர் மண்டலிகர், திருமாலுடன், தனையரும்
பருவரல் விளைந்து, உளம் இனைந்ததும் பாசறை முனைந்ததும், வியந்து பகர்வாம். 9-1

மாதர்கள் களம் புகுந்து வான் அடைந்த சருக்கம்

[பதினெட்டாம் போர்ச் சருக்கத்தின் பின், மிகச் சில ஏடுகளில் காணப் பெறுகிறது இச் சருக்கம்]

அவ் வேலை, வேலை எனச் சங்கினொடு மங்கலங்கள் அதிர வந்தார்—
செவ் வேலை நிகரான கண்ணுடைய காந்தாரி சிறுவர் புல்கும்
மை வேலை நிகர் விழியார் அலாயுதன் பொற்றனையை முதல் மகளிரோடும்
கை வேலை யுறழ் விழித்த கன்னியொடும், பொன் உருவக் கமலையோடும். 1

ஆங்கவரல்லார் நல்ல அதிரதர்கள், மாரதர்கள், அடங்கா வென்றி
வாங்கு சிலைச் சமரதிகர், அத்தரதர், மண்டலீகர் அனேகரொடும்
பாங்கு பட்டவர்த்தனர்கள், மகுட வர்த்தனர் இல்லில் பாவை அன்னார்,
திங்கு அரியார், இடைச் சிறியார், தனம் பெரியார், பல கோடி திரண்டு மொய்த்தார்.

பூந் தேரில் வந்தாரும் நவமணிப் பொற் சிவிகையிடைப் பொன்னனாரும்,
சேந்து ஆர மணித் தவளப் புட்பகத்தில் வந்தாரும், செழுங் கோடு இல்லாச்
சாந்து ஆரும் திலத நுதற் பிடி ஊர்ந்து வந்தாரும், சமரபூமி,
காந்தாரியுடன் இழிந்தார், சாமரத்தால் அலை மறையும் கமலை ஒப்பார். 3

விண் போல விளங்கு குரு பூமிவயின் இகல் அம் தார் விசையமானும்
பெண் போலும் திரிந்தனர்கள், சேல்போலும் கயல் போலும் பிறழும் தங்கள்
கண் போலும் சாயகமும் செவ் வேலும் பட்டு இறந்த கணவர்தம்பால்
நண்போடும் களிப்போடும் செவ்வாம்பல் நிலவினொடும் நண்ணினரே. 4

நான நறுங் குழல் சரிய, சிலம்பு அலற, வளை ஒலிப்ப, நண்ணு வெங்கண்
மான நெடுங் கணவர் திரு மணி மார்பிற் புல்லி, விண்பால் வளங்கொள்வாரும்,
பீன முலைத் தடந் தோளும் தோள் தோயாமுன், அமரர் பெய் பூம் பந்தர்
வானவர்தம் மகளிர் எலாம் தமை வணங்க, வணங்காமல் வழிச் செல்வாரும்; 5

அம் பவளக்கொடி போலும், மார்பினில் தாமரை போலும், வடிவைத் தேறிச்
செம் பவளவாய் ஆரச் செவ்வாம்பல் முத்தமிட்டுச் சேண் செல்வாரும்;
கம்ப வளக் கோட்டு ஆனை பாய்ந்த தட மணி மார்பில் கனகம் பூத்த
வெம் பவளக் கோடு கொண்டே குத்தி, மலர்ப்புட்பகத்தில் விளங்குவாரும்; 6

அம் கணவர் புகழ் பாடிப் பேயுடன் நின்று ஆடி விண்ணில் அமருவாரும்;
'எம் கணவர் எம் கணவர்; உம் கணவர் அல்லர்; இனிப் போவோம்' என்ன,
தம் கணவர் உடல் தேடிச் சிலர் ஏக, ஊடி உடல் சாருவாரும்;
'நம் கணவன் துயிலுமிடம் காண்மின்' என வாய் இலக நவிலுவாரும்; 7

கோடி முனை அயில் புகுந்த குறை உடலம் தழீஇயவர், பின், குழாம் குழாமாய்
ஆடுகின்ற கவந்தமுடன், அயிற்பவுரி குனித்து ஆடி, அலம்வந்து ஆடி,
பாடுகின்ற பண் அனைத்தும் தம் கொழுநர் நாமம் வைத்துப் பாடிப் பாடி,
ஓடி வந்து, சில பூதம் தலையளிப்ப, செவ்விதழ்த் தேன் ஊட்டுவாரும்; 8

'என் முலையைத் தழுவிய கை வானுலகின் மகளிர் தொடை இலங்க, வேந்தர்
பொன்முலையைப் பற்றின உண்டாம் ஆமேல், அவ் உலகம் பொடியாம்' என்றே,
மின் முலையைச் சுமந்ததுபோல் உரு எடுத்து, முதல் உருவை விடுத்து, சார்வாள்
தன் முலையைத் தழுவ அவள் கொழுநனை அங்கு எதிர் ஈந்தார், சலிப்பிலாதார். 9

மஞ்சு அனைய திருமேனி நிறம் பெற்று எழில் இலங்க வந்து வீழ்ந்து,
நஞ்சு அனைய விழி நீரால் நீராட்டி, செங்குமுத நறுந் தேன் ஊட்டி,
குஞ்சரம் போல் கிடந்தாரைப் பிடி தழுவுவபோல் தழுவும் குமரிமாதர்
கஞ்ச மலர் அயன் உலகம் குடிபுகுந்து கணவருடன் கலந்திட்டாரே. 10

மெல் அனிச்சப் பூப் போலும் அன்னத்தின் தூவியையும் வெறுத்த செங் கேழ்ச்
சில்லரிப் பொன்நூபுரத்தாள் மார்மேலும் தோள்மேலும் சூடி வார் நாண்
வில்லெனக் கொன்று எனக்கு அளித்த சாயகத்தினும் இறந்த விறல் கொள் வீரர்ப்
பல் அணிப் பெண் எதிர் இறைஞ்சிப் புகழ்ந்தக்கால், வானுலகம் பணி செய்யாதோ?

கண்ணோடும் அயிலை வைத்து, செம்பவளவாய்வயின் புன் கனியை வைத்து,
விண்ணோடும் செல்வார் முன், கணவரைக் கொண்டு எதிர் ஈந்து, வெருவும் கூற்றம்
பண்ணோடும் பல புகழ்ந்து தொழுது விமானத்தின் உய்ய, படைக்கண் நல்லார்
எண்ணோடும் சாமரங்கள் புடை இரட்ட, ஆறி உலகு எய்துவாரும். 12

விற் புடையின் பெயராத் தொ . . . . வீழ்த்த
பொற்புடைய சிரங்களையும் பொருத்தினர்களோடு புணராமுன்னம்,
அற்புடை . . . . கொழுநரைக்கொண்டு எதிர் ஈந்து, நமனும் அஞ்சி, அடிமேல்
[வீழ்ந்தான்;—
கற்புடைய மகளிரைக் கைப் பிடித்த தலைவருக்குக் கவலை உண்டோ? 13

செம்பஞ்சும் நறுங் குழம்பும் தீட்டிய மாந்தளிர் குறங்கிற் செறிப்ப, வேழக்
கொம்பு அஞ்சும் குவி முலைகள் வேல் நுழைந்த புழைவழியே குளிரச் சார்பில்
அம் பஞ்சும், புனல் விழியால் முகம் கழிய, சேதாம்பல் அதரம் தீற்றி,
வம்பு அஞ்சு முலைக் கரத்து அரம்பையர் எலாம் சுமக்கும் விமானம் ஊர்வார். 14

இவர் இவர் என்று அடி பணிந்து, பெண் பூதம் புகழ்ந்து புகழ்ந்து எடுத்துக் காட்ட,
துவர் இதழ்ச் செந்தேனை எலாம் சரம் புகுந்த சிறுவாயில் துவட்டும் மாதர்,
உவரி எனத் துந்துமியும் பொன் நரப்புக்கருவியும் நின்று ஒலிப்ப, ஊர்ந்தார்,
கவரிபுடை பணிமாற, மணித்தரளக்குடை நிழலிற் கலந்து வானம். 15

சிவந்த சோரியின் மூழ்கிக் கிடந்த சிரங்களை எடுத்து, திரியாவண்ணம்
உவந்த சாதகர் கொடுப்ப, கொடுத்ததற்கு மணி வடமும் உடையும் நல்கி,
நிவந்த பிணம் களித்து ஓங்க, குன்றம்தோறும் இருந்து நிலை நின்று எங்கும்
கவந்த நாடகமும் கண்டார்; வான் மகளிர் நாடகமும் கண்ணில் கண்டார். 16

வெள்ளி வாய் மணிச்சரைபோல் வெம் பருந்தும் செம் பருந்தும் மிசை நின்று ஆட,
கொள்ளி வாய்ப் பெய்தது இபம் இரு மருங்கும் கழிச்செறிய கொழுவாய்ச்சோரி
பள்ளிவாயிடை இருந்து, குறைத்தலை நாடகத் திறமும் பரததுறந்தப்
புள்ளி நெழிறைத்துறக்காகும் தம் பழங் கணவருக்கும் புதுப் பெண்ஆனர். 17

மணிப் படிகப் படி நிரைத்த குங்குமச் (சேற்) றபனிநீர் வாயில்தொறும் அத்
தணிபு அயமுது வேனிற்படும்தோறும், குடைந்து ஆடும் தடங் கண் நல்லார்
கணிப்பா .... நிவிச் செற்று உதிர, நீ(ர்)க் குளங்கிடந்த கணவர்தம் தம்பப்
பிணிப்பாயல் தோள் தோய்ந்து வானவர் பூ .... (மழை) பிறப்பித்தோனே. 18

இந்து அனைய திருநுதலார் நடமாட, இடமாக்கள், விடையில் யாமோர்
வந்தனை செத்து இசை மவிலாலரணையிற் பூம் பந்தர் வதிந்தாற்போலும்
அந்தரம் எல்லாம் மறைத்த கழுகு இடு காவண நிழலில் அமர்ந்த நல்லார்,
தம்தம் கணவரைக் கூடி, கற்பகப் பூம் பந்தர் நிழல் தழுவினரே. 19

நீர் அடங்கா மாலின் இருகை மலையை இற்றேடும் நெய் அற்றெ....
பாரிடங்களுடன் மூழ்கி, தம் கொழுநர் குறை உடல்மேற் படுத்த மாதர்
காரிடப பிருய வளந்தவ கழுமணலாறக்கழிற்றுர வானினூடும்
ஊரிடம் பேருய் உலவு தேவ(வெ) நதிப் புனலாட உய்ந்தார் மன்னோ. 20

மாரிசாதகம் போலச் சிலமாரி பட்டிறந்த மகிமை தம்மேல்
ஓரி சாதகர் சூழ, செங்கழுநீர்மாலை யிட்ட வொவுண கனறைககுள
நாரி சாதகற் கண்டு, நன்று என்றும் அவர் புகலக் குடர் மாலை நல்கினர் பின்
பாரி சாதகத் தொடையல் விண்ணவர் எல்லாம் பணிய, பணிந்திட்டானே. 21

பாணிக்கை மலர்ப் பிடித்தான் தலை கொடுமின்; தான் கொடுத்த பனிப் பூம் பட்டும்
சேணிற் பேண் மணி வளையும், கருதும் எனக் குழிகைப்பின் செல.... நல்லார்
மாணிக்கக் குடை நிழற் கீழ் சாமரங்கள் அமரர் இன மகளிர் வீச,
வாள் நிறப் பொற் சிவிகை முதல் அப் பவனிவந்தார் மகிழ்நருடன், அங்க வீதி. 22

வந்து அலையும் அம் கருந்தலையும், வென்று அலையும் பெருந்தலையும் படைத்த பேய்கள்
செந்தலை எல்லாம் சுழல, கற்பகப் பூம் பந்தற் பெருந் தெய்வ வாழ்த்தவை
அம் தலையப் பணிக்கு அடுக்கும் தங்கோணேர்படைக் கரமும் அலர்ந்த செங் கேழ்
வெந் தலையும் கரத்து அணிந்தார் அவுணர்களை வீட்டி, வென்ற விந்தை
[போன்றார். 23

துணித்துணியாய்க்கிடந்த உறுப்பு அனைத்தும் எடுத்தே குறிப்பிற்றுடை ஒன்றுக்கி,
மணிவடமும் மலர்த் தொடையும் குங்குமம் இட்டே செம்பொன் மவுலித்
...தரன் அம்குடைமேலும் சாமரமும் இரு புடையும் மலாவனனுறைத்
திணிபுயக்குன்றே தழியாயி.... வாவ விந்திரர்க்கும் அம்திருப் பெண்ணனர். 24

என் மைந்தர் தலை இவை என்றே கொடுப்ப, தேடியவாறு ஏந்தினர்; பின்
தன் மைந்தர் தலை இவை என்றே வாழிப்பத் தாங்குவார்; தளிர த.... மாலை
நன் மைந்தர் தலை இவை என்றே அறியக் கொண்டோர் பின் அவையல லான்மை
தென .... யந்தாதலைவை நுன் மைந்தர் தலை இல்லெ எனச் சேண் சென்றுரால். 25

என் கணவன் சிரம் அது; உன் கணவன் சிரம் இதுவே; எனக்கு முத்த
பொன் கணவன் சிரம் காணுள் உனக்கு இளைய கிள்ளைமொழிப் பூம் பொற்பாவை
தன் கணவன் சிரம் காணுள், ளையயையும்ப்படிவ . . . . ளைய ஈன்ற
மின் கணவன் சிரம் காணுள் . . . . ணிளவு மறிரித்தியென வின் செல்வரால். 26

யான் பெற்ற திருமயிலும் அவள் பெற்ற மட மாதும் அவள்பின் ஈன்ற
மின் பெற்ற விழியாளும், மகன் பெற்ற இளையாளும், இவள் முன் ஈன்ற
தேன்பெற்ற நறுந்தாரான்மகன் . . . . றனக்கு மாலையிட்ட செல்வ மாது
வான் பெற்ருர் இனி இருப்பார் வண்ணமகட்கு அடியவராயவா . . . . ரெனப்பார். 27

மெய்கண்ணை உளம் திருத்தி, செருக் கோத்து உடன் உக விழையார் போலும்,
மை . . . . கண்ணீர் சொரிவதை வந்து அடுத்தடுத்துத் துடைத்த மலர்வன்னச்
[செங் கேழ்ச்
கைக்கண்ணை முத்த மிட்டு, ... கொழுநர் உடல் பாய்ந்த கழுமேல் வீழ்வார்
பொய்க்கண் நீர் உடல் துறந்து கறப்ப . . . . ல . . . . ணையிற் பொருந்தினுரே. 28

வேலையி . . . . கன்னியரின் போதி எனத்துணியுறுநாள் வினையேன்
. . . . நசு . . . . டடபெரும்பழிக்கோது . . . . தனை யென்றிசையுரைத்து வன்ருேட் பூதங்
காலையிட்ட வயிற்ருர்தங்கை . . . . லாமேல் விழிமலரைக்க . . . . ததுச்சாற்றும்
பாலையிட்ட மொழியார்க்கு இன்ன முறசு மிட்ட கணமணி பொற்பாவு புற்றௌ. 29

சாந்தள . . . . நதுடையளவும் அம் குதியளவும் அடுத்தோதும் தடங் கண் நீலம்
சேந்தளவின் தரள முரல் தம் தோழிக்கு . . . . கால விலையின் மணிச் சிலம்பு பூண்ட
மாந்தளிரை வருடிய கை இவையோ என்று எடுத்தணைத்து, ... யங்கு மாதர்
பூந்தளிர்க் கற்பக நாட்டில் தம் கொழுநர் கைகளிற் போய்ப் பொருந்தினுரே. 30

. . . . பரிய வரைத் தோளிடை அம் வேய் போலும் தோள்வயினும் பிறங்கிவர
வரத்தெரிய வொரு பொன்முகில்போல் இந்திர விமா . . னத்தி . . . . னபடே . . . . வ
சாதமமுன்
அரியமன . . . . கொள்ளா ஒன்ருெடொன்று ஆர்த்த ஓர்பால்;
நரியும் ஓரியும் பூக்குங்கால லொருபால் நாய் இழுக்க நகையுற்ருரால். 31

இவ் வண்ணம் திருமாதர் துறக்கமுறக் காந்தாரத்திற் வியின்ற
மைவண்ணக்கலல விழிக்கும் நூற்றுவர்க்கு மாலையிட்ட மயிலன்னுர்க்கு
மெய்வண்ணம் பொன்னுனதலை மகற்குமற முரைப்ப விடை கொண்டார் தம்
கை வண்ணக் காந்தனினுல் தொழுவாரை எடுத்தணைத்துக் கணீர் சோர்வாள். 32

மாந்தாதா வழி வந்தோய்! அரனிடத்திற் சாகாத வரம் பெற்ருய்; நூல்
வேந்தனுய் உடன் பிறந்த நூற்றுவர்க்கும் மைத்துனனுய் விளங்கினுய்முன்
ளுந்தரமாய் நின்ருேரை வழிபட்டாய் நலம் பூண்டாய் தவமே நின்ருய்
காந்தாரி தன்மகனைக்கைப் பிடித்தாய் ஆதலினுற் கலங்குற்ருயோ. 33

நேரியன் தென்னவன் வளவன் பாஞ்சாலன் பெற்ற நல்லார் நெடுங் கணம . . . . ன
மாரியன்ன மணி நீரால் ஆடிய பார் மடந்தை எம்மை மறந்தாய் கொ . . . .
சூரியனும் சிந்துநதிக்கு இறையும் வானிடை மறையத் தொல்லோர் பேர்த்து
மாரியன்னச் சுடராழி அருச்சுனன் அங்கை யம்பதம் நால் அறவே யன்ருே. 34

அலை கிடந்த நெடு நிலத்தில் ஐவருக்கும் தலை இருக்க அரிய மொதைத்
தலை இழந்து நீ கிடக்க, தான் இருந்து புலம்புவதிற் சலிப்புண்டாமோ?
கலை கிடந்த திருவுளத்தோய்! வந்தனன் என்று எழுந்திருந்து கணவன் காதல்
மலை கிடந்த தோள் நயந்து துச்சளையும் தேவர் தொழ வான் சென்ருளே. 35

பரந்தல தெலாமனிக்கும் ஆமடங்கலும், கற்ப . . . . பசுவும் என்னும்!
கரந்தனன் நின் குடைக்கு என்றே மைந்தனுக்கும் மைத்துனர்க்கும் கருத்து . . . . ற
புரந்தரனும் அகிலாண்ட கோடி எல்லாம் வயிற்றடக்கிப் பொன் கொண்டானும்
இரந்து உயிரை வாங்கினர் அல்லாமல் அருச்சுனனர் எதிர் நிற்பாரோ? 36

செய்யுள் நலவனை ஊரும் அங்க தேசத்து அரசே! திரு மாலாழி
மெய்ப்புனிதர் புகழ்ந்து ஏத்தும் என் கோவே! குரு குலத்து வேந்தர் வேந்தே!
பைப் புவி எல்லாம் எடுத்த பணி நா ஈர் ஆயிரமும் பணிக்கும் ஒண் பூங்
கைப் புனலாலே குளிர்ந்த அந்தணர்தம் கைமலரோ கழறுவாயே. 37

கந்திருவர் யாழ் எடுத்த கலை மகளும், கலை ஊர்ந்த கனிவாய்ப் பெண்ணும்,
இந்திரையும் போன்று யாம் நின்னை விட்டு, இவ் அருவோடு இருந்தேன் கொல்லோ?
மந்திரப் பூஞ் சாயகத் தார்மாலை யிட்டாய்; எனைப் பழித்த மன்னர் கண்முன்
குந்திமகன் நீயானல் யான்செய்த மா தவத்தில் குறையுண்டாமோ? 38

என் உருவ மணி விளக்கே! இந்திரைக்கும் நாயகமே! எம்பிரானே!
மன்னு குரு கற்பகமே! மாதவர்க்கு எலாம் தவமே! வல்லோய்! என்பாள்
தன்னுருவை நீர் பவழவரையுடன் மேற்றிருவடி வந்தழுவ மாட்டிப்
பொன்னுருவி எனும் காமி மின்னுருவியாகி, விண்ணிற் போயினளே. 39

இந்திரர்க்கும் இந்திரனே! ஏறு அனையார்க்கு இடி ஏறே! இயம்பும் கேள்வி
மந்திரர்க்கு மந்திரனே! வடதிசை மன்னவனும் வழுத்தும் கோவே!
சந்திரர்க்குச் சந்திரனே! ஆதவர்க்கும் ஆதவனே! தவத்தின் வாழ்வே!
சுந்தரர்க்குச் சுந்தரனே! சுபலன் மகட்கு அரு மகவே! சுயோதனனே! 40

மாலாழி தனக்கிடந்த சுபத்திரையைக் கலந்து கொண்ட மகவான்மைந்தன்
காலாழி மணித் திண் தேர் கமவியனள் அன்று செய்த கருமம் ஆய்ந்தும்
நீலாழி நிறமணைத்தும் வஞ்சனையாய்க் கறுத்ததென்று நிலை நின்று ஓர்ந்து,
பாலாழிதனில் துயின்றோன்னவ நிரதுமமீபகைத்துப் பட்டாய் கொல்லோ! 41

தங்கை இவள் ஆசில்லாள், தம்பியற்கு மாலை யிட்டாள், அவம் ஒன்று இல்லாள்,
நங்கை இவள் உலகு ஏழும் உடையோர்க்கு மாலையிட்டாள் நல்லாள் எனச்
செங்கமலாடி தூவியற்ரு என்மங்கல நாண் சிதைய வண்ண
மங்கலங் கூறு என்றெனையும் நீலவண்ணன் கவர் மொழியாய் வாழ்த்தினனே! 42

எந்தை தவம் பூண விட்டான்; சிறிய தந்தை சிலை முறித்தான்; இவுளித்தாமன்
சிந்தை தனையே யுடைத்தான்; அவன் தந்தை உன தந்தை சிலைகீழ் வீழ்த்தான்;
கந்தை அடும் களிற்று இரவி மகன் கவச குண்டலமும் கவர்ந்தான்; பின்னும்
தந்தை ஒரு மகள் கழுத்து நாண் அழியவே துடையும் தட்டினனே. 43

செய்யாது செய்ய வையம் கலங்கும் என, உயர்ந்தோர் முன் செப்பும் வார்த்தை
மெய்யாக விளைந்ததன்றே! பாஞ்சாலி கலை குலைய விரித்த கூந்தல்
மை ஆழி உலகிடை நின்று உற ஒடின்று உன் உயிரும்; மறலி பாசம்
கை ஆரப் பிடித்திழுத்து வாயார விழுங்கின் கை செய்தாரே. 44

என்று இன்னம் பல உரைத்து, மணிச் சிலம்பும் மேகலையும் இரங்கி ஏங்க,
குன்றில் எழும் குயில் மயில் போல் கொழுநனுடல் மேல் விழுந்து குலவும் பொன்னாற்
பொன்தணிந்த புயம் தழீஇ இந்திர விமானத்திடை பொ . . . . நதாள் தேவர்
மன்றில் அயிராணி வந்து தொழுதேத்தப் பெருந்திரு மன்னினளே. 45

கண்ணூற்று இல்லாதவராய்க் கிளிபோலே மொழி பிதத்திக் கருங் கூத்தொப்பார்
தொண்ணூற்றென்பது மாற புல்லும் மாதர் நெடுவானம் துருவிப் போனார்;
எண்ணூற்றுத் தொண்ணூற்றென்பது நூறாயிரங்கோடி இலக்கமான
பன்னூற்று மொழிநல்ல . . . . தங்கொ . . . . ணருறு வானிற் பறந்து போனார். 46

ஆறாத மயல் மடவார் இவ்வகை போய் விண் அடைந்தார்; அழல் வந்தாளை
யேறாத . . . . றழைக்க அழுது அவள் தன் அடி தொடுங்கால் இரங்கி மைந்தர்
சீறாமல் அன்னது கண்டிருந்த பெருங் காந்தாரி சிறுவரெல்லாம்
பாறாடு செருக்களத்தில் தனித்தனியே கிடந்தழிந்த பரிவு கண்டாள். 47

கண்டவள் தன் கண்ணீரால் மைந்தரையும் மாதரையும் கழியினாள்! பின்
பண் தணிந்ததெனப் புலம்பி அரற்றி, வயிறு அலைத்து அழிந்து, பதறி மாழ்கி
அண்டமெல்லாம் உண்டு உழ்ந்த செவ்வாயின் நவநீதம் அண்டர் விட்டில்
உண்ட பெருங் கள்வனையே நினைத்து வெம்பி உள்ளமெல்லாம் உருகினாளே. 48

முடி புனை சருக்கம்

['இப்பால் மற்று இவர் இரங்க' (242) என்ற பாடலோடு பதினெட்டாம் போர்ச் சருக்கத்தை முடித்து, 'ஐந்து பெரும் பார்த்திவரும்' (243) முதலாக இச் சருக்கம் தொடங்குகின்றது. இது முதல் 'இனி உவழி வாழ்திர்' (250) வரையுள்ள 8 பாடல்களையும் 18-ஆம் போர்ச் சருக்கத்தில் காண்க. சில ஏடுகள் 'முடி சூட்டுச் சருக்கம் என்றும் பெயர் குறித்துள்ளன.]

எஞ்சல் இல் உலகம் யாவும் இயலறம் வளர்க்க வேண்டி,
விஞ்சிய உயிர்கள் எல்லாம் வாழ்வுற விளக்கத் தக்கோர்
சஞ்சிதத் தவத்தில் வீரத் தருமனும் தம்பிமாரும்
மஞ்சனமாடும் நீதி மரபினால் கூறலுற்றேன். 9

அருமறை தன்னை நான்காய் அமைத்திடும் அந்தணாளன்
குருகுலம் விளங்க வந்து குறுகினன்; குறுகலோடும்
தருமனும், தம்பிமாரும், தழல் எழும் தையலாளும்,
பெருகிய அன்போடு அந்தப் பெரியவன்தாளில் வீழ்ந்தார். 10

வணங்கினார்; வணங்கிப் பின்னர், மா மணித் தவிசின்மீதே
கணம் கிளர் தாரினானும் வைத்தபின், கடன்கள் யாவும்
இணங்கிடச் சேர்ந்து நின்றே, ஏத்தினர் தம்மை நோக்கி,
குணங்களில் உயர்ந்தோன் ஆசி கூறினான், அன்பு கூர. 11

நில மா முகிலன்னானும் நினைத்தது முடித்து, துய்ய
ஞால மா மாது பாரம் நல் வினை அகற்றி, செய்ய
சிலமாந் துவரைநின்றும் சேர்ந்தனன் எழுந்து போற்ற,
மாலும் மார்பு அழுந்தப் புல்லி, மகிழ்வுடன் இனிது இருந்தான். 12

அரு மறை அந்தணாளர், முனிவர், மற்று அரசர்தங்கள்
மரபினில் சிறந்தோர், சுற்ற, அமைச்சர், வந்தடைந்தார், யாரும்
பரவியே வணங்கிச் சூழ்ந்தார்; தருமனும், பரிவினாலே
விரவினார் எவர்க்கும் இன் சொல் விளம்பினான், விளம்ப வல்லான். 13

கரு முகில் அனைய செந்தாமரை மலர்க் காடு பூத்தே
அருளொரு வடிவு கொண்டதாம் என, அருளாய் நின்ற
மரு விரி துளப மாலை வியாதனும் மகிழ்ந்து நோக்கி,
'மருவினார்தம்மைக் காக்கும் மாதவ! கேண்மின்' என்றான். 14

'புகலடைந்தோரைக் காக்கும் புனிதனே! தருமன்தன்னை
அகலிடம்தன்னை ஆள அருள் புரிந்தருளவேண்டும்,
தகமையால் விளங்கத்தக்க குருகுலந்தானும்' என்று,
சுகன் அருள் தாதையான் அச்சுதனெடு சொல்லினனே. 15

'நன்று நன்று' என்று மாயன் நயந்தனன்; கேட்டோர்க்கு எல்லாம்
குன்று என வளர்ந்த தோள்கள்; குளிர்ந்தன இதையம்; அங்கம்
துன்றிய புளகம் போர்ப்ப, புனல் விழி சொரிய, யாரும்
இன்று தந்தமதே பூமி' என்றனர், இன்ப முற்றூர். 16

மாருதிதன்னை நோக்கி, மாயவன் உரைப்பான்: 'ஐயா!
வாருதி ஏழும், நாலு வகை கடற் புனலும், கங்கை
சிரிய நதிகள் ஏழின் தீர்த்தமும் சேரக் கொண்டு,
சாருதி கடிதின்' என்னும் சொல்லினைத் தலைமேற்கொண்டான். 17

சண்ட வேகத்தின் மிக்க தந்தையும் சால நால,
மண்டலம் நடுங்க, மேனி வானுற நிமிர்ந்து விங்கி,
கொண்டல்கள் கிழிய மோதும் குரை கடல் இரைப்பும் திர
அண்டமும் கிழியப் பாய்ந்தான் அரும் (பெரும்) பூதம் ஒப்பான். 18

ஆனவன் போன பின்னர், அம்புயத்தடங்கணனும்,
மேல் நனி லூகன்தன்னைக் கிருபனை வியந்து நோக்கி,
'ஊனம் இல் சடங்கம் எல்லாம் அமைத்திர்!' என்று உவந்து சொல்லி,
வானவர் தச்சன்தன்னை 'வருக!' என்று எண்ணினனே. 19

வந்தனன் தச்சன்; வந்து, மயனெடும் வணக்கஞ் செய்ய,
'அந்தம் இல் மணிப் பொன்னல் தூண் ஆயிரம் அமைத்த கூடம்
தந்திடும் விரைவில்' என்னச் சமைத்தனன், நொடியின் அம்மா!
செந்திரு மார்பினனும் திகைத்திடத் திகழச் செய்தான். 20

'கணித நூல் மாந்தர்தம்மை அழை' என, கடிதின் வந்தார்;
அணியும் 'மா முகுத்தம் ஒன்று இங்கு அமைத்திரால்' என்னலோடும்,
தணிய என்று எண்ணிப் பார்த்துச் சாற்றுவர் எவரும் கூடி,
மணி வண்ண! நாளை நல் நாள்' என்றனர், மகிழ்ந்து மன்னே. 21

'அத்தினபுரியை யாரும் அலங்கரித்திடுமின்' என்ன,
அத் தினம்தன்னில் யாரும் அணிந்தனர் என்ப மன்னே—
வத்தின காலை மாலின் மணியினை அணி உண்டாக
வித்தகச் சாணைதன்னில் வேகடம் செய்ததென்ன. 22

மரகதம், பவழம், நீலம், மாணிக்கம், முத்து, வச்ரம்,
நிரைபடத் தாமம் நாற்றி, நீள் நெடுங் கமுகு, வாழை,
குரு மணி கும்பம் வைத்து, குங்குமம் சாந்தம் பன்னீர்
தெரு எலாம் விளக்கஞ் செய்து, தீபமும் ஏற்றினரே. 23

அகருவே முதலாயுள்ள தூபமும், அம் பொன்னலே
மகர தோரணமும் நாட்டி, மலரினல் பந்தல் வேய்ந்து,
புகர் இலா மணித் தூண் பட்டால் உறைகளும் பொதிந்து, துய்ய
நிகர் இலாக் கவரி, ஆடி, நிரை பட நாற்றினரே. 24

இரதமும், மதமா, சாரி பதினெட்டும் இயல்பின் என்னும்
துரகமும், பண்ணமைத்து, துய்ய வெண் சங்க நாதம்
பரவு பல்லியங்கள் ஆர்ப்ப, பணிலங்கள் துவைப்ப, எங்கும்
திரை கடல் உலாவுற்றென்னச் செழு நகர் கிளர்ந்ததன்றே. 25

அன்னமே முதலாயுள்ள தானங்கள் அந்தணளர்க்கு
இன் அரும் பொருள்கள் எல்லாம் உவந்து உவந்து உதவுகிற்பார்,
மன்னவர், மறைவலாளர், வணிகர், மற்றுள்ளோர் யாரும்,
துன்னியே விமானம்தன்னில் துவன்றியே வந்து சூழ்ந்தார். 26

கடிகை நால் உண(ர்)ந்த மக்கள் கண்ணனை வணங்கி, 'ஐயா!
முடிபுனை முகுத்தம் வந்து முன்னியது' என்னலோடும்,
நெடியவ(ன், 'யா) ரும் சூழ, நீண்ட மண்டலத்தில் சேர்ந்து,
சடில நீள் முனிவர் யா(ரும் சட) ங்கமது இயற்றும்' என்றான். 27

தண்டு(டன்) (த)ரித்து, மீது தருப்பையுஞ் சாற்றி, கோள்கள்
மண்டலம் வகுத்த துய்ய மலர்களும் ெ(ப)ாதிந்த (தன்) பின்,
(வ)ண் தலம் புகழச் செய்து, வளர் கிளர் அங்கி மூட்டி,
பண்டைய மறையினாலே பரிவு(ட)ன் இனிது செ(ய்தார்). 28

இந்திரன் அயன், மால், ஈசன், என் இல் விண்ணவர்களோடும்
அந்தர வானம் எங்கும் நெ(ரு)ங்கினர் அணிகள் ஆகி,
கந்த மா மலர் பொழிந்து களித்தனர், காண வந்தார்;
அந்த மா மறைகள் யாவும், அமரரும் நடனம் செய்தார். 29

தருமனும் அங்கி தரும் திருமானும்
இருவரும் அங்கு முன் எய்தி இருந்தார்—
குரு மணி ஆசன மீது குளிர்ப்போடு
ஒருவரு போகமும் யோகமும் ஒத்தே. 30

அங்கமும் ஆர் உயிர் என்னலும் ஆகி,
திங்களை ரோகிணி சேர்வது போல,
அங்கமும் நான்மறை என்னலும் ஆகி,
பொங்கும் அருந் தவமும் பொறை போலும். 31

வந்தனன் மாருதி, வாருதி ஏழும்
சந்தனுவின் மனை தான் முதல் நீரும்
மந்திரையும் கடல் நானம் கொடு யாவும்
தந்தனம் நீர் இரு கடல்தனில் அம்மா! 32

பூரணமாகிய பொற்குடம்தோறும்
ஆரண மந்திரம் ஓதி அமைந்தார்—
நாரணனே முதல் நல் தவமுனிவர்
நேரணியாக நெருங்கினர் என்றே. 33

காசிபன், அத்திரி, கவுதமன், முதலோர்
ஆசிருவாதம் அமைத்தனர், யாரும்,
பூசனை அங்கி பெரும்படி பூண,
தேசிக .... யாரும் வந்து திரண்டார். 34

நவ மணி நளினமுத்தி விழுங்கும்
திவாகரனைப் .... சேயாரு சோர் பீடம்
(உ) வமை மிகுத்திட, ருமம .... ஓங்க,
குவலயம் மங்க(ளம்) கொள்ள இருந்தார். 35

சங்கொடு தாரை (தழ)ங்க உருப்போல்
அங்கண் விசும்பிடை ஐந்து முழங்க,
துங்கம் மறைத்தருள் தூல விதான
மங்கல மா முறை மஞ்சனம் ஆட்டி. 36

ஆவி எனும் துகில் வர்க்கம் அணிந்து,
மேவிய வண் கலவைப் பொடி மென்மேல்
பூவியலாகிய தொங்கல் புனைந்து
....மார்புற ஆபரணத்திரள் பூண. 37

எங்கும் அணிந்தருள் சீர்கள் இலங்க,
வெங் கடா யானை வினைப் பவம் நீக்கும்
புங்கம் மிகும் திரு நீவ, புனைந்தே,
அங்கையின் நெல்லியன யாவையும் வந்தே. 38

சூரியர் ஆயிரம் கோடி துலங்கும்
பார் உயர் (ம)ண்டபமீது படி .... பேண,
வீரவில் மன்னர் வி ....
....(க)ற்பக நாண் மலர் கா .. 39

சிவ உருவாகிய செங்கண் முகுந்தன்
தவம் உயர்
....யசடில....மகிலும்படியான
....வகையினால் அவன் அங்கி எழுந்தே. 40

மணி முடி எடுத்து நீட்ட, மங்கல முரசம் ஆர்ப்ப,
துணிவு கொண்டு எவரும் வாழ்த்த, சூரர்கள் பணிந்து போற்ற,
பணி முடி நெரிய ஆடும் பதமலர்க் கமலமூர்த்தி
அணி அரங்கானோன்தானே அணிந்தனன், தனது கையால். 41

ஆட்டலும், வானோர் நாதச் சுருதிகள் துள்ளி ஆர்த்தார்;
கோட்டம் இல் அறங்கள் ஆர்த்த; குரை கடல் ஏழும் ஆர்த்த;
வாட்டம் இல் தவத்தோர் யாரும் மகிழ்ந்தனர், ...யார்த்தார்
ஈட்டமாம் உலகத்துள்ளோர் யாவரும் விரைவின் ஆர்த்தார். 42

பூமியின் பாரம் தீரப் புரிந்தனர் யாவும் எண்ணித்
தீமைகள் ஒளிக்க, நன்மை திரண....ம பெற்றே........கத்
தோமுறு கண்ணினானும் விதுரனும் துயரம் தீர,
மா மருது ஒடித்தோன் பாதம் வணங்கினான், தருமன் மைந்தன். 43

வணங்கிய பின்னர், மூன்று மதம் பெறுங் கரடம் ஏறி,
இணங்கிய தம்பிமார்கள் இரு புற......னுஞ் சேர
குணங்களின் உயர்ந்த மாயன் குஞ்சரப் பிடரின் போத,
பணங் கிளர் அரவம் ஏந்தும் படித்தலத் தரசர் சூழ. 44

கவரிகள் நிழற்ற, கொற்றக் கவிகை வெண்மதியம் சேர்ப்ப,
பவுரி(கொண்) டெவரும் வாழ்த்த, பல்லியம் கடலின் விம்ம,
புவனங்கள் எல்லாம் உய்ய, புரிவலச் சங்கு ஒலிப்ப,விர
....மண்டபத்தின் இந்திரன் என இருந்தான். 45

.................ல் அரசு வீற்றிருந்த பின்,
வருமுறை....யாரும் வந்து, வந்து, இறைஞ்ச, வானோர்
பெரியவர் முத....லப் பொழுதமு தேவர்க்கும்
தருமதேவதையும், பாரும் தழைக்க மா மழைகள் பெய்ய. 46

இந்திரன், குபேரன், மன்னர் யாதுதானவரை வென்ற
தந்திரம் வந்து நல்க, ஆயிரப் பேரோன் சிந்தை
செந்திருவுடனே கூடச் சேர்ந்துடன் வாழ, பார்வை
முந்து இமை போலப் பூமி முழுதையும் காத்தான் மன்னே. 47

வேதமே ஆன மேன்மை விளங்கு பாரதத்தை நாளும்,
ஓதுவோர் கேட்போர், நன்று என்று உரைப்பவர் உதவி செய்வோர்,
ஏதமாம் பிறவி நீந்தி, இமையவர் வணங்கப் பூமி
நீதமாய் வாழ்ந்து, பின்னர், நித்தியம் பெறுவர் தாமே. 48

இப் புராணம் இசைந்துடன் கேட்பவர்
தப்பில்லாமல் படிப்பவர் தாம் எல்லாம்
முப்புராரி முதல்வன் அருளினுல்
செப்பி வாழும் சிவபதம் சேர்வரே. 49

முடி சூட்டுச் சருக்கம்

[ஓர் ஏட்டில் இது காணப் பெற்றது]

அத்தின புரியிலாய தனி வல்லான் அரியதோர் விதுரன் மற்றுள்ளோர்
ஒத்தின மருவவே உத்தகனும் உயர்தவ முனிவரர் பலரும்,
சித்தினது உருவாம் தௌமியன் வேத பாரகக் குருக்களும் செறிந்தே,
இத்தினம் உவந்த தினம் எனத் தருமற்கு இதம்பெற மொழிந்தனர் இசைத்தார். 1

செழு முரசு உயர்த்த வேந்தனுக்கு இன்று திருவபிசேக நாளென்று
முழுமுரசு அறைந்து, நகரி சோடித்து, முடிபுனை கடிகொள் மண்டபத்தில்,
எழுமுரசு அதிரப் பகிரதி முதலாம் எத்துறைப் புன(ல்)களும் இயற்றி,
தொழுமுரல் வெள்ளை வலம்புரி முழங்கச் சுருதி மா முனிவரும் தொக்கார். 2

(இ) ரத்தினப் பலகை நவமணி யழுத்தி யாடகத்து அரிமுகத்து ஆர
பத்திகொள் பீடத்து அழகுற இருத்தி, பசும்பொனின் தசும்புகள் நிறைந்த
சுத்த நீர் வியாதன் தவுமியன் முதலோர் சொரிந்தனர், சோமன் வந்துதித்து,
சித்திர கிரியின் நெடு நிலா வெள்ளம் சீருடன் வழிய வார்த்தெனவே. 3

உதையமால் வரையின் உதையராகத்தோர் உதித்த தேர் உதயன் என்று உரைப்ப,
துதை அளித் தந்தை மாலைவான் சென்னிச் சோதி மா மகுடமும் சூட்டி,
பதயுகம் அரசர் முடிகளால் சேப்ப, பகர் விதி முடிந்த பின், பலரும்
இதையம் ஒத்து அமிர்த மொழியவர் அடைவே இருகை நீராஞ்சனம் எடுத்தார். 4

ஒற்றையோடு இரட்டை வலம்புரி மிழற்ற, ஒரு குடை மதியென நிழற்ற,
கொற்றவர் முன்பின் போதர, மடவார் குழுப் பொரி சிந்தி வாழ்த்தெடுப்ப,
இற்றைநாள் எவரும் வாய்த்தவா என்ன ஏழ் உயர் அரசுவாவின்மேல்
மற்றை நால்வரும் தற் சூழ்வரத் தருமன் மைந்தன் மா நகர் வலம் வந்தான். 5

மா நகர் வலமாய் வந்து, தன் குரவர் மலர்ப்பதம் முறைமையால் வணங்கி,
கோனகர் இருக்கை யடைந்தனன், இனிதே; கோவலன் எவ்வகைக் கொண்டு,
தான் அகம் மகிழ்ந்து, வேள்வி அந்தணரும், தவ முனிவரர்களும், புகழ,
வானவர்க்கு அரசன் இவன் எனத் தருமன் மனு நெறி நடத்தி வீற்றிருந்தான். 6

மனு நெறி கோடாது உலகெலாம் தழைப்ப, மாயவன் திருவருள் அதனுல்,
இனிதுடன் உயர்ந்த வேள்விகள் இயற்ற, இமகிரிச் சாரலின் முன்னர்ப்
பனிமதி மாயன் மருத்துவன் அமைத்த பல் பெரு நிதிக்குவை குழைந்தே,
துனி தவிர்ந்திட நல் வேள்விகள் புரிந்தான், சுரர்களும் முனிவரும் மகிழ்ந்தார். 7

திங்கள் மும் மாரி சிறப்புடன் பொழிய, தேவரும் யாவரும் வியப்ப,
அங்கண் மா ஞால முழுவதும் செங்கோல் அனுதினம் முறைமையால் நடத்தி,
பங்குனன் முதலாம் தம்பியர் போற்ற, பவளவாய்த் துரௌபதை களிக்க,
கங்கை நன்னுடன் தருமன் மாமதலை காசிவி புரந்து வீற்றிருந்தான். 8

இந்த மாக் கதையைப் படித்தவர், கேட்டோர் இனிதுடன், மகிழ்ந்து கேட்பித்தோர்,
சிந்தை கூர்தர இக்கதையினைப் படித்த தேசிகற்கு அருஞ் சிறப்பு அளித்தோர்,
விந்தை சேர் முகுந்தன், மாயவன், முராரி, வேதன், முக்கணன், அவன் அருளால்,
பந்தமாம் பிறவிக் கடற்கரை கடந்தே, பரம மா முத்தியும் சேர்வார். 9

மக இலர்க்கு இனிய மகார்தனை அளிக்கும்; வல் வினைப் பிணிகளைத் துரக்கும்,
தகவிலாப் பஞ்ச பாதகம் ஏகும்; தருமமுஞ் செல்வமும் தயங்கும்;
பகையில் ஆடமரில் துஞ்சிடப் பொருத பஞ்சவர் பாரதக் கதையில்
உகவிலோர் கவிதை கற்றவர்க்கு என்ருல், உயர் கதி பெறுதல் மற்று யாதோ? 10

ஏது வேண்டும், இனித் தவ மாந்தரே?
ஓது நூலின் ஒரு கவியாயினும்,
காதலோடு வினையறக் கற்றவர்
போதில் நான்முகன் பொன்னுலகு எய்துவார். 11

மௌலி சூட்டுச் சருக்கம்

[ஓர் ஏட்டில் காணப்பெற்றது.]

பனி ஏறும் பவக் கடலைப் பரிசறுக்கும் இரவி இருட் பான்மை போன்று, ஆங்கு
இனிய வேதமும் அதனுள் அறிவும் அதற்கு இனிது உயிர் ஆம் இசைவும் ஆகி,
தனியும் ஆய், சராசரமும் தான் ஆகி, சிட்டி திதி சங்காரத்தில்
முனிய ஒணு அமலன் இரு முண்டகத் தாள் தினம் தினமும் மொழிதல்செய்வாம். 1

உதைய பானுவின் உதவு கடன் முடித்து, ஆங்கு ஐவரொடும் உம்பர் ஏத்த,
இதைய பானுவின் நடம் செய்து, எவ் உடற்கும் உயிர் ஆகி, எங்கும் எங்கும்
விதையமாய் வினை முகிலோன் வீடுமன்பால் சேர்ந்துஐவர் (இவர்)மேன்மை என்சொல்?
முதியை நீ, இவர் கிளைக்கும்; முனிவு இனிமையின் உபய முதன்மை நீயே! 2

எனும் அளவில், நதி சுதன் அப் புயலை நோக்கி,
'எனது உயிர்தான் இரவி வடக்கு எய்து போதில்
தனு அகலும்; நீர் இவர்தம் பெரிய தாதை
தமது மனை அணுகி, அவர் சரணம் தாழ்ந்து,
இனியது உரைத்து, அவர் துயரம் அகற்றி, இன்பத்து
இருத்தி, அமர் இறந்தோராம் எவர்க்கும் கன்மம்
துனி அற நீர் முடித்திர் எனப் புகல, மாலும்
தோழரொடும் ஏகுதலும், சுவலன் பாவை,

அழு குரலும், கண்ணிலான் அரற்றுவதும், சமரிடை வீழ்ந்த அவ்வவ்வோர்தம்
கொழுநர்தமை நினைந்து நினைந்து, இசைத்து இசையால் குமுறுவதும், 'கோகோ' என்று,
விழுவதுவும் எழுவதுவும் வெந் துயரம் மிகும் ஓதை வெகுளல் கேட்டு,
தொழுது, 'இவர்க்குள் எவர்க்கு இசைவு சூட்டுக, யான்' என ராசசூயன் சொன்னான்.

அன்னவனை இரு கண்ணால் பரிந்து, அலர்ந்த முகன் நோக்கி, 'அரசர் ஏறே!
என் நினைந்திர்? என் புகன்றீர்? எதிர்த்து எதிர்த்துச் சமரின் அவர் இறக்க நொந்து,
பின் நினைந்தால் பயன் உளதோ? பெரு நகரின் புகுந்து எவர்க்கும் பிரிவு நீக்கிர்;
முன் நினைவு ஈது அறிகிலிரோ? முரசு உயர்த்தோய்! வருக!' என, முகுந்தன் போந்தான்.

போந்து, அறுவர் இருவரிடைப் புனல் பொழிய இரு நயனம், புயங்கம் போலச்
சார்ந்து, ஆண்டு மிக ஆற்றத் தயவு இலராய், சிறிதளவு தயவு நேர்ந்து,
ஏந்தி இரு கரத்து அணைத்து, ஆங்கு அறுவரையும் அறத்து ஆசை அன்பின் நோக்கி,
'மாய்ந்த உனது இளையோர்க்கு நூல் வழியே கருமம் இனி வகுத்தி' என்றான். 6

அன்னை அரி முகன் நோக்கி, 'அமரிடை எம் மகவு இறந்த அவ்வவரை நோக்கல்
உன்னும்' எனக் கற்பினுக்கு ஓர் உரு ஆய மகள் உரைப்ப, உடன் கொண்டு ஏகி,
'மன்னவர் ஓர் ஐவரொடும் வன் சமரில் நிலம் சேர்ந்து மாய்ந்த வேந்தர்
இன்னவர் இன்னவர் இங்கு' என உரைப்ப, காந்தாரி இறந்தார்தம்மை, 7

மலர்ந்து இரு கண் அவ்வவரை மிக நோக்கி, மனம் மறுகி, மண்ணின் வீழ்ந்து,
புலந்து எழுந்து, முகுந்தனை, ' நீ மா மாய்கை எம் மகற்குப் பூட்டி மாய்த்தி,
நிலம்தனில் நீ என்பளவில், 'நீர் புகல், முன் முனி சாபம் நிகழ்ந்தது' என்றான்;
அலர்ந்து மனத்து அறிவுகந்து, அகம் அடைந்தாள், காந்தாரி, அரசன் தேவி. 8

பேர் உதவித் திரு அனைய பெருந் திருவானையும் லோக பிதாவின் தாளில்
சாருதலும், முகம் மலர்ந்து, 'நின் குறை ஏது' என வினவ, சக்ரபாணி,
'ஓர் உதவி உதவ' என, 'உகந்தனம்' என்று உரை பகர்ந்தான்; உலகம் ஈன்றான்
தார் உலவு மலர்க் குழலாள் அமர் அணங்கு எதிர்தான் நீ தந்தது என்றான். 9

ஆதலால், அரவுயர்த்தோனொடு மாதும், அனு மரணமான மற்றச்
சாதலாகிய தலைவர், சான்றோர், முற்றமையன் இரு சமரில் சாய்ந்தோர்,
ஈது எலாம் அனல் அமிழ்த்தி, 'இசை கருமம் ஈர்-அறு நாள் இயற்றிச் செய்த
தீது எலாம் அகன்றது' என, அகம் மலர்ந்து, முகுந்தனொடும் சிறுமை தீர்ந்தார். 10

செய் செயலை முடித்து அரசர் திருநகர் சேர் அளவிறந்தார் தேவிமார்தாம்
மொய் முகில்போல் அரற்றுதற்கு முரசு உயர்த்தோன் வெருவ, முதல் முனிவன்
[வந்து, 'ஆங்கு
எய்த அவர் கணவர்' என, எதிர் வருகு கணவர்தம்மை இறுகப் புல்கிக்
கைநெகிழார்தமை நோக்கி, 'உமக்கு, அவனி, விசும்பு, இரண்டில் கனிவு ஏது?'
[என்றார் 11

'ஆவி போய் உறை உடலம் யாதனு சரீரம் இந்த அவனி தோயில்,
பாவியாம் அலகை; இதில் பயன் இல்லை' என முகுந்தன் பகரும் போது,
காவி நேர் விழி மடவார் கணவரொடும் துருதநிலை காண்பது என்ன,
தேவிமாரொடும் அரசர் சானவி சார்ந்து, அமரர் பதி சேர்ந்தார் அன்றே. 12

அக்காலை, அரசருக்கும் அரசாகும் வீடுமனும் அவனி நீங்க,
மிக்கான காலம் எனில், அரியை அவர் இறந்தவரில் வேந்தர் நின்றார்
புக்கார் அச் சமரபூமி; நதி மதலை ஆனந்தப் புயலினேடும்
இக் காலத்து அரியினை யான் பெறப்பெற்றேன் எனப் போற்றி இதையம் கூர்ந்தான்.

மா தவர், மா முனிவோர்கள், அந்தணர், வான் உள்ளோர், மற்று யாரும் இன்பப்
பூதலம் மீது அருங் காலம் போற்றிடினும் காணுத பொன்-தாள் கண்டேன்;
வேதம் முதல் வேதாந்த மெய் உருவே! வீடு அளிப்பாய், விண்டு ஆன
மூதறிவே! எனப் புகழ்ந்தான்; அந்தரத்தே அமரர்தம் முன்னதானுன். 14

உடல் அகன்று , தேவ புட்ப ரதம் ஏறி, வருண திசைக்கு உம்பர் என்னும்
கடல் தொடர, ககனமிசைக் கடவுள் அமர் பதி சேர்ந்தான்; காயம் நோக்கி,
அடல் அரசு அழுது அரற்றி, அனல் மூட்டி, சடம் அடக்கி, ஆறு-இரண்டு
தொடவரின் நாள் கழித்து, அனைவரும் மா மனை சேர்ந்து, துயரம் தீர்ந்தார். 15

கருமம் யாவையும் இசைவன கடனது கழித்து,
திருவின் நாயகன் இணை அடி பூசனை செய்து,
தருமன் மா மகன் கருணை அம் கடலினைச் சார்ந்து,
'இருமை நோய் துடைத்தேம்; இனி ஏது என்?' என்றுன். 16

மாதவன் மனமகிழ்வொடு பவள வாய் மலர்ந்து,
'மோது வெஞ் சமர் முற்றினீர் முடிநிலைக்கு அன்றோ?
ஈது இகழ்ந்து எமக்கு உரைப்பது என்? இயம்புதி!' என்ன,
பூதலம் தொழும் அறத்தின் மா மகன் இவை புகலும்: 17

'குருவின் மா குலத் தலைமையின் உதித்த அக் குலத்தை
வரு விலால் அழித்து, எம் பெரு மரபு எலாம் மாய்த்தேம்,
அருவி மா வனத்து அடைந்து, நல் தவம் உறல் அல்லால்,
திருவின் நாயக! மற்று ஒரு நிலை பெறல் செயலோ?' 18

என்ன, யாதவன் முகம் மலர்ந்து இயம்புவன், 'அறத்தின்
நண்ப! கேள்: இனி நான்முகன்தனக்கும் ஊழ்வினையின்
துன்பம் நீக்குதல் தருமமோ? துறத்தி, நீ துன்பம்;
அன்ப? கேள்' என, அவன் அடி தொழுது அரசு அறைவான்: 19

'ஒருவன் மா மரபு இருவரும்; ஒருவருக்கு ஒருவர்
செரு விளைத்தனம்; அக் குலம் சிந்தியது அலது,
மருவினோர் குரு முந்தினேன் மக்கள் மூதாதை
இருவர் சேனையும் சுற்றமும் இறந்தனர் எம்மால். 20

'ஆதலால், எமக்கு அரசியல் ஆவது எவ்வகை! நின்
காதலால், மகவு அருமையால், கருணையால், உரைத்தீர்;
பூதலத்தவர் விசும்பினர் அறியக் கரும் புன்மை
ஓதல் இன்பமோ? ஐய! கேள்: உலகு எலாம் பூத்தோய்!' 21

என விளம்பிய தருமன் மா மதலையை மூவர்
தனில் விளங்கிய கார் நிறத் தண் துழாய் அமலன்,
'முனில் விளங்கியது உளது; நீர் மொழிவன ஒழிமின்;
பின விளம்புதிபோல் அறமூர்த்தி!' என்று உரைத்தான். 22

என்னும் மாத்திரத்து, இணை அடி இறைஞ்சினன்; பவளம்
துன்னு வாய் இதழ் துடித்திட, 'சுருதி ஆம் சோதி
மன்னு மெய் கொள்ளும் மரபினர் மெய் கொள, அறநூல்
இன்னவாறு முன் நிகழ்ந்தது' என்று இறைவனோடு உரைத்தான்: 23

'கனகன் என்னும் ஓர் அவுணன், முன் காசினி புரப்போன்,
தனதன், மூவர் மற்று அமரர், மா தவர், முதல் தவத்தோர்,
அனகர் வந்தனை செயுமவன், சுதன் பிரகலாதன்
பனக மா சயனத்தவற்கு அடிமையாய்ப் பகரில். 24

'''இரணியோ நம! எனச் சொலும்'' என்பவர்க்கு எதிர்ந்து,
'தரணி மாது உறை நாரண நமோ!' எனச் சாற்ற,
முரணின் அச்சுதன்தனை மிக முனிந்திடில் அரிதன்
சரண பங்கயம் துதித்திடின், தயவினுல் அமலன், 25

'வந்து தூணிடை மா நரசிங்கமாய், அவுணன்
நிந்தை மாற்றி, நின் நேமியான் அவர்க்கு அரசு அளித்த
இந்த வார்த்தை நீர் அறிதிரோ? இனமோ மகற்கு
முந்தும் ஆகுவதற்கு ஒரு முதல்வன் அச்சுதனே! 26

'முன் இராவணன் சனகியைச் சிறைசெய, முனிந்து
பின்னவன் சொல, மறுத்திடின், பிறரை வந்து அனுகும்
அன்ன முந்தையைச் சிரம் அறுத்து, அரசியல் இருத்தில்,
உன்னி மா பெரியோன் என உரைத்திலாது உளதோ? 27

'பவத்தினுல் வளர் பாக்கியம் பனி எதிர் கதிராய்
அவத்தமாயிடும்; அறத்தின் மா மூர்த்தி நீ; அரசர்
திறத்தின் இந் நலார் ஒருவரைச் செப்புதற்கு எளிதோ?
துறத்தி, துன்பம் நீ; மௌலியை மிலேச்சுவாய், தொல்லோய்!' 28

பவள வாய் திறந்து உரை பகர் பச்சை மா முகிலைத்
துவள மேனியும், கரங்களும் கூப்பினர், துதியால்;
'தவள மேனியன், சரோருகன், தண் துழாய் மௌலிக்
குவளை மார்ப! நீ மூவர் ஆய், குஞ்சரம் காத்தாய்! 29

'உனது வாசகம் அல்லது, எம் உயிர்க்கு உறு துணை உளதோ?
மனது நொந்திலம் என்பது உன் மன நிலை உளதா,
மினது பாக்கியம், மிடி, அறம், பவம், சுக துக்கம்,
நினது நின் அருள் நிலை எமக்கு ஆர் உயிர் நிமலா!' 30

என்னும் மாத்திரத்து, இவர் குலத்து இறை எனும் வியாதன்
துன்னுபோது, இவர் அறுவரும் தொழுது, 'தொல் மரபோய்!
உன்னுமாறு உரை பகர்தி, நீ யோக மா தவத்தோய்!'
பன்னு மா மறை முனிவனும் பரிவினுல் புகலும். 31

'முகுந்தன் இன் துணை அறமது கவசமாய் முற்றி,
மிகுந்த செல்வம் நீர் படைத்திடில் மிக்கது ஆர் புகல்வார்?
தகும் தம்மோரோடும், நின்தன் வேந்தொடும், அரசர்
பகும் தொழில் செய்யலாம்' என வியாதனும் பறைந்தான். 32

'நன்று! நன்று!' எனு, நான்முகக் கடவுளை ஈன்ற
புண்ணியத் திருமுனிவனைப் பலபல புகழ்ந்து,
சென்று நின்பெருந் தாதைபால் செப்பி, யாம் செய்தல்
ஒன்று இனித் தகும்; ஏகுக! உதிட்டிர!' என்றான். 33

சிவனெடும் செலும் சீதரன் திருவொடும் அறம் ஆம்
அவனெடும் செலும் வேதமும் ஆம் என நடந்தார்;
எவனும் நேர் இலாப் பலனுடைக் கண்ணிலான் இல் வந்து
அவனை எய்தினர் அவர் அவர்க்கு அஞ்சலி புரிந்தான். 34

புரிந்த மாத்திரத்து, ஐவரும் பணிந்தனர்; புகழ்ந்து,
கரிந்த சிந்தையான், கருணை அம் கடலினை நோக்கி,
'விரிந்த வேதமும் ஞானமும் வீடதாய் அதனுள்
தெரிந்த மூர்த்தி நீ; எவை நினைந்து என்வயிற் சென்ருய்.' 35

என்ன, மாலும் நன் முகம் மலர்ந்து, இதைய மா மலர் கூர்ந்து,
'' 'அன்னை, நீ; இவற்கு அத்தன் நீ; ஐவர் நின் சுதர்க்கு
மன்னு மா முடி நினை அலால் சூட்டுதல் வழக்கு அன்று''
என்ன உன்னி யாம் எய்தியது இயல்புற இசைப்பாய்.' 36

இனிமை ஈது எனப் புகழ்ந்தனர்; இமையவன் முனியும்,
தனிமை ஓர்கிலாக் காந்தாரி தலைவனும், 'சமரில்
முனிமை பூண்டதும் முடித்ததும் முடிநிலைக்கு அன்ருே?'
என மெய் சோர்ந்து, தன் இதையமும் வேறுபட்டிருந்தான். 37

இருந்த காந்தாரி கொழுநனுக்கு அன்பினேடு இதையம்
திருந்த ஐவரும் படிந்திடச் சிறிது போது இருப்ப,
அருந்ததிக்கு நேர் அன்னையும் அத்தனும், அன்பால்
பெருந் தவப் பயன் பெறுகில் யார் பிரித்திட வல்லோர்? 38

'நலம் நிறைந்த மா முடி இவற்கு அளித்தனம், நம்பி!
புலம் நிறைந்ததால்; ஐவரும் புதல்வரே எமக்கு;
நிலம் நிறைந்து அரசாளுதிர் நீர்' எனப் பராசரன்
குலம் நிறைந்த மா முனி கையில் கொடுத்தனன் மௌலி. 39

கொடுத்த மாத்திரத்து ஐவரும் முனிவனும், கொண்டல்
எடுத்த மா முகுந்தன் முதல் இசைவனர் வணங்கி,
பொடித்த ரோமமும் புளகமாய் மௌலி நாள் புனைந்து
விடுத்து, வீறினர் திசை எலாம் வேந்தர்பால் தூது. 40

இன்ன காலையில் இம்மென மலையிடை இருந்து,
வன்னி நேர் தவ விதுரனும் மா முனி வந்து,
தன்னை நேர் இலாத் தமையனை, தமையன் நல் தாரத்து
அன்னை தன்னையும் வணங்கினன், அறிவினல் உயர்ந்தோன். 41

'சந்திர குலத்து உதவு சந்தனுவின் மைந்தன்
தந்த சுத! நீ அமரர் சந்ததம் நினைப்போய்!
சிந்தனையில் மான துரியோதனன் எனும் பேர்
மைந்தர் முதல் நூறு சனர் மண்ணிடை மடிந்தார். 42

'மற்றும் உள சுற்றமும் மகிபரும் அடைந்தோர்
தத்து பரி தேரினவர் நல் தரை இழந்தார்;
இத் தரணி நின் மகன் இயற்ற எனும் இன்பால்,
கொற்றவ! பகைத்தவரில் கூட இனிது அன்ருே. 43

'மா விரதம் முற்றும் இம மா மலை அடைந்து,
நீ விரதம் உற்றிடுவது அல்லெனில், நிலத்தோர்
கோவிரதம் முற்றிலது; முற் பணி குறிப்பார்;
தேவிர் அது பெற்ற நிலை செய்தல் இனிது அன்றே.' 44

என்று விதுரன் புகல, எம்பியை அணைத்து,
'நன்று, இது நன்று மொழி நாயக! நவின்றாய்;
குன்றிடை இருப்பது' என மாதினொடு மூவர்
அன்று வட பால் திசை அகன்றனர்கள் அம்மா! 45

இச் சொலும், இமத்தினிடை மூவர் துணை எய்தும்
அச் சொலும், அறிந்து, அறமான மறை மன்னன்
முற்சொல, முகுந்தனும், 'முன் நிற் பகை அவற்கே
எச் சொலின் உரைத்திடினும், எய்திலது' என்றான். 46

தந்தை இளையோன், பெரிய தந்தை, இவர் மக்கள்
எந்தையொடும் ஏகினர்கள் 'ஏது அரசு' என்றார்க்கு,
இந்திரிய நோய் கெட இயம்பி இறை செய்தான்,
அந்தமுடன் ஆதியும் அகண்டம் முதலானான். 47

ஆதி முதலான் நதி ஓர் ஏழு புனல் ஆன
சாதி முதல்வன் மொழியும் தானமது ஆடி,
தாது உகு நறுந் தொடையொடு ஆட மிகு சாந்தம்
மோது வெயில் மா மணி முடிக்கு முடி வைத்தார். 48

மா மணி மகுட கோடி மன் இரு பாலும் நிற்ப,
தூ மணித் தவிசின் நெற்றித் துணை ஒரு நால்வர் சூழ,
கோமுனிக் கணங்கள் ஆதி கொண்டல்போல் குழுமி ஆர்ப்ப,
சோமனன் மரபினோன்பால் துரோபதைதனையும் உய்த்தார். 49

அரசியல் தன்ம ராசற்கு ஆகியது என்று அண்டர்
விரை செறி சாந்து தூபம் மென்மலர் தூவி ஆர்ப்ப,
முரசு உயர் பதாகையாற்கு முனிவன் மா முடி கவித்தான்,
கரை செயற்கு அரியதான களிப்பொடும் உலகம் ஏத்த. 50

முடியது கவித்து, மாலும் துவாரகை முன்னி வாழ்ந்தான்;
படிமிசை மன்னர் எல்லாம் பதிபதி புகுந்தார்; பாரோர்
அடிமிசை படிந்து தம்தம் அறிதொழில் ஆதி நின்றார்;
நெடியவன் பாதம் போற்றி நேமி ஆண்டிருந்தார் ஐவர். 51

தேன் உலவு தண் துளப மாயர் திருவுள்ளம்-
தான் உலவு சூழ்ச்சி இசை தரணிவள மானின்
மேல் உலவு பாரமும் முடித்து, விடையோன்தன்-
பால் உலவு வீர கலி தீர்த்த பர மாயன். 52

ஆதி மறை வேதனுடன் ஆகுலமும் தீர
மோதி, பதினெட்டு தினப் பாரதம் முடித்த
நீதி வளர் தருமருடை நீள் முடியின் மீது
சோதி பெறு நன் மௌலி சூட்டினர் வியாதர். 53

திங்கள் வரு மும் மழை சிறந்து மிகு தேசம்
எங்கும் மிகவே எழிலி ஓங்கியிட இனிது
சங்கு அணிச் சக்ரத் தாமனுடன் வாழ்க!
பொங்கி வளர் குந்தி தரு புதல்வர்களும் வாழ்க! 54

பாடல் முதற்குறிப்பு அகராதி

பா.—47